
அமரர் திரு. இளையதம்பி சபாலிங்கம்

# நூற்றாண்டு விழா

## நினைவு மலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1942 - 1943




1943 - 1964



அமரர் திரு. இளையதம்பி சபாலிங்கம்

(தோற்றம் : 04.02.1919 - மறைவு: 03.08.1988)




1964 - 1971



1971 - 1975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழா

## நினைவு மலர்



அமரர் திரு. இளையதம்பி சபாலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரையில் என்னுரை



அதிபர் அமரர் திரு. சபாலிங்கம் அவர்களின் 100 ஆவது ஆண்டு நினைவு மலரை தொகுப்பதற்கும், அதற்கு முன்னுரை எழுதுவதற்கும், "என்ன தவம் செய்தேன்" என வியக்கிறேன்.

அதிபர் சபாலிங்கம் அவர்களது 100 ஆவது ஆண்டு விழாவை நடாத்தவேண்டும் என்பது ஒரு வருடத்திற்கு முன்னரே அவரது மூத்த புதல்வன் Dr.ஜோதிலிங்கம் அவர்களால் திட்டமிடப்பட்ட ஒன்று. ஆனாலும் ஓர் ஆறு மாதங்களிற்கு முன்பாகத்தான் அதிபருக்கு ஓர் மலரும் வெளியிட வேண்டும் என்பது பற்றி கலந்துரையாடப்பட்டது. மலர் வேண்டாம் என்று முதலில் கருதப்பட்டாலும், அவரது இளைய மகன் திரு. அபயலிங்கம் அவர்கள் மலர் வெளியிட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாக இருந்தார். அவரே என்னை அதன் முழுபொறுப்புக்களையும் எடுக்கும்படியும் உற்சாகப்படுத்தினார். அவருக்கு எனது முதற்கண் நன்றிகள்.

மலர் வெளியிடுவதில் ஆர்வம் இருந்தபோதிலும் பல சவால்களை நான் எதிர்நோக்கினேன்.

- 40 வருடங்களிற்கு முன்னால் கல்விச்சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அதிபரின் மாணவர்களை, ஆசிரியர்களை, நண்பர்களை தொடர்பு கொள்வது.

- மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த கொடிய உள்நாட்டுப்போர் எம்மவர்களை எங்கெல்லாமோ துரத்தி, உலகின் ஐந்து கண்டங்களிலும் பரந்து வாழ செய்துவிட்டிருக்கிறது. நான் வசிப்பதோ இலண்டனில். இந்த ஐந்து கண்டங்களும் வெவ்வேறு நேரங்களில் இயங்குகின்றமை, எனக்கு அங்கிருப்பவர்களை தொடர்பு கொள்வதில் சிரமத்தை ஏற்படுத்தியது.

நான் ஓர் கணக்காளன் - தை மாதம் எனக்கு வேலைப்பளு கூடிய மாதம். அந்த மாதத்தில்தான் இந்த மலரையும் வெளிக்கொண்டு வரவேண்டும்.

- என் மாமா என்ற உறவு கடந்து, ஒரு மாணவன் என்ற முறையில் இம்மலரை உருவாக்க வேண்டும்.

இத்தனை தடைகள் இருப்பினும்,நவீன சமூக வலைத்தள தொடர்பு சாதனங்கள் மூலமும், அதிபர்மீது மாணவர்களும், ஆசிரியர்களும் வைத்திருந்த மதிப்பும், அவர்கள் எனக்குத்தந்த ஊக்கமும், உதவிகளும் பிரமிக்க வைக்கின்றன.

December மாத தொடக்கத்தில் அதிபரின் 100வது ஆண்டுச் செய்தியை முகப்புத்தகத்தில் வெளியிட்டோம். ஆறு கிழமைகளில் மட்டும் கிட்டத்தட்ட 15000 தடவைகள் பார்க்கப்பட்டு, சாதனை ஏற்படுத்தியது என்பது, அதிபர் மீதுள்ள புகழை எடுத்துக் காட்டுகிறது.

இம்மலரை வெளியிடுவதற்கு உதவியவர்களில் சிலருடைய பெயர்களை குறிப்பிடாமல் விட்டால் நான் பெரும் தவறிழைத்தவனாவேன். அவர்களில்லாமல் இருந்திருந்தால் இந்த அரும்பெரும் பொக்கிஷம் உங்கள் கைகளில் தவழ்ந்திருக்காது.

- திரு. சிவனடியான் ஜெயானந்தசிவம் (கனடா) பல தொடர்புகளை ஏற்படுத்தித்தந்து, பல யாழ். இந்து யாழ்.மத்திய கல்லூரி புகைப்படங்களும் தந்துதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திரு.சிவபாலவிக்கினராஜா (கனடா) பல யாழ்.இந்து புகைப்படங்களைத் தந்துதவினார்.

- எனது வகுப்பு நண்பர்கள் திரு.குணசிங்கம் (அவுஸ்திரேலியா), திரு.திருக்கேதீஸ்வரன் (இலண்டன்), திரு.துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா) போன்றோர் யாழ். இந்துவின் பழைய புகைப்படங்களை தந்துதவினார்கள்.
- திரு. Joy பூரணச்சந்திரன் (UK-JCC தலைவர்) என்னை இலங்கையில் இருக்கும் திரு.சிவக்குமாருடன் தொடர்புபடுத்தினார். இவர்மூலம் பல அரிய மத்திய கல்லூரி புகைப்படங்கள் வந்து சேர்ந்தன.

- கட்டுரைகளை சரிபார்க்க உதவிய எனது நண்பன் திரு.மோகன் (கணபதி சர்வானந்தா - புதுவிதி எழுத்தாளர்), யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேஸ், திரு.மகாலிங்கசிவம் (மாலி-நாழிகை ஆசிரியர். இலண்டன்), நண்பர் திரு. வேந்தனார் இளஞ்சேய், மகன் Dr. சோதிலிங்கம் - இம்மலரை அழகாக வடிவமைப்பதில் நேர காலத்தைப் பொருட்படுத்தாது பல நாட்கள் இரவு 2 மணிவரை என் நச்சரிப்புகளையும் பொருட்படுத்தாது பொறுமையாக கடுமையாக உழைத்த திரு.வாமதேவன் கதீபன் (I Creations உரிமையாளர்) அனைவரது உழைப்பின் பயனே உங்களின் கைகளில் தவழும் இம்மலர்.

நாற்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகள், அனைத்துமே விலை மதிக்கமுடியா மாணிக்கங்கள். ஒரு குழந்தை பெறும் தாயின் நிலையில் இருந்து இக்கட்டுரைகளை வாசித்து மகிழ்ந்தேன் உணர்ச்சி வசப்பட்டேன். அழுதேன். பல இரவுகள் நித்திரையில்லா இரவுகளாயின. படித்த கட்டுரைகளின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாமல் தவித்தேன்.

என்னுரையில் ஒருவரை பெயர் குறிப்பிடாமல் கடந்துபோக முடியவில்லை. அண்மையில் மறைந்த யாழ்.மத்திய கல்லூரி நூலக ஆசிரியர் திரு.மாணிக்கவாசகர் (Manics) - எனது நீண்ட கால நண்பர். அவருடைய கட்டுரையை மிகப் பெரிதாக எதிர்பார்த்தேன். காலம் ஒத்துழைக்கவில்லை. யாழ். மத்திய கல்லூரியுடன் 70 வருட கால தொடர்புடையவர்.

அறிஞர்கள் சமூகவான்கள் இறப்பதில்லை. அவர்கள் சமூக வளர்ச்சிக்கு விதையாகின்றார்கள், உரமாகின்றார்கள். அதற்கு மிகச்சிறந்த உதாரணம் அதிபர் சபாலிங்கம் அவர்கள்.

என் முன்னுரையை எழுதமுதல், அதிபரின் தம்பி, அமரர், அதிபர் கனகலிங்கம் அவர்கள் தன் அண்ணாவிற்கு அவரின் 31 ஆம் நாள் நினைவு மலருக்கு எழுதிய முன்னுரையை வாசித்தேன். அவருடைய உணர்வே என்னுணர்வும். 'இன்பமும் துன்பமும் கலந்ததோர் உணர்வு என் நெஞ்சில் முட்டி மோதுகின்றது'

இம்மலர் பல இனிய உறவுகளை எனக்கு தேடித்தந்திருக்கின்றது. இயற்கையில் மிகுந்த நம்பிக்கை உடையவன் நான். 100 ஆண்டுகள் கடந்தும் ஒரு மனிதனை சமூகம் பாராட்டுகிறது நன்றி உணர்வு கூர்கிறது எனின், இயற்கை எமக்கு சொல்லும் செய்தி அவர் தன்னை சுயநலமற்ற சமூக சேவையில் ஈடுபடுத்தியிருக்கிறார் என்பதே.

'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்'

- திருக்குறள்.

பதஞ்சலி நவேந்திரன்
யாழ்.இந்து (1967 - 1975)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**JAFFNA HINDU COLLEGE**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

Phone/Fax: 021-2222431

**S.Nimalan**
*B.A, M.A (Pb.Admin), Dip.in Edu.*
*SLPS –I*
Principal

யாழ்ப்பாணம் - இலங்கை
**Jaffna – Sri Lanka**
Web page: www.jhc.lk
E-Mail: principal@jhc.lk

## அதிபரின்
# வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பெற்ற அதிபர்கள் வரிசையிலே அமரர் இளையதம்பி சபாலிங்கம் அவர்கள் பெரும் புகழ் பெற்றவர். இவருடைய காலத்திலே நான் மாணவனாகக் கல்வி கற்கக் கிடைத்தமை பெரும் பேறாகும். அதிபர் சபாலிங்கம் அவர்கள் இந்துக் கல்லூரியின் இரும்பு மனிதன் என வர்ணிக்கப்படுபவர். அவருடைய காலம் மிகவும் கட்டுக்கோப்பான ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கியிருந்தது. திரண்ட தோளும், பரந்த மார்பும் பொன்மேனியுமாக உயர்ந்த ஆஜானுபாகுவாக வேஷ்டியும் நஷனலுடனும் அவர் வரும் தோற்றம் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி வைக்கும். விளையாட்டுத் துறையின் பொற்காலம் என அவருடைய காலத்தை குறிப்பிடுவர்.

தி.சபாலிங்கம் அவர்களின் புதல்வர்கள் தங்களின் தந்தையாரின் ஓய்வுக்காலத்தை தொடர்ந்து, ஓய்வு பெறாமல், பாடசாலைக்கு தொடர் உதவிகளை வழங்கி வருகிறார்கள்.

இன்று அவரது மூத்த புதல்வர் திரு.ஜோதிலிங்கம் அவர்கள் தந்தையாரின் பெயரில் யாழ் மாவட்டத்திலேயே மிகச்சிறந்த குளிரூயஅிட்டப்பட்ட அரங்கமாகிய சபாலிங்கம் அரங்கை ஒரு கோடி ரூபாவிற்கு மேலாக செலவு செய்து அமைத்து தந்துள்ளார். அந்த அரங்கிலே சபாலிங்கம் அவரின் மாணவனாக இருந்த நான் சபாலிங்கம் அவர்களின் பிறந்த தின நினைவு விழாவில் யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து தலைமை தாங்கி நடாத்தக் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன். நூறாவது பிறந்த நாள் விழா சிறப்பாக நடைபெறவும் நூற்றாண்டு விழா மலர் சிறப்பாக வெளிவரவும் சிவஞான வைரவப்பெருமானின் அருளாசியும் ஞானலிங்கேஸ்சுவரரின் அருளாசியும் கிடைக்க வேண்டுகின்றேன்.


நன்றி.

அதிபர். - சதா நிமலன்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA CENTRAL COLLEGE AND E.SABALINGAM SIR



A few words about late E.Sabalingam, pure white vesty without colour boarders, National and shalvai were his uniforms for the school. He never wore the cloaks for his degrees to school functions. His special notable charactor specification was frequently adjusting his spectacles by keeping the right hand thump between the upper lip and nose, then the index finger at its center.

Kantharmadam was his native place and studied at Jaffna Hindu College. He was a soccer player, goal keeper and a strong sportsman during his student life. At soccer match at Jaffna stadium he caught the ball and kicked it through to go to the goal. It was a surprising event at that period.

The above few words are only about E. Sabalingam Sir .Now this is continuing as a revision of some facts about Jaffna Central College and E.Sabalingam Sir. Before this period E.Sabalingam Sir was attached to Kokuvil Hindu College, he fully satisfied and wished to fulfill life time service there. In this mean time it was necessary to find a new Principal for Jaffna Central College due to the retirement of late A.E.Tamber. Well-wishers of JCC were interested to bring an effective administrator to the school. So they searched an appropriate person with multi-talents. E.Sabalingam era started at Jaffna Central College in 1964, this was equal to Landing of Full Moon at our college. This brightness is still stable. He is the first Hindu Principal here.

E.Sabalingam sir was always available to any members of staff who wished to explain their feelings and opinion. He frequently visited the staff room and sat with the teachers to discuss problems and also exchanged jokes as equals. This type of his activities lead to a smooth administration.

In the year 1963 some complex news were published with critical headings in the daily press "THEEPORI". In 1965 E. Sabalingam Sir appointed late S.Mahaligam as Deputy Principal. The next day a news was released in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"THEEPORI" with the heading as "Lingams are joining together, lock is broken" (லிங்கங்கள் கூட்டு : உடைந்தது பூட்டு).

He was a combination of dreamer, planner, builder and innovator. This combination and his relationship with the teachers had given the power to conduct the school with the strength of two thousand students and only nearly seventy teachers. He was an expert in preparing the time table, there were no clash in his work. He trained late V.Balasuntharam – Former Teacher, Principal to prepare the time table, and this was continued up to the end of his services.

E.Sabalingam sir was very fond of teaching Mathematics, therefore he taught Pure Mathematics, for A/L students. When conducting classes in Tamber Block he observed the activities in playground as well. If it was necessary he was able to call a student at the South Western corner of ground. His voice was strong and dynamic. Necessary facilities were established for all games namely Cricket, Soccer, Hockey, Basketball, Badminton, Table Tennis, Volley Ball, and Tennis. Cadetting and school Band were started during his period.

When monitoring the hostel activities, arrangements were established for students of all religious denominations to conduct their prayers. For Hindus a new Shrine room was built, the sanitary system was also changed into modern facilities. Constructing playground fence also started during his period, A.E. Tamber Block's construction was started and up to first floor was completed before his transfer.

He was very interested in practical studies. Purchasing chemicals & equipments were very regular ocurrance. In 1968 he purchased a Power Unit (Now a days it is called power pack) for fourteen thousand rupees. This power unit was able to supply DC, AC electricity for electrical and electronic practicals for more than hundred groups of students. Due to the local work, this equipment was partly damaged and remained in laboratory still now. This is a good example for his interest in Practical studies.

Finally it is remarkable that there were only two Tamil "SELECTION GRADE" Principals out of seven in Sri Lankan Educational field. Two were Tamils and five were Sinhalese.

I have no doubt his name and fame will remain in Northern Province education and sports.

**Mr.S.K.Elilventhan**
**Principals - JCC**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் ஆசானும், ஆற்றல்மிக்க அதிபரும்.

உரும்பிராய் இந்து அன்னை உதயமான தினமுதலாய் பரம்பரையாய்ப் பலபேரை பல்துறை வித்தகராய் தரம் உயர்த்தி, கரம் தந்த காலத்தைப் பார்க்கையில், புகழ் பூத்த இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு சைவநெறி சார்ந்த பெரியோர்கள், கல்லூரியை வழிநடத்திய அதிபர்கள், கற்பித்த ஆசிரியர்கள், புகழ் பூத்த பழைய மாணவர்கள், போன்றோரின் தன்னலமற்ற சேவை மனப்பான்மையே அடித்தளமாக இருந்துள்ளதை யாரும் மறந்து விட முடியாது.

1944 ம் ஆண்டு காலப்பகுதியில் எமது கல்லூரியின் அதிபராக திருமிகு சிறீனிவாசன் ஐயா இருந்தார். அவர்களது காலத்தில் முதல் ஆசிரிய நியமனம் பெற்று திரு.இளையதம்பி சபாலிங்கம் அவர்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் காலடி வைத்தார். இவரின் ஆசிரியப் பணிபற்றி யான் அறிவதற்கு அவரிடம் கல்வி கற்ற மாணவர்களை நாடினேன். அதில் ஒருவர் ஓய்வுநிலை பிரதம லிகிதர் திரு க. கனகரட்ணம். இவர் சபாலிங்கம் ஆசிரியரைப்பற்றி கூறியவை, ஆசிரியர் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கணிதம், பௌதீகவியல் (ஆயவாளஇீாலளஉைள) ஆகிய பாடங்களை கற்பித்தவர். அவரிடம் படித்த மாணவர்கள் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர் எனவும் கூறினார்.

இவரது கற்பித்தலில் ஒவ்வொரு மாணவ, மாணவிகளையும் அவரவர் நிலைகளுக்கு ஏற்ற வகையில் இறங்கி உரிய முறையில் கண்காணித்து இப்பாடங்களைக் கற்ப்பித்து வழிகாட்டினார். இவரிடம் இப்பாடங்களைக் கற்ற மாணவர்கள் பொறியியலாளர்களாகவும், மருத்துவர்களாகவும், பலர் பல உயர் பதவிகளை அலங்கரித்து வந்துள்ளமை இவரின் கற்பித்தலின் சிறப்பை, வெற்றியை உணர்த்தி நின்றது. மிகவும் கண்டிப்பான இவர் மாணவர்களை ஒழுக்க சீலர்களாக உருவாக்க பெரும் பாடுபட்டார். அத்தோடு அதிபருடன் இணைந்து கல்லூரி விளையாட்டு முன்னேற்றத்திலும் பாடுபட்டார். இவரது காலத்தில் காற்பந்தாட்டத்தில் வெற்றிக்கிண்ணத்தை பெறும் வகையில் இவர் சிறப்பாகப் பாடுபட்டவர். கல்லூரியின் முன்னேற்றத்திற்கும் மாணவ மாணவிகளின் முன்னேற்றத்திற்கும் இவர் பெரும்பாடு பட்டார். இவரும் உயர்வடைந்தார். அவரது வாழ்வில் வாழ்க்கைத்துணையை பெற்றதும் இக்கல்லூரி வாழ்வில் தான். உரும்பிராயைச் சேர்ந்த திரு. தம்பர் அவர்களின் புத்திரி மலர் சோதியை திருமண பந்தத்தில் இணைத்து தனது குடும்ப வாழ்வை சிறப்பாக நடாத்தினார். உரும்பிராய் இந்துவில் பெற்ற அறிவுத்திறன், ஆளுமை, தலைமைத்துவம் என்பன அவரை கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பவற்றில் உபஅதிபராக, பின் அதிபராக பணியாற்றும் அளவிற்கு உயர்வடையச் செய்தது.

புகழ் பூத்த அதிபர்களது வரிசையில், சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தார். “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பது ஒரு முதுமொழி அதற்கு அமைந்தாற் போல தனது ஆரம்பக்கல்வியை மலேசியாவில் சிறந்த ஆங்கில ஆசானிடம் பெற்றிருந்தார். இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர். அவரது செயற்பாடுகள், அவரை ஆளுமை, ஆற்றல் அறிவு, திறன் கொண்ட தலைமைத்துவ பண்பாளனாக் கியது. மாணவர்களிடையே ஒழுக்கத்தினைப் பேணியவர். கண்ணியமிக்க கடமையாளன், இரக்க சுபாபம் கொண்டவர், தன்னலமற்ற சமூகத் தொண்டன், இந்து மத நிறுவனங்களில் மிக்க அக்கறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். பல வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணி பலராலும் இன்றும் போற்றப்பட்டு வருகின்றது.

இவரின் குடும்பத்தவர்களால் இவரது நூறாவது ஆண்டு நினைவாக வெளிக்கொண்டு வரப்பட இருக்கும் மலருக்கு இதனைச் சமர்ப்பித்து அவரது குடும்பத்தினரின் சமூகப்பணியையும் அறிந்தவன் என்ற வகையில் அவர்களது சமூகப்பணியையும் பாராட்டி அவர்களது பணி மேலும் சிறக்க பிரார்த்திக்கின்றேன்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

"ஆனந்தபவனம்"
உரும்பிராய் மேற்கு
14.01.2019

அ.ஈஸ்வரநாதன்
முன்னாள் அதிபர் உரும்பிராய் இந்துக்கல்லூரி.
ஓய்வுநிலை கோட்டக்கல்வி பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Great Principal Sabalingam



I have served under seven principals as a teacher at JHC for over a period of 23 years. During the years from 1971 to 1975, Mr. Sabalingam resided as the Principal. It's great to hear that one of my favourite Principal's centenary anniversary is celebrated this year.

He became the Principal of JHC in 1971 after Mr. M. Karthigesan had been transferred to another school. Mr. Sabalingam was an old boy of JHC and one of the famous soccer players during his school days and of course, a great maths teacher as well.

Combined with a great personality and powerful voice, everyone would listen and obey to his instructions and requests. Although he appeared to be a tough person, he was actually one of the nicest persons to get to know and become friends with. He was known for taking timely decisions, listening to what his staff had to say, and always made decisions as he felt right for JHC, its teachers and students.

He was a strict disciplinarian who expected punctuality from every student. This made it easy for the teachers to teach without any problem. He lived very nearby to JHC, as such he knew most of the parents of the students which meant that the students not only behaved properly within JHC, also outside the school.

He always ensured his teachers were safeguarded whenever there were any unwanted problems from parents or outsiders, and troublesome students.

During his tenure at JHC, students excelled in their studies and sports. Most students had no difficulties in getting accepted to universities.

Since he was a JHC old boy prior to becoming the Principal, he maintained JHC traditions and built up JHC to a very high standard. Hence JHC is still known as one of the most leading schools in the country.


Congratulations on his centenary anniversary.

**M. Arumugasamy**
**Teacher, JHC**
**1960-1983**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. E. சபாலிங்கம் அவர்கள் பாராட்டு



யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் அமரர் E. சபாலிங்கம் அவர்களின் 100ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் அவருக்கு எனது பாராட்டுக்களை சுருக்கமாகத் தெரிவிக்கும் வாய்ப்புக் கிடைத்தமை பெரு மகிழ்வை எனக்கு அளிக்கின்றது.

திரு. சபாலிங்கம் அவர்கள் சிறந்த கல்விமான், நல்லாசிரியர், சிறந்த ஆளுமைமிக்க அதிபர், எதற்கும் அஞ்சா நெஞ்சத்துடன் துணிந்து செயற்பட்டவர்.

நான் கொக்குவில் இந்துக்கல்லூரியில் 1958ஆம் ஆண்டு மாணவனாகச் சேர்ந்த வேளை திரு. சபாலிங்கம் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அப்போதைய அவரது கம்பீரமான இளமைத்தோற்றம் இன்னும் என் கண்முன் நிற்கின்றது. உயர்தர வகுப்பு விஞ்ஞானப் பிரிவில் பௌதிகவியல் கற்பிக்கும் சிறந்த ஆசிரியராக விளங்கியதுடன் மற்றைய வகுப்புக்களில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியராகவும் விளங்கியவர். இவர் ஆசிரியராகப் பணியாற்றி காலத்தில் தனித்து கற்பித்தற் பணியுடன் நின்றுவிடாது கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்து வைப்பதில் முன்னின்று உழைத்தவர்கள் திரு. V.C. இராமநாதன், திரு. E. சபாலிங்கம், திரு. சுந்தரசிவம் ஆகியோர் என்ற பெயர்கள் இன்றும் உள்ளது. அதேபோன்று கல்லூரியின் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டவர் திரு. சபாலிங்கம். கல்லூரியில் நடைபெறும் மாணவர்கள், ஆசிரியர்களுக் கிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் கோல் காப்பாளராக இவர் விளையாடியமை மறக்க முடியாதது. இவர் விளையாட்டுத் துறையிலும் காட்டிய ஆர்வத்தின் பயனாக யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் (JSSA) தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் இந்துக் கல்லூரியும், கொக்குவில் சமூகமும் பெருமையடைந்த விடயம் திரு. சபாலிங்கம் அவர்கள் கல்லூரியின் உப அதிபர் பதவியைப் பொறுப்பேற்றமை. கொக்குவில் இந்துக் கல்லூரி ஆண், பெண் இருபாலாரையும் கொண்ட கலவன் பாடசாலையாகும். மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கத்தைப் பேணச் செய்வதில் மிகக் கண்டிப்புடன் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர். இவருடைய காலத்தில் கல்லூரி மாணவியர்களின் ஒழுக்கத்தை வழிப்படுத்துதலில் ஆசிரியை சுகிர்தலக்சுமி அவர்களுக்கும் உறுதுணையாக விளங்கினார். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் கட்டிக் காத்தவர்களுள் இவர்களுக்கும் பெரும்பங்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சபாலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் தனது பிள்ளைகளையும் இக்கல்லூரியிலேயே கல்வி கற்க வைத்தவர். பிள்ளைகள் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினார்கள். இவரது புதல்வர் ஜோதிலிங்கம் கல்லூரி உதைபந்தாட்ட அணியின் சிறந்த கோல் காப்பாளராகத் திகழ்ந்தவர்.

திரு. சபாலிங்கம் அவர்களை எண்ணும்போது அவருடைய EL3882 வெள்ளை கொன்சல் மோட்டார் கார் எனக்கு ஞாபகம் வருகின்றது. கார் கல்லூரியில் வந்து நின்றதும் அவரும் பிள்ளைகளும் இறங்கிவரும் காட்சி மனக்கண்முன் வருகின்றது. இவருடைய மோட்டார்கார் இடையிடையே சினிமாத் தியேட்டர் அருகாகவும் சென்றுவரும். குறிப்பாக அக்காலத்தில் புதிய படம் வெளியாகும் நாளில் இதனை அவதானிக்க முடியும். சிலவேளை மாணவர்கள் ஓடி ஒளிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

திரு. சபாலிங்கம் அவர்கள் அதிபர் பதவி பெற்று யாழ் மத்திய கல்லூரிக்குச் சென்றவேளை கொக்குவில் சமூகம் வேதனைப்பட்டாலும் கொக்குவில் இந்துவை கட்டியெழுப்பியவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர் என்ற வகையில் பாராட்டுத் தெரிவித்து வாழ்த்தி அனுப்பினார்கள். அங்கு ஏழு வருட காலம் அதிபராகப் பணியாற்றியபின் யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். திரு. சபாலிங்கம் அவர்கள் யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த காலம் நான் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயின்றதனால் கற்பித்தற் பயிற்சிக்காக இரண்டு தடவைகள் அங்கு சென்றிருந்தேன். நான் கொக்குவில் இந்துவின் பழைய மாணவன் என்பதை அறிந்து பாராட்டியமை எனக்குப் பெருமையாக இருந்தது.


யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் சிறந்த அதிபர்களாக விளங்கியவர்கள் இன்றும் பெயர் சொல்லிப் பேசப்படுவதனை நாம் அறிவோம். அந்த வகையில் திரு. சபாலிங்கம் அவர்களின் பெயரும் உதாரணபுருஷராகப் பேசப்படுவது எமக்குப் பெருமையளிக்கின்றது. இன்றைய இந்த விழாவும் அவருக்குப் பெருமை சேர்ப்பதாகவே அமைகின்றது. சிறந்த கல்வியாளர்களை உருவாக்கிய பெருமைக்குரியவராகவும் திகழ்கின்றார். சிறந்ததொரு அதிபராகத் திகழ்ந்த இவரைப் பாராட்டும் உங்கள் யாபேருடனும் இணைந்து நானும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

பொ. கமலநாதன்
முன்னாள் அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தம அதிபர்



ஈழத்தமிழ் மக்களின் கல்வி வரலாற்றில் தனக்கெனத் தனியிடம் பெற்றவர் அமரர் சபாலிங்கம் அவர்கள். யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கல்லூரிகளான யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல் லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி என்பனவற்றில் கடமையாற்றிப் பெரும் புகழ் பெற்றவர். அவருடைய கம்பீரமான தோற்றமும், நடவடிக்கைகளும் இன்றும் எனது மனக்கண்ணில் தோன்றுகின்றன.

நான் யாழ்.இந்துக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் அவரைச் சிறந்த விளையாட்டு வீரரெனப் புகழ்வதைக் கேட்டிருக்கிறேன். அவர் சிறந்த உதைபந்தாட்ட நடுவராகக் கடமையாற்றியதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அவரது வழிகாட்டலில் பல சிறந்த நடுவர்கள் தோன்றியதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அவர் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவராக மிகவும் சிறப்பாகச் செயற்பட்டதை மறக்கவே முடியாது. யாழ்ப்பாண உதைபந்தாட்ட வரலாற்றில் தனியிடம் பெற்றிருந்தார்.

நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்தபோது பிரதி அதிபராக அவர் இருந்தார். அவருக்கு அருகில் செல்வதற்குக் கூட நான் பயப்பட்டேன். ஆனால் அவர் மிகவும் அன்பாகவும் நட்புடனும் எல்லோரையும் அரவணைப்பதை மறக்கவே முடியாது. அவரது மனவலிமை மிகவும் பாராட்டத்தக்கது. மகாத்மா காந்தியின் அஸ்தி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் கீரிமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கொக்குவில் இந்துக் கல்லூரிக்குள் கொண்டு வந்து அஞ்சலி செய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. திரு. சபாலிங்கம் அவர்கள் சில மாணவர்களுடன் பூநாறி மரத்தடிக்குச் சென்றார். பொறுப்பானவர்களுடன் பேசிப்பார்த்தும் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உடனே அவர் அந்த வாகனத்துக்குக் குறுக்கே காங்கேசன்துறை வீதியில் படுத்துவிட்டார். மாணவர்களும் அவருடன் சேர்ந்து கொண்டனர். பொறுப்பானவர்கள் அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டனர். பின்னர் காந்தியின் அஸ்தி கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்து வழிபட்டு அஞ்சலி செய்யப்பட்டது. அத்தகைய மனத்துணிவு வேறு யாருக்கு ஏற்படும்? கொக்குவில் இந்துக் கல்லூரியில் போற்றப்பட்ட ஆசான்களில் இவர் மறக்க முடியாதவர்.

கொக்குவில் இந்துவின் அதிபராக இருந்த திரு. சி.க. கந்தசாமி இளைப்பாறிய காலம். இளம் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவரது இல்லத்துக்குச் சென்று அவரைக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அதிபராக வரும்படி வேண்டினார்கள். அவர் அப்போது யாழ். மத்திய கல்லூரியில் அதிபராக இருந்தார். சுமார் ஒரு மணி நேரம் எல்லோரும் அன்போடு மாறி மாறிக் கேட்டார்கள். ஆயினும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மிகுந்த மனவேதனையுடன் கேட்டவர்கள் வீடு திரும்பினார்கள். கொக்குவில் நல்லதொரு அதிபரைப் பெறும் பேற்றினை இழந்துவிட்டது.

அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்பதற்குப் பெரிதும் காரணமாயிருந்தவர் அப்போது நல்லூர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. சி. அருளம்பலம் அவர்கள் என்பதுதான் உண்மையாகும். அக்காலத்தில் நான் பழைய மாணவர் சங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயலாளராக இருந்தேன் என்பதில் மிகவும் பெருமையடைகின்றேன். அவரது தலைமையில் நடந்த முதலாவது பரிசளிப்பு விழாவில் நன்றி கூறும் பெரும் பாக்கியத்தை எனக்கு அவர் தந்ததை என்றும் நான் மறவேன். அவரது காலத்தில் யாழ். இந்துக் கல்லூரி பல்வேறு துறைகளில் முன்னணி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் நல்லூர் கந்தனின் பெரும் பக்தன். ஒவ்வொரு வருடமும் தேர்த் திருவிழா நாளில் அதிகாலையில் வெளிவீதியில் பக்தியோடு அங்கப் பிரதட்சணம் செய்வது கண்டு நான் பலமுறை மெய்சிலிர்த்திருக்கிறேன். யாழ். மத்திய கல்லூரியில் முதன்முதலாக நவராத்திரி விழா நடத்திய பெருமையும் அவரையே சாரும்.

அக்காலப் பகுதியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னணி தலைவராகவும் அவர் திகழ்ந்துள்ளார். வெளிநாட்டில் நடைபெற்ற ஆசிரிய மகாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது மகன் உதயலிங்கம் நான் முதன்முதலாகக் கற்பித்த வகுப்பில் மாணவனாக இருந்தவர். என்மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். அவர் இன்றில்லை என்பது வேதனைக்குரியதாகும். அதிபர் திரு. சபாலிங்கத்தின் வைத்திய கலாநிதிகளாகத் திகழும் புத்திரர்கள் பாரட்டத் தக்கவர்கள். இது அவரது தவப்பயனாகும் எல்லாவற்றின் மேலாக அவரது மருமகன்கள் கொக்குவில் இந்துவின் மைந்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதிபர் அமரர் சபாலிங்கத்தின் குடும்பம் நல்லதொரு பல்கலைக் கழகம்.

**சுடர் இ. மகேந்திரன்**
**முன்னாள் அதிபர்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி,**
**யாழ் இந்துக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Saga of Sabalingam Master at JCC



I was fortunate to have been a student of Jaffna Central College during 1961 to April 1972 from Grade 3 to A/Level. The last six years were spent gleefully at the Rigg Hall Hostel.

Our dear Principal E Sabalingam Sir succeeded Mr. AE Tamber, and Principal E K Shanmuganathan filled the seat of Mr. ES when he left to assume as a principal at Jaffna Hindu College.

I am very lucky and fortunate to had been under the Leadership of all four exemplary Gents, Educationists and legendry Principals of JCC.

Central had a golden run during this era, both in Education and Sports. An under-statement to admit that we were a high pedestal. Sabalingam Master, as we refer to him fondly, strode majestically into the historic portals and the timeless corridors of the Central, probably as the first-ever Hindu Principal.

நீண்ட மேலாடையும் வேட்டியும் - he would alight from his white Consul car and walked smartly into his Office, surveying the surroundings. Nothing escaped his eyes. The atmosphere becomes silent at the sight of him. One could hear a pin drop.

We students always looked forward to his addresses during the morning assemblies. Asserting authority and erudite advice came naturally from him. He knew most of the students by their names and background-no exaggeration. He was known to convene all students at our Romaine Hall and read the results of O/Ls and A/Ls, name by name. His passion to education had no parallel at that time among peer schools.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He never believed in confining him to the Office. The sight of him strolling sharp-eyed and smartly past all class rooms while the school was in session, is still vivid in my memory. A no-nonsense approach to teaching and supervision as a sacred duty.

Imbibed within his tough-looking and steely out-frame was the undying thirst and hunger to educate every single student. To make a man out of him. An amazing amalgam as a stern but caring Principal.

Central was (and is) known as a tough school to manage. It had its share of rustics and role-models in the student population.

I recall the Saturday night when the Rigg Hall Hostellers had to take to task the unruly staff of the then Regal Theatre, Sean Connery's (James Bond) "From Russia with Love" was running at that time. Year was 1966.

The following day morning, the "Eelanadu" newspaper carried the not so savoury news. Sabalingam Master arrived at the hostel furiously in no time. He was angry as to why he was not informed of the hostile situation at the hostel immediately.

After a long chat with the Senior Prefect, he made a beeline to the Jaffna Police Station with the senior prefect. The police force was agitated and was in a menacing mood to take the boys to task. Our Sir used his clever diplomacy and diffused the tension. A compromise was struck with the Management of the Regal theatre.

And the notorious and note-worthy Centralites were warned and saved by the Sir himself - a stay in remand.

He was a man for all occasions. Central was and is always known for supremacy in sports. Sabalingam Sir took us to further heights. He would not miss a match. He would be in the grounds with the boys to watch and motivate them in the middle.

**A personal experience.**

I had done reasonably well to earn a place in the Under 15 & 17 Cricket


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Teams of JCC. Naturally, I opted for practices and selection for the first XI. A telling contest to be among the 15 from about 40 guys in the fray. I had become the Senior Prefect by then.

Sabalingam Master called me to his office and spoke in the presence of the Cricket Coach. Hemade me understand in caring but assertive words that it was going to be tough selecting me into under 15. There were better players. Merit was the yardstick.

I got the message and stopped playing cricket. I learned an invaluable lesson in the process which is helpful to me even today at the age of 64, not to try what is beyond one's capability and reach.

Jeyalingam, the stylish and handsome cricketer/centurion and the quiet Abayalingam, both sons of Saba Sir were at Central during our times. They were never given any preferential treatment. All students were on even keel. We had to compete for the best slot in sports and studies on a level playing field under Saba Sir's style and saga of Management.

I firmly believe that that great feats of his at Central only prompted the authorities of Education to move him to Jaffna Hindu to take-up the saddle.
An enviable record indeed, heading both JCC and JHC!

Thank you, Sir, for the nurturing all students at JCC during your time.

**Mr. S S Sivakumar**
***61-72,JCC. Retired Banker.***
***Management Consultant, Colombo,***
***Sri Lanka.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நவசிற்பிகளுள் முக்கியமானவர் நமது முன்னாள் அதிபர் இ.சபாலிங்கம் அவர்கள். யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த அதிபர்கள் என்று யாரேனும் பட்டியலிட்டால் அதில் முன்வரிசையில் இருப்பவர்களுள் முதன்மையானவராக அதிபர் சபாலிங்கத்தின் பெயர் காணப்படும்.

நமது கல்லூரியின் பழைய மாணவர்களே நமது கல்விக் கலைக் கோயிலின் அதிபராக இருந்து வழிநடத்துவது என்ற எமது பாரம்பரியத்துக்கு — மரபார்ந்த வழக்காறுக்கு — அமைவாகக் கல்லூரியைச் சிறப்புற வழி நடத்திய அதிபர்கள் வரிசையில் என்றும் முன்னிறுத்திப் போற்றப்படுபவர் சாபலிங்கம் அவர்கள்.

தமது பாடசாலைக் காலத்திலேயே கல்வியிலும் அதேசமயம் விளையாட்டு உட்படப் புற நடவடிக்கைகளிலும் அதீத ஈடுபாடு காட்டிய மாணவர் அவர்.

சபாலிங்கம் அவர்கள், அவரின் தம்பியார் கனகலிங்கம், மகன்மார் ஜோதிலிங்கம், உதயலிங்கம் என்றுவடமாகாணத்தின் புகழ்பூத்த உதைபந்தாட்ட கோல்காப்பு வீரர்கள் வரிசையை யாழ் இந்து ஊடாகத் தந்தது அவர்கள் குடும்பம்.

சபாலிங்கம் குடும்பத்தின் கோல்காப்பு திறமையைக் கண்டு களிப்பதற்காக ஓர் இரசிகர் கூட்டம் எப்போதும் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தை வட்டமிட்ட ஒரு காலம் இருந்தது. சபாலிங்கம் அவர்கள் ஒரு புகழ்பூத்த கணித ஆசிரியர். மாணவனின் அகமனதுக்குள் கணிதம் மீதான பற்றுதலை ஏற்படுத்தும் விதத்தில் அந்தப் பாடத்தைக் கற்பிப்பதில் ஒரு வல்லுநர் அவர். ஒரு புறம் கண்டிப்பானவர். அதேசமயம் மறுபுறம் கல்விச் சமூகத்தை வாஞ்சையுடனும் அன்புடனும் அரவணைத்து வழி நடத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே.

கல்லூரியின் ஒவ்வொரு மாணவன் பற்றிய தரவுகளும் கணிப்பீடுகளும் அவரது கணினி மூளையில் துல்லியமாக — பிசகின்றி — பதிந்திருக்கும். ஒவ்வொரு மாணவன் தொடர்பிலும் அவனது மனநிலையை ஒரு தந்தையைப் போல புரிந்துணர்வுடன் அணுகுவார். அதைக் கண்டு அதிசயிக்காதவர்கள் இல்லை. கல்வியில் சிறப்பாகச் செயற்படும் மாணவர்களை கல்லூரியின் புற நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடத் தூண்டுவார். விளையாட்டுத்துறை மற்றும் புற நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டும் மாணவர்களைக் கல்வித்துறையில் ஊக்குவிப்பார்.

இதன் மூலம் தனது கைகளுக்கு ஊடாக ஒவ்வொரு மாணவனும் ஒரு முழு மனிதனாகப் பரிணமிப்பதற்கு வழி செய்யும் சிறந்த சிற்பியாக அவர் திகழ்ந்தார்.

அவர் கல்லூரிக்கு வந்து, தனது அதிபர் ஆசனத்தில், தனது தோளில் தொங்கும் உத்தரியத்தை எடுத்துப் போட்டால் போதும். கல்லூரி அடங்கி, நிசப்பதமாகி, முழு ஒழுங்குக்குள் வந்து விடும். அந்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரையில் அந்த உத்திரியம் இருக்கும் வரை — அவர் கல்லூரியில் இருக்கின்றார் - என்று அர்த்தம்.

அந்த உத்திரியம் கதிரையில் தொங்கிக் கொண்டிருக்கும் வரை கல்லூரியும் முழுக் கட்டொழுங்கில்
இருக்கும்.

அத்துணை தூரம் கல்லூரியின் நிர்வாகம், ஒழுக்கம், ஒழுங்கு முறைகளில் கண்டிப்பானவர். கறார் மிக்கவர். யாருக்கும் அஞ்சார், துணிச்சல் மிக்கவர் - அறிவுப் பலத்தில் மட்டுமல்ல, தமது புஜபலத்திலும் கூட அவர் மிகுந்த ஆளுமை மிக்கவர். அதனால் அஞ்சுதல் என்பது அவரது வாழ்க்கை அகராதியில் இருக்கவில்லை எனலாம் - அது கல்லூரியிலும் சரி, மைதானத்திலும்ட சரி, புறவிடங்களிலும் சரி. அந்த தனி மனித ஆளுமையே கல்லூரியின் ஒழுங்குக் கட்டுப்பாட்டை உச்சத்துக்குக் கொண்டு சென்றது.

கல்லூரியின் கல்வித் துறையோடு விளையாட்டுத் துறையும் உச்சம் பெற்றது அவர் காலத்தில் என்றால் அது மிகையாகாது. வீதியோட்டம், கூடைப்பந்தாட்டம், ஹொக்கி, பாட்மின்ரன் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டமை அவர் காலத்தில்தான். பொலிஸ் படையில் குழு கல்லூரியில் முகிழ்த்ததும் அவர் வழிகாட்டலில்தான்.

அவரது கைகளால் புடம் போட்ட மாணவர்கள் இன்று நாஸா வரை புகழ்பரப்பி நிற்கின்றார்கள். விளையாட்டுத்துறையில் தேசிய மட்டம் வரை விஞ்சி விளங்குகின்றார்கள். உலகெங்கும் உயர்நிலையில் திகழ்கின்றார்கள்.

அத்தகைய பெருமை வாய்ந்த நம் அதிபர் சபாலிங்கத்தின் காலத்தில் அவரிடம் கல்வி கற்கவோ அல்லது அவர் அதிபராக விளங்கிய அந்தக் பொற்காலத்தில் கல்லூரியில் கல்வி பெறவோ எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. எனினும், அவரின் பெருமையை — சிறப்பை — விஞ்சி நிற்கும் தனித்துவத் தகுதிகளை என்றும் உணர்ந்தவன் நான்.

கல்லூரியை இன்றைய உயர் நிலைக்கு வளர்த்தெடுத்த அந்தச் சிற்பியின் நூற்றாண்டு பிறந்த தினத்தில் அவரை — அவரது சிந்தனை வீச்சை — அவரது செயல் திறத்தை — எண்ணி மகிழ்வது நம்மை நல்வழிப்படுத்தும்.

வாழ்க அவர் நாமம்.

டபிள்யூ. எஸ். கிருபாரத்தினம்
(தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம், கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ. மகேஸ்வரன்,
ஓய்வுநிலை பிரதி அதிபர்,
யாழ் இந்துக் கல்லூரி.



எத்தனையோ மனிதர்கள் இவ்வுலகில் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள். ஆனால், சில மனிதர்கள் தான் பல பேருடைய நெஞ்சங்களில் தமது இறப்புக்குப் பின்னரும் நிலைத்து வாழுகிறார்கள். அத்தகைய மனிதர்களில் ஒருவர்தான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த அதிபர் அமரர் இ.சபாலிங்கம் அவர்கள். அவரது நூறாவது ஆண்டு பிறந்த தினத்தை ஒட்டியதாக வெளிவரும் சிறப்பு மலருக்கு அவருடனான எனது நினைவுகளை மீட்டி எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 6ஆந் தரத்தில் 1959 இல் சேர்ந்த போது திரு. சபாலிங்கம் அவர்கள் அங்கு ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். வெள்ளை வேட்டி, தேசிய உடை(National)யுடன் ஆஜானுபாகான தோற்றம், பார்த்த உடனேயே மனதில் பதியும் எல்லோரையும் ஈர்க்கும் உருவம், க.பொ.த சாதாரண வகுப்புகளுக்கு தூய கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்களை சிறப்பபாக போதித்து வந்தார். மாணவர்களுக்கு அவர் மீது மதிப்பும் பயமும் இருந்தது. வகுப்பறை கட்டுப்பாட்டுடன் அமைதியாக நடைபெறும். ஆனால் அவரிடம் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. திரு.C.K கந்தசாமி அவர்கள் அதிபரான பின் சபாலிங்கம் அவர்கள் உப அதிபராக நியமிக்கப்பட்டு பணி புரிந்தார். அதன் பின்னர் மத்திய கல்லூரியின் அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்று 1966 இல் பரீட்சைக்குத் தோற்றி முதன் முறையே பௌதிக விஞ்ஞானப் பிரிவிற்கு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுச் சென்றேன். கொக்குவில் இந்துக் கல்லூரியில் எனது கணிதத்துக்கு அடித்தளம் இட்டவர்கள் எனது மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் திரு சகந்திரமௌலீசன் அவர்களும் திரு. செல்லத்துரை அவர்களும் ஆவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட பரீட்சையில் இரண்டு கணித பாடங்களிலும் A சித்தி பெற்றமையால் கணிதம்(சிறப்பு) துறைக்கு தெரிவு செய்யப்பட்டு கல்வி பயின்று இறுதிப் பரீட்சையில் Hons சித்தி பெற்றேன்.

அவ்வேளை நான் கல்வி கற்ற கல்லூரியான கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு சென்று அப்போதைய அதிபர் திரு. மகாதேவன் அவர்களிடம் வசதிகள் சேவைக்கட்டணத்தில் ஆசிரியராகச் சேர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தேன். அவர் சாதகமாகப் பதிலளிக்கவில்லை. அவ்வேளை கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியரான திரு. T.சின்னத்தம்பி அவர்களும் உடனிருந்தார். அவரிடம் நான் 6 ஆந் தரத்தில் கணிதம் கற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நடைபெற்று ஓரிரு வாரத்தின் பின் 1973 மே இறுதியில் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் திரு. சபாலிங்கம் அவர்களிடம் இருந்து இந்துக்கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் திரு. துரைசிங்கம் அவர்கள் ஊடாக தன்னை வந்து சந்திக்கும்படி ஒரு செய்தி சொல்லப்பட்டது. நானும் திரு துரைசிங்கம் அவர்களும் கோண்டாவிலைச் சேர்ந்தவர்கள். நான் இந்துக்கல்லூரிக்குச் சென்று சபாலிங்கம் அவர்களைச் சந்தித்தேன். தான் ஒரு பைவபவத்தில் கொக்குவில் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியர் திரு.சின்னத்தம்பி அவர்களைச் சந்தித்தபோது (இருவரும் கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஒன்றாகக் கல்வி கற்பித்தவர்கள்) என்னைப்பற்றி அறிந்ததாகவும் யாழ்.இந்துக்கல்லூரிக்கு உயர்தர கணித ஆசிரியர் தேவையாக இருப்பதாகவும் கூறி எனது சம்மதத்தை கேட்டார். நானும் உடன்பட்டேன். இதற்கு கல்வித் திணைக்களத்தில் தான் அனுமதி பெற வேண்டும் என்றும் அதற்கு ஓரிரு வாரங்கள் செல்லும் எனவும் அதுவரை பொறுத்திருக்குமாறும் வேறு எந்தப் பாடசாலைக்கும் செல்ல வேண்டாமென்றும் கூறினார்.

இதற்கிடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.பஞ்சலிங்கம் அவர்கள் (இவர் அடுத்த வருடம் கொக்குபவில் இந்து உப அதிபரானார். மேலும் இவர் கொக்குவில் இந்துக்கல்லூரியில் எனது 0/L பிரயோக கணித ஆசிரியர்) எனது வீடு தேடி வந்து கொக்குவில் இந்துவுக்கு ஆசிரியராக வருமாறு அழைத்தார். ஆனால் நான் திரு. சபாலிங்கம் அவர்களுக்கு கொடுத்த வாக்கை மீறவில்லை.

திரு.சபாலிங்கம் அவர்களின் அடுத்த அழைப்பின் பேரில். நான் யாழ் இந்துவுக்கு சென்று வசதிக் கட்டண ஆசிரியராகச் சேர்ந்தேன். சம்பளம் மாதம் 300ருபா. யாழ். இந்துக்கல்லூரி கணிதத்துறையில் பெயர் பெற்ற ஒரு கல்லூரியாக விளங்கியது. நான் கொக்குபவில் இந்துவில் உயர்தரம் கற்றபோது யாழ்.இந்துவின் புகழ்பெற்ற கணித ஆசிரியர் திரு. வரதராஜப் பெருமான் பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன் . அவ்வாறான ஒரு கல்லூரியில் கணிதம் கற்பிப்பதற்கு பெருமையாகவும் சந்தோசமாகவும் அதேவேளை மீத்திறன் மாணவர்களுக்கும் ஈடு கொடுத்து கற்பிப்பேனா என்றும் பயமாக இருந்தது.

நேரசூசிக்கமைய உயர்தர முதலாம் வருட வகுப்பறையொன்றுக்குள் நுழைந்தேன். மாணவர்கள் Good Morning Sir சொல்லிவிட்டு Sir நீங்கள் எங்களுக்கு கணித ஆசிரியராக வரமுன் பலர் வந்து சில நாள்கள் கற்பித்துவிட்டு கல்லூரியை விட்டு விலகிவிட்டதாக சொன்னார்கள். அதாவது அந்த ஆசிரியர்களால் மீதித்திறன் மாணவர்களுக்கு ஏற்றவாறு ஈடு கொ டுத்து கற்பிக்க முடியாமையினால் விலகிச் சென்றார்கள் எனக் கூறப்பட்டது. திரு சபாலிங்கம் அவ ர்கள் என்னுடன் கலந்துரையாடிய போது எனக்கு முன் கற்பித்த புது ஆசிரியர் தனக்கு அறிவிக்காமலே வராமல் நின்றுவிட்டதாக சொன்னார். உயர்தர இரண்டாம் வருட வகுப்பிற்கும் கணிதபாடம் தரப்பட்டது. அவர்கள் இன்னும் 10 மாதங்களில் பரீட்சைக்குத் தோற்ற விருப்பவர்கள்.

நான் இரவு பகலாக பாட ஆயத்தம் செய்து நான் எவ்வாறு கணித விடயங்களை விளங்கிக் கொண்டேனோ அதே முறையைப் பின்பற்றி கற்பிக்க ஆரம்பித்தேன். வெற்றியும் கண்டேன். ஒரு வாரத்தின் பின் அதிபர் சுபாலிங்கம் அவர்கள் என்னை அதிபர் அலுவலகத்திற்கு அழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்கப் போகிறதோ என்று பயந்து சென்றேன். அதிபர் அவர்கள் முகமலர்ச்சியுடன் என்னை வரவேற்று தான் மாணவர்களிடம் என் கற்பித்தல் முறையைப்பற்றி விசாரித்தாகவும் தானும் எனது கற்பித்தலை அவதானித்ததாகவும் திருப்தியாகவுள்ளதாகவும் சொன்னார். மேலும் தாங்கள் எனக்கு தரும் சம்பளம் போதாதென்றும் (கல்வித்திணைக்கள அனுமதியுடன் 300 ரூபா) கூறி உயர்தரம் இரண்டாம் வருட வகுப்பறைக்கு என்னை அழைத்துச் சென்று உங்களுக்கு சிறந்த கணித ஆசிரியர் கிடைத்துள்ளார். உங்களுக்கு பாடத்திட்டமும் முடிக்க வேண்டியுள்ளது. நீங்கள் சனியும் ஞாயிறும் கல்லூரியில் அவரிடம் tuition கற்க வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு மாணவனும் ஒரு ரூபா வீதம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். இதனால் எனக்கு மாதம் 240 ரூபா அளவில் கிடைத்தது. இது அக்காலத்தில் (1973) பெரிய பெறுமதி ஆகும். நான் இங்கே கூற வருவது அவரது நிர்வாகத்திறன் ஆசிரியர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவித்தல், விமர்சனங்களுக்கு அஞ்சாமை(கல்லூரியிலேயே Tuitio வைக்க அனுமதித்தமை) என்பவை பற்றியதாகும்.

1973 பிற்பகுதியில் கல்வி அமைச்சினால் நிரந்தர நியமனத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டது. நானும் விண்ணப்பித்தேன். இந்துக்கல்லூரியில் உயர்தர கணித ஆசிரியருக்கு வெற்றிடம் உள்ளதாகவும் நான் மாணவர்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் நல்ல பெயர் பெற்றிருப்பதாகவும் (well Settled) ஒரு நற்சாட்சிப் பத்திரமும் நான் நேர்முகப்பரீட்சைக்குச் சென்ற போது தந்தார். அவ்வாறே சிக்கலலில்லாமல் இந்துவில்1974 ஜனவரியில் எனக்கு நிரந்தர நியமனமும் கிடைக்க வழியமைத்துக் கொடுத்தார். அவருடைய நல்ல மனத்தினாலும் பிறருக்கு உதவும் சிறந்த மனப்பான்மையினாலும் என்னால் இந்துக் கல்லூரியில் உறுதியாக காலூன்ற முடிந்தது. அன்னாரது ஆசீர்வாதத்தினால் நான் இந்துக்கல்லூரியில் கணிதத் துறையின் தலைவராக, பகுதித்தலைவராக உப அதிபராக, பிரதி அதிபராக, பதில் அதிபராக இன்னும் பொறுப்பான பல பதவிகளைப் பெற்று 35 வருடங்களாக கடமை புரிந்து 2008 இல் இந்துக்கல்லூரியிலிருந்தே ஓய்வு பெற முடிந்தது. நான் வளமாக வாழவும் சமூகத்தில் ஒரு மதிப்புள்ள பிரஜையாகவும் பெயர் பெற முடிந்தது.

அவரது காலத்தில் இந்துக்கல்லூரியில் கல்வி சார் விடயங்களை எடுத்துக் கொண்டால் சாதாரண, உயர்தர பரீட்சையில் சிறந்த பெறபேறுகள் கிடைத்தன. அப்போது மொழிரீதியான தரப்படுத்தல் அமுலில் இருந்த காலம் இந்துக்கல்லூரியில் உயர்தரத்தில் A,2B, C எடுத்த மாணவனுக்கு எத்துறைக்கும் அனுமதி கிடைக்கவில்லை. என்று கூறி கவலைப்பட்டார். அவர் காலத்தில் உயர்தரத்தில் இரண்டாம் முறை தோற்றுபவர்கள் கூட கல்லூரிக்கு வருகை தந்து கற்றனர். (இக்காலத்தில் முதன் முறை தோற்றுபவர்கள் கூட கல்லூரிக்கு வருகை தருவதில்லை) மாணவர்களிடம் மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்வார். அவர் விறாந்தையில் செல்லும்போது வகுப்பறைகள் மிகவும் அமைதியாக இருக்கும் மாணவர்கள் தவறுசெய்யும் போது கண்டிப்பார். ஆனால் இரக்க சுபாவம் உடையவர். கடும் நடவடிக்கை எடுக்கமாட்டார். எங்களுக்கும் பிள்ளைகள் உள்ளனர் எனக் கூறுவார். அதிபர் அவர்களும் சாதாரண தர வகுப்பிற்கு கணிதம் கற்பித்து ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தார். அவர் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் போது அவரைச் சந்திக்க எவர் வந்தாலும் வகுப்பு முடியும் வரை காத்திருக்க வேண்டும். அவ்வளவு கடமையுணர்வு மிக்கவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சபாலிங்கம் அவர்கள் ஆசிரியர்களின் காவல் தெய்வமாக விளங்கியவர். அவர் காலத்தில் நடந்த ஒரு சம்பவம் இன்றும் என் மனதில் ஆழப்பதிந்துள்ளது. ஒரு நாள் நான் ஆசிரியர் ஓய்வு அறையில் இருந்தேன். வேறு சில ஆசிரியர்களும் இருந்தனர். சடுதியாக

காரில சாரதி ஆசனத்தில் ஒருவர் அமர்ந்திருந்தார். அருகே ஒரு பெண். அவரது மனைவியாக இரக்க வேண்டும். அதிபர் சபாலிங்கம் அவர்கள் கணவனின் shirt collar ஐப் பிடித்துக் கொண்டு இருந்தார். காரிலிருந்து அவரை இறக்கி அதிபர் அலுவலகத்துக்கு அழைத்து வந்தார். நாமும் அதிபர் அலுவலகத்தில் கூடிவிட்டோம். அதிபர் அவர்கள் அவர்களை ஏசி புத்திமதி கூறிகொண்டிருந்தார். நடந்தது இதுதான். அத்தம்பதிகளுக்கு ஓரே ஒரு மகன். அவர் இக்கல்லூரியில் 7 அல்லது 8 ஆம் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்தார். முதல் நாள் அம்மாணவன் வகுப்பில் ஏதோ குழப்படி செய்துள்ளார். ஆசிரியர் அவரைத் தண்டித்துள்ளார். பெற்றோருக்கு செல்லப்பிள்ளை. அடுத்த நாள் அப்பெற்றோர் கல்லூரிக்கு அடுத்த நாள் கல்லூரிக்கு வருகை தந்து அதிபரின் அனுமதியில்லாமல் அம்மாணவனின் வகுப்பறைக்குள் நுழைந்து அவ்வாசிரியரைத் தாக்கியுள்ளார். அதன் பின் அப்பெற்றோர் தமது காரில் வந்து அமர்ந்துள்ளனர். இதற்கிடையே அதிபருக்கு தகவல் பறந்தது. பிறகு நடந்தது தான் இவையெல்லாம். அதிபர் நினைத்திருந்தால் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யாமல் மனிதாபிமான ரீதியில் நடந்து அவரை ஏசி புத்திமதி கூறினார். அவர்களும் அதிபரிடமும் அவ்வாசிரியரிடமும் மன்னிப்புக்கோரி அகன்றனர். இவ்வளவு துணிவு எந்த அதிபருக்கு வரும்? திரு சபாலிஙகம் அவர்கள் ஒரு சண்டியர் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். இவ்வாறான சம்பவங்களுக்கு சண்டித்தனமும் தேவை தான். இவ்வாறு அவர் ஆசிரியர்களின் காவலனாகவும் விளங்கினார்.

அதிபர் சபாலிங்கம் அவர்கள் விளையாட்டுத் துறைக்கும் அதிகளவு ஊக்கம் கொடுத்து வந்தார். அவரும் ஒரு சிறந்த விளையாட்டு வீரன் ஆவார். ஆசிரியர் எதிர் மாணவ முதல்வர் உதைப்பந்தாட்டத்தின் போது அவரும் மைதானத்தில் இறங்கி கோல் காப்பாளராக விளையாடுவார். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறந்த விளையாட்டு விருந்தளிப்பார்.

அக்காலத்தில் கிரிக்கொட்டில் சிறந்து விளங்கிய மத்திய கல்லூரி 19 வயதுப் பிரிவிடம் இந்துக்கல்லூரி தோற்று வந்தது. இவர் காலத்தில் அணிக்கு ஊக்கமளித்து மத்திய கல்லூரியை வென்றால் அணிக்கு 100ரூபா அன்பளிப்பாக தருவதாகச் சொன்னார். இந்துக்கல்லூரி மத்திய கல்லூரியை தோற்கடித்தது. இக்காலத்தில் அது 50000 ரூபாக்குச்சமமாகும்.

இவர் காலத்தில் J.S.S.A அனால் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்டப் போட்டியில் இந்துக்கல்லூரி முதலாம் பிரிவு அணி இறுதிவரை முன்னேறி அக்காலத்தில் உதைப்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கிய மகாஜனக் கல்லூரியுடன் மோதியது. போட்டிக்கு முதல் நாள் உதைப்பந்தாட்டத்தில் சிறந்த பயிற்றுனரைக் கொண்டு அணி வீரர்களுக்கு வகுப்பெடுத்தமையும் அவதானித்தேன்.

இவ்வாறாக இந்துக்கல்லூரியை அனைத்துத் துறைகளிலும் அதிபர் சபாலிங்கம் அவர்கள் மிளிரச் செய்தார். அவரின் காலம் இந்துக் கல்லூரியின் பொற்காலம் என்றால் மிகையாகாது.

கொகுவில் இந்து யாழ்ப்பாணம் இந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பிரபல்யம் பெற்ற கல்லூரிகளில் தனது ஆசிரிய அதிபர் பணிகளை முன்னெடுத்து கல்விததுறைக்கு அணிகோர்த்த பேராசான், அதிபர் திலகம் சபாலிங்கம் அவர்களின் இனிய நினைவுகள் என்றும் எம்மை வாழ்விக்கும் என்பதில் ஐயமில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Landmark by Principal E. Sabalingam at Jaffna Hindu College



I consider myself fortunate that I was a teacher when late Mr. E.Sabalingam was the Principal of Jaffna Hindu College. He was a man of discipline and he always believed that a disciplined student was an asset to the school and community. He led the school by his own example. Since he was always early to school, the teachers also came to school early as well.

During his time as the principal, the J.H.C students excelled in studies and other extra-curricular activities. He introduced chess and basketball in his time and the chess team won the Outstation Championship. In cadetting, they also won the Island Medal.

Mr. E Sabalingam loved teaching. In addition to his duties as head of the school, he also took the time to teach mathematics and all the students liked the way he taught. He always stood on the side of the teachers and never let them down in any way. He loved his students and was always working tirelessly for their success and development.

In short, I would say that he was a sheep in lion's clothing. Though he seemed tough on the outside, he had a heart of gold. He will never be forgotten by the students andteachers for all that he has done for Jaffna Hindu College.

I extend my sincere best wishes and pray for God's blessings for a successful event.

**T. Thurairajah,**
**Physics Teacher - JHC**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை உருவாக்கிய
# இரும்பு மனிதர்



உலகப் பார்வையில் கல்லூரி என்பது
வெறும் கட்டிடம்தான்.
ஆனால்
ஊடுருவிப்பார்க்கும் உணர்வுடையார்
அதற்குமேலே ஏதோ ஒன்று
அவ் வார்த்தைக்கூடாக நம்மைப் பாதிப்பதை உணர்வர்.
கண்ணுக்குத் தோன்றும் சடமாகிய உடம்புக்குள்
வெளித்தோன்றாத உயிர் நின்று உணர்வு தருவதுபோல
கல்லூரிக் கட்டிடங்களுக்குள்ளும்
உணர்வைத்தரும் ஓர் உயிர்ப்பு இருக்கவே செய்கிறது.
இதுதான் அது என
என்னால்
அவ்வுணர்வை வரையறை செய்யமுடியாவிட்டாலும்
அவ்வுணர்வின் தாக்கத்தை
இன்று நான் நன்கு உணர்கிறேன்.

- - -

உலகப்பார்வையில் யாழ் இந்துக்கல்லூரி எனத் தோற்றம் தரும் கட்டிடம்
என்னுள் ஏற்படுத்திய மாற்றங்களை
இன்று என்னாற் தெளிவாய் உணரமுடிகிறது.
அரச உத்தியோகஸ்தரான தந்தையாரின்
இடமாற்றங்கள் காரணமாக
என் இளமைக்கல்வி
பறித்துப் பறித்துப்
பலஊர்களிலும் பதியம் போடப்பட்டுப் பலவீனப்பட்டது.
செட்டிக்குளம் புசல்லாவை சிலாபம் என ஊர்சுற்றி
அடித்தளம் இல்லாத படிப்போடு
பலவீனப்பட்டிருந்த இப்பாலகனுக்கும்
தந்தையார் படித்தார் என்ற ஒரே உரிமை காரணமாக
இந்துக்கல்லூரியில் இடம் கிடைத்தது.

- - -

அன்று
இந்துக்கல்லூரியில் இணைவதற்காய்
ஏங்கித்தவம் கிடந்த நீண்ட மாணவர் வரிசை
இன்றும் என்னைக் குற்ற உணர்வுக்கு ஆளாக்கும்.
தந்தையார் பழையமாணவர் என்ற தகுதி இல்லாவிட்டால்
நான் ஒதுக்கப்பட்டிருப்பேன்.
யார் கண்டது?
ஓர் தக்கமாணவன்
யாழ் இந்துவில் கற்கும் தகுதி பெற்றிருக்கக்கூடும்.
உலகிற்கு மற்றுமொரு
டாக்டரோ எஞ்சினியரோ எக்கவுண்டனோ கிடைத்திருப்பான்.
அவர்களையெல்லாம் விட்டுவிட்டு
வெறும் கல்த் துண்டாகக் கிடந்த என்னை
எடுத்து அணைத்து செதுக்கி
இன்று உலகின்முன் ஓர் சிற்பமாக்கிக் கொடுத்திருப்பது
இந்து அன்னைதன் ஏற்றமிகு கருணையின் வெளிப்பாடு.
அவள் அன்புக்கு ஆளாகியது
என் முன்னைத் தவப்பயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று
ஓர் இலக்கியவாதியாய் எனக்கும் அங்கீகாரம்.
இது இந்துஅன்னை தந்த ஏற்றம்.
வெறும் களிமண்ணாய்க் கிடந்த என்னை
மற்றவர்க்குப் பயன்படும் கலயமாக்கியது எது?
இன்று நினைத்துப்பார்க்க எனக்கே வியப்பாய் இருக்கிறது.
ஆளுக்கொரு இயல்புடன் இருந்த அதிபர்கள்
ஆளுக்கொரு தனித்துவத்துடன் இருந்த ஆசிரியர்கள்
அணைத்தும் பகைத்தும்
உறவையும் உரிமையையும் கற்றுத்தந்த நண்பர்கள்.
இப்படி எத்தனையோ பேரது தாக்கத்தால் உருவானவனே
இலக்கிய உலகில் இன்று நின்றுபிடிக்கும் இந்த ஜெயராஜ்.
கூம்பிக்கிடந்த இந்த மொட்டை மலரச்செய்த
அந்த ஒளிக்கதிர்களை இன்று எண்ணிப்பார்க்க
உள்ளம் உருகுகிறது.

- - -

ஐந்து அதிபர்களை இந்துவில் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன்.
ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதம்.
ஒருவர்பின் ஒருவராய்ப் பதவியேற்றும்
ஒருவரின் பாதிப்பில்லாத மற்றவரின் தனித்துவப்பாணி ஓர் ஆச்சரியம்.
இவர்களில் பெரும்பான்மையினர்
பதவியாற் பெருமைப்படாமல் பதவியைப் பெருமைப்படுத்தியவர்கள்.
அவ் ஐவரிடமும் நான் கற்றவையும் பெற்றவையும் பல.
அவர்கள் தம் வாழ்வூடு தந்த செய்தி
என் வாழ்வை வளமாக்கிற்று.
அவர்களுள் என்னை முற்றாகப் பாதித்து
ஆளுமையில் பூச்சியத்தைத் தொட்டிருந்த என்னை
தனது ஆச்சரியமிக்க ஆளுமையின் வீச்சால் நிமிரச் செய்து
இன்று எனது தலைமையாற்றலைக் கண்டு
மற்றவர்கள் வியக்கும் வண்ணம் ஆக்கிய பெருமை
இவ்வாண்டு நூற்றாண்டுவிழாக் காணும்
அதிபர் அமரர் இ.சபாலிங்கம் அவர்களுக்கே உரியது என்றால் அதில் மிகையில்லை.

- - -

எனக்குத் தெரிந்து யாழ் இந்துக்கல்லூரி அதிபர்கள் வரிசையில்
ஆளுமையின் சிகரம் தொட்டவர் இ. சபாலிங்கம் அவர்கள்.
'சபான்' இது மாணவர் இவருக்கு வைத்த சுருக்கப்பெயர்.
கல்வி நிர்வாகத்தைப் பொறுத்தவரை
அறிவுலக 'ஹிட்லர்'.
'மறத்துக்கும் அன்பே துணை' எனும் வள்ளுவர் வாக்கு உணர்ந்தவர்.
பழமையில் ஊறிய ஆளுமையற்ற பண்டிதர்களால்
இயலாதவர்களின் தேசிய உடையாய் இடைக்காலத்தில் ஆக்கப்பட்டிருந்த
வேட்டியும் நஷனலும் சால்வையும்
இவர் அணிந்ததால் மீண்டும் எழுச்சி கொண்டன.
ஆங்கிலம் நுனிநாக்கில் துள்ளும்.
ஆற்றல்மிக்க (கு)புட்போல் பிளேயர்.
கொள்கை முடிவில் அசையாது நிற்கும் ஆளுமைச் சிங்கம்.
இவ்வளமாய்
வேட்டி நஷனல் அணிந்தாலே வீரியக்குறைவானவர் என்றும்
பழந்தமிழ் மட்டும் அறிந்த பண்டிதர் என்றும்
உலக அறிவில்லாத உணர்விலிகள் என்றும்
ஆளுமை சிறிதுமில்லாத அசடர்கள் என்றும்
இருந்ததான வரைவிலக்கணங்களை
உடைத்தெறிந்த வீரியர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசிய உடையோடு
அனைவரையும் ஆட்டிப்படைத்த ஆளுமையாளரான இவர்
மாணவர்கள் மட்டும் என்றில்லாமல்
ஆசிரியர்கள் ஊழியர்கள் அதிகாரிகள் என
அத்தனைபேரையும் நடுங்கச் செய்தவர்.
இவர் காலத்தில் இந்துக்கல்லூரியில் 'அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.
அக்காலத்தில் யாழ்ப்பாணத்திற் பெயர் பெற்றிருந்த "ரவுடிகள்" கூட
இந்துக்கல்லூரி வட்டாரத்தில் கால்வைக்க அஞ்சுமளவான அவரது ஆளுமை
ஆச்சரியமானது!

- - -

இந்துக்கல்லூரி வாசலைக் கடந்து உள்நுழையும்
மாணவர் மட்டுமன்றி
ஆசிரியர்களும் அதிகாரிகளும் விருந்தினர்களும் கூட
தம்மையும் தமது தோற்றத்தையும்
ஒருதரம் மனக்கண்ணாடியிலே பார்த்து செப்பனிட்டுக்கொண்ட பின்பே
கல்லூரி வளாகத்திற்குள் கால் வைக்குமளவிற்கு
கல்லூரியின் கண்ணியத்தைத் தமது ஆளுமையால் உயர்த்தியவர்.
அவரவருடன் அவரவர் பண்புக்கேற்ற 'பாஷையிலேயே பேசத் தெரிந்தவர்.
இவர் தனது கதிரையால் எழும்பிய மறுநிமிடம்
கல்லூரி முழுவதும் சத்தம் அடங்கும்.
அந்த மர்மம் இன்றும் எனக்கு விளங்காத ஒன்று.

- - -

அதிபராய்க் கல்லூரிக்குள் நுழைந்த
முதல்நாள் வரவேற்பிலேயே
கட்டுப்பாட்டை மீற முனைந்த ஓர் மாணவனுக்கு இவர் தந்த 'பிரசாதம்'
இவர் கல்லூரியை விட்டுப்போகும் வரையும்
மாணவர்களை 'பயபக்தியோடு' இருக்கச் செய்தது.
கோபத்தில் துர்வாசர்.
இவ்வளவு வர்ணனையும்
ஒருவேளை இவரை வெறும் முரடனாய்க் காட்டக்கூடும்.
ஆனால் அது உண்மையல்ல.

- - -

மாணவர்களின் கல்வி வளர்ச்சி பற்றிய
தெளிந்த சிந்தனை கொண்டவர்.
இலட்சியங்களை மட்டுமல்லாது
உலகியலையும் தெரிந்து வைத்திருந்தவர்.
அதனால்
மாணவர்களை வாழ்வில் வெற்றிகொள்ளச் செய்தவர்.
இவர் இருக்கையின் உறுதியால்
மாணவர் மட்டுமன்றி
கல்லூரியின் அனைத்து அங்கத்தினரும்
சரிவர இயங்கியது ஓர் அற்புதம்.
இவர் கல்லூரியை விட்டுப்போனபின்பு
அவ் அங்கத்தினர் அனைவரிடமும் நான் கண்ட
அசட்டையும் அட்டூழியமும்
அனைவரையும் அடக்கிப் பயன் செய்யவைத்த
இவர்தம் ஆளுமையை தெளிவுற விளம்பிற்று.
'கொல்லப் பயன்படும் கீழ்' என்னும் வள்ளுவர் வாக்கை
விளங்கிச் செயற்படுத்தியவர்.
சுருங்கச் சொன்னால்
இவர் காலம் இந்துக்கல்லூரியின் பொற்காலம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்பற்றிய ஓர் எண்ணஅலை.
1971ஆம் ஆண்டு.
இந்து விளையாட்டு மைதானத்தில்
மத்திய கல்லூரியுடனான கிரிக்கெட் விளையாட்டு நிகழ்ச்சி.
இந்துவும் 'சென்றலும்' எதிரிகளாய்க் கருதப்பட்ட காலம்.
"மச்" குழம்பி அல்லோலகல்லோலம் ஆனது.
அப்போது 'சென்றலின்' அதிபராய் சபாலிங்கம் வந்திருந்தார்.
அவரது வழமையான ஆத்திரம்
இந்து அதிபராய் இருந்த கார்த்திகேசன் மேல் பாய்ந்தது.
கடுமையான வார்த்தைகளால்
கார்த்திகேசனை நிந்தித்துவிட்டு
காரில் ஏறப்போகிறார்.
கார்த்திகேசன்மேல் எல்லையற்ற மதிப்புக்கொண்ட
எங்கள் ஆசிரியர் சுந்தரதாஸ்
பாய்ந்தோடிச்சென்று காரின் கதவைப் பிடித்து
சபாலிங்கத்தைத் தடுத்து நிறுத்துகிறார்.

- - -

இவரும் ஆளுமையைப் பொறுத்தவரை
மற்றொரு சபாலிங்கம்தான்.
என்னை உருவாக்கிய மற்றொரு சிற்பி இவர்.
கல்லூரி அதிபரைக் கோபமாய்ப் பேசிய சபாலிங்கத்தை
நிறுத்தி வைத்து
கோபமான ஆங்கில வார்த்தைகளால் சுந்தரதாஸ்
கடுமையாய் விமர்சிக்கிறார்.
இச்சம்பவம் நடந்து சில மாதங்களில்
சபாலிங்கம் இந்துக்கல்லூரிக்கு அதிபராகவர
தொலைந்தார் சுந்தரதாஸ் என
சுந்தரதாஸின் ஆளுமையில் பொறாமை கொண்டிருந்த
சில ஆசிரியர்கள் ஆர்ப்பரித்தனர்.
ஏன் நாங்கள்கூட அப்படித்தான் எதிர்பார்த்தோம்.

- - -

ஆனால் நடந்த கதைவேறு.
இந்துக்கல்லூரிக்கு வந்த நாளிலிருந்து
சபாலிங்கத்திடம் மிக நெருக்கம் பெற்றிருந்த
ஆசிரியர் வரிசையில்
சுந்தரதாஸுக்கே முதலிடம்.
தன்னைத் தனிப்பட்ட ரீதியில் திட்டியிருந்தாலும்
கல்லூரி என்ற நிறுவனத்திற் பற்றுக்கொண்ட ஆசிரியரை
தன் தனியுணர்வு கடந்து அங்கீகரித்த சபாலிங்கத்தின் செயல்
தனிமனித உணர்வு தாண்டிய நிர்வாகப்பற்றினை
எனக்குப் போதித்தது.
அதனால் என் வாழ்வில் நான் கொண்ட பயன்கள் பல.

- - -

யாழ் முழுவதும் எதிர்த்து நின்ற நிலையில்
அப்போதைய கல்வி அமைச்சர்
பதியுதீன் முஹமத் அவர்களை
பிடிவாதமாய்க் கல்லூரிக்கு அழைத்து மரியாதை செய்தார்.
கல்வி நிர்வாகத்தில் அரசியல் முடிவுகளுக்கு இடமில்லை என்பது
அவரது கருத்தாய் இருந்தது.
இவருக்கு ஏன் இந்த வேலை என்று அப்போது விமர்சித்த ஆசிரியர்கள்
பின்பொருதரம் நடந்த சம்பவம் கண்டு வாயடைத்துப் போயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் அச்சம்பவம்.
எங்கள் கல்லூரிக்கு பயிற்சி ஆசிரியராய் வந்த
ஓர் இஸ்லாமியரை தாடி மீசையோடு இந்துக்கல்லூரிக்குள் வரமுடியாது.
அவற்றை எடுத்துவிட்டு உள்ளே வா! என உத்தரவிடுகிறார் சபான்.
அந்த ஆசிரியர் மதப்பற்றைக் காரணமாய்க் காட்டி
படிப்படியாய் மேலிடங்களுக்குச் சென்று
இறுதியில் கல்வி அமைச்சரைக் காண்கிறார்.
அவரை முன்னே இருத்தி வைத்துக் கொண்டே
தொலைபேசியில் சபாலிங்கத்துடன் தொடர்பேற்படுத்திய கல்வி அமைச்சர்
சபாலிங்கம் உங்களால் துரத்தப்பட்ட ஆசிரியர் எனக்கு முன்னாலே இருக்கிறார்.
அவர் நாளை தாடி மீசை எடுத்துவிட்டு சாதாரணமாய் வருவார்
தயைகூர்ந்து அவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டபோது
கல்லூரியே சபாலிங்கத்தின் சமயோசிதத்தையும் ஆளுமையையும் அறிந்து வியந்து போனது.

\- - -

மாணவர்களைச் சந்திக்கையில்
சிலநாட்களில் எரிமலையாய்க் குமுறுவார்.
வேறு சிலநாட்களில் பனிமலையாய் உருகுவார்.
அவரது இயல்பை முற்றாய் விளங்கமுடியாமல்
மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் திகைப்பது வழக்கம்.
தொல்காப்பியர் சொன்னாப்போல
அவரது அளக்கமுடியா அருமையும் பெருமையும்
ஏறுதற்கருமையும் வரம்பிலாற்றலும் கண்டு
வியக்காத மாணவர்களில்லை.
ஏன் ஆசிரியர்களும் தான்!

\- - -


இப்படி எத்தனையோ சொல்லலாம்.
ஆளுமை என்பது உடுப்பிலோ படிப்பிலோ பாஷையிலோ அமைந்ததில்லை.
அது தனிமனித மனநிமிர்வில் அமைந்தது எனும் பேருண்மையை கற்றுத்தந்து
தொட்டாச்சிணுங்கியாய் இருந்த என்னை
ஆலமரமாய் அசையாது நிமிரச் செய்தவர் அவர்.
இன்று கம்பன்கழகத்தை நிர்வகிக்கையில்
ஆயிரம் பிரச்சினைகளை அசையாது சந்திக்கிறேன்.
அப்போதெல்லாம் அதிபர் சபாலிங்கத்தை நினைத்துக் கொள்வேன்.
சிலருக்குள் சாமி உருவேறுமாப்போல சபாலிங்கம் என்னுள் உருவேறுவார்.
அந்த நிமிர்வே என்னையும் கம்பன் கழகத்தையும்
இன்றுவரை காத்து வருகிறது.
நான் சபாலிங்கத்தை வெளிப்பட நெருங்கியது மிகக் குறைவு.
ஆனால் அவர் அறியாமல் உள்ளத்தால் அவரோடு நெருங்கிய உறவானேன்.
இன்றும் உறவாய் அவர் என் நெஞ்சிற் பதிந்தபடி.
இத்தகைய உறவுகளை உருவாக்கித் தந்ததாற்தான்
யாழ் இந்து அன்னையெனப்படுகிறாளோ?
அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.

கம்பவாரிதி இ. ஜெயராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நெஞ்சில் நிறைந்த
# அதிபர்



ஈழத்தமிழர்களின் கல்வி வளர்ச்சியில் அன்று மிக முக்கிய பங்கு வகித்தவர்கள் பாடசாலை அதிபர்களே. அன்றைய அதிபர்கள் நடை உடையில் மட்டுமன்றி அவர்களின் உயர்ந்த பண்புகளில் சமூகத்தை ஆற்றுப்படுத்தினர். யாழ்ப்பாணத்தில் சிறந்து விளங்கிய அதிபர்களில் அமரர் இ. சபாலிங்கம் அவர்களுக்கு தனித்துவமுண்டு. இப்பெருமகனார் அதிபராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை அலங்கரித்த காலத்தில் கல்லூரியில் சேர்ந்தவன் யான். அவர் இளைப்பாறி கந்தர் மடத்திலுள்ள அவரது 'கற்பம்' என்னும் இல்லத்தி - ற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்று அழுத கண்களோடு பிரியாவிடை கொடுத்த மாணவர்களுள் நானும் ஒருவன். உண்மையிலேயே இவ்வாறான உத்தம் அதிபரை இனி எந்த ஜென்மத்தில் சந்திக்கப்போகிறோம்?

04.02.1919 ஆம் ஆண்டு பிறந்த எங்கள் அதிபர் அவர்களுக்கு 2019 ஆம் ஆண்டு இந்துக் கல்லூரி சமூகம் உலகெங்கும் நூற்றாண்டு விழா கொண்டாடுவது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. 03.08.1988 கொழும்பு பத்திரிகையில் அதிபர் சபாலிங்கம் லண்டனில் காலமானார் என்ற செய்தியை அவ்வேளை கொழும்பில் வசித்த யான், பத்திரிகையைப் படித்துச் சோர்வடைந்து இருந்துவிட்டேன். அன்று முழுவதும் அவரை தரிசித்த பழைய நினைவுகள் அகத்தை வருத்தியது. யாழ் இந்துக்கல்லூரியில் பிரார்த்தனை மண்டபத்திற்கு காலையில் வருவார். நிசப்தம் நிலவும் மண்டபத்தின் இரு கரைகளிலும் ஆசிரியர்களும் மாணவ முதல்வர்களும் நேர்த்தியாக நிற்பார்கள். ஆதிபர் சில அறிவிப்புகளை நல்ல கருத்துக்களை ஆணித்தரமாகச் சொல்லுபவர். பிரார்த்தனை முடிவுற்ற பின் வகுப்பறைக்குச் செல்லும் காட்சியை கடைக்கண்ணால் பார்ப்பார். எதுவும் பிசகாது. தாமதமாக வந்த மாணவர் முன்வருவார். நடுங்கி - ப்போவோம். கதவு பூட்டப்பட்டு விடும். பஸ் தாமதம் என்று சொல்லித் தப்ப முடியாது. 'விடிய நான்கு மணி தொடக்கம் பஸ் ஓடுது இனிமேல் வேறு கதை இருக்கக் கூடாது' என்று தாமதமாகி வந்த மாணவர்களை எச்சரிப்பார். எதுவும் சொல்லித் தப்ப முடியாது. அனைத்து மாணவர்களையும் அவதானிப்பார். தலை முடியிலிருந்து பாதம் வரை சீராக இருக்கவேண்டும் என்பது அப்பெருமகனாரின் நெறிமுறை. பலரைத் தலைமுடியைப் பிடித்து சாலுனுக்கு அனுப்பியவர். சமய விழாக்களுக்கு என்றும் முக்கியத்துவம் கொடுப்பார். அதிபர் காலத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாக்களை மீள நினைத்துப் பார்க்கின்றேன். அவையெல்லாம் கனவாகிப் போய்விட்டது.

பேச்சுப் போட்டிக்கு தெரிவாகி நல்லூர் வட்டாரப் போட்டியில் வெற்றியடைந்த மாணவர்களை அடுத்த போட்டிக்கு இடையில் பிரார்த்தனை மண்டபத்தில் பேச வைத்தார்கள். அதிபர் சபாலிங்கம் முன்னிலையில் நடுங்கி, நடுங்கிப் பேசிய அன்றைய நாள் இன்னும் பசுமையாக உள்ளது. அன்று அப்பெரியவர் ஒரு சில வார்த்தைகளால் சொன்ன வாக்கு இன்றும் அமிர்தமாக உள்ளது. எனது தாய், தந்தை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் பணியாற்றிய வேளை இந்துக்கல்லூரி தலைமைத்துவத்தின் கீழ் பாடசாலை விளங்கியது. இந்து ஆரம்பப் பாடசாலைக்கும் அன்று திரு. சபாலிங்கம் அதிபராக விளங்கினார். யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து மத்தியான இடைவெளி வேளையில் ஆரம்பப் பாடசாலைக்குச் சென்று எனது தாயாரிடம் சாப்பிட்டு விட்டு வருவேன். அக்காலத்தில் பாடசாலை இடை வேளை ஒரு மணி நேரம் மாலை பாடசாலை 4.00 மணிக்கு முடிவடையும். ஒரு முறை இடைவேளைக்கு சாப்பிட்டு விட்டு ஆரம்பப் பாடசாலைக்கு அருகிலிருந்த கடையில் 5 சத பீடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலையை வாங்கி வாயில் போட்டு குதப்பியபடி வீதியால் வந்துகொண்டிருக்கின்றேன். அதிபரின் கார் என்னைத் தாண்டிச் சென்று நிறுத்தப்பட்டது. அதிபர் அழைத்தார். வாய்க்குள் இருந்த வெற்றிலையை துப்பிவிட்டு அருகில் போனேன். அலுவலகத்துக்கு வா என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அலுவலகத்துக்கு சென்ற எனக்கு சடார் என்று கன்னத்தில் அடி விழுந்தது. வெற்றிலை போடும் வயதா? என்று கேட்டார். ஆறுமுகம் வாத்தியார் வெற்றிலை போடும்படி சொன்னாரா? இன்றும் சபைகளில் வெற்றிலை - யைக் காணும்போது என் அதிபரை நினைப்பேன். என் தந்தையின் பெயரைச் சொல்லி என்னைக் கூப்பிட்டார். விளையாட்டுப்போட்டி காலத்திலும் யான் அடிவாங்கியிருந்தேன். ஆனால் அவர் மீது கொண்ட அன்பும் பாசமும் அடிக்குப் பின்னுக்கும் பல மடங்காகி சாரணிய போட்டியில் குருலைச் சாரணிய பொறுப்பாசிரியராக இருந்த என் தயார் கொழும்பில் பரிசு பெற்று கல்லூரி வளவு சென்றபோது எழுந்து வந்து என் தாயாரை வாழ்த்தி பாராட்டிய காட்சி மறக்க முடியாதது.

இணுவில் பரராசசேகரப் பிள்ளைர் கோயிலில் நடைபெற்ற யானைத் திருவிழாவுக்கு அதிபரும் பாரியாரும் வருகை தந்தார்கள். எங்கள் திருவிழாவுக்கு அதிபர் தம்பதிகளாக வந்து அன்று எங்கள் குடும்பத்தையே கௌரப்படுத்தினார்கள். அவையெல்லாம் என் வாழ்வில் எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம். பின்பு கல்லூரி விழாக்களில் தனித்துவமான ஆளுமை கண்டு யாம் வியந்தோம். அதிபர் இளைப்பாறுகிறார் என்ற செய்தி மாணவர்களை வருத்தியது. அதிபரின் இளைய புதல்வி கலைச்செல்வி சபாலிங்கம் நடன அரங்கேற்றம் செய்தார். ஆசிரியர் இ.மகாதேவா (தேவன் மாஸ்டர்) அரங்கேற்ற ஒழுங்குகளை மேற்கொண்டார். யானும் தேவன் ஆசிரியருக்கு உதவியாக ஒத்திகை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டேன். அதனால் பெற்ற அனுபவம் அதிகம். யான் யாழ் இந்துக்கல்லூரியில் பல தடவை பல்வேறு நிகழ்ச்சிகளின்போது விசேட உரையாளனாக கலந்து கொண்டுள்ளேன். பெரும்பாலும் கல்லூரி வைபவங்களில் என் அதிபர் சபாலிங்கத்தைப் பேசத் தவறுவதில்லை. அவருக்கு நிகராக அதிபர் அளுமைக்கு ஒருவரை இதுவரை எம்மால் சொல்ல முடிவதில்லை . யான் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக பதவி வகித்து இளைப்பாறியவன். எனது ஆசிரிய வாழ்வில் வேட்டி நஷனலுடன் பணி செய்து இளைப்பாற வாய்ப்பு கிட்டியது. நான் ரசித்த அதிபரிலிருந்து ஒரு சில நடைமுறைகளையாவது பேணினேன் என்ற திருப்தியோடு இளைப்பாறினேன்.

அதிபர் சபாலிங்கம் அவர்களின் பிள்ளைகள், மருமக்கள் இன்றுவரை என்னோடு மிகுந்த அன்பு பாராட்டி பழகி வருவது எனக்கு ஆத்ம திருப்தியைத் தருகிறது. எங்கள் அதிபரின் நினைவாக அதிபர் சபாலிங்கம் அரங்கு கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்ட விழாவில் அதிபரின் தலைமைந்தன் வைத்திய கலாநிதி ச.ஜோதிலிங்கம் என்னை அழைத்து பேச வைத்தமையை பெரும்பேறாகவே தருகின்றேன். அதிபர் சபாலிங்கம் அவர்களின் ஜெனன நூற்றாண்டு உலகம் முழுவதும் வாழும் இந்துக் கல்லூரி மைந்தர்களால் கொண்டாடப்படுவது பெருமைக்குரிய விடயமாகும். அன்னாரின் பெருமைகள் சூரிய, சந்திரன் உள்ளவரை யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் உச்சரிக்கும் என்பதில் ஐயமில்லை.

கலாநிதி. ஆறு. திருமுருகன்
யாழ் இந்து பழைய மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் இலக்கணமான
# என் ஆசான்



'நல்ல அதிபர்கள் உருவாக்கப்படுகிறார்களா? அல்லது பிறக்கிறார்களா?' என்று என்னைக் கேட்டால் 'பிறக்கிறார்கள்' என்றுதான் நான் சொல்வேன். சபாலிங்கம் Sir ஐப் போன்ற அதிபர்கள் உருவாக்கப்பட முடியாதவர்கள். அவர்கள் தாங்களாகவே உருவாகுபவர்கள். அதாவது எத்தனையோ வருடங்களுக்கு ஒருமுறைதான் பிறக்கிறார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். யாழ்ப்பாணத்தில், ஏன்? இலங்கையில் 'புகழ் பூத்த சில அதிபர்கள் பெயர்களைக் கூறுங்கள்' என்றால் அதில் 'என் அதிபர் சபாலிங்கம் Sir இன் பெயர்' கட்டாயமாக இருக்கும்.

அதிபர்களில் அவர் ஒரு ஜம்பவான். அவரை முதன் முதலில் 1973 இல் கண்டேன். நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று (அப்பொழுதெல்லாம் 7ஆம் வகுப்பில்தான் புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற்றது) யாழ். இந்துக் கல்லூரிக்குக் கற்க வந்த ஆரம்ப நாட்களில் அவரைக் கண்டேன் கண்டேன் என்று சொல்வதைவிடத் தரிசித்தேன் என்று சொல்வதுதான் பொருத்தம். காலையில் வரும் அவரது வெள்ளைக்கார், அதிலிருந்து இறங்கிவரும் அவரது கம்பீரமான தோற்றம், ராஜநடை, உருண்டை முகம், தோளில் தொங்கும் மடிப்புக் கலையாத பருத்த உத்தரியம், நஷனல், வேட்டி இன்றும் மனக் கண்ணில் நிழலாடுகிறது.

வகுப்புகளைச் சுற்றிப் பார்க்க வருகிறபோது அவர் பிரம்பு வைத்திருக்கிற இடமே தெரியாது. வலது கை நஷனலுடன் அதுவும் சேர்ந்து இருக்கும். அடி விழேக்கைதான் தெரியும். வகுப்புகளுக்கு றவுண்ட்ஸ் போகின்றபோது சால்வை அதிபர் காரியாலயத்திலுள்ள அவரது கதிரையில் தொங்கும். அதைப் பார்த்தாலே அதிபருக்குக் கொடுக்கின்ற மரியாதை, பயம் உடனே எழும்.

1974 இல் 10 சீ வகுப்பில் எனக்கு அவர் கணித ஆசான். Algebra பாடத்தில் Graph வரைபுகள் சரியாக நெளியாமல் சீரான வளைவுடன் இருக்கா? என்று பார்க்கத் தன் கண்மட்டத்தில் கொப்பியைத் தூக்கிப் பார்ப்பார். அந்த மகானின் பக்கத்தில் நின்று அவரால் கொப்பி பார்க்கப்பட்ட பேறுகளைப் பல தடவை பெற்றிருக்கிறேன்.

அவரது office இல் அவருக்குக் கிட்ட போகும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. ஒன்று துன்பகரமானது. மற்றது இன்பகரமானது. 1974 இல் நான் விடுதியில் தங்கியிருந்து படித்தபோது எங்களுடன் விடுதியில் 'மெய்கண்டான்' கலண்டர் அருணகிரிநாதன், அருட்சோதி நாதன் இருவரும் தங்கிப் படித்து வந்தார்கள். அருட்சோதிநாதன் எல்லோருடனும் சண்டைக்குப் போவான். ஒரு நாள் என் இரும்பு (தகரம்) டிரங்குப் பெட்டியை அருட்சோதிநாதன் வேணுமென்று காலால்மித்து நசுக்கி விட்டான். எனக்குப் பெரிய கவலை. ஆனால் என்ன செய்ய? அவனை அடிக்கவும் முடியாது. விடயம் எப்படியோ எனது தந்தைக்குத் தெரிந்து அவர் சபாலிங்கம் Sir க்குச் சொல்லிவிட்டார். அதிபர் ஒரு நாள் மாலை நேரம் கூப்பிட்டார், விசாரித்தார். அவனில் பிழை என்று கண்டு கொண்டார். அவனுக்குப் பிரம்பால் நல்ல சாத்துச் சாத்திவிட்டு எனக்கும் ஒரு அடி பிரம்பால் விழுந்தது, ஆனால் மெதுவாக. (அது அவனைச் சமாளிக்க என நினைக்கிறேன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது 1975இல் ANCL CRICKET இல் நாம் வட மாகாணத்தில் Champion ஆகி எங்கள் Team அகில இலங்கைப் போட்டிக்காக கண்டி தர்மராஜா College க்குப் போகப்போகிறது. நான் தான் அந்த Team இன் Opening Bowler. Left Arm, Medium Pace Bowler. Swing என்றால் சொல்லி மாளாது. Wicket க்கள் டொல், டொல் என்று விழும்.

இந்த வெற்றிகளுக்கு நான் முக்கிய காரணம் என்று கேள்விப்பட்ட அதிபர் சபாலிங்கம் ஒரு பின்னேரம் என்னைக் கூப்பிட்டார். அதே Office இல் என்னை அணைத்துப் பாராட்டி விட்டு , தலைமுடி வளர்ந்திருந்த எனது பிடரியைக் கோதிவிட்டு 'உடனே போய் துரையப்பாட்ட வெட்டு, இல்லையென்றால் நாளை போக இயலாது' என்று முதுகிலும் தட்டிப் பாராட்டினார். அவர் பாராட்டிய மகிழ்வுடன் ஒரே ஓட்டமா ஓடிப் போய் பூநாறி மரத்தடியில் இருந்த துரையப்பா சலூனில் 'நித்தம் நித்தம் மாறுகின்ற எத்தனையோ' என்று சீர்காழி Radio வில் பாடுகிறார். இன்றும் அந்தப் பாட்டை எங்கு கேட்டாலும் என் அதிபர் சபாலிங்கத்தார் என்னைப் பாராட்டியது நினைவில் வரும்.

கடைசிநாள் அவர் பிரியாவிடை பெற்றுச் செல்லுகிறார், அவரை வீட்ட அழைத்துப்போகப் பெரிய கூட்டம், பெரிய ஊர்வலம், அவரில் உள்ள விருப்பத்தில் நானும் சேர்ந்து அந்த ஊர்வலத்தில் போனேன். Hindu Ladies College க்கு முன்னுள்ள அவரது வீட்டில் கராஜ் பக்கமாக உள்ளே போய் அவரைப் பார்த்தேன். அந்த மலையின் கண்ணில், அந்தச் சிங்கத்தின் கண்ணில் இருந்து கண்ணீர் பெருகியது. நாமும் அழுதோம். அவரும் மனுசன் தானே. பிரிவுத்துயர் தாளவில்லை .

நீண்ட நாட்களின் பின்னர் நான் யாழ். இந்துக் கல்லூரியின் ஆசான்களில் ஒருவராக வந்தபின் Sir வெளிநாட்டிலிருந்து தன் கல்லூரியைப் பார்க்க வந்திருந்தார். 1986 - 87 ஆக இருக்கலாம் என நினைக்கிறேன். நான் போய் அவர் காலைத் தொட்டு வணங்கினேன். அவரால் பேச முடியவில்லை. பார்க்கின்சன் நோயினால் இரண்டு கைகளும் நடுங்கியபடியே இருந்தன. மெதுவாகத் திரும்பி என் தலையில் கைவைத்து ஆசீர்வதித்தார். என் ஆசிரியர் - என் அதிபர் அவரது கரங்கள் எனது தலையைத் தொட்ட உணர்வை இன்றும் நான் உணர்கிறேன். அவரது மறைவு அன்றும் நான் மிக மிக வருந்தினேன். அவர் தானாகவே பிறந்தவர். உருவாக்கப்பட்டவர் அல்ல.

வெகு நாட்களின் பின்னர், அவர் தனது வெள்ளை Consul காருடனும், தன் மனைவியுடனும் நின்று எடுத்த Black & White நிழற்படம் ஒன்று எனக்குக் கிடைத்தது. அதை என் முகநூலில் இட்டு மகிழ்ச்சிப்பட்டுக் கொண்டேன். அவரது 100 ஆவது பிறந்த நாள் விழாவில் அவரைப் பற்றிய நினைவுகளை மீட்கக் கிடைத்த இந்த வாய்ப்பினை தவமாக நினைக்கிறேன். இதற்குச் சந்தர்ப்பமளித்த பிள்ளைகள் அபயலிங்கம், ஜோதிலிங்கம் , மருமகன் நவேந்திரன் ஆகியோருக்கு என் நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

தமிழருவி சிவகுமார்
யாழ் இந்து பழைய மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரபாதம் சரவணபவன்
ඊස්වරපාදම් සරවනබවන්
**Eswarapatham Saravanapavan**

நாடாளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழ் தேசிய கூட்டமைப்பு

Member of Parliament
Jaffna District
Tamil National Alliance

පාර්ලිමේන්තු මන්ත්‍රී
යාපනය දිස්ත්‍රික්කය
දෙමළ ජාතික සන්ධානය

அலுவலகம் / office / කාර්යාලය: 021 221 9616
தொலைநகல் / Fax / ෆැක්ස්: 021 221 9616
ஈ.மெயில் / e mail / ඊමේල්: tnampsara@gmail com
கைபேசி / Mobile / ජංගම දුරකතන: 071 411 5002




## அமரர் அதிபர் இ. சபாலிங்கம் அவர்களை நினைவுகூரும்
# நூற்றாண்டு மலர் சிறப்புற வாழ்த்துகிறேன்

உன்னதமான வாழ்க்கையின் ஊடாக தாம் வாழ்ந்த பிரதேசத்தையும் வளர்த்த உறவுகளையும் வாழ வைத்த பெருமைக்குரிய மகத்தான மனிதர்களின் நாமங்கள் என்றும் எங்கள் மனதில் நிலைத்திருப்பவையாகும். அந்தவகையிலே அமரர் அதிபர் இ. சபாலிங்கம் அவர்கள் என்றும் போற்றப்படும் ஓர் உயர்வான பண்புடையவராக வாழ்ந்து பலரது மனங்களிலும் நிறைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்ச்சிக்குக் காரணராகிப் பல்திறன் கொண்ட மாணவர்களை உருவாக்கி உயர்ந்தவர். கல்வியால் கலைகளால் விளையாட்டுத் திறன்களால் கல்லூரி உயர்வுபெற உழைத்தவர் சமயத்திற்கும் சமூகத்திற்கும் அவர் ஆற்றிய பணிகளால் சிறப்புற்ற கல்லூரியும் அதன் வளங்களும் இன்றும் ஒளிர்கின்றன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை தமது மகத்தான கல்விப்பணியால் சிறப்பொளிர முன்னேற்றியவர் அமரர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள் என்பது உலகறிந்த தகவலாகும். அந்நாள் கல்லூரியின் அதிபராகப் பிரகாசித்த அவரது நினைவாக கல்லூரி அலுவலக முகப்பில் பூர்த்தி செய்யப்படாதிருந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் முதலாம் மாடித் தளத்தை அவரது மைந்தன் வைத்திய கலாநிதி ச.ஜோதிலிங்கம் அவர்கள் கேட்போர் கூடமாக அமைத்தளித்துள்ளார். அது இந்நாள் 'சபாலிங்கம் அரங்கம்' என்ற பெயரோடு மகிழ்வோடு பலரும் பயன்கொள்ளும் அரங்காக விளங்குகிறது.

இன்றும் கல்விச் சீர்பெருக்கக் கல்லூரியின் சிறுப்புக்குக் காரணரான அதிபர் இ. சபாலிங்கம் அவர்கள் எம்மருகில் இல்லை . எனினும் அவரால் பயன்பெற்றுப் பாரெங்கும் புகழ்பரவத் திகழும் அவரது மாணவர்களின் சிறப்புகள் அவரது அழியாநினைவைச் சுமந்தபடி வாழ்வதை நாம் அனைவருமே அறிவோம் .

அத்தகைய மதிப்புயர் திறமைசாலிகளான அதிபர்கள் முகாமை செய்த் கல்லூரியில் நானும் கற்றேன் என்ற பெருமைக்குள் என்னை ஆழ்த்தி மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டுகள் பலவாகக் காலங்கள் விரைந்திடினும் அவர் ஆற்றிய கடமைகளின் சின்னங்கள் எமக்குக் கற்றுத்தரும் பாடங்கள் மக்களின் சேவைக்கு எம்மை வழிநடத்தும் உந்து சக்தியாகத் திகழ்கின்றன.

அவரது வாழ்வு சேவை என்பவற்றின் மீதான மதிப்பும் மகிமையும் வெளிப்படவும் போற்றப்படவும் அமரரின் நினைவாக வெளிவரும் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றி.

யாழ் இந்து பழைய மாணவன்
இல.361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In Honor of Principal E. Sabalingam



I had grown hearing how a strict disciplinarian Principal Sabalingam was. I had heard stories of him snatching boys from movie theaters during school time. My experience was a bit different. I was in the eighth grade then and would participate in speaking and writing competitions such as on U.N. Day. Those qualifying from the school competition would get a ride in his car to the regional competition, usually at Parameswara College, today's Jaffna University. That was a proud moment for an eighth grader had a ride in Principal's car.

My serious engagement with Principal Sabalingam came during the first week of school in the tenth grade. To my dismay when I went to the school, I found my place, not in 10A which was the math's class but in 10C, the bio class. I was shocked, angry, and confused. I put up with that class for a week. By Friday that week, I couldn't stand it anymore. I picked myself up and went to the Principal's Office.

Sabalingam master asked me what the problem was. I said I wanted to go to the math's class (where I belonged to). He looked at me and asked, "Don't you want to be a doctor?" I said "No." He then said "Your father wants you to become a doctor." | said "I don't." He continued that "I am teaching math's for the bio class." I said "I don't want to be in that class." | was nervous knowing his reputation for being a superb strict disciplinarian. I had just questioned his authority repeatedly and still left his office surprisingly (and luckily) uncatched!

When I went back to school the next week, I was back in my favorite (math's) class. Against all odds, I courageously (or stupidly) challenged his decision and to his great credit, he listened patiently and eventually adhered to my wishes. If he hadn't risen to the occasion thatday, my life would have been so different today. Would it be for the better or worse? Only Principal Sabalingam knew the answer that day!

**Paramsothy Jayakumar**
1965-1971 (JH Primary School); 1972-1977 (JHC)

Paramsothy Jayakumar is a Senior Technical Expert in Analytics and SAE Fellow at U.S. Army Tank Automotive Research, Development and Engineering Center (TARDEC). Prior to joining TARDEC, he worked for Ford Motor Company and BAE Systems. In 2016, Dr. Jayakumar was awarded the Department of Defense Laboratory Scientist of the Quarter Award by Hon. Frank Kendall, Under Secretary of Defense for Acquisition, Technology and Logistics, for outstanding achievement in laboratory science and engineering. Dr.Jayakumar received his M.S. and Ph.D. from Caltech, and B.Sc. Eng. from the University of Peradeniya, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் இ. சபாலிங்கம்

# உள்ளம் கவர் கள்வன்



'வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப் பணி பூண்டு
வெள்ளைக் கார் வாகனத்தில் விரைந்து பள்ளி வந்துவிடும்
எங்கள் அதிபர் உயர் சபாலிங்கம் எனும் இனியர்
போகின்றார் போகின்றார் இளைப்பாறிப் போகின்றார்

வெள்ளிக் கிழமைகளில் விடியவிலே நல்லூரில்
வள்ளித்துணைவனைப் போய் வணங்குகின்ற வழக்கம் தான்
அள்ளிக்கொடுத்ததுவோ அவருக்கிவ் வாற்றல் எல்லாம்

பிறீ என்று ஒரு பாடம் இல்லை என்று விளக்குபவர்
திறீ றோசஸ் ஆசான்கள் திகைக்கும் ஓர் சிங்கம் இவர்

'கொப்பரைப் போய்க் கூட்டிக் கொண்டுவா' எனும் வசனம்
அப்பப்பா, மாணவரை அடக்கும் உயர் மந்திரம் தான்
என்றுணர வைத்தவரே, எம்மை விட்டுச் செல்லாதீர்.

எமது உள்ளம் நிறைந்த அதிபர் யாழ். இந்துவை தரணியில் தலைநிமிர வைத்த அதிபர்கள் வரிசையில் மிக முக்கியமானவராக விளங்கும் அமரர் சபாலிங்கம் அவர்களின் பிறந்த நூற்றாண்டு கொண்டாடப்படும் வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு என் நினைவலைகளில் இருந்து சிலவற்றைப் பதிவு செய்ய விழைகின்றேன். மிகுந்த உணர்வு நிலையில் நின்று எழுதும் இப்பதிவில் உள்ள சொற்பிழை , பொருட்பிழையைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

1975ஆம் ஆண்டு யாழ். இந்துக்கல்லூரியில் அப்போது நான் பன்னிரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறேன். அதிபர் சபாலிங்கம் அவர்கள் இளைப்பாறுகிறார் என்ற செய்தி எமக்கு அதிர்ச்சியாக வருகிறது. அவரின் இளைப்பாறுதலை முன்னிட்டு உயர்தர மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த பிரிவு உபசார விழாவில் நான் பாடிய கவிதையின் சில வரிகள் அவை. முகத்தில் எதுவித சலனமுமின்றி அதிபர் சபையில் உள்ள மாணவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார் என ஆசிரியர்களும் மாணவர்களும் கூறியதைக் கேட்டேன். அது ஆச்சரியம் தரவில்லை . அவருக்குள் இருந்தது ஓர் இரும்பு இதயம்... உணர்ச்சிகளை அவ்வளவு சீக்கிரம் வெளிக்காட்டுபவர் அல்ல. அடுத்த நாள் இந்துக் கல்லூரியில் அவரின் நிறைவு நாள். அன்று பிற்பகல் குமாரசாமி மண்டபத்தில் முழுப் பாடசாலையும் நடாத்திய பிரிவு உபசார விழாவில் பதிலுரையாற்றுகிறார் அதிபர். பல விடயங்களைத் தொட்டுப் பேசியிருப்பார். அவை எனக்கு நினைவில் இல்லை. நேற்று ஒரு மாணவன் ஃபிறீ பாடவேளை இல்லை என்று குறிப்பிட்டார். ஆம் அப்படி ஒரு பாடவேளை வகுப்பு நேர அட்டவணையில் இல்லை என்று அதிபர் என் கவிதையின் ஓரடியைத் தொட்டுப் பேசியது நினைவில் உண்டு. அன்று விழா முடிவில் ஆசிரியர்களும் மாணவர்களும் அதிபரை இந்து மகளிர் கல்லூரிக்கு முன்னால் உள்ள அவரது இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துக் கொண்டு செல்கிறோம். மாணவ முதல்வர்கள் வரிசை குலையாமல் மாணவர்களை அழைத்துச் செல்கின்றனர். கல்லூரி வீதி, கஸ்தூரியார் வீதி, அரசடி வீதியில் வழி நெடுக மக்கள் கூடி நின்று உணர்ச்சி பொங்க விடை கொடுக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் 'கற்பகம்' இல்லத்தில் வந்த எல்லோருக்கும் குளிர்பானம் வழங்கி உபசரிக்கின்றனர் அதிபரின் இளைய மகன் அபயலிங்கமும் அவரின் நண்பர்களும். அபயலிங்கமும் அப்போது இந்துவின் மாணவன் தான். எல்லோரும் விடைபெற்றபின்னர் மாணவர் முதல்வர்கள் வரிசையாக அதிபரிடம் விடை பெறுகின்றனர். என் முறை வரும்போது நான் கண்கள் கலங்க கைகூப்பி 'போட்டு வாறன் சேர்' என விடைபெறுகிறேன். ஒரு கையால் என் கைகளைப் பிடித்துக்கொண்டு மறு கையால் என் தோளில் தட்டி 'ஒழுங்காகப் படி' என்று கூறுகிறார். முதல் தடவையாக தளுதளுத்த அவரின் குரலைக் கேட்கிறேன்.

அவரது ஓய்விற்குப் பின் இடையில் ஒருநாள் எமது கல்லூரி வீதி வகுப்பறையொன்றில் ஆசிரியர் வராதமையினால் வகுப்பில் அமைதி பேணிவிட்டு அலுவலகம் நோக்கி வரும்போது கல்லூரி வீதி வாயில் அருகில் அதிபர் சபாலிங்கம் அவர்களின் வெள்ளை நிற வண்டி நிற்கிறது. அருகில் எனது ஆசிரியர் தேவன் - யாழ்ப்பாணம் அவர்களும் சபாலிங்கம் அவர்களும் பேசிக்கொண்டிருக்கின்றனர். நான் செல்வதற்கு முன்னரே அதிபர் வண்டியில் ஏறிவிட்டார். பின்னர் ஒரு நாள் தேவன் ஆசிரியரிடம் சபாலிங்கம் என்ன சொன்னார் என்று கேட்டேன். 'ஐ சே, தேவன் ரிட்டையர் ஆகிவிட்டால் உயிரோடு இருக்கக்கூடாது' என்று தேவன் சொன்னபோது அதன் பொருளை நான் புரிந்துகொள்ள சில காலமாயிற்று.

பாடசாலை நிர்வாகத்தில் என்றும் நிலைகுலையாத சபாலிங்கம் அவர்கள் தளரா மன உறுதி படைத்தவர். சுப்பர் கிரேட் எனப்படும் அதி உயர்தர வகுப்பு அதிபராக அவர் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் 1972 ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரிக்கு ஓர் அழைப்பு. அப்போது இலங்கையின் பிரதான பாடசாலைகளில் கடேற் படை என்ற மாணவர் பயிலிளவற் படை இராணுவத்தின் தொண்டர் பிரிவின் கீழ் பாடசாலைகளில் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1972இல் பொலிஸ் விசேட றிசேர்வ் படையின் கீழ் மாணவர்களுக்குத் தனியாக இன்னொரு கடேற்படை அமைக்க அரசு தீர்மானித்தது. உயர் அதிகாரிகள் மலேசியாவில் சென்று சிறப்புப் பயிற்சி பெற்று திரும்பியிருந்தனர். முதல் வருடத்தில் இலங்கையில் ஆறு பாடசாலைகள் பொலிஸ் கடேற் படைக்குத் தெரிவாகியிருந்தன. அதில் ஒரே ஒரு தமிழ்ப் பாடசாலை யாழ். இந்துக் கல்லூரி. எமது ஆசிரியர்கள் சுந்தரதாஸ், மரியதாஸ் இருவரும் கொழும்பில் விசேட பயிற்சிக்காகச் சென்றிருந்த வேளை. அப்போது நான் 10ஆம் வகுப்பில் மீளப் படித்துக்கொண்டிருந்தேன். எமது ஆங்கில ஆசிரியர் சுந்தரதாஸ் பயிற்சிக்குச் சென்ற முதல் நாள். எமது வகுப்புக்கு வந்து பொலிஸ் கடேற் படை பற்றி அறிமுகம் தந்ததோடு கணக்குப் பாடமும் எடுத்தார்.

அந்த வருடம் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரம் இறுதிப்பரீட்சைக்கு முன்னதாக நடைபெறும் மாதிரிப் பரீட்சையில் முதல் பாடம் சைவ சமயம். அதற்கு நான் போகவில்லை. எனது தேர்ச்சி அறிக்கையில் சமயபாடப் பரீட்சைக்கு நான் தோற்றவில்லை என்பதைக் குறிக்க 'ab' என்று குறித்திருந்தார் வகுப்பாசிரியர். அதிபரிடம் கையெழுத்துக்கு தேர்ச்சி அறிக்கைகள் சென்றபோது தடித்த மையினால் அதிபர் ஒப்பமிட்டிருந்தார். மேலும் சமயபாடத்திற்கு எதிரே குறிக்கப்பட்ட 'ab' ஐச் சுற்றி தடித்த மையினால் வட்டமிட்டுவிட்டிருந்தார் அதிபர். எனக்கு வயது குறைவாக இருந்தமையாலும், இறுதிப்பரீட்சை முடிவுகள் வர நான்கு மாதங்களுக்கு மேலாக ஆகும் என்பதாலும், நான் அடுத்தவருடமும் 10ஆம் வகுப்பில் மீளக் கற்பதற்கு விண்ணப்பித்திருந்தேன். என்னோடு என் ஊரவரும் உறவினருமான ஆனந்தவரதனும் விண்ணப்பித்திருந்தான். அவரின் பாடசாலை வருகை போதுமானதாக இல்லை என்று அவரின் தேர்ச்சி அறிக்கையிலும் வட்டமிட்டிருந்தார் அதிபர். 1973 தையில் பாடசாலை தொடங்கும்போது எம்மிருவரையும் அழைத்து கொப்பரைக் கூட்டிக்கொண்டு வா என்று தனித்தனியாக கூறிவிட்டார் அதிபர். வரதனின் அம்மாவும் எனது அம்மாவும் பாடசாலைக்குச் சென்று காத்திருக்கிறோம். மதிய நேரத்திற்கு முன்னதாக விறுவிறு என்று தன் அறைக்குள் நுழைந்தவர் இருவரும் வாருங்கள் என அழைத்தார். அம்மாக்கள் இருவரையும் இருக்கையில் அமரவைத்துவிட்டு ஒவ்வொருவரின் தேர்ச்சி அறிக்கையையும் வைத்துக் கொண்டு குட்டிப் பிரசங்கம் செய்தார். ஒழுங்காக பாடசாலைக்கு வருவதற்கு அம்மாக்களிடம் உத்தரவாதம் வாங்கிக்கொண்டு எம்மை 10RD வகுப்பில் அனுமதித்தார். நாம் பயந்தது போல் எதுவும் நடக்கவில்லை. குரலில் கடுமை காட்டவில்லை. என்னைப் பார்த்து, நல்ல ஒழுக்கமுள்ள மாணவர்களை மட்டுமே கடேற்படையில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று எஸ்.பி வாமதேவன் கூறியிருக்கிறார். எனவே ஒழுங்காக நடந்துகொள் என்று சொல்லி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை இறுதியாகச் சந்தித்த நாளும் என் நினைவில் உண்டு. அப்போது நான் நீதிமன்றில் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். வெளிநாட்டில் இருந்து அதிபர் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்க ஒரு நாள் மாலை அரசடி வீதியில் அவர் இல்லம் செல்கின்றேன். வெள்ளை வேட்டி சட்டையில் தனியே இருக்கிறார். சில காலத்துக்கு முன்னர் தான் அவரின் மனைவி காலமாகியிருந்தார். அதனால் தானோ, இவர் ரொம்பவே தளர்ந்து போயிருந்தார். வா வா என்று அழைத்து அன்போடு பேசுகிறார். 'என்ன செய்கிறாய்?' என்பதில் தொடங்கி பல்வேறு கேள்விகள். பதிலுக்கு நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்று கேட்க ஒரு கணம் குலுங்கி அழுகிறார். என் மனைவி தான் எனக்கு எல்லாமாக இருந்தார். அவரின் மறைவு தாங்க முடியாதது என்று அவர் கலங்கியதை இரண்டாவது தடவையாகப் பார்க்கிறேன். ரீ.வி பார்ப்பீர்காளா என்றால் ரீ.வி எனது எதிரி, ரேடியோ எனது நண்பன் என்கிறார். கண்ணில் ஏற்பட்ட கோளாறால் தொலைக்காட்சி பார்ப்பதில்லை என்பதை அவர் அவ்வாறு கூறுகிறார் என அறிந்து கொள்கிறேன்.

மேற்கூறிய இரண்டு சம்பவங்களுக்கும் இடையிலும் அதிபரை ஒரு தடவை சந்தித்திருக்கிறேன். அது 1980ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் ஒருநாள். மே 22இல் கம்பன் கழகத்தை நண்பன் ஜெயராஜ், குமாரதாசன் மற்றும் யாழ். இந்து நண்பர்களுடன் சேர்ந்து ஆரம்பிக்கிறோம். நண்பன் ஜெயராஜ் அதிபர் சபாலிங்கம் மீது பேரபிமானம் கொண்டவர். அவர் தந்தையார் இலங்கை ராஜாவும் சபாலிங்கமும் யாழ். இந்துவில் சமகாலத்தவர்கள். நண்பரின் மகன் என்பதற்காக யாழ். இந்துவில் அனுமதியை இலகுவாகக் கொடுத்தவரல்ல சபாலிங்கம். மேலும் ஜெயாராஜ் பேரபிமானம் கொண்டுள்ள இன்னொரு ஆசிரியரும் என் ஆசானுமான சுந்தரதாஸ் அவர்கள் அதிபர் சபாலிங்கம் அவர்களின் ஆளுமைப் பண்புகள் பற்றிக் கூறக்கேட்டு கிறு கிறுத்துப் போனவர் ஜெயராஜ்.

பெருமளவில் தமிழ் மாணவர்கள் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகம் செல்வதற்கு ஆப்பு வைப்பதற்கென்றே கொண்டுவரப்பட்ட திட்டம் தான் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் திட்டம். அது 1970 ஆண்டுக்குப் பின் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ அம்மையார் ஆட்சியில் கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஸ் பதியுதீன் மொகமட் அவர்களால் கொண்டுவரப்பட்டது. அதற்கு எதிராக தமிழ் மாணவர்கள் கிளர்ந்தெழுந் - தனர். ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கண்டனக் கூட்டங்கள், கடையடைப்பு என யாழ்ப்பாணம் அல்லோல - கல்லோலப்பட்டது. சில காலத்தின் பின் கல்வி அமைச்சர் பதியூதீன் மொகமட் அவர்கள் யாழ்ப்பாணம் வருகிறார். அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் வரவிருப்பம் தெரிவிக்கவே கல்வித் திணைக்கள் அதிகாரிகள் அதிரிடம் தெரிவித்து சம்மதம் பெறுகின்றனர். அமைச்சரின் வருகையை ஒட்டி பிரதான வாயிலில் உள்ள கட்டிடத்திற்கும், கல்லூரி வீதி ஓரச் சுவருக்கும் வெள்ளை நிறத்தில் சுண்ணாம்பு பூச்சு அடித்து பளிச்சென்று காட்சி தருகிறது கல்லூரி. இரண்டு நாட்களுக்கு முந்தி இரவோடு இரவாக அமைச்சரின் வருகையைக் கண்டித்து கல்லூரி வீதிச் சுவரில் இரண்டு இடங்களில் யாரோ கிறுக்கியிருக்கிறார்கள். முதல் நாள் அமைச்சர் வருகையை ஒட்டிய ஒத்திகை நடக்கிறது. அந்த ஒத்திகைக் கூட்டத்தில் அதிபர் சபாலிங்கம் அவர்கள் பேச்சின்போது கேட்ட சில வார்த்தைகள் என் நினைவில் உண்டு. எம்மிடம் வரப்போகின்றேன் என்று அமைச்சர் கூறுகின்றார். அவரை வரவேற்பது தமிழ்ப் பண்பாடு என்பதை நீங்கள் மறக்கக் கூடாது. எந்தக் குழப்பமும் இன்றி நாளைய நிகழ்ச்சி நடைபெற நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும் எனக் கேட்கிறார் அதிபர். எதுவித சத்தமும் இன்றி மிக அமைதியாக அதிபர் பேச்சை எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அடுத்த நாள் அமைச்சரை அதிபர் ஆசிரியர்கள் வரவேற்று சாரணர் அணிவகுப்புடன் கல்லூரி வீதி வாசலில் இருந்து மண்டபத்துக்கு அழைத்து வருகின்றனர். மாணவர்கள் எல்லோரும் முன்னரே மண்டபத்தில் அமர்ந்திருக்கிறோம். அங்கு பேசிய பேச்சுகள் அதிகம் நினைவில் இல்லை. ஆனால் அதிபர் சபாலிங்கம் அவர்கள் அமைச்சரை வரவேற்றுப் பேசும்போது, தரப்படுத்தல் பற்றிக் குறிப்பிட்டு, அமைச்சர் அவர்களே, உங்கள் தரப்படுத்தல் திட்டம் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட துரோகமாகவே தமிழர்கள் பார்க்கிறார்கள் என்ற சாரப்பட குறிப்பிடுகிறார் அதிபர்.

ஆசிரியர் சுந்தரதாஸ் அடிக்கடி இந்தக் கூற்றை நினைவில் கொள்ளுவார். அதிபர் சாபாலிங்கம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, அமைச்சருக்கு முன்னால், நீர் தமிழ் மக்களுக்கு துரோகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைத்துவிட்டீர் என்று துணிந்து சொன்னவன் எங்கள் சபாலிங்கம். அன்றே நான் அவனுக்கு அடிமையானேன் என்று உணர்ச்சி பொங்க ஒருமையில் அதிபரைக் குறித்து எம்மிடம் சொல்வார்.

கம்பன் கழகத்தை நாம் ஆரம்பித்தபோது யாழ். இந்துக்கல்லூரி அதிபர் எமது புரவலர்களில் ஒருவராக இருக்கவேண்டும் என்று விரும்பியிருந்தோம். பின்னர் கம்பன் கழகம் ஆரம்பிக்கப்பட்டதை ஒட்டி ஒரு அறிமுகவிழாவை நடாத்த விரும்பினோம். அதற்கு ஓய்வு பெற்ற அதிபர் சபாலிங்கம் அவர்களையே தலமை தாங்க அழைப்பது என்று முடிவாயிற்று. ஒரு நாள் மாலை , இதனை எமது ஆசிரியப்பிரான் சிவராமலிங்கம் அவர்களிடம் சென்று கூறி, அவருடன் சபாலிங்கம் அவர்களின் இல்லம் செல்கிறோம். அப்போது இருள் கவ்வும் நேரம். அவரின் வீட்டு விறாந்தையில் இலங்கைக் கம்பன் கழகம் ஆரம்பித்த விடயத்தைச் சொல்லி அறிமுக விழாவுக்கு அவரே தலைமை தாங்கவேண்டும் என ஆசிரியர் சிவராமலிங்கம் வேண்டிக்கொள்கிறார். மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார் அதிபர். வேறு என்ன நான் செய்யவேண்டும் என்று கேட்கிறார். அப்போது சிவராமலிங்கம் ஆசிரியர் ஒரு விடயத்தை அவர் கவனத்துக்குக் கொண்டுவருகிறார்.

முன்னர் யாழில் இயங்கிய இலங்கைக் கம்பம் கழகம் இப்போது செயலிழந்துள்ளது. அதன் தலைவர் இப்போது இல்லை. செயலாளர் சொக்கலிங்கமும், பொருளாளர் தேவன் - யாழ்ப்பாணமும் இவர்களை அப்பெயரில் நடத்தச் சொல்லியுள்ளனர். உங்கள் ஆலோசனை என்ன என்று கேட்கிறார் ஆசிரியர். சொக்கனும் தேவனும் சம்மதிப்பார்களாயின் பிரச்சனை எதுவுமில்லை. எதற்கும் நீங்கள் அகில இலங்கைக் கம்பன் கழகம் என்று பெயரை வைத்துக்கொள்ளுங்கள். வேறு யாரும் பின்னாளில் வந்து தொந்தரவு கொடுக்க முடியாது என்று ஆலோசனை கூறுகிறார் அதிபர் சபாலிங்கம். அந்தப் பெயரே இன்றளவும் புழங்கி வருகிறது. நல்லூரில் ஆரம்பித்த அகில இலங்கைக் கம்பன் கழகம் இன்று உலகளாவிப் புகழ் பெற்றமைக்கு அதிபர் சபாலிங்கம் தலைமையில் 1980ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற அறிமுக விழா அச்சாரம் இட்டது. சபாலிங்கம் அவர்கள் தலைமை தாங்கி விழாவை நடாத்தியதோடு நிர்வாகிகளை மேடைக்கு அழைத்து அறிமுகம் செய்து வைத்திருந்தார்.

அதிபர் சாபாலிங்கம் பின்னாளில் இலண்டனின் தன் பிள்ளைகளுடன் இருக்கிறார் என்று கேள்விப் பட்டேன். அவரின் இளைய மருகன், எனது ஊரவனும் சிறுவயது நண்பனுமான நவேந்திரன் அவர்கள். ஒரு நாள் சபாலிங்கம் அவர்கள் முதியோர் காப்பகத்தில் இருக்கிறார் என்று கேள்வியுற்றுக் கவலையடைந்தேன். நவேந்திரன் மீது கோபமும் வந்தது. பின்னாளில் நான் புலம்பெயர்ந்து சிட்னியில் வாழும்போது என் அப்பாவும் அம்மாவும் ஒருவர் ஒருவராக இருபத்திநாலு மணிநேர கவனிப்புத் தேவை காரணமாக முதியோர் காப்பகம் சென்ற போது நவேந்திரன் நிலையைப் புரிந்துகொண்டேன்.

அதிபர் சபாலிங்கம் மறைந்துவிட்டார் என்ற செய்தி வந்தபோது நான் யாழ்ப்பாணத்தில் இருக்கிறேன். அடுத்த நாள் காலை ஒரு யாழ். தினசரியில் முழுப்பக்க விளம்பரம் அதிபர் சபாலிங்கம் அவர்களுக்கு அஞ்சலிமலராக வெளிவந்திருந்தது. அதனை ஏற்பாடு செய்தவர் என் வகுப்புத் தோழன், யூனிவேர்சல் கல்வி நிலைய நிறுவனர் பொ.ஜங்கரநேசன் அவர்கள். சபாலிங்கம் அவர்கள் வெள்ளை வேட்டி, சட்டை, சால்வையுடன் நடந்து வரும் புகைப்படம் ஒரு புறம் முழுக்க. 'நடந்தால் அதிரும் ராஜ நடை' என்ற தலைப்பின் கீழ் அந்தப் படம் வந்திருந்தது.

அவரின் நூற்றாண்டு கொண்டாடப்படும் இவ்வேளையில் அவரின் ராஜ நடை என்றும் மனத்திரையில் தோன்றி மறைகிறது. என் உள்ளத்தில் என்றும் நீங்காது அதனைக் கொள்ளை கொண்ட அறிஞர், நிர்வாகி, ஆசிரியர், அதிபர் சபாலிங்கம் அவர்களின் நினைவைப் போற்றுகிறேன்.

**திருநாவுக்கரசு திருநந்தகுமார்**
**சார்ஜண், பொலிஸ் கடேற்படை 1973-1975,**
**யாழ் இந்து பழைய மாணவன்**
**மாணவ முதல்வர் 1975 உபதலைவர்,**
**உயர்தர மாணவர் ஒன்றியம் 1975**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Tribute to Sabalingam Master



Mr. Eliyathamby Sabalingam, endearingly and respectfully addressed by his students and community as 'Sabalingam Master' was a scholar, sportsman and a man of wisdom. Above all he was a principal who skillfully led some of Jaffna's top schools during a time of utter distress.

My relationship with Sabalingam master had several facets. He was my mother's teacher and principal and my father's principal and dear friend. Although I came to know him through these relationships, a very rich and complex friendship developed between him and me during my formative years. True relationships are those which thrive tests of disagreement and discord. As the principal of Jaffna Central, he refused me a double promotion in 1966 and dispensed a painful punishment one fateful day in 1971, the only punishment I ever received as a student from any one. Yet, in the years that were to follow he shared with me the pain he felt on those two occasions. He became one of my role models and to this day I recall and emulate some of his traits in my role as a professor in the US, India and Ariviyal Nagar, Sri Lanka. In this brief write up I shall discuss some of the lessons he taught me.

Diversity is a word that is used rather carelessly these days. Sabalingam master embodied diversity in all its glory and meaning. Here I will only speak of one aspect, diversity in the curriculum of Jaffna high schools in the 50s through 80s. There were principals who would strategize and elevate their schools in education and there were those who would do so in the field of sports and other extra-curricular activities. Sabalingam master was the only principal I know of who led his schools in both spheres. Being an excellent football player as well as an outstanding teacher of advanced mathematics he was most qualified to do so. To cite an example, as the principal of Jaffna Central in the early 70s he declared that by



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1974 he would have more students selected for engineering than Hindu which had historically held the record. Ironically, in 1972 or so he was transferred to Hindu. This was at the height of standardization and 3 students entered engineering from Hindu while none from Central. Of the 3, the 2 that were admitted to Peradeniya both came from Central to Hindu because the then principal of Central refused to go out of his way to replace Vinayagampillai master, an outstanding advanced level applied mathematics teacher, who was transferred out of Central because of the faith that Sabalingam master would make us enter. Those who have taken the time to learn the facts know Sabalingam master's dedication to education in the face of insurmountable odds. While most principals would guide students away from music, Sabalingam master always encouraged my parents with their quest to teach me Mridangam. He was a guest of honor of the function Mruthangam debut (Arangetram) and as a family friend attended the event with his family.

Inspiration is another word used widely yet practiced sparingly. He was a master of inspiration. He inspired me in a plethora of ways throughout my early life, yet two instances stay very green in my memory. As a 'fat boy,' athletics were the farthest from my mind. Yet by some stroke of luck I was elected as the sports captain of Sabapathy house. I've heard some rumors that the decision was made on the fact that I loved food and hence the athletes decided that if I were the house captain I would take them frequently to mokkan kadai. Whatever the truth may be, I was elected and I did take my team to mokkan kadai many times. Nonetheless, I was terrified being elected sports captain and consulted Sabalingam master on whether | should accept or decline. I still remember him saying to me with that wise old smile on his face, "If you believe you are an athletic leader and apply yourself, you one day will, not only here but nationally." Some six years later as I stood on the Sri Lankan national stand as the national weight lifting champion in the middle heavy weight class i silentlymouthed my thanks to Sabalingam master and to the late Jagath Santha who pushed me day after day towards this goal. On the second of October 1975, a Gandhi Jayanthi day, I received a telegram from Sabalingam Master that I was awarded the Best Student Prize of Jaffna Hindu for that year. After receiving the cup I went to him and thanked him. He inspired me by saying "Now go top the batch at Peradeniya and make us all proud." There were many factors that



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

made me top the batch, yet his inspiration was like turning a switch on. As a professor, I now inspire my boys and girls of IIT Gandhinagar, EFac Ariviyal Nagar and Executive MBA UC Irvine. I can only pray that my inspirations are at least a fraction as good as master's.





Every member of Sabalingam master's family has been dear to my birth family. It is indeed a pleasure to celebrate master's birthday with members of his family and to join all my colleagues and students of master in saying, Sir, you have given us abundantly and taught us so much. We will pass it on to the generations to come.

Thank you sir.

**Kasivisvanathan Chelvakumar,**
*PhD, MBA, Visiting Professor,*
*UCIrvine, IIT Gandhinagar,*
*University of Jaffna Old Student of JHC & JCC.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர் - ஆசிரியர்

# ஓர் அனுபவப் பகிர்வு

பாரம்பரியம் போற்றும் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் வரிசையில் பலர் நினைவு கூரத்தக்கவர்கள். அவர்களுள் அமரராகிவிட்ட அதிபர் இ.சபாலிங்கம் அவர்கள் சிறப்புமிக்கவர். யாழ்.இந்துவின் மைந்தனான இவர் 1971 ஆம் ஆண்டு எமது கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றார்.1975 ஆம் ஆண்டு ஓய்வுபெறும்வரை கல்லூரிக்கு அளப்பரிய பணிகளையாற்றியுள்ளார். நான் பல்கலைக் கழகப் படிப்பை நிறைவு செய்துவிட்டு 1971 ஆம் ஆண்டு ஆசிரியப் பணியில் இணைந்து கொண்டேன். அவரோடு சமகால ஆசிரியராகப் பணியாற்றும் பெறு பேறு பெற்றவன்.

அதிபரைச் சந்திக்கச் சென்ற முதல் நாள் அவர் என்னைக் கூர்ந்து கவனித்து ஒரு புன்முறுவல் செய்தார். பின்னர் ஏன் ? என்பதை அறிந்து கொண்டேன். அவரை முதன் முதலில் கண்ட எனக்கு அவர் மேல் ஒருவித பாசம் ஏற்பட்டது. உயர்ந்த மனிதர், சிவந்த மேனி, கூர்மையான கண்கள், வெள்ளை வேளேரென்ற ஆடை, இவை அனைத்தும் அவரைக் கம்பீரமாகக் காட்டியது. ஓர் அதிபருக்குரிய குணநலன்கள் ஒருங்கே இணையப்பெற்றவர் அமரர் அவர்கள். சிறந்த நிர்வாகி, முகாமையாளர், ஆளுமை மிக்கவர், நுண்ணறிவாள-ன், நல்ஆசிரியர், விளையாட்டுப் பிரியர், நல்வழிகாட்டி, மொத்தத்தில் அவர் மனிதருள் மாணிக்கம். அவருக்கு வேண்டிய எழுத்து வேலைகளை நான் செய்து கொடுப்பதனால் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பாடசாலை நிர்வாகத்தை எனக்குக் கற்பித்த ஆசான் அவர்.

### சிறந்த நிர்வாகி

பாடசாலை ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றை மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் நிலைநாட்டியவர். கல்வி அமைச்சில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்திச் சிறந்த ஆசிரியர்களைப் பாடசாலைக்கு உள்வாங்கிப் பாடசாலையின் தரத்தையும், பெறுபேற்றையும் உயரச் செய்தவர்.கல்லுக்குள் ஈரம் என்பதற்கு இவரே உதாரணம்.

ஒரு நாள் ஆசிரியர் ஒருவர் வகுப்பறையில் கற்பித்துக் கொண்டிருக்கும் போது மாணவர்கள் இருவர் நடைபாதையில் காலால் சத்தமிட்டுச் சென்றனர். ஆசிரியர் அவர்களைக் கடுமையாகத் தண்டித்துவிட்டார். அந்த மாணவர்கள் தம் வகுப்பு மாணவர்களை அனைவரையும் அழைத்துக் கொண்டு அதிபர் அறைக்குள் சென்று விடயத்தைக் கூறி, "இதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் வகுப்பிற்குச் செல்லமாட்டோம்," என்று கூறினர். அங்கே நின்ற சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு "ஏதும் நடந்துவிடுமோ?" என்று பயந்தனர்.ஆனால் அதிபர் சிறிது நேரம் பொறுமையாய் இருந்துவிட்டு அவர்களுடன் சாந்தமாகக் கதைத்து அவர்களைச் சமாதானப்படுத்தி வகுப்பிற்கு அனுப்பி வைத்தார். வெளிப்பார்வைக்குக் கடும் போக்காளன் என்று காட்டிக் கொண்டாலும் உள்ளே ஈரமுள்ளவர்.

எட்டாம் ஆண்டில் தொழில் கற்கைநெறிப் பாடமாக மோட்டார் இயந்திரவியல் பாடத்தை அறிமுகம் செய்து வைத்தார்.அதற்கென ஓர் ஆசிரியரையும் நியமித்தார். 1972ஆம் ஆண்டு என்னை விடுதி அதிபராக நியமித்-தார். அப்போது 400 க்கு மேற்பட்ட மாணவர்கள் விடுதியில் இருந்தனர். பல சந்தாப்பங்களில் அவர்களுக்குத் தாயும் , தந்தையுமாக இருந்துள்ளார். இரவில் திடீரென விடுதிக்கு வருகை தருவார். திடீரெனச் சமையலறைக்குச் சென்று உணவினை உருசிபார்ப்பார். இதனால் விடுதிப் பணியாளர்கள் அனைவரும் எப்போதும் சிறப்பாகத் தமது கடமைகளைச் செய்தனர். வெள்ளிக் கிழமை மதிய உணவை மாணவர்களுடன் சேர்ந்து உண்பார். அவருக்கு உப அதிபராயிருந்த அமரர் கனகநாயகம் அவர்கள் பள்ளிக் கூட நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தத் தன்னாலான சேவையைச் செய்தார். அதனால் அதிபருடைய வேலைப்பளு குறைந்தது.

### ஆளுமை மிக்கவர்.

தற்துணிவாளன், அஞ்சா செஞ்சன். ஒரு நாள் பாடசாலை நேரத்தில் பெற்றார் ஒருவர் அனுமதி பெறாது குமாரசாமி மண்டபத்தில் உள்ள தனது மகனது வகுப்பறைக்குச் சென்று ஆசிரியருடன் வாக்குவாதப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைத் தாக்கிவிட்டார். இதை மாணவர் மூலம் அறிந்த அதிபர் கடுங்கோபத்துடன் அங்கு சென்று அப்பெற்றாரைச் சட்டைப்பிடியுடன் இழுத்துவந்து தனது அறையில் வருக்குக் கடுமையான தண்டனை வழங்கி ஆசிரியரிடமும் மன்னிப்புக் கேட்க வைத்தார். அதன் பின் அப் பெற்றார் பாடசாலைக்கு வருவதேயில்லை.

**நல்லாசிரியன்**

ஆசிரியர்க்கெல்லாம். இவர் வழி காட்டி. கணித பாடம் கற்பிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர். தனது நிர்வாகப் பொறுப்புக்களுடன் கற்பித்தலையும் திறம்படச் செய்தவர். ஒரு வாரத்தில் இரு க.பொ.த சாதாரண வகுப்புக்களுக்குப் பதினான்கு பாட வேளைகள் கணிதம் கற்பித்தாவர். அதனால் மாணவர்கள் சிறந்த பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்றனர். இவர் வகுப்பு நடத்தினால் அருகே உள்ள வகுப்புக்கள் யாவும் மிக அமைதியாக இருக்கும்.

**விளையாட்டுப் பிரியர்.**

தனது மாணவப் பருவத்தில் இவர் சிறந்த உதைபந்தாட்ட வீரர். அதிபரான பின்பும் கூட விளையாட்டை மிகவும் நேசித்தார். பல்துறை விளையாட்டுக்களையும் ஊக்கப்படுத்தினார். அவர் காலத்தில் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களாயிருந்த அமரர் இ.மகேந்திரன் , என்.சோமு ஆகியோர் அவருக்குப் பக்கபலமாயிருந்து விளையாட்டுத்துறையை விருத்தி செய்தனர். உதைபந்தாட்ட அணிகள் மூன்றும் முதன்மை நிலையை அடைந்திருந்தது. மெய் வல்லுநர் போட்டிகளில் வீரர்கள் நிகழ்த்திய பல சாதனைகள் பல வருடகாலம் முறியடிக்கப்படாமலே இருந்தன. வருடா-வருடம், மாணவர் வீதியோட்டத்தை ஆரம்பிவைத்து வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

**சிறந்த பக்திமான்**

வெள்ளிக்கிழமைகளில் தவறாது பிரார்த்தனை மண்டபத்திற்கு சமூகமளித்து பூசையில் கலந்துகொண்டு காளாஞ்சி பெறுவார்.நவராத்திரி இறுதி நாள் விஜயதசமி அன்று மாணவர்களுக்கு மீள ஏடு தொடக்கி வைப்பார். தான் சொல்லும் பத்துத் திருக்குறட்பாவையும் ஓதவைத்து வித்தியாரம்பம் செய்வார். வருடாவருடம் திருக்கேதீச்சர ஆலயத்தில் நடைபெறும் எமது கல்லூரியின் திருவிழா நாளன்று மாணவர்களுடன் சேர்ந்து பாலாவியில் தீர்த்தமாடி, நீர்ச் செம்பு தலைமேல் சுமந்து வந்து இலிங்கேஸ்வர-ருக்கு அபிஷேகம் செய்வார்.

**நல்வழிகாட்டி**

மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒரு சிறந்த வழிகாட்டி. அதிபாராயிருந்த காலத்தில் நைஜீரியாவில் ஆசிரியப்பணியாற்ற விரும்பி நேர்முகப் பரீட்சைக்குச் சென்றார்.நானும் அவருடன் செல்ல வேண்டி ஏற்பட்டது. புகைவண்டியில் தனது அருகே இருத்திப் பல விடயங்களைச் சொல்லித் தந்தார். அன்று அவர் எனக்குப் புகட்டிய பாடம் பின்னர் பல பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றைப் பெற வைத்தது. அவரது குண இயல்புகளைப் பின்பற்றியதால் பின்னர் என்னாலும் சிறந்த நிர்வாகியாகவும், முகாமையாள-னாகவும் அதிபர் கடமைகளைத் திறம்பட ஆற்ற முடிந்தது.

1975 ஆம் ஆண்டு ஓய்வு பெறும் நாள் அறையிலி இருந்த அவரைக்கண்டு எல்லாவற்றிற்கும் நன்றி கூறினேன். கண்கள் கலங்கிவிட்டன. பாடசாலையில் இருந்து வீட்டுக்கு ஊர்வலமாக அவரை அழைத்துச் சென்றோம். வீட்டில் அவரைக் கட்டித் தழுவிப் பிரியாவிடைபெற்றேன். தலையைத் தடவி "அடிக்கடி என்னை வந்து பார்" என்று கூறினார். அவரது மனம் அன்று சோர்வடைந்திருப்பதை நான் முதன் முதலாகக் கண்டேன். அவருடன் பணிபுரிந்து அந்த இனிய நாட்கள் இன்றும் பசுமரத்தாணிபோல் பதிந்-துள்ளது. அந்நினைவுகள் என்றுமே என் நெஞ்சைவிட்டு அகலாது.

சமகால ஆசிரியனாக அவருடன் பணியாற்றக் கிடைத்தமையைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். அன்னார் அமர்ந்து செங்கோலோச்சிய அதே கதிரையில் அவரை அடியொற்றி நானும் பதில் அதிபராகக் கடமையாற்றும் பேறு கிடைத்தமை இந்து அன்னை எனக்களித்த பெரும் வரமாகும்.

**தா.அருளானந்தம்** (சமகால ஆசிரியர், யா.இ.க.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Department of Tamil
Faculty of Arts
University of Peradeniya
Tel: 081 2392545
081 2392546
081 2392547

# யாழ் இந்துவில் தேவர்களின் வருகை



யாழ்ப்பாணத்துக் கல்விச் சமூகத்தின் அடிப்படை நிறுவனங்களாக அமைபவை கல்லூரிகளும் பாடசாலைகளும். கல்லூரிகளின் அதிபர்களாக இருந்தவர்கள் தகுதியாலும் நடவடிக்கைகளாலும் மிகுந்த சமூக மதிப்புப் பெற்றவர்களாக விளங்கினர். பாடசாலைச் சமூகம், மாணவர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகிய மூன்றையும் இணைத்து ஒரு குட்டி சாம்ராஜ்யத்தையே அவர்கள் உருவாக்கினர். அதனால் அவர்கள் சமூகத்தில் மிகுந்த நன்மதிப்புப் பெற்றவர்களாக விளங்கினர். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்துக் கல்லூரிகளில் மிகவும் பிரபல்யம் பெற்ற அதிபர்கள் தொடர்பான கதையாடல்கள் தொன்மக் கருத்தியலாக நிலைபெற்று வந்துள்ளன. அந்தவகையில் ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக இருந்த பூரணம்பிள்ளை, சுன்னாகம் ஸ்கந்தவரோயாக் கல்லூரியின் அதிபராக இருந்த ஒரேற்றர் சுப்பிரமணியம், யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த சபாலிங்கம் ஆகியோர் மிகுந்த ஆளுமையுடையவர்களாகவும் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பது அவர்கள் பற்றிய கதையாடல்கள் யாழ்ப்பாண சமூகத்தில் இன்றும் நிலைத்துள்ளதனூடாக அறிய முடிகிறது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்ப வகுப்புத் தொடங்கி உயர்தரம் வரை நான் கற்றவன் அல்ல. உயர்தர வகுப்பில் மாத்திரமே கல்வி கற்றவன். ஆயின் அந்தக்காலத்து அதிபராக இருந்தவர் அமரர் சபாலிங்கம் ஆவார். கிராமத்து இளைஞன் ஒருவன் நகரத்து பாடசாலை ஒன்றில் கற்க நுழையும்போது ஏற்படும் புதிய அனுபவங்கள் எனக்கும் ஏற்பட்டது. ஒவ்வொன்றும் என்னுள் அதிசயத்தை விளைவித்தன. குறிப்பாக அதிபர் சபாலிங்கத்தினுடைய தோற்றப்பொலிவுதான் முதலில் என்னைக் கவர்ந்தது. ஆயானுபாகுவான தோற்றம், முகத்தில் கண்ணாடி, மடிப்புக் குலையாத வெள்ளை வெளேரென்ற வேட்டி, உடம்பைப் பிடித்தாற் போன்ற நேசனல், தோளிலே உத்தரியம் இவைதான் சபாலிங்கத்தினுடைய தோற்றம். அவர் தனது வெள்ளைநிற Consul காரில் வந்து பாடசாலை வளாகத்தினுள் நுழைகிறபோது ஒரு அரசனுடைய வருகைபோல அது இருக்கும். அவருடைய முகத்தில் தோன்றும் அழகான புன்னகை அனைவரையும் வசீகரிக்கும். கம்பீரமாக நடந்து அவர் செல்லும் காட்சியும் அவர் இருக்கையில் அமர்ந்து காரியமாற்றுவதும் கண்கொள்ளாததாக இருக்கும். வகுப்புக்களை நோட்டமிட நீண்ட வராண்டாக்களில் அவர் நடந்து வந்தால் பாடசாலை மொத்தமும் நிசப்தம் கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரது கல்வியிலும் ஒழுக்கத்திலும் அவர்களது விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதிலும் அவர் காட்டிய அக்கறை அலாதியானது. பாடசாலைக்கான ஆசிரியர் தெரிவிலும் மிகக் கவனங் கொண்டிருந்தார். கலைத்துறையாயினும் அவற்றுக்குரிய நல்லாசிரியர்களைத் தேடிப் பணிக்கமர்த்தினார். அதனால்தான் பாடசாலையின் கல்வித்தரம் மேன்மையுற்றிருந்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த பிரபல கல்விமான்கள் யாவரும் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களாக இருந்தவர்கள். போதாததற்கு பல்கலைக்-கழகத்தில் கற்று வெளியேறிய பழைய மாணவர்களை அழைத்து உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பாடம் நடாத்துவிப்பதிலும் அவர் கவனங் கொண்டார்.

விளையாட்டுத்துறையில் அவர் காட்டிய அலாதியானது விளையாட்டு வீரர்களை அவர் களத்தில் நின்று உற்சாகப்படுத்தியதை நான் நேரில் கண்டிருக்கின்றேன். மாணவர்களுடைய ஒழுக்கத்தில் மிக கவனங்கொண்டு உழைத்தார் அவர். கிப்பி முடியுடனோ மேற்சட்டையை வெளியில் விட்டோ, அதிநீளமான பெல்ற் அணிந்தோ யாரும் கல்லூரி வாசலுக்குள் நுழைய முடியாது. மாணவத் தலைவர்கள் மட்டுமல்ல. அவரே அக்கண்காணிப்பையும் செய்தார். திறமையான மாணவர்களைத்தட்டிக்கொடுப்பது மாத்திரமின்றி தவறுவிடும் மாணவர்களைத் தண்டிக்கவும் அவர் தயங்கவில்லை.ஆயின், எந்த மாணவனும் அவர் தண்டித்ததைக் குறையாகக் கொள்ளவில்லை. அதனை மோதிரக் கையால் குட்டுப்பட்டதாய் நினைத்து பெருமகிழ்வு கொண்டனர். அவரால் தண்டிக்கப்பட வேண்டும் என்ற மாணவர்கள் ஆசைப்பட்டதை நான் அறிவேன். அது அவர்களுக்கு ஒரு அடையாளமாக அமைந்துவிடும். நான் கல்வி கற்ற காலத்தில் யாழ் இந்துக் கல்லூரியால் சமயமும் தமிழும் மிகவும் கவனமாகப் போற்றப்பட்டதை நான் அறிவேன். மிகப் பிரபலமான சிவராமலிங்கம், சொக்கன், கணபதிப்பிள்ளை, காரைசுந்தரம்பிள்ளை போன்ற தமிழாசிரியர்கள் அங்கு சைவத்தையும் தமிழையும் வளர்த்தனர். வெள்ளிக்கிழமை கூட்டுப்பிரார்த்தனைகள் மிகவும் சிற-ப்பாக நடந்தன. பேச்சுப் போட்டிகளும் நாடகப் போட்டிகளும் அரங்கேறின. இந்து இளைஞன் சஞ்சிகை வெளிவந்தது. இக்காலத்தில்தான் மிகப் பிரபலமாக இன்று இருக்கின்ற கம்பன் கழகம் என்பதும் பெயர்கொண்டது. ஜெயராஜ், குமாரதாசன், திருநந்தகுமார் ஆகிய இளைஞர்கள் இங்கிருந்துதான் மேற்கிளம்பினார்கள். வழிகாட்டி உயர்விக்கின்றது.

எனக்கும் சபாலிங்கம் சேருக்கும் நேரானதும் மறைமுகமானதுமான தொடர்புகள் பல உண்டு. சபாலிங்கம் சேருடைய மூத்த மகளை மணந்தவர் எனது உறவினர். ஆசிரியர்களான பதஞ்சலி சிவபாக்கியம் தம்பதிகளின் இரண்டாவது மகன் ஆனந்த பாஸ்கரன் இலண்டன் சீமையிலிருந்து வந்து திருமணம் செய்துகொண்டார். இது எங்களுக்கு மாத்திரமல்ல. எங்கள் ஊருக்கே பெருமையாக விருந்தது. நான் அங்கு படிக்கும் காலத்தில் ஒரு சுவாரஷ்யமான சம்பவம் நிகழ்ந்தது. பைலா எனும் துள்ளலிசை பிரபலம் பெற்ற காலமது. இன்று பாரம்பரியமான கட்டடம் என்று அங்கீகரிக்கப்பட்ட பலகைத்தளமுள்ள மேல்மாடியில் நாங்கள் குறுஇடைவேளையின்போது பைலா பாடி நடனமாடினோம். இடைவேளை முடிந்ததை நாம் கவனங்கொள்ளவில்லை. அந்த நேரத்தில் கீழேயிருந்த வகுப்பிற்குக் கணித பாடம் எடுக்க அவர் வந்தார். வந்தபோது சத்தத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. நேரடியாக எமது வகுப்பிற்கே வந்துவிட்டார். வாசலில் நின்று சில வார்த்தைகள் பேசினார். நாம் ஸ்தம்பித்துப்போய் நிற்கிறோம். திடீரென்று அவர் 'யார் இணுவிலிலிருந்து வந்தது' என்று கேட்டார். இணுவிலைச் சேர்ந்த பலர் அவ்வகுப்பில் இருந்தபோதும் அவர்கள் மௌனம் காத்தனர். நான் நினைத்தேன் எனது உறவினரான பதஞ்சலி மாஸ்ரர் வீட்டுக்கு ஏதோ செய்தி கூறிவிடப் போகிறார் என்று. இதனூடாக அதிபருடனான எனது உறவை சக மாணவர்களுக்கு தெரியப்படுத்த ஆவல்கொண்டு நான் கை உயர்த்தினேன். 'நீதானேடா மேளம் அடித்தது' என்ற என்னைக் கேட்டார். வகுப்பறையே கொல்லென்று சிரித்தது. இணுவிலில் இசைவேளாளர் குடும்பங்கள் பல இருப்பதனால் ஒருவேளை இசைவேளாளக் குடும்பத்தைச் சார்ந்த ஒருவனே மேளம் அடித்திருப்பான் என நினைத்தார் போலும். என் நிலை பரிதாபத்திற்குள்ளானது. ஆயினும் அந்த சம்பவம் யாழ் இந்துக் கல்லூரியில் எனக்கு மறக்க முடியாத நினைவாக நிலைத்துவிட்டது. அதில் இன்னோர் சிறப்பு என்னவென்றால் அதிபருடைய இளைய மகளையும் மணம் முடித்தவர் பதஞ்சலி ஆசிரியர் தம்பதிகளின் இளைய புதல்வர் கணக்காளர் நவேந்திரன் ஆவார். இது நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. யாழ்ப்பாணத்து பிரபல கல்விமான் தன் பெண்களைக் கொடுத்தது இணுவில் என்பதாலும் அவர்கள் என் உறவுகள் என்பதாலும் அது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிபர் சபாலிங்கம் அவர்கள் இறுதிக் காலத்தில் இலண்டனில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்தார். அது தவிர்க்க முடியாத சூழலில் நிகழ்ந்தது. எனினும் யாழ் இந்துவின் மைந்தர்கள் அனைவருக்கும் அது சோகமாகவே இருந்தது. யாழ் இந்துவில் கல்விகற்ற இந்தப்பொற்காலக் கனவின் பிதாமகனைப் பராமரிக்கவோ, பூதவுடலைத் தோளில் சுமக்கவோ தாம் கொடுத்து வைக்கவில்லையே என்று அவர்கள் அங்கலாய்த்ததை நான் அறிவேன். சிலருக்கு பாடசாலையில் கற்ற காலங்கள் நினைவினின்று நீங்கிப் போகலாம். ஆனால் யாழ் இந்துவின் மைந்தர்களுக்கு அது நிலைத்து நிற்கும். அது பொற்கோவில். எமது ஆளுமைக்கான தளம். எம்மை வளப்படுத்திய சொர்க்க பூமி அது. அந்த பூமியில் அவ்வப்போதுதான் தேவர்கள் வருவார்கள். தேவர்கள் வரவால் மண்ணும் மக்களும் புனிதம் பெறுவர். சபாலிங்கம் அதிபர் மாணவர்க்காய் மண்ணிலுதித்த தேவர். அவர் தொட்டதெல்லாம் பொன்னாய் விளைந்து உலகெங்கும் ஒளி பரப்புகிறது. இந்த இடத்தில் எமது கல்லூரி நாளாந்தம் நிறைவுபெறும் நேரத்தில் ஓதப்பெறும் பல்லாண்டு ஞாபகம் வருகிறது.**

**'சீரும் திருவும் பொலிய சிவலோக**
**நாயகன் சேவடிக் கீழ்**
**யாரும் பெறாத அறிவு பெற்றேன்**
**பெற்றதார் பெறுவார் உலகில்**
**ஊரும் உலகும் கழற உழறி**
**உமை மணவாளனுக்காம்**
**பாரும் விசும்பும் அறியும் பரிசு**
**பல்லாண்டு கூறுதுமே'**

**சிவலோக நாயகன் சேவடிக்கீழ் யாரும் பெறாத அறிவு பெற்றேன் என்ற திருப்தி என்னுள் என்றும் ஓங்கி நிலைக்கும். அந்த நன்றியுணர்வில் பல்லாண்டு கூறுதுமே.**


பேராசிரியர் வ. மகேஸ்வரன்,
BA (Hon.), M.Phil, PHD, PGDTA
தமிழ்ப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
இணுவில் மத்திய கல்லூரி,
யாழ் இந்து பழைய மாணவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தும் மறையாத மாமனிதர்

# திருவாளர் இ. சபாலிங்கம்



நிமிர்ந்தநடை ஆஜானபாகுவான தோற்றம். துல்லிய வெள்ளைநிற வேட்டி. அவ் வேட்டியில் மெல்லிய கரை இருக்கும். சில வேளைகளில் அது கரையில்லாத தூயதாகவும் இருக்கும். அதன்மேல் வெள்ளைநிற நஷனல் அணிந்து தோளில் சால்வை பரந்த வட்டமுகம். நெற்றியில் விபூதியுடன் அழகான வட்ட வடிவமான சந்தனப்பொட்டு. எப்போதும் புன்முறுவல் பூத்த சிரிப்பு. இதுவே நான் கண்ட சபாலிங்கம் ஆசிரியரின் தோற்றம்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நான் கல்வி கற்ற காலப்பகுதி, 1963 இல் எட்டாம் ஆண்டு. அந்த வகுப்பு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்டதாக இருந்தது. அவ் வகுப்பில் அவர் மகன் உதயலிங்கமும் கல்வி கற்றார். எங்களுடைய கணிதபாடத்திற்கு ஆசிரியராக இருந்தவர் திரு.சபாலிங்கம் ஆசிரியரே, அத்தோடு அக்காலப் பகுதியில் அவர் கொக்குவில் இந்துக்கல்லூரியின் உப அதிபராகவும் இருந்தார். அவர் கற்பித்த முறை ஒழுக்கமானதாகவும், மாணவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. அவர் வகுப்பறைக்குள் நுழையும்போது சிரித்தபடியே வருவார். முதலில் வகுப்பறையில் சுத்தத்தைக் கவனிப்பார். ஓர் சிறிய பேப்பர் துண்டு கீழே இருந்தாலும் அதனைத்தானே குனிந்து எடுத்துக் குப்பைக் கூடையில் போடுவார். மேசை அழகாக விரிப்புவிரித்து அதன்மேல் வெண்கட்டியும், கரும்பலகைத் துடைப்பானும் வைத்திருக்க வேண்டும். மாணவர்கள் முகத்தை நன்கு பார்ப்பார். "உங்கள் முகம் அன்று பூத்த ரோஜா மலர் போல் இருக்க வேண்டும்" என்று எம்மைப்பார்த்து அடிக்கடி கூறுவார்.

பாட ஆரம்பத்தில் முதலில் அவர் முதல் நாள் கற்பித்ததை மீட்டுப் பார்ப்பார். வீட்டு வேலை தந்திருந்தால் அதனையும் பார்த்தபின் அன்றைய பாடத்தை விளங்கவைத்தபின், கரும்பலகையில் ஓர் உதாரணக் கணக்கை விளங்க வைத்து அதனைக் கொப்பியில் எழுதுமாறு கூறுவார். பின்பு அதனைப் பின்பற்றிய கணக்குகளைத் தருவார். நாம் அதனைக் கொப்பியில் செய்து காட்ட வேண்டும். கணிதம் செய்யும் பொழுது கொப்பியின் வலது பக்கத்தில் ஓரத்தில் கோடிட்டு அதில் செய்கை முறை கட்டாயம் இருக்க வேண்டும். செய்கை முறையும் விடையும் சரியாக இருக்க வேண்டும். விடை பிழையாக இருந்தாலும், செய்கைமுறையைப் பார்த்து எமக்குப் பிழையைச் சுட்டிக்காட்டுவார். இப்பழக்கத்தை அன்று நான் என் மனதில் பதித்திருந்தேன். பிற்காலத்தில் அது எனது கற்பித்தல் முறைக்கு எவ்வளவு எளிதாக இருந்தது என்று தெரியுமா?

ஒருவர் பின் ஒருவராக ஒழுங்காக நின்று கொப்பி காட்டுதல் வேண்டும். ஒவ்வொருகணக்கு முடிவிலும் சிகப்புப் பேனாவால் கோடிட வேண்டும். அது கட்டாயம். கையில் சிகப்புப் பச்சை நிறப் பேனா வைத்திருப்பார். பச்சை நிறப் பேனவால் , இ.சபா/திகதி என்று வடிவான எழுத்தில் ஒப்பமிடுவார். எல்லா மாணவர்களுடைய கொப்பியும் பார்த்து ஒப்பமிட்டே செல்வார். அதுவரைவகுப்பறை அமைதியாகவே இருக்கும். இது அவர் கற்பித்த மாணவர்கள் அனைவருக்கும் தெரியும். அவருடைய ஆளுமைக்கு ஓர் உதாரணம் காலையில் அவருடைய கார் ஆலமரத்தின் கீழ் வரும்போது எல்லாரும் வகுப்பறையினுள் சென்றுவிடுவோம். முதல் மணி அடித்ததும் அவர் புதுக்கோயில் வாசலில் வந்து நிற்பார். எல்லோரும் ஒழுங்காகக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபடுவோம்.

பாடசாலையை வலம் வரும்போது இடது கை நஷனலுள் பிரம்பு ஒளிந்திருக்கும். அவர் பாடசாலை விறாந்தையில் நுழையும்போது எல்லா மாணவர்களும் வகுப்பினுள் சென்று அமைதியாகி விடுவார்கள். இப்படியான ஒரு ஆசிரியரை ஆசிரியராகப் பெற்ற மாணவர்கள் உண்மையிலேயே பேறு பெற்றவர்கள்கள்தான். அதில் நானும் ஒருவன் என்பதில் எனக்கு இன்றும் இனிமை பெருமை. மற்றவர்களுக்கு அவரைப் பற்றிக் கூறும்போது அதனால் எனக்கும் பெருமை. "ஆசிரியன் என்பவன் பிறவியிலே உருவாகின்றான்" என்ற அந்த வார்த்தைக்கு உதாரணமானவர் திருவாளர் சபாலிங்கம்

இ. பாலச்சந்திரன்
ஒய்வுநிலை ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி.
1988 - 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பித்தல் பணியுடன்

# ஆளுமையுடன் பதித்த அதிபர்



நல்லைநகர் நாவலர்தம் நனவைப் போற்றி
நாடு புகழ் நற்றொண்டு பலவும் செய்தோர்
எல்லையில்லாப் புகழ் நிறைந்த கல்வியாளர்
எல்லோரும் ஏத்துகின்ற எழில்சேர் வீரர்
தொல்வினை தீர்க்கின்ற நல்லைக் கந்தன்
தொழுதே முமெம் அதிபர் இ.சபாலிங் கத்தார்
தில்லையமர் சிவனடியைச் சேர்ந்தா ரையா
தியானித்தே அவர்தம்மை வணங்கி வாழ்வோம்
-பேராசான் - க.கணபதிப்பிள்ளை

### அதிபரின் அருமைத் தடங்கள்

1970 ஆம் ஆண்டு நான் காரைநகரில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ( வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை) தரம் 7 வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தேன் (அக் காலம் தரம் 7 வகுப்பு வரை ஆரம்பப் பாடசாலைகளில் நடைபெற்றன) 1970 நவம்பர் மாதம் யாழ் இந்துக்கல்லூரின் தரம் 8 வகுப்புக்கான அனுமதிப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தேன் பரீட்சைக்காக நான் புறப்படும் போது எமது அயலில் உள்ள ஈழத்து சிதம்பரத்தின் மணி ஓசை கேட்டது. (இது ஒரு நல்ல சகுனம் என்பதை பின்னர் உணர்ந்து கொண்டேன்) இவ்வனுமதிப் பரீட்சையில் சித்தி அடைந்து 06-01-1971 இல் அனுமதிக்காக வருமாறு கல்லூரி அதிபர் கடிதம் அனுப்பியிருந்தார். யாழ் இந்துவின் அனுமதி கிடைத்து விடுதிச் சாலை மாணவனானேன்.

நான் அனுமதி பெற்றிருந்த காலத்தில் திரு.மு.கார்த்திகேயன் அவர்கள் அதிபராக இருந்தார். 1971 யூன் மாதம் திரு.இ.சபாலிங்கம் அவர்கள் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்றார். அவர் யாழ் மத்திய கல்லூரியில் இருந்து யாழ் இந்துக் கல்லூரிக்கு வரப்போகிறார் என்பதை அறிந்த பல மாணவர்கள் பயமும் பீதியும் கொண்டிருந்தனர். அதிபர் அவர்கள் வந்த முதல் நாளே மாணவர் ஒருவருக்கு பிரம்பினால் தண்டனை வழங்கிய ஞாபகம் இருக்கிறது. தினமும் தேசிய உடையுடன் ஒரு வெள்ளைக்காரில் வருகை தருவார். பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும் காலைக் கூட்டத்தில் தினமும் சமூகம் தந்து பூசை ஆராதனையின் போது இறைவனை நினைத்துக் கும்பிட்ட படியே நிற்பார். அவர் பிரார்த்தனை மண்டபத்தில் நுழைந்தவுடன் ஊசி விழுந்தால் கேட்கும் அமைதியாகிவிடும்.

பிரார்த்தனை மண்டபத்தில் மாணவர்களுக்காக ஏதாவது நற்சிந்தனை வழங்குவார். காலைக் கூட்டம் முடிவுற்ற பின்னர் காலம் தாழ்த்தி வரும் மாணவர் (Late commers) கேத் வாசலில் உள்ளே நிற்பார்கள். அவர்களில் தொலைவில் இருந்து வரும் மாணவர்களைத் தவிர்த்து ஏனையோருக்கு தண்டனை வழங்குவார். அடிக்கடி வகுப்பறைகளைச் சுற்றிப் பார்க்கும் பழக்கம் அவரிடம் காணப்பட்டது. வகுப்பறைகளைச் சுற்றிப் பார்க்கும் போது பிரம்பினை தனது சேட் கையினுள் மறைத்து கொண்டு செல்வார். தேசியயுடையுடன் தினமும் கல்லூரியை வலம் வருதல் அவரின் ஆளுமைக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

இலங்கையிலும் தமிழகத்திலும் உள்ள பல பிரபல பேச்சாளர்களை மாணவர்களுக்காக காலைக் கூட்டத்தில் பேசவைக்கும் வழக்கம் அவரிடம் காணப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழார் விழாவுக்காக வருகை தரும் தமிழகப் பேச்சாளர்களை எப்படியும் மாணவர்களுக்காக உரை நிகழ்த்த வைப்பார். நல்லைக்கந்தன் மீது அடங்காப் பற்றுக் கொண்ட அதிபர் வெள்ளிக் கிழமைகளில் விடுதிச்சாலை மாணவர்கள் எல்லோரும் வேட்டி அணிந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு கட்டாயம் செல்ல வேண்டும் என்பது அதிபரின் கட்டளை. இவ்வாறாக மாணவர்களின் சமய ஒழுக்க விழுமியங்களை பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். விடுதிச்சாலைக்கும் இரவில் அடிக்கடி வருகை தந்து மே-ற்பார்வை செய்வது அவரின் வழக்கமாக இருந்தது.

அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் உதைபந்தாட்டத்தில் கோல் காப்பாளராகவும் கிரிக்கட் விளையாட்டில் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் விளையாட்டு மைதானத்தில் திகழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபரின் கற்பித்தல் பணி

நான் 1973 ஆம் ஆண்டு தரம் 10ஆம் வகுப்பில் கணிதப்பிரிவில் (க.பொ.த. சா.த) கற்றுக்கொண்டிருந்தேன். அப்போது எமக்கு தூயகணிதம் பிரயோககணிதம் உயர்கணிதம் ஆகிய மூன்று கணிதத்துறைசார் பாடங்கள் இருந்தன. தூய கணிதம் அதிபர் திரு.சபாலிங்கம் எடுப்பார் என எமது வகுப்பாசிரியர் திரு.சி.முத்துக்குமாரசுவாமி அவர்கள் அறிவித்திருந்தார். இதைக்கேட்டதும் மாணவர்கள் எல்லோரும் பயம் கொண்டனர். தினமும் குறுகிய கால இடைவேளைக்கு முன்னர் 3ஆவது பாடம் தூயகணிதம் அதிபர் தினமும் வருகை தந்து அத் தூய கணித பாடத்தை தெளிவு தருவிளக்கத்துடன் கற்பிப்பார்.

நாம் பயந்தது போன்று அவரின் வகுப்பறைக் கற்பித்தல் இடம் பெறவில்லை. கற்பித்தல் மிகவும் மகிழ்ச்சி-கரமாக இருந்தது. நன்றாகப் பகிடி விட்டு கற்பித்தலை மேற்கொள்வார். ஒருநாள் கூட பாடத்திற்கு வராமல் விட மாட்டார். 3ஆம் பாடத்திற்காக மணி அடித்தவுடன் தனது சால்வையைக் கதிரையில் விட்டுவிட்டு அலுவலகத்தில் இருந்து மிகவும் சுறுசுறுப்பாக வருகை தரும் காட்சி 45 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த நிகழ்வு என்றாலும் இன்னும் என் கண் முன்னால் பசுமைபோல் உள்ளது. தனக்கு முதல் கஞ்சி ஊற்றிய உத்தியோகம் ஆசிரியத் தொழில் என்று வகுப்பறையில் கூறுவார். வகுப்பறைக்கு வரும் போது கா.பொ.த தூயகணித past papers எல்லாம் File பண்ணப்பட்ட ஒரு கறுப்பு நிற Clip File உடன் வருகை தருவார். ஒவ்வொரு அலகும் முடிந்தவுடன் அவ்வலகில் வந்த 10வருடப் Past Paper கணக்குகளை எங்களை கொண்டு செய்வித்து. பின் தானும் செய்து காட்டுவார்.

தூயகணிதத்தில் "இருபடிச்சார்புகளின் வரைபுகள்" என்ற பாடத்தில் வரைபினை வரைந்த பின்னர் அவ் வரைபினைக் கண் மட்டத்துடன் பார்க்கும் படி கூறுவார். அப்போதுதான் வரைபின் சீர்த் தன்மை புரியும் என விளக்கம் தருவார். இதனை நானும் எனது வகுப்பறைக் கற்ப்பிதலில் பயன்படுத்தியுள்ளேன். கேத்திர கணித நிறுவல்களைத் தெளிவான விளக்கத்துடன்கற்பிப்பார். பைதகரஸ் தேற்றத்தினை இயல்பொத்த முக்கோணிகளைப் பயன்படுத்தி மிக இலகுவாக நிறுவிக்காட்டினார்.

கேத்திர கணிதக் கணக்குகளுக்காக Maynes என்பவரால் எழுதப்பட்ட School Geometry என்ற நூலினை பயன்படுத்தினார். திரிகோணகணிதமாவது (Trigonometry) Father of Mathematics என்றும் நுண்கணிதம் (Calculus) Mother of mathematics என்றும் அழைப்பார். அவர் வகுப்பறையில் கூறிய பகிடி ஒன்று இன்றும் ஞாபகத்தில் உள்ளது. அதாவது "நீங்களாட கலியாண வீட்டுக்குத்தான் அழையாமல் செல்லலாம் மணமகள் வீட்டார் மணமகன் வீட்டு ஆள் எனவும் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டு ஆள் எனவும் நினைப்பார்கள்" என்ற பகிடி இன்றும் என் மனதில் நினைவில் நிற்கின்றது.

சிறந்த கற்பித்தல் பணியை மேற்கொண்ட ஆசிரியராக முகாமைத்துவத் திறன் மிக்க அதிபராக சிறந்த விளையாட்டு வீரனாக வெள்ளைத் தேசிய உடையுடன் வெள்ளைக்காரில் வருகைதந்து வெள்ளையுள்ளம் படைத்த என் குருநாதர் திரு.இ.சபாலிங்கம் ஐயாவின் ஆளுமைத்தடங்கள் அளப்பரியதொன்றாகும்.

வே.முருகமூர்த்தி B.Sc,Dip.in.Edu,Maths.Trd - யாழ் இந்து பழைய மாணவன்
முன்னாள் அதிபர் யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Ever - Living Name Late Principal E. Sabalingam



A living Name "Principal E. Sabalingam had been engraved in golden letters in the history of great school's Principals of Sri Lanka. He established himself a proud and great personality.

Late Principal E. Sabalingam who had his own unique style of discipline maintenance in High School had been an admired efficient educational administrator of our times. As a teacher and an administrator, he contributed immensely not only in the field of education specialized in teaching Advanced mathematics in GCE O/L and A/L classes, but also in initial stages in the field of teachers' trade unionism and sports. Hence in to, he had been a successful educational institution's administrator, trade unionist, and a leading sportsman. As a Principal, he had fabulous personality among his contemporaries during his time. He took every prompt effort for the welfare of the students, maintaining educational standards of Jaffna Hindu College. Instilling discipline among them had always been his forte. He took up the standard of College to greater heights during his term of office and brought name and fame and popularity to all the Colleges he was assigned duties.

As a righteous and virtuous Principal, he faced every problem with courage and proved his fortitude at times of crises. He was highly revered and respected by his students, colleagues and parents.

In the year 1971 the Ministry of Education introduced a new Grade of "Selection Grade Principals", above the existing Super Grade Principals and selected only two for Northern Region. On merit, Principal E. Sabalingam assumed duties as a selection grade principal posted to Jaffna Hindu College, his Alma mater. Late Principal E.K.Shanmuganathan was the other selection Grade Principal, served at Jaffna Central College.

During Sabalingam's regime we were studying in the GCE (O/L) and in GCE A/L. As our contemporaries who were very clever students in achieving best results gained entrance to Engineering & Medical Faculties. But Students like Kamabavaruthy Jeyaraj (Literary orator), Vithyatharan (Journalist), Ayingaranesan (Environmentalist, social activist and politician), Ananth Palakidnar (Judge), Thirunanthakumar (Liteary speaker) and myself (Lawyer and politician), who are of different mould and brought up mingle with the people of our society from all walks oflife and various backgrounds were in the lime light. What I am trying to make a point is those who were under his regime possessed the most highly classical willpower toface the social turmoil with



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

civilized courage. All those admitted to the Engineering Faculty had a very strong attachment towards Principal Sabalingham (Saban) as he was very strict in not admitting his Hindu College students to go to private tuition class. This is where he stands taller than others who are concerned in money making through tuitions.

I admired his unique stature which he always maintained, there is a proverb in Tamil "Attire makes half of a personality". His physical stature gave a brilliant look of an educational administrator and he set himself as an exemplary in the history of educational administrators of Jaffna. Among the semi government schools Late Pooranampillai of St. John's College and formerly the principal of Hartly College was also known as a Principal of Par excellence, a contemporary of E. Sabalingam's time. "Sabalingam" a name well known among JHC community as "Saban" always had serious eye on each and every student and identified everybody as individuals. He also treated them with" cane and carrot" as per their behavior they had established.

"Principal E. Sabalingam" is a name at zenith of Jaffna Hindu College history and would be engraved with silver lines in the annals of school administrators in Sri Lanka

**Dr.N.Kumaraguruparan.Ex MPC**
Old Student of JHC
ACMA, CBA(CANADA), AICIA, ACFA(UK),CFC, DIPFM, FIMS, FACB, MIFC, FAEA(UK).
Former General Secretary of All Ceylon Tamil Congress, President of Tamil National Action Group. In Colombo, Former Western Provincial Councilor.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறம் போற்றும் அதிபர்



ஒன்றே கால் நூற்றாண்டுகளுக்கு மேல் உரிமையோடும், பெருமையோடும், கலையுணர்வோடும், கலைக்கோயிலாக விளங்கும் எனது பாடசாலையான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை அருகில் இருந்து நினைத்துப் பார்த்து அக மகிழ்கின்றேன். எனது கல்லூரி வாழ்க்கையின் அனைத்து வளர்ச்சியிலும் அயராது உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், அருகில் அமர்ந்தோர், ஆலோசனை வழங்கியோரை இன்று உருகிநின்று உணர்கின்றேன். உளமாரப் போற்றித் துதிக்கின்றேன். எங்கிருந்தோ வந்த என்னை விழிகாட்டி வழிகாட்டி இன்முகத்துடனும், நன்மனதுடனும் நவமாக எனது மனமான சபா பீடத்தில் வீற்றிருக்கும் அதிபர் உயர் திரு. இ.சபாலிங்கம் அவர்களின் நூற்றாண்டு அகவையில் நற்பேறாக சில செய்திகளை பதிவு செய்வதில் நான் திருப்தியடைகின்றேன்.

வெள்ளை வேட்டியணிந்து, வெள்ளை உத்திரியம்போட்டு, வெள்ளைக் காரில் ஏறி, வெள்ளை மனத்துடன் உத்தியோகத்திற்காகப் பள்ளிக்கூடம் வந்து உத்தியோகபூர்வமாக உத்தரியத்தை நாற்காலியில் உறைய விட்டால் வகுப்பறைகள் வளமாக அடங்கிவிடும். நடக்க வேண்டியவையெல்லாம் நன்றாகவே நடந்தேறும். பள்ளிக்கூடம் துள்ளித்திரிந்தவர்கள் பள்ளி வகுப்பில் பதுமையாய் அடங்கிப் பாடம் படிப்பர்.

வீதியோட்டத்திற்கு வித்திட்டவர் எனது அதிபர் சபாலிங்கம் அவர்கள். இரண்டாவது வீதியோட்டத்தில் முதலாவது வெற்றி வீரனாக வந்தேன். போட்டியில் பங்குகேற்று வெற்றி பெற்றால் அதிபருடன் புகைப்படம் எடுப்பது வழக்கம். அச்சந்தர்ப்பத்தில் அதிபர் அருகில் சென்றேன். எனது இறுக்கமான காற்சட்டையை பிடித்திழுத்தார். காற்சட்டை பிரிந்து விட்டது. இப்படி இறுக்கமான காற்சட்டை போட்டால் எப்படி ஓடுவது? - என்றார். நான் 'First' என்றேன். ரன்னிங் சோட்ஸ் போட்டிருந்தால் சாதனை படைத்திருப்பாய் என்றார்.

எந்த விடயத்தை கதைத்தாலும் நம்மவரை எல்லாம் நாவன்மையால் வென்றுவிடுவார். கூடைப்பந்தாட்டம், ஹாக்கி போன்ற விளையாட்டுக்களையும் கல்லூரியில் ஆரம்பித்த பெருமை இவரையே சாரும். அன்று 1975 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாக ஆக வந்தோம். அதிபர் சாபலிங்கம் விதைத்த விதையை அதிபர் பி.எஸ்.குமாரசுவாமி அவர்கள் அறுவடை செய்தார். இதை நான் எழுதிக் கொண்டு இருக்கும்போது (06.01.2019) இன்று ஏறத்தாழ 44 வருடங்களின் பின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்தில் அகில இலங்கை சம்பியன் ஆக வந்த செய்தி கிடைத்தது. இன்று கூட பல வெற்றிகளை கல்லூரி பெறுவதற்கு அடிகோலியவர் அதிபர் சபாலிங்கம் என்றால் அது மிகையாகாது.

ஞாபக சக்திக்கு நாயகன் அதிபர் அவர்கள். நான் தரம் பத்தில் படிக்கும்போது கிறிக்கெட் விளையாடுவதற்கு அதிபரின் மகன் உதயலிங்கம் (எனது முதல் கிரிகெட் குரு) என்னைத் தெரிவு செய்தார். போட்டிக்குப் போவதற்கு முதல் நாள் வீரர்கள் தம்மை அதிபருக்கு அறிமுகப்படுத்துவதும், ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வதும் கல்லூரியின் நடைமுறை. அறிமுகப்படுத்தும் போதும் நான் எழுந்து தரம் பத்து படிக்கின்றேன் என்றேன். உடனே அதிபர் அவர்கள் வைத்தீஸ்வராவில் இருந்து எப்ப வந்த நீ? என்று கேட்டார் நான் அங்கு படிக்கவில்லை மங்கயற்கரசி வித்தியாலயத்தில் இருந்து வந்து தரம் ஆறில் இருந்து இங்கு படிக்கின்றேன் என்றேன். நான் கூறியதும் என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு கூட்டம் முடிந்தவுடன் காரியலயத்திற்கு வா என்றார்.

கூட்டத்தின் பின் காரியாலயம் சென்றேன். ஓர் அடி விழுந்தது. 'ஒரு வருடத்துக்கு முன் வைத்தீஸ்வராவில் படிப்பதாகச் சொன்ன நீ எல்லோ?"- என்றார். அப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வந்தது.

ஒரு வருடத்துக்கு முன் நிகழ்ந்த விடயம். ஒரு நாள் 7 ஆம் பாட வேளை மைதானத்துக்குச் சென்று விளையாடி விட்டு 8 ஆம் பாடத்தையும் 'கட்' படித்து விட்டு நண்பர்களை எதிர்பார்த்து அரச மரத்தடியில் நின்றபோது, வெளியில் சென்று வந்து கேட்ட அதிபருக்கு வைத்தீஸ்வராவில் படிக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றேன் என்று பொய் சொன்னேன். அன்று தப்புவதற்குச் சொல்லிய பொய் இன்று என்னை மாட்டி விட்டிருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டேன். அப்படி ஞாபகம் வைத்து சேவகம் செய்வதற்கு நல்லதோர் உதாரணம் எனது அதிபர் அவர்கள்.

இது மட்டுமன்றி, இன்னுமோர் விடயத்தையும் பதிவேற்ற விரும்புகின்றேன். போட்டிகளில் கலந்து கொள்வ-தும் வெற்றியோடு கல்லூரிக்குத் திரும்பும் போதும் பாட்டு பாடுவது, பைலா அடிப்பதும் எனக்கும் என் போன்றவர்களுக்கும் இளமை வாழ்க்கையில் இயல்பானவை. ஒருமுறை வேலணை ம.ம.வி. 14,16 பிரிவினர்க்கான உதைபந்தாட்டப் போட்டியில் எனது அணியினர் 20 கோல்களை உதைத்துத் தள்ளினர். வெற்றிக் களிப்பில் பஸ்ஸில் ஏறிய போது பஸ் களை கட்டியது. பஸ்ஸினுள் முன்னுக்கு அதிபர் அமர்ந்து இருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். பெரிய சிவன் கோவிலடியில் வரும் போது குதூகலத்தால் ஒருவர் 'நமப் பார்வதிபதையே' என்றார். மற்றவர்கள் அனைவரும் 'அரகர மகாதேவா' என்றனர். அதிபரின் 'டேய்' என்ற சத்தக்குரல் பஸ்ஸினுள் ஓங்கி ஒலிக்க சப்தம் நிசப்தம் ஆனது. பஸ்ஸில் இருந்து இறங்கும் போது அதிபர் வாசலில் நின்றார். அப்படி நின்று பார்ப்பது எங்கள் அதிபரின் வழமையல்ல. வழக்கத்துக்கு மாறாக நின்றதனால் ஏதோ விபரீதம் என உணர்ந்தோம். ஒருவருக்கு மாத்திரம் அடி விழுந்தது. அவர்தான் 'நமப் பார்வதிபதையே' சொன்னவர். எவ்வாறு இவரைக் கண்டு பிடித்தார் என்பது எங்களுக்குப் புரியவில்லை. சில காலங்களுக்குப் பின்னர் இவரை எவ்வாறு கண்டறிந்தீர்கள் என்று கேட்டபோது, தேவார ஒலியில் கேட்ட குரலோ அக்குரல், விளையாடுபவர்கள் தேவாரம் பாடுவது குறைவு என்றார்.
குரலொலியையே என்றும் ஞாபகம் வைத்து கரும மாற்றும் கர்மவீரன் எனது அதிபர் அவர்கள் '
அரிய வென் றாகத இல்லை பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்' மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப் பெறின் செயற்கரியனவென்று முடியாத காரியங்கள் இல்லை என்றார் திருவள்ளுவ நாயனார்.
புகழ்பூத்த அதிபர் என்று போற்றுவதற்கு ஞாபகம் துணைக் காரணமாயிற்று.

க.பொ.த. (சா/த) தரத்தில் கற்கும் போது நான் உதைபந்தாட்டக் குழுவின் தலைவராக இருந்தேன். இறுதிப் பரீட்சைக்கு சுமார் ஒரு மாதத்துக்கு முன்னரே இறுதிப் போட்டி நடைபெறும். அதற்கான பயிற்சியை முடித்துவிட்டு மாலை 6 மணியளவில் மைதான வாசலிலே நின்றிருந்தேன். அருகிலே வெள்ளைக் கார். என்னுடன் நின்றவர்கள் சாதாரணமாக விலக நானும் விலக எத்தனித்தேன். 'தயாளன்" என்பது கம்பீரமான குரல். எனது அதிபர், கணித பாட ஆசிரியர் சகிதம் இறங்கி வந்தார். படிப்பு என்ன மாதிரி என்றார். படிக்கிறன் சேர் என்றேன். ஆயவாளக்கு எவ்வளவு என்றார். 26 என்றேன் தயக்கத்துடன்.
அப்ப, என்ன அடுத்த வருடம் விளையாடும் நோக்கம் இல்லை? என்றார்.
இப்ப படிக்கிறேன் சேர் - என்றேன்.

நீ படித்தது போதும். ஏறு காரில் என்றார். பதில் ஏதும் சொல்ல முடியாத நிலையில் காரில் ஏறினேன். தனது வீட்டில் நடக்கும் மரியதாஸ் ஆசிரியரின் வகுப்பில் கொண்டு வந்து சேர்த்தார். காசு இல்லை சேர் என்று நழுவப்பார்த்தேன். பார்த்த பார்வையில் வகுப்பில் போய் அமர்ந்து கொண்டேன். ஒவ்வொரு நாளும் 6 மணிக்கு வகுப்பு நடக்கும் என்றார். ஒரு மாதமும் சிறையில் இருப்பது போல உணர்ந்தேன். ஆனால் "S"எதிர்பார்த்த எனக்கு "C" வந்தது. அதிபரிடம் சென்றேன். "C" எடுத்தியாம் என்றார். இதுபோல என்னை மட்டுமல்ல பலரையும் ஏணி கொண்டு ஏற்றிய பெருந்தகை.
திறனறிந்து தேவையறிந்து அறம் போற்றும் அரிய சேவை அதிபர் சேவை. அதிகாரத்தையும் அதே நேரம் அரவணைப்பையும் ஆராகிக்கும் காட்டும் சேவை. தான் சார்ந்த நிறுவனத்தையும் நிறுவனத்தில் விளையும் வருங்கால வாரிசுகளையும் நெறிப்படுத்தும் வளமான, வரமான சேவை. இந்த உயரிய சேவைக்கு கல்லூரியில் உள் வாங்கப்பட்டவர்கள் பலர். உழைப்பாலும், உயர் மதிப்பாலும் உள்ளம் கவர் கள்வனாக உயர்ந்த அதி உன்னத உத்தம அதிபர் இளையதம்பி சபாலிங்கம் அவர்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.
நன்றி

அதிபரால் உயர்ந்த யாழ் இந்து பழைய மாணவன்
சண். தயாளன், உதவிக் கல்விப் பணிப்பாளர்,
(உடற்கல்வி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரும்பு மனிதர் இ.சபாலிங்கம்



1971ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரியில் நான் எட்டாம் வகுப்பில் சேர்ந்த நேரம். அன்று எமது அதிபர் Communist கார்த்திகேசன் என்று சிறப்புப் பெயர்பெற்ற கார்த்திகேசன் அவர்கள். புது மாணவர்களாகிய எம்முடன் கூடத் தோளில் கைபோட்டுப் பேசும் எளிமையும், இனிமையும் கொண்டவர்.

அதே ஆண்டின் பின்னரைப்பகுதியில் யாழ் இந்துக் கல்லூரிக்கும், யாழ் மத்திய கல்லூரிக்குமான துடுப்பாட்டப் போட்டி, எமது கல்லூரி மைதானத்தில் நடைபெற இருந்தது. அனைவராலும் மிகப் பரபரப்பாகவும், பெருத்த எதிர்பார்ப்புடனும் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. அந்த நாளும் வந்தது. இரு கல்லூரியின் மாணவர்களைக் காட்டிலும், இரு தரப்பின் ஆதரவாளர்களும் முட்டி மோதி மைதானத்தின் நான்கு புறமும் சூழ்ந்துவிட்டார்கள். மிகப் பரபரப்புடன் ஆரம்பித்த போட்டி ஒரு எல்லைக்கப்பால் ஆதரவா-ளர்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பினால் வேறு ஓர் நிலையை அடைந்து முடிவில் மோதலாக மாறியது. இறுதியில் எம் கல்லூரியின் Pitch என்று சொல்லப்படும் கயிற்றுப் பாயினை எரியூட்டும் அளவு சென்றுவிட்டது. மறுநாள் கல்லூரியில் அதே பேச்சு. அப்போது என் காதில் விழுந்த பெயர்தான் அன்றைய மத்திய கல்லூரியின் அதிபர் சபாலிங்கம். அதுவரை அவர் பற்றித் தெரியாதிருந்த எனக்கு அவர் பற்றிய பல தகவல்கள் அன்று கிடைத்தன. அவரது கண்டிப்பு, முரட்டுச் சுபாவம், துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட மோதலில் எமது கல்லூரி ஆசிரியர் சுந்தரதாஸ் அவர்களுக்கும், அவருக்குமிடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதம் என்று நேரில் பார்த்த என் வகுப்புத் தோழர்கள் சொல்லக் கேட்டு அவர் பற்றி என்னுள்ளே ஒரு பிம்பம் உருவானது. அந்த ஆண்டு இறுதியுடன் அதிபர் கார்த்திகேசன் மாற்றலாக முதல் ஒரு வாரம் திரு ஈ.வி.கே.சண்முகநாதன் அவர்கள் அதிபராகி, பின்னர் யாழ் மத்திய கல்லூரிக்கு அவர் செல்ல, அங்கிருந்த அதிபர் சபாலிங்கம் அவர்கள் எமது கல்லூரியின் அதிபரானார்.

அதுவரை, மேலைத்தேய உடையணிந்த அதிபர்களைப் பார்த்திருந்த எமக்கு தேசிய உடையில், மிகவும் கம்பீரமாக, நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், திமிர்ந்த ஞானச் செருக்குமுடையவராய் அறிமுகமாகினார் எம் புதிய அதிபர் சபாலிங்கம் அவர்கள். "தேசிய உடையான நாஷனல், வேட்டியில் கூட கம்பீரமாய்த் தோன்றலாம்" என முதலில் நான் கண்டது அவரிடம் தான். வெள்ளைநிற காரில், Cuff link வைத்த வெண்மையான நாஷனலும், வேட்டியும் அந்த உத்தரீயச் சால்வையும் கொண்டு அவர் பாடசாலை வரும் அழகே தனி அழகு. அவரது அத்தகைய தோற்றமும், தீட்ஷண்யமான பார்வையும் எமக்கு அன்று பயத்தைத் தான் தந்தன.

அன்றிலிருந்து அவர் ஒய்வு பெறும்வரை அவரது பல்வேறு ஆளுமைகளை நேரடியாகக் கண்டவர்களாகவும், அனுபவித்தவர்களாகவும் விளங்கும் வாய்ப்பு எமக்கு முழுமையாகக் கிடைத்தது. அவரது ஆளுமையின் மிக முக்கிய அம்சம் கண்டிப்பு நிறைந்த அவரது இயல்புதான். தனது வார்த்தைகளினாலேயே அனைவரையும் கட்டிப்போடும் இயல்பும், ஒரு பார்வையினாலேயே முழுக் கல்லூரியையும் நிசப்தமாக்கும் வல்லமையும் அவருக்கேயுரிய தனிச் சிறப்பு. அவர் பிரம்பெடுத்து அடித்து மாணவர்களைக் கட்டுப்படுத்தியதை விட , தனது மிரளவைக்கும் அதிகாரம் நிறைந்த குரலினாலேயே முழுக் கல்லூரியையும் கட்டி ஆண்டார் என்றே சொல்லவேண்டும். எல்லாவற்றையும் கூற இந்தக் கட்டுரை இடந்தராது. இருந்தும் ஒரு சில அனுபவங்களை இங்கு பகிர்ந்துகொள்ள எண்ணுகிறேன்.

நான் அப்போது ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறேன் என்று எண்ணுகிறேன். ஆசிரியர்கள் அடுத்த பாடங்களு-க்காக மாறுகின்ற வேளையிலும், இடைவேளை நேரத்திலும் எமது குறும்புகள் எல்லை கடந்துவிடும். அன்று பார்த்து ஒரு ஆசிரியர் வரவில்லை. பதில் ஆசிரியர் வருவதற்கிடையில் எமது குறும்புகள் அரங்கேறத் தொடங்கியிருந்தன. நானும் நல்லூர்த் திருவிழாவில் வாங்கிய றப்பர் பாம்பொன்றினை நண்பனின் காலருகில் போட்டு அவனை அலறவைத்த நேரம், அதிபர் சபாலிங்கம் அவர்கள் எமது வகுப்புக்கு வந்தார். நண்பனின் அலறலைப் பார்த்து நடந்ததை அறிந்த அவர் என்னை உடனே officeக்குப் போகும்படி பணிதார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையும் களவுமாகப் பிடிபட்ட பயம் ஒருபுறம், அதிபரிடம் வேண்டப்போகும் பிரம்படி மறுபுறம் என்று மனதை முழுமையாகப் பயம் ஆக்கிரமிக்க அலுவலகம் சென்று அதிபர் அறையின் வெளியில் நிற்கிறேன். சற்று நேரத்தில் அங்குவந்த அதிபர் என்னைக் காணாததுபோல் தனது அறைக்குள் சென்றுவிட்டார். அடுத்தது என்னை உள்ளே கூப்பிடப் போகிறார், செம்மையாக அடி விழப்போகிறது என்று எண்ணியிருந்த எனக்கு அவர் என்னைக் கூப்பிடாதது மிக வியப்பாக இருந்தது. அங்கு வந்து போன மாணவர்களும், ஆசிரியர்களும் என்னையே பரிதாபமாகப் பார்ப்பதுபோல உணர்ந்தேன். நேரம் செல்லச் செல்ல என் பயம் அதிகரித்துக் கொண்டே சென்றது. ஓரிரு தடவை அதிபர் வெளியில் சென்று திரும்பினார். ஆனாலும் என்னை எதுவும் கேட்கவில்லை. எனக்கோ பயத்தின் அளவு மேலும், மேலும் அதிகரித்துக் கொண்டே போனது. இறுதியில் பாடசாலை நேரம் முடியும் தறுவாயில் என்னை அழைத்தார். நடுங்கிக்கொண்டே உள்ளே சென்ற எனக்கு அதுபோன்ற பொருட்களை இனிமேல் பாடசாலைக்குள் கொண்டுவரக்கூடாதென எச்சரிக்கை செய்து அனுப்பிவைத்தார். பிரம்பால் வேண்டும் அடியைவிட பெரிய தண்டனையாக என்னை உணரவைத்த சம்பவம் அது.

பின் உயர்தர வகுப்பில் படிக்கும்போது மற்றுமோர் நிகழ்வு. எமது வகுப்பு 11E, 12E. கணிதத் துறையில் முதலிரு டிவிஷனில் எஞ்சியவர்களும், உயிரியல் துறையில் ஒரு டிவிஷனில் எஞ்சியவர்களும் கொண்ட வகுப்பு. பிரார்த்தனை மண்டபத்திற்கருகில், படிக்கட்டுக்கு இடையில் எமது வகுப்பு இருந்தது. எமக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் ஓஹோ என்று சொல்லுமளவுக்கு இல்லை. அதனால் எம் போன்றவர்கள் கல்வியில் பெரியளவில்ஈடுபாடு கொள்ளும் சூழலும் அமையவில்லை. அதனைவிட எம் வீடுகளில் கிடைத்த சுதந்திரமும் எமக்குக் கல்வியைவிட அந்த மாணவக் கால வாழ்வை முழுமையாக அனுபவிக்கும் மனநிலையைத் தந்திருந்தன. அதனால் எப்போதும் குதூகலம்தான். அதனால் ஒரு சில மாணவர்களைத் தவிர ஏனையவர்கள் காலையில் வருவதும், இடையில் காணாமல் போவதும் வாடிக்கையாக இருந்த நேரம்.

அவ்வாறு ஒரு நாள் காலையில் கல்லூரிக்கு வந்த நானும் என் நண்பர்கள் எழுவரும், அன்று ஒரு திரைப்படத்திற்கு செல்வதற்காகத் திட்டமிட்டு ஒரு சில மணிநேரத்தில், வகுப்பிலிருந்து வெளியேறி படம்-பார்க்கச் சென்று விட்டோம். எமது கஷ்ட காலம் அன்றைக்கென்று அதிபர் எமது வகுப்புக்கு திடீரென வந்-துவிட்டார். வகுப்பில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதைக் கண்டு வரவுப் பதிவேட்டை எடுத்துப் பார்வையிட்டிருக்கிறார். இடையில் வெளியேறிய அனைவரின் பெயர்களையும் குறித்துக்கொண்டு சென்றுவிட்டார். மறுநாள் காலை பாடசாலை வந்த எமக்கு அதிர்ச்சியான செய்தி. பாடசாலை ஆரம்பமாகி ஒரு மணி நேரத்தில் அதிபரிடமிருந்து எம் அனைவருக்கும் அலுவலகம் வந்து சந்திக்குமாறு கட்டளை. ஒவ்வொருவரும் பயந்து நடுங்கியவாறு அவரது அறையில் ஆஜராகின்றோம். ஆனால் அவரோ நேற்று எங்கு சென்றீர்கள் என்று எம்மைக் கேட்கவில்லை. "பாடசாலை நேரத்தில் பாடசாலையில் இல்லாத உங்களை இனியும் இந்தப் பாடசாலையில் வைத்திருக்க முடியாது. எல்லாரும் இண்டைக்கு வீட்டுக்குப் போங்கோ! வீட்டைபோய் நாளைக்கு அப்பா, அம்மாவைக் கூட்டிக்கொண்டு வாங்கோ. நான் Certificate ஐத் தந்து விடுறன். இனி இங்க உங்களுக்கு இடமில்லை" என்று சொல்லிவிட்டார். நாம் அனைவரும், தெரியாமல் தவறு செய்துவிட்டோம். இந்த ஒரு தடவை எம்மை மன்னிக்குமாறு பலவாறு இரந்து வேண்டியும் அவர் தன் முடிவில் அசையவில்லை. எம்மை வீடு செல்லுமாறு கூறிவிட்டார்.

எமக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. வீடுசென்று பெற்றோரிடம் நடந்ததைக் கூற முடியாது. அதனால் வீட்டில் விளையக்கூடிய விபரீதத்தை எதிர்கொள்ள ஒருவரும் தயாரில்லை. அதனால் நாம் அனைவரும் அவரது அலுவலக அறையின் வாசலுக்கு வெளியிலேயே நின்றோம். அங்கு வரும் ஆசிரியர்கள், மாணவர்கள் என்று அனைவரினதும் பார்வைகள் எம்மை ஏளனஞ்செய்வதாகவே எமக்குத் தோன்றியது. அதிபரோ எதுவுமே நடவாததுபோல் தனது நாளாந்தக் கடமைகளை ஆற்றிக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் எமது கல்லூரி இருநேரப் பாடசாலையாக இயங்கிய காலம். மதிய உணவு இடைவேளை ஒரு மணித்தியாலம். பகல் 12மணிக்கு அதிபர் மதிய உணவுக்காக வீடு செல்ல வெளியே வந்தார். நாம் அனைவரும் மீண்டும் அவரிடம் மன்னிப்புக் கோரினோம். ஆனால் அவர் தன் முடிவில் எந்த மாற்றமுமின்றி காரில் வீடு சென்றுவிட்டார். எமக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வழமையில் மதிய உணவுக்கு வீடு சென்று திரும்பும் நானும் ஏனைய நண்பர்களும் அன்று செல்லவில்லை. என்ன செய்வதென்று கூடி யோசித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மதிய உணவின் பின் ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டுத்தான் பாடசாலை திரும்புவார் என்று அறிந்-திருந்தோம். அதனால் அவர் வீட்டுக்குச் சென்று மீண்டும் மன்னிப்புக் கேட்க எண்ணினோம். அவர் உணவுண்டு தூங்கும் நேரத்தை அண்ணளவாகக் கணித்து யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு முன்னாலிருந்த அதிபர் வீடு சென்றோம். எம் கணிப்பின்படியே அதிபர் அவ்வேளை தூக்கத்திலிருந்தார். திருமதி சபாலிங்கம் அவர்கள் நாம் சென்ற காரணத்தை வினவினார். நடந்ததைக் கூறி அவரை எமக்காக அதிபரிடம் சிபார்சு செய்யுமாறு வேண்டினோம். அவ்வேளை எழுந்துவந்த அதிபர் கடுமையான குரலில், "இங்கு ஏன் வந்தீர்கள்? நாளைக்கு பெற்றோருடன் வாருங்கள்" என்றுகூறி எம்மைப் போகுமாறு கூறிவிட்டார். எமக்கோ பசி ஒரு புறம், பயம் ஒரு புறம். என்ன செய்வதென்று தெரியவில்லை.

மீண்டும் கல்லூரிக்கு வந்து அவரது அலுவலக வாசலில் காத்திருந்தோம். மீண்டு வந்த அதிபர் தனது அறையினுள் நேரே சென்று விட்டார். எமக்கிருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் போய்விட்டது. நாளை நடக்கபோவதை எண்ணி மனம் நடுங்கியது. ஒரு கால் மணிநேரத்தின் பின்னர் அதிபர் எம்மை உள்ளே அழைத்தார். அவரது கண்டிப்பான குரலில், "இதுதான் கடைசித் தடவை. இனி ஒருமுறை இப்படி நீங்கள் நடந்துகொண்டால் அதுதான் கல்லூரியில் உங்கள் கடைசிநாள்" என்றுகூறி எம்மை மீளவும் வகுப்புக்குச் செல்ல அனுமதித்தார். அன்றுபெற்ற அந்தத் தண்டனை எம்மை, எமது கல்லூரியின் இறுதிநாட்கள்வரை ஒழுங்கு பேண வைத்தது. மாணவர்களைக் கையாளுகின்ற அவரது ஆற்றல் வேறெந்த அதிபரிடமும் நான் காணாதது. உடல்ரீதியாகத் தண்டிப்பதை விடுத்து, உளரீதியாக நாம் செய்த தவற்றையும், அதனால் என்ன விளையக்கூடும் என்றும் எம்மை உணரவைக்கும் விதமாகவே அவரது தண்டனை முறை பெரும்பாலும் அமைந்திருந்தது. உளரீதியாக தன் தவறை உணரும் ஒருவன் மீளவும் அதே தவறைச் செய்யமாட்டான் என்ற அமரர் சபாலிங்கம் அவர்களின் நம்பிக்கையே அவர் காலத்தில் எமது கல்லூரியின் கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையும் கட்டிக்காத்தது என்று சொன்னால் மிகையில்லை. மாணவர்கள் மட்டுமல்லாது, ஆசிரியர்களும் அவரது ஆளுமைமிக்க தலைமையின்கீழ் கட்டுப்பட்டு இயங்கிய அக்காலம், கல்லூரி அனைத்துத் துறைகளிலும் முன்னணியில் திகழ்ந்த காலம் அதுவே இந்துவின் பொற்காலம் எனலாம்.

அவர் ஓய்வுபெற்றிருந்த காலத்தில் 1980இல் நண்பர் கம்பவாரிதியின் வழிகாட்டலில், நண்பன் திருநந்தகுமார் மற்றும் சில நண்பர்களுடன் நானும் இணைந்து யாழ்ப்பாணத்தில் கம்பன் கழகத்தைத் தோற்றுவித்து விழாக்களைச் செய்துவந்த காலம். அவ் விழாக்களில் சிலவற்றுக்கு தலைமைதாங்க எம் அதிபர் சபாலிங்கம் அவர்களையும் அழைத்திருந்தோம். அவ்விழாக்களில் அவர் ஆற்றிய உரைகள், அவரது தமிழ்ப்பற்றையும், இனப்பற்றையும், தமிழ் அறிவையும் வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன.

கம்பவாரிதியின் மானசீகக் குருவான திருச்சி பேராசிரியர். இரா.இராதாகிருஷ்ணன் அவர்களின் இலங்கை விஜயத்தின்போதான கம்பன் விழாக்களில் அவர் தினமும் கலந்துகொண்டு தமிழ்ச் சுவை பருகியதை இன்றும் மகிழ்வோடு எண்ணிப்பார்க்கின்றேன். இறுதிநாள் விழாவில் அவரது தலைமையிலே பேராசிரியருக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றதையும், அக் கௌரவிப்பினை அவர் கையாலேயே நாம் செய்வித்ததையும் இன்றும் நினைக்க இனிக்கிறது. கம்பன் கழகத்தையும் எமது முயற்சிகளையும் ஆதரித்ததோடு நாம் அவரது மாணவர்கள் என்ற வகையில்பெருமையும் கொண்டிருந்தார். அக் காலத்திலே அவரிடம், நாம் கண்ட முன்னைய இயல்புகள் முற்றுமுழுதாக மாற்றம் பெற்றிருந்தன. பாடசாலை வாழ்க்கைக்குப் பின்னரும் அவரோடு பழகும் வாய்ப்பும், அவரது இன்னொரு பரிமாணத்தை அறியும் வாய்ப்பும் எமக்கு அப்போது கிடைத்தது. அந்த வகையில் நாம் பெரும் அதிர்ஷ்டசாலிகளே! இன்று அவரது நூற்றாண்டு நிறைவினை நினைவுகூரும் வேளையில் அவரது காலத்தின் பின்னர் இன்றுவரை அவர்போன்றதொரு ஆளுமைமிக்க அதிபரை நாம் காணவில்லை என்ற நிதர்சனமான உண்மையை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

வாழ்க அவர் புகழ்! நீடு நிலைக்கட்டும் அவர் நினைவுகள்!!

அவர் மாணவனாகப் பெருமைகொள்ளும்,
**கந்தையா குமாரதாசன், அவுஸ்திரேலியா.** - யாழ் இந்து பழைய மாணவன்
ஸ்தாபக செயலர், அகில இலங்கைக் கம்பன் கழகம்.
முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ் பல்கலைக் கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கண்ட அதிபர் சபாலிங்கம்



1971 ஆம் ஆண்டு அது. அப்போது நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அதுவரை அதிபராகப் பணியாற்றிவந்த திரு சபாரத்தினம் அவர்கள் ஓய்வு பெற்றுக்கொண்டதும் புதிய அதிபர் தெரிவில் நிச்சயமற்ற நிலைமை சில காலம் நீடித்தது. இந்த நிச்சயமற்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கல்லூரி சமூகத்தின் வேண்டுகோளை ஏற்றுத் திரு சபாலிங்கம் அவர்கள் புதிய அதிபராக பதவியேற்றுக்கொண்டார். ஆளுமை மிக்க புதிய அதிபரின் வருகை கண்டு இந்துக்கல்லூரி சமூகம் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தது. அதிபர் சபாலிங்கம் அவர்களும் குறுகிய காலத்திலேயே தனது ஆக்கபூர்வமான செயற்பாடுகளால் எல்லோரது கவனத்தையும் தன்பால் ஈர்த்துக்கொண்டதுடன் அனைவரது மனங்களிலும் இடம் பிடித்துக்கொண்டார்.

எப்போதும் அவர் அணியும் வெள்ளை நிற வேட்டி சால்வை, நிமிர்ந்த கம்பீரமான நடை, எதிரில் வருவோரை கட்டிப்போடும் நேரான கூரிய பார்வை கொண்ட அவரது தோற்றம் கண்டு அனைவரும் அவர் மீது பயம் கலந்த மரியாதை கொண்டனர். தினமும் அவர் பயணிக்கும் வெள்ளை நிறக்கார் அரசடி வீதியைக்கடந்து கஸ்தூரியார் வீதியில் பயணித்து கல்லூரி மைதானத்தை அடைகின்றபோது அன்றாடம் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களின் காலை நேர மதிய இடைவேளை நேர கிரிக்கெட் ஆட்டங்கள், உதைபந்தாட்டங்கள் அனைத்தும் தாமாகவே முடிவுக்கு வந்துவிடும். கல்லூரி வீதியிலும் கல்லூரி முற்றத்திலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் கூடிநின்று அரட்டை அடித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் அனைவரும் தத்தமது வகுப்புக்களை நோக்கி விரைந்து நடையைக்கட்டி விடுவார்கள்.

கல்லூரியில் படிக்கும் பெரும்பாலான மாணவர்களின் குணாதிசயங்கள், பழக்கவழக்கங்கள், அவர்களிடம் காணப்படும் திறமைகள் பற்றிய தகவல்களை அவர் அறிந்து வைத்திருந்தார் என்றே கூறவேண்டும். அத்துடன் மாணவர்கள் என்ன குழப்படிகள் செய்கின்றார்கள் என்றும் அவர் தெரிந்துதான் வைத்திருந்தார். கல்லூரி விளையாட்டுக்குழுக்களில் இடம் பெற்றிருக்கும் மாணவர்களுக்கு எப்போதும் அவரிடம் சில சலுகைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் ஒழுக்கம் தவறுதல், ஆசிரியர்களை மதியாமல் நடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஒருபோதும் அவர் மன்னிக்கமாட்டார்.

அதிபர் சபாலிங்கம் அவர்கள் மாணவர்களின் வரவு, ஒழுக்கம், பாதுகாப்பு, கல்வி மற்றும் கல்விசாரா நடவடிக்கைகள், உடற்பயிற்சி, விளையாட்டுத்துறை அடங்கலாக அனைத்து விடயங்களையும் மேம்படுத்துதல் தொடர்பாக எப்போதும் தூர நோக்கும் தெளிவான பார்வையும் கொண்டிருந்தார். அதற்கான திட்டங்களையும் வகுத்து செயற்படுத்தி வெற்றியும் கண்டார். மாணவர்களின் வரவு, ஒழுக்கம் முதலிய விடயங்களில் மிகவும் கண்டிப்புடன் செயற்பட்டு மாணவர்களை நன்னெறிப்படுத்தினார். மேலும் மாணவர்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கு தன்னாலான உதவிகளையும் அவர் செய்துவந்தார்.

மாணவர்கள் நல்லதொரு சூழ்நிலையில் நல்லாசிரியர்கள் முன் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை உறுதி செய்வதன் பொருட்டு தன்னாலான அனைத்து வசதிகளையும் அவர் செய்து கொடுக்கத்தவறவில்லை. அதற்காக பல சிறந்த ஆசிரியர்களை நம் கல்லூரியில் புதிதாக இணைத்துக்கொண்டார். அதுபோல் கல்லூரி விளையாட்டுக்குழுக்களின் தரத்தை உயர்த்தவும் பல வசதிகளை அவர் செய்து கொடுத்தார். இலங்கை உதைபந்தாட்டக்குழுவின் முன்னாள் பயிற்சியாளர் திரு நடராஜா அவர்களைக்கொண்டு எம் கல்லூரி உதைபந்தாட்டக்குழுவினருக்கு பயிற்சி முகாம் (Coaching camp) நடாத்தி விளையாட்டுக்குழுக்களின் தரமுயர வழி செய்துகொடுத்தமையை நல்லதொரு உதாரணமாக இங்கு குறிப்பிடலாம்.

கல்லூரி நலன் சார்ந்த விடயங்களில் எப்போதும் எதற்காகவும் யாருடனும் அவர் சமரசம் செய்து கொண்டது கிடையாது. எந்நேரத்திலும் எத்தகைய சவால்களையும் எதிர் கொண்டு அவற்றை முறியடித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் நலன் காக்கும் கடமையுணர்வோடு அவர் செயற்பட்டார். துணிவும் தைரியமும் தன்னம்பிக்கையும் கொண்ட அவரது செயற்பாடுகளைப் பல தடவைகள் நான் நேரில் கண்டு வியந்திருக்கின்றேன். கையில் பிரம்புடன் அதிபர் கல்லூரியைச் சுற்றி வலம் வந்தால் எத்தகைய பிரச்சினைகளும் தாமாகவே தீர்ந்துவிடும்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்களைப்போல் நானும் அதிபர் சபாலிங்கம் அவர்களை கையில் பிரம்புடன் தான் முதன்முதலாகக் கண்டேன். அப்போது அவர் யாழ் மத்திய கல்லூரியின் அதிபராக இருந்தார். எமது கல்லூரிக்கும் மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்றுக்கொண்டிருந்த கிரிக்கெட் ஆட்டம் குழப்பத்தில் முடிவடைய தனியொருவராக துணிவுடன் நடவடிக்கையெடுத்து தான் சார்ந்து நிற்கும் கல்லூரி மாணவர்களையும் ஆதரவாளர்களையும் இந்துக்கல்லூரி மைதானத்தில் இருந்து அவர் வெளியேற்றிய காட்சி இன்றும் என் மனதில் அழியாமல் ஆழமாக பதிந்திருக்கின்றது. இத்தகைய துணிவும் தைரியமும் வேறு எந்த ஒரு அதிபருக்கும் இருந்ததாக அந்நாளில் நான் அறிந்திருக்கவில்லை.

கல்லூரியின் மூன்றாவது பிரிவு உதைப்பந்தாட்டக்குழுவில் அப்போது நான் இடம்பெற்றிருந்ததன் காரண-மாக அதிபர் அவர்கள் என்னை ஏற்கனவே நன்கு அறிந்து வைத்திருந்தார். எனினும் அவர் எமது பத்தாம் வகுப்பு கணிதபாட ஆசிரியராக பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்புதான் முதன்முதலாக அவருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் எனக்குக்கிட்டியது. வகுப்பில் சிரித்துப்பேசி கதைகள் சொல்லி பாடம் நடத்திய போதுதான் எம் அதிபரின் மென்மையான முகம் எமக்குத்தென்பட்டது. 'சிறப்புடன் பூனை இறப்பிலிருந்தால் புறப்படாது எலி' என அவர் அடிக்கடி கூறும் பழமொழி இன்றும் என் நினைவில் இருக்கின்றது. கடும்போக்குடைய அதிபராக அவரை வெளியில் கண்டு அறிந்திருந்த நாம் அவரது அன்பான வார்த்தைகளால் மயங்கி கட்டுண்டு போனோம். மிகவும் கரிசனையுடனும் அன்புடனும் அவர் எமக்கு பாடம் சொல்லித்தந்தார்

சிலகாலம் சென்றபின் விளையாட்டுத்துறையில் நான் கூடிய கவனம் செலுத்துவதையும் அதனால் படிப்பில் என் கவனம் சிதறுவதையும் அவதானித்து அறிந்துகொண்ட அதிபர் என்னை ஒருநாள் கதைக்கவேண்டுமெனக்கூறி தனது காரியாலயத்துக்கு அழைத்திருந்தார். அவர் அழைத்ததன் காரணம் தெரியாத நானும் "என்ன பிரச்சினையில் மாட்டிக்கொண்டேனோ, தெரியவில்லை?" என்று மனம் கலங்க-ியவாறு அவரைச் சென்று பார்த்தேன். அதிபரின் அறைக்குள்ளே சென்றதும் தான் அவர் என்னை வரச்சொன்னதற்கான காரணம் தெரியவந்தது. படிப்பில் கவனம் செலுத்தவேண்டுமென நீண்ட உபதேசம் செய்தார். அன்றுமுதல் தினமும் பாடசாலை விடும்போது அவரை நான் சென்று பார்க்கவேண்டுமெனவும் மறுநாள் காலை 6.30 மணிக்கு நான் அவரது வீட்டிற்கு படிக்கவரவேண்டுமா? என்ற விபரத்தை அவ்வேளை அவர் என்னிடம் தெரிவிப்பாரெனவும் கூறினார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அதிபர் சொன்னவற்றிக்கெல்லாம் தலையை ஆட்டிவிட்டு வியர்க்க வியர்க்க வெளியில் வந்தமை இன்றும் என் நினைவில் காட்சியாக நிற்கின்றது. அவரது சொல்லைக் கட்டளையாக ஏற்று அவர் கூறியபடி நானும் பல தடவைகள் அவரது வீட்டிற்கு காலை 6.30 மணிக்குச் சென்று கணிதபாடம் படித்து வந்தேன். இதற்காக அவர் என்னிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடவில்லை.

ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி கல்லூரியில் படிக்கும் யாரோ ஒரு மாணவனின் நலனில் அக்கறைகொண்டு செயற்பட்ட எம் அதிபரின் உயர்ந்த பண்பை எடுத்துக்காட்டுவதற்கு இதைவிட வேறு சிறந்த ஒரு உதாரணம் தேவையில்லையென்றே நான் நினைக்கி-ன்றேன். இதேபோன்று தனது பதவிக்காலத்தில் பல நூறு மாணவர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் எம் அதிபர் ஒரு தந்தையின் ஸ்தானத்தில் நின்று செயற்பட்டிருந்தார் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

அது 1972 ஆம் ஆண்டென நினைக்கின்றேன். அப்போது நம் பாடசாலையில் ஹாக்கி குழு இருக்கவில்லை. ஆனால் நான் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்த யாழ் மாவட்ட பாடசாலைகள் ஹாக்கி குழு பயிற்சிக்காக அவ்வப்போது பாடசாலை விட்டதும் மாலையில் சென்று வந்தேன். தற்செயலாக ஒருநாள் ஹாக்கி தடியுடன் என்னைக்கண்ட அதிபர் என்னை அழைத்து விபரம் கேட்டு அறிந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு அவர் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் திரு சோமசுந்தரம் அவர்களுடன் பேசி அடுத்த வருடமே கல்லூரியில் ஹாக்கி குழுவை தோற்றுவித்து என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கினார். எம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திய விடயமொன்றையும் இங்கு கூறலாமென்று நினைக்கின்றேன். 1975 ஆம் ஆண்டு இரண்டாம் தவணைக்காக பாடசாலை அப்போதுதான் தொடங்கியிருந்தது. அப்போது நாம் யாரும் எதிர்பார்த்திராத நேரத்தில் காட்டுத்தீயைப்போல் ஒரு செய்தி கல்லூரியெங்கினும் பரவியது. அச்செய்தி கேட்டு நாம் அனைவரும் அதிர்ச்சியடைந்தோம். எம் எல்லோரது அன்புக்கும் மரியாதைக்குமுரிய அதிபர் இரண்டாம் தவணை இறுதியில் தனது அதிபர் பணியை நிறைவுசெய்யவிருக்கின்றார் என்பதே அந்தச் செய்தி. இச்செய்தியால் எம் கல்லூரியே சோகமயமானது. அன்புக்குரிய அதிபர் எம்மை விட்டுப்பிரிந்து செல்லப்போகின்றாரே என எல்லோரும் ஏங்கினர்.

பணி நிறைவு செய்யவிருக்கும் அதிபர் அவர்களுக்கு அளிக்கவேண்டிய மரியாதை தொடர்பாக பாடசாலையின் பல மட்டங்களிலும் கூடிப்பேசி முடிவெடுக்கப்பட்டது. அதன்படி கல்லூரியில் இயங்கிவந்த சங்கங்கள் ஒன்றியங்களாலும் அவருக்கு பிரியாவிடை உபசாரங்கள் நடத்தப்பட்டன. பாடசாலை மாணவ-முதல்வர் குழுவால் நடத்தப்பட்ட உபசாரத்தில் மகாதேவா மாஸ்டர் எழுதித்தந்த உரையை நான் பேசினேன். என்னால் பேசமுடியவில்லை. கண்கள் கலங்கின. எம் குடும்ப உறவினர் ஒருவரைப்பிரியும் போது ஏற்படும் துக்கம் போன்றதொரு உணர்வு எம் எல்லோரது முகங்களிலும் தென்பட்டது. கடைசி நாளில் எம் அதிபர் அவர்களை மேள தாளங்களோடு பாடசாலை முன்றலில் இருந்து வீடு வரை ஊர்வலமாக அழைத்துச்சென்றபோது அனைவரும் கண்ணீர்விட்டு அழுதனர்.

அது 1980 ஆம் ஆண்டென நினைக்கின்றேன். அப்போது நான் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். ஒருநாள் காலை தேநீர் இடைவேளையின்போது எம் நிறுவன வரவேற்பறையில் அதிபர் அவர்கள் அமர்ந்திருப்பதைக்கண்டேன். நான் சற்றும் அவரை அங்கு எதிர்பார்த்திருக்கவில்லை. "சேர் எப்படியிருக்கிறீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். என்னை மறக்காத அவர் எனது சுகத்தை விசாரித்துவிட்டு தான் வந்த விபரத்தை என்னிடம் கூறினார். "சேர் என்னுடன் அமர்ந்து தேநீர் அருந்துவீர்களா?" என அவரை தயக்கத்துடன் கேட்டேன். மறுக்காமல் அவரும் என்னுடன் அமர்ந்து தேநீர் அருந்தி என்னை மகிழ்வித்தார். அதிபர் அவர்களை அடையாளம் கண்டு கொண்ட பலரும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர். இதுவே எனது அன்பு ஆசானை நான் கடைசியாகக்கண்ட தருணமாகும்.

எம் அதிபர் இந்துக்கல்லூரியில் கடமையாற்றிய (1971 – 1975) நான்கு ஆண்டுகாலப்பகுதியில் அவரோடு பல்வேறு மட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எனக்கிருந்த தொடர்பாடல்கள் அனுபவங்கள் ஏராளம். அவற்றில் ஓரிரு விடயங்களை மட்டுமே நான் இங்கு தொட்டிருக்கின்றேன். என் மீது அன்பு பாராட்டி எனது முன்னேற்றத்திற்காக அதிபர் அவர்கள் செய்த உதவிகளை, நன்மைகளை என்றும் நான் மறவேன். அவரது நினைவுகள் என்றும் என் மனதில் நிலைத்து நிற்கும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட எம் அதிபர் சபாலிங்கம் அவர்களின் புகழ் காலம் உள்ளவரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. அவர் தொடர்பான எனது அவதானிப்புகள் மற்றும் அனுபவங்களில் சிலவற்றை அவரது நூறாவது பிறந்த தினத்தில் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த அவரது குடும்பத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைக்கூறிக்கொண்டு அன்புடன் விடைபெறுகின்றேன்.

மிக்க நன்றி

**ஆர். சி. இராமநாதன்**
**(JHC / 1970 – 1977)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என் மனம் நிறைந்த மாமனிதன்

அது ஒரு மதியபோசன இடைவேளை அல்ல. காலை நேர குறும் இடைவேளை. நான் மாணவ தலைவர்களில் ஒருவன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபங்களில் முக்கியத்துமானதும் கல்லூரியின் ஆரம்பக்கட்டடங்களில் ஒன்றுதான் Prayer Hall Block.

இக் கட்டடத்தின் வலக்கைப் பக்கமாக அமைந்திருந்தது இரசாயன ஆய்வுகூடம் (Chemistry Lab). எதிரே இடக்கைப்பக்கமாக கல்லூரி வீதியின் அருகோரமாக வகுப்பறைகள். அவற்றின் முன்னால் நீண்ட விறாந்தை. இவற்றின் நடுவே பாரிய முற்றம். முற்றத்தின் கிழக்கு எல்லையில் அமைந்திருந்தது அன்றைய அதிபரின் காரியாலயம். அக் காரியாலயத்தின் மேல்மாடியில் முற்றத்தையும் Prayer Hall கட்டடத்தையும் பார்த்தாற்போல அமைந்திருந்தது ஒரு Balacony. இது மேல்மாடியில் இருந்த ஆசிரியர் ஓய்வு கூடத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது.

அன்றைய காலை நேர குறும் இடைவேளை முடிவாகும் தருணம் நான் இன்னும் இரசாயன ஆய்வுகூட பிரதான வாசலின் அருகே அந்நேரத்தில் ஆய்வுகூட பொறுப்பாளராகக் கடமையாற்றிய திரு சிவலோகநாதனுடன் பேசிக்கொண்டு நின்றேன். மாணவர்கள் ஆங்காங்கே நடு முற்றத்திலும் விறாந்தைகளிலும் சத்தமிட்டு ஓடி விளையாடிக்கொண்டு இருந்தார்கள். சத்தம் வானைப் பிளந்தாற்போல். கல்லூரி மாணவ தலைவர்களில் ஒருவனாக இருந்த எனக்கு 'கல்லூரி மணி அடித்தும் அந்த மாணவர்கள் வகுப்பறைகளுக்குள் செல்லாமல் இன்னும் விளையாடிக்கொண்டு நிற்கின்றார்களே!" என்ற ஆதங்கம். கையாலாகாதவனாய் என்னுக்குள் நானே நொந்துகொண்டேன். ஒரு சில நிமிடங்கள்தான் இருக்கும் பெரும் அடைமழை திடீரென ஓய்ந்தது போலச் சத்தங்கள் ஓய்ந்தன மாணவர்கள் வகுப்பறைகளுக்குள் ஓடி ஒளிந்தார்கள். எங்கும் மயான அமைதி.

மெதுவாக விறாந்தையின் விழிம்பில் வந்து பார்த்தேன் முற்றத்தில் கிழக்கு எல்லையில் கல்லூரி அதிபரின் காரியாலய மேல்மாடி டீயடஉழலெ யில் தன் வலது கையின் சுட்டு விரலால் மூக்குக் கண்ணாடியின் நடுப்பகுதியை தொட்டபடி முற்றத்தை முழுமனே ஒரே ஒரு பார்வையால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் அந்த அதிபர் சபாலிங்கம் அவர்கள். அவரிற்கே உரித்தான அந்த 'தனித்துவ ஆளுமை' அங்கே பிரமித்து நின்றது.

திரு சபாலிங்கம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் நான் மாணவனாகவும் மாணவதலைவர்களில் ஒருவனாகவும் கடமையாற்றிய போது உன்னிப்பாக சில விடயங்களை அவரிடம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இன்று நாம் யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒரு சமூகத்திலே தனி மனிதர்களாக அடையாளம் காணப்படுவதற்கு ஒரு காரணம் நாம் அதிபர் சபாலிங்கத்திடம் இருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ கற்றுக்கொண்டவைகளே.

அவர் கம்பீரமான உறுதியான மனிதர் மட்டுமல்ல எவரையும் குறிப்பாக மாணவர்களை உன்னிப்பாக அவதானிப்பவரும் கூட. ஒரு மாணவன் எந்த வகையானவனாலும் எந்த வயதையுடையவனாலும் அவனை சரியாக அடையாளம் கண்டு அதற்கேற்ப வழிநடத்துபவர். தண்டிக்க வேண்டிய நேரங்களில் மிகக் கடுமையாகத் தண்டிப்பார். அந்தக் கண்டிப்பு அந்த மாணவனுக்கு மட்டுமல்லாமல் ஏனைய மாணவர்களுக்கும் பல விடயங்களைக் கற்றுக் கொடுத்தது.

என்னோடு அவர் நேரடியாக பேசிய நாட்கள் மிகக் குறைவு. ஆனால் என்னைப் பற்றிய அவருடைய அபிப்பிராயம் என்னவென்பதை பல சந்தர்ப்பங்களில் நான் உணர்ந்திருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் துறையில் புகழ்பெற்ற மாணவர்கள் அதிகமாக மாணவதலைவர்களாக தெரிவுசெய்யப்படுவது வழமை. என்னையும் ஒரு மாணவ தலைவ வேட்பாளராக ஆசிரியர் திரு துரைராஜா அவர்கள் பிரேரித்திருந்தார். மொத்தமாக 30 மாணவர்களில் 15 தலைவர்கள் தெரிவுசெய்யப்பட இருந்தார்கள். நான் 17 ஆவதாக தெரிவுசெய்யப்பட்டேன். அதனால் மாணவ தலைவர்களில் ஒருவனாக எனக்கு தெரிவு இருக்கவில்லை. ஆனால் எனக்கு அந்த தகுதி இருந்தது என்பதை உணர்ந்து கொண்டு ஒரு அதிபரின் விசேட அதிகார வரையறையின் கீழ் என்னையும் மாணவ தலைவர்களில் ஒருவனாக நியமன அறிவிப்பு செய்துகொண்டார். அது அவர் என்மேல் கொண்ட அவதானிப்பின் ஓர் வெளிப்பாடு எனலாம்.

நான் மாணவர் தலைவனாக கடமையாற்றிய ஒரு நாளில் என் வகுப்பில் கற்ற சக மாணவரொருவரினால் அதிபர் சபாலிங்கம் முன்நிலையில் நான் செய்யாத ஒரு குற்றம் செய்ததாக முன்வைக்கப்பட்டது. அது பற்றி அவர் விசாரித்தபோது அதை நான் செய்ததாகவே ஏற்றுக்கொண்டேன் (சந்தர்ப்பவசம் காரணமாக). விசாரணை முடிவில் இதர மாணவர்கள் வெளியேறியும் நான் வெளியேறவில்லை நின்றிருந்தேன். குற்ற உணர்வு என்னை அங்கே நிறுத்தியது.

'ஏன் இன்னும் நீ போகவில்லை?" என்று கேட்டார். இப்படியான ஒரு குற்றத்தை நான் செய்தாக நிர்ணயிக்கப்பட்ட காரணத்தால் நான் தொடர்ந்து ஒரு மாணவ தலைவனாக இருக்க தகுதியற்றவன் என்றும்' அதனால் மாணவதலைவானக இருந்து விலகுவதாகவும் தெரிவித்தேன். 'அது ஒன்றும் இப்ப தே-வையில்லை நீ போகலாம் " என்று அதட்டினார். நான் சென்றுவிட்டேன். அன்று பிற்பகல் 'விசேட மாணவ தலைவர் கூட்டம்' என அறிவிக்கப்பட்டது. அதிபர் சபாலிங்கம் ஐந்து நிமிடங்கள் பங்குபற்றினார். அந்த ஐந்து நிமிடங்களோடு கூட்டமும் முடிவுபெற்றது. அதில் அவர் "குற்றம் செய்பவன் எல்லாம் ஓடிவிடமுடியாது. ஓடிவிடவும் கூடாது. அப்படி ஓடுவதானால் நான் பல தடவை ஓடியிருக்க வேண்டும்." என என்னை நேர-டியாகப் பார்த்து ' என்ன புரிஞ்சுதா?' என்று கேட்டார் அதிபர் திரு.சபாலிங்கம். நான் மௌனமாக இருந்தேன். அவர் போய்விட்டார்.

கல்லூரி நாட்களில் சிறிய வயதில் இருந்தே நான் ஓவியக் கலையில் ஆர்வமாக ஈடுபட்டிருந்தேன். பல கண்காட்சிப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கின்றேன். பல பரிசில்களும் பெற்றிருக்கின்றேன். கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போதெல்லாம் மைதானத்தின் கரும்பலகையில் அனைத்து இல்லங்களின் பெயர்களையும் அழகாக எழுதும் பொறுப்பு எனக்கு சீவிய உருத்தாக இருந்தது. கல்லூரியின் பரிசளிப்பு விழா காலங்களில் பரிசில் பெறும் மாணவர்களின் சான்றிதழ்களில் அவர்களின் பெயர்களை அழகாக ஓவிய வெளிப்பாட்டோடு எழுதும் பொறுப்பும் எனக்கு தரப்பட்டிருந்தது. அந்த நாட்களில் அதிபரின் காரியாலத்தில் கிழக்கு மூலையில் இருந்த பெரிய மேசையின் ( Conference Table ) ஒரு மூலையில் இருந்து அவற்றை எழுதுவேன். ஒரு நாட்கூட அதிபர் சபாலிங்கம் 'என்ன எழுதியிருக்கின்றேன்? எப்படி எழுதியிருக்கின்றேன்?" என்று வந்து பார்த்ததில்லை.

அவர் இளைப்பாறிய பல மாதங்களின் பின்னர் "லண்டன் மாநகருக்கு இடம் பெயர இருக்கின்றார் என்று அறிந்தேன். அவர் அங்கு புறப்படவிருந்த நாள் காலை 6 அல்லது 7 மணி இருக்கும் ஒருவர் என் வீட்டிற்கு வந்து "அதிபர் சபாலிங்கம் அவர்கள் உங்களைத் தன் வீட்டிற்கு வந்து போகுமாறு சொல்லி இருக்கிறார்" என்று கூறினார். அவர் வீட்டிற்குச் சென்றபோது அவர் ஒரு மிகச்சிறிய பொறுப்பை மாத்திரம் என்னிடம் தந்திருந்தார். 'இந்தச் சிறிய வேலைக்காகத்தானா என்னை அழைத்தார்? " என்று யோசித்தேன். தான் கொண்டு செல்ல இருக்கும் பயணப்பெட்டிகளில் அவர் போய்ச் சென்றடைய வேண்டிய முகவரியைத் தெளிவாக எழுதி ஒட்டும் பொறுப்பை என்னிடம் தந்திருந்தார். அது அவர் என்னிடம் கொண்டிருந்த அவதானத்தையும் மதிப்பையும் வெளிப்படுத்தி நின்றன.

மனிதர்கள் மறையலாம் ஆனால் மனம் நிறைந்த மாமனிதர்கள் என்றும் மறைவதில்லை.

**சி.குணசிங்கம்** - யாழ் இந்து பழைய மாணவன்
கட்டடக்கலைஞன்
சிட்னி அவுஸ்ரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யான் அறிந்த அதிபர் திரு. சபாலிங்கம் அவர்கள்

வெள்ளைக்காரில் வருவாராம் வேட்டி சேட்டு அணிவாராம் ......" எனத்தொடங்கும் இந்தப்பாடல் வரிகள் யாழ் இந்துக்கல்லூரியின் மாணவர்கள் பலருக்கும் அறிந்த ஓர் வரிகளாகும்.

எனது சிறு வயதில் நன்கறிந்த அதிபர் திரு சபாலிங்கம் அவர்கள் ஓர் வியக்கத்தக்க மனிதர். அவர்களின் நிருவாக மேலாண்மையைப் பற்றி உலகம் அறியும். அவர் கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய மூன்று வகை வாழ்க்கை நெறிகளின் முன்னுதாரணமாக விளங்கியவர் என்பதும் யாவரும் அறிந்ததே. யான் எட்டாம் தரம் படிக்கும்போது யாழ் இந்துக்கல்லூரியில் சேர்ந்தேன். ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் பொதுமக்கள் ஆகிய பலரும் அதிபர் அவர்களின் ஆளுமையை வியந்தனர். சிலர் பயந்தனர். எனது இசை ஆர்வத்தினை அதிபர் அவர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர். எனது இசைத்தாகத்தை தணிகும் வகையில் சங்கீதம் ஓர் பாடமாக கற்கும் வாய்ப்பு எனது வாழ்க்கையில் முதன் முதலாகக்கிடை-த்தது அதிபர் அவர்களின் கீழ் யான் இந்துக்கல்லூரியில் படித்த காலத்தில் தான். தேனெனத் தித்திக்கும் தேவரப் பண்களில் தேர்ச்சி பெற்ற ஓதுவரு மூர்த்திகள் மறைந்த திரு மாணிக்கவாசகர் அவர்களிடமும் இசைஅரசு அ.ஆ.தண்டபாணி தேசிகர் அவர்களின் முதன்மை மாணாக்கராகச் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஆசிரியர் 'சங்கீதபூஷணம்' திரு.முத்துக்குமாரசாமி அவர்களிடமும் முறையாக இசை பயிலும் வாய்ப்பு பெற்றதும் அதிபர் அவர்களின் காலத்தில் தான். அப்போதெல்லாம் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்போதும் முடிவடையும் போதும் தேவாரம் பாடுவது வழக்கமாக இருந்தது. பாடசாலை ஆரம்பிக்கும் போது குமாரசாமி மண்டபம் நிறைந்திருக்கும். அதில் யான் பஞ்சபுராணம் பாடுவது வழக்கமாக இருந்தது. அதிபர் அவர்களின் இசை ஆர்வம் இசை பயிலும் மாணவர்களில் அவர் வைத்திருந்த அன்பும் பாசமும் சிறுவனாக இருந்த என்னை மிகவும் ஈர்த்தது என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவ்வாறாக பாடசாலை முடியும் போதும் எனது தேவாரப்பாடல்களை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பப்படுவது அப்போதய வழக்கமாக இருந்தது. இதில் முக்கியமாக 'நிரைகழல் அரவம்' என்ற தேவாரத்தை யான் பாடும் போது அதிபர் அவர்கள் கண்கள் பனித்தை மனக்கண் நினைவிருத்த விரும்புகிறேன். இந்த ஞாபகம் என் மனதில் இன்றும் பசுமையாக நிலைத்திருக்கின்றது.

இவை எல்லவற்றையும் நினைவலைகளில் நோக்கும் போது அதிபர் அவர்களின் பரந்த விரிவான தொலை நோக்கமும் தெளிந்த பார்வையும், வழமையான நெறிமுறைப் பாடாந்தரத்தை விட மேலும் மற்றைய விடயங்களான விளையாட்டு, கலைப்பாடங்கள் போன்றவற்றில் அவருக்கிருந்த ஈடுபாடு வெள்ளிடைமலையாகத் தெரிகின்றது. விளையாட்டு வீரர்களைப் பாராட்டி அவர்களுக்கு மிகவும் ஊக்கம் கொடுத்தார். கைவினைப்பாடங்கள், ஓவியம் அகியவற்றிகும் மிக முக்கியத்துவம் தந்தார். இவற்றில் முக்கியமாக அதிபர் அவர்களின் இசை ஆர்வம் சொற்களில் சொல்லவொண்ணா. இசைப்பாடல்களைப் பாடக்கேட்டு மகிழ்வார். கலை மற்றும் கதம்ப நிகழ்ச்சிகளை நடத்துதற்கு நன்கு ஒத்-தாசை செய்வார். அப்போது இசை வகுப்புகள் நடத்த என ஓர் தனியான அறை இல்லை எனும் குறைை-யப்போக்க திரு முத்துக்குமாரசாமி அவர்களின் வேண்டுதலின் பேரில் காலம் தாழ்த்தாது ஓர் இசை அறையைக் கட்டித்தந்தார் இந்த மேலாசான். அங்கே இசை வாசம் செய்தேன். ஆசிரியர் அவர்கள் ஓர் மலர் போலவும் இசை பயிலும் மாணவர்கள் ஆகிய நாங்கள் வண்டுகள் போலவும் அவரைச்சுற்றி நிற்பதும், அவரைப் பாடாந்தரம் சொல்லிக் கேட்பதும் எனது நாட்களில் என்றும் மறக்க முடியாத இனிய நினைவுத் துளிகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இசை ஆசிரியர் 85 அகவைகளைத் தாண்டியும் இன்றும் எனது ஆசானாக, குருவாக, ஆலோசகராகச் சென்னையில் வசித்து வருகிறார். அண்ணாமலை அரசர் அமைத்த தமிழ் இசைச்சங்கத்தில் இசை விரிவுரையாளராக இன்றும் இசைச்சேவை ஆற்றி வருகின்றார்.காலங்கள் கடந்தன. நான் இலண்டன் வந்து பல ஆண்டுகள் கடந்தன. விம்பிள்டன் விநாயகர் ஆலயத்தில் அப்போது வெள்ளி தோறும் யான் திருமுறைப்பாடல்களை பாடுவது வழக்கம். அப்படியான ஓர் நாளில் பூஜை முடிந்த வேளை யாரோ முதுகில் என்னைத் தொடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தேன். அது வேறு யாரும் அல்ல. எம் அதிபர் அவர்கள். அதே கம்பீரத் தோற்றத்துடனும், வெள்ளை ஆடையுடனும், கனிவான குரலுடனும் "தம்பி" என என்னை அழைத்தது இன்னும் என்காதில் ஒலிக்கின்றது.

சில நேரம் உரையாடிய பின் அவரது ஆசிகளுடன் விடை பெற்றேன். பல வருடங்கள் கழிந்தன. அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார் எனும் செய்தி மனதை மிகவும் வாடச்செய்தது. அவருடைய பிள்ளைகளின் அன்பான வேண்டுதலின் பேரில் அதிபர் அவர்களுக்குரிய இறுதிச் சடங்குகளை முன்னின்று செய்து அன்னாருக்கு எனது நன்றிக் கடனை செலுத்தும் அரிய வாய்ப்பினை எல்லாம் வல்ல இறைவன் எனக்கு ஈய்ந்தார்.

அன்னாரின் பிள்ளைகளும் அவர்கள் குடும்பத்தாரும் ஒன்று கூடி யாழ் இந்துக் கல்லூரியில் அதிபர் சபாலிங்கம் அவர்களின் நூற்றாண்டு ஞாபகாத்த விழாவினைக் கொண்டாடுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. என் இசைப் பயணத்தால் நேரடியாகச் சமூகம் தர இயலாதிருப்பினும் இம்மடலின் மூலம் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க அவர் நாமம்! வாழ்க யாழ் இந்துக் கல்லூரி!!
வாழ்க தமிழ்!!! வாழ்க தமிழிசை!!!!

**மாணிக்கம் யோகேஸ்வரன்.** யாழ் இந்து பழைய மாணவன்
பேர்லின்.
தை 2019.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Undisputed Leader Principal Sabalingam



AI studied at Jaffna Hindu College between 1971 and 1975 under the tutelage of Principal Sabalingam. Before going on to speak about Principal Sabalingam and his contributions, I want to say a few words about the institution of Jaffna Hindu College. In my eyes, both are synonymous – the school's development is in a large part due to the leadership of Principal Sabalingam and the school and its achievements are an embodiment of our Principal.

Having hailed from Yarlton College in Karainagar, my experience at Jaffna Hindu College was vastly different from anything that I had witnessed before. My time there had an enormous influence on my life and one that I will never forget. Pooled into one vibrant institution were talented and gifted boys from diverse backgrounds within a collegial environment that prompted competition and comradeship. Some boys were academically exceptional while the talents of others lay in sports, music or arts. Without prejudice to one discipline or other, the school, under the direction of Principal Sabalingham, sought to maximise the talents of each and every one of its students and provide the foundation for all to achieve the best they could with the talents they had. Principal Sabalingam's vision was that public schooling did not mean that a student's talent should only be measured and calibrated against one academic framework, but he sought to actively welcome diversity and he recognised that each child is special in their own way. The school promoted its students to explore within themselves what they were good at and then provided the resources and support to develop themselves and their talents. Principal Sabalingam was the lead author of this ambitious and transformative educational reform.

The achievements and standing of Jaffna Hindu College is indelibly marked by the eadership of its great principals and teachers. Principal Sabalingam's contribution still resonates today with all the students that have passed through this great school and the thousands that will benefit from studying there in the future. Principal Sabalingam was a brilliant, hardworking and committed public servant. Not only did he drive forward the educational reforms at the school, he was a well-recognised and important voice in educational circles in the region. He led many delegations, including several international visits to Paris, London and Washington. Principal Sabalingam used his authority and voice to support other aspects of the community – for example, his work with the trade unions helped secure better working conditions for the teachers.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Principal Sabalingam should not only be remembered for his great achievements. He was a fair, honest and kind man, who took decisive and forthright actions when needed and always acted in the best interests of others. Classmates of old still speak fondly of their experiences at school and about Principal Sabalingam. He has helped shape the lives of thousands of people and put many on the path to prosperity and success. From a personal perspective, I was and still am inspired by his leadership and dedication and have benefitted immensely from his teachings.

My hope is that the current generation of students continues to follow the ideals of our Principal and help develop a nation that is free, disciplined, hardworking and committed to the service of others. The achievements of Principal Sabalingam is a good example not just for aspiring teachers but for people in all walks of life. Being honest, committed and ambitious in your aims will set you to achieve great things and will make the world a better place to live for others.

Principal Sabalingam 's life is a testament to the fact that public service is a noble cause and one that will not be forgotten.

**Senthilnathan Kandiah, London** - Old Student of JHC
Senthilnathan Kandiah is a Chartered Management Accountant and an entrepreneur in Health Care Industry. Sen is in the National Policy Forum of the British Labour Party and a member of Better Politics Commission. Sen is well known and respected within political and diplomatic community for his political engagement work in the UK.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Captain of the Ship



"இலங்கைத்தீவில் பெயர் பெற்றும் வடமாகாணத்தில் முன்னணிக் கல்லூரியாகத் திகழும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் திரு.சபாலிங்கம் அவர்களின் 100வது பிறந்த தினமான இன்று அமரர் பற்றிய சில நினைவலைகளை மனதில் ஏற்றித் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையும், மகிழ்ச்சியும், இறுமாப்பும் கொள்ளுகிறேன்.

கண்டிப்பு, மிடுக்கான நடை,நேரான பார்வை, தூய்மையான உடை, நேரம் தவறாமை, யாருக்கும் பயப்படாத தன்மை, இப்படி அவரின் குணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மறுபக்கம் உண்டு என்பார்கள். அதிபரின் மறுபக்கம் அவர் சக மனிதர்கள்மேல் செலுத்தும் அன்புதான். அவரின் அன்பைப் பெற்ற மாணவர்களுள் நானும் ஒருவன் என்பதால் அவரை நினைவு கூர்வதை ஒரு பாக்கியமாகவும் கருதுகிறேன். அவருக்கு மிகவும் பிடித்த விடயம் விளையாட்டுப் பிரிவே. விளையாட்டு வீரர்களுக்குப் பல சலுகைகளை வழங்கிய அதிபராகவே அவரைப் பார்க்கிறேன். நானும் யாழ். இந்துக் கல்லூரியில் ஒரு விளையாட்டு வீரனாக ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அதிபரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

எங்கள் கல்லூரி பல்கலைக் கழகங்களுக்கு அதிக மாணவர்களை அனுப்பும் ஒரு பெரும் ஸ்தாபனமாக விளங்கியது. அப்போது விளையாட்டுத்துறை சிறிது பின்தங்கியும், முற்றுப்பெறாத நிலையிலும், அதாவது கால் இறுதி, அரை இறுதி நிலையிலேயே வட மாகாணத்தில் இயங்கியது. இப்படியான காலகட்டத்திலேயேதான் அதிபர் எங்கள் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார். அதன் பின் அவர் ஏற்படுத்திய மாற்றங்களும், மைதானத்திற்கு வந்து அவர் எங்களை ஊக்குவிக்கும் அவர் பண்பும் ஒரு குறுகிய காலத்திலேயே விளையாட்டுத்துறை உச்சிக்குச் சென்று பல வெற்றிக் கிண்ணங்களையும், கேடயங்களையும் பெற்றுக் கொள்ளும் தகுதியை ஏற்படுத்தியது.எப்போதும் உயர்தர வகுப்பில் சித்தி பெற்றவர்களின் பெயர்களையே உச்சரித்த எம் கல்லூரி, விளையாட்டு வீரர்களின் பெயர்களையும் உச்சரிக்கத் தொடங்கியது. அமரர் அதிபர் திரு. சபாலிங்கத்தின் வரவு பலதுறை விளையாட்டு வீரரையும் எமது கல்லூரிக்குப் படையெடுக்க வைத்தது. அவர்களின் வரவு ஏற்கனவே கல்லூரியில் படித்த எமது மாணவர்களின் புகழை வட மாகாணம் முழுக்கப் பரவ வைத்தது.ஹொக்கி, கூடைப்பந்தாட்டம், போன்ற துறைகள் புதிதாகத் துவங்கப்பட்டன. உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் போன்ற துறைகளில் வெற்றியின் உச்சம் கண்டோம்.

திரு.நரேன்,திரு.சுபதரன்,திரு.நரேந்திரன்,அமரர் காண்சிவ், அமரர் சித்தரஞ்சன்,திரு. ஜபருல்லா, திரு. சிவபால விக்னராஜா, திரு.ஆர்.சீ இராமநாதன், கண்ணாடி இராஜேந்திரா, திரு.தயாளன், திரு. வித்யாதரன் போன்ற பல்தறை விளையாட்டு வீரர்களை எமது கல்லூரி உருவாக்கியது. இலங்கைக் கல்லூரி உதைபந்தாட்டக் குழுவில் திரு. தயாளன், திரு.வித்யாதரன் இடம்பெற்றனர்.அமரர் திரு. சபாலிங்கம் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வின் அம்சமே யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறையின் அதீத வளர்ச்சி என்பது எனது தாழ்மையான கருத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம் என்று வரும்போது "Captain of the Ship" என்பார்கள் அவருடைய நிர்வாகத் திறமைகள் சொல்லில் அடங்காதவை. ஆசிரியர்கள்,அலுவலக உதவியாளர்கள், மாணவர்கள், மாணவ தலைவர்கள், பெற்றோர்கள் பற்றிய தகவல் அறிவு மிக அதிகம். எப்பொழுதும் நேரம் தவறாது கல்லூரி செல்லும் நான், ஒரு நாள் வரும் வழியில் ஏற்ப்பட்ட விபத்தின் காரணமாக சிறிது சுணக்கமாகப் பாடசாலை சென்றேன்.யாரும் பார்க்கவில்லை என்ற எண்ணத்தில் வகுப்புக்குச் சென்று பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தேன்.இடையில் அதிபர் அழைப்பதாகத் தகவல் வந்தது.அதிபர் அறைக்குச் சென்று வணக்கம் சொல்லியவுடன் அவர் முதல் கேட்ட கேள்வி "மாணவர் தலைவனான நீயே காலம் தாழ்த்தி வந்தால் மற்றைய மாணவர்கள் எப்படி நேரத்துக்கு வருவார்கள்?". நான் விபத்தைப் பற்றிக் கூறியவுடன் எனது கையிலிருந்த சிறாய்வுகளைக் கண்டு, என்னிலிருந்த கோபம் வண்டியால் இடித்தவரின்மேல் திரும்பியது."இடித்த வண்டியின் இலக்கத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டார். வண்டியின் இலக்கத்தைச் சொன்னதும் மறுவார்த்தை பேசாது தொலைபேசி எடுத்துப் பொலிஸாருடன் தொடர்பு கொண்டதோடு மட்டுமல்லாது, காரின் சொந்தக்காரர் விபரம்,அவரது தொழில் மற்றும் விபரங்கள் அனைத்தையும் பொலிஸாருக்குக் கொடுத்தார்.அடுத்து வண்டியின் சொந்தக்காரர் என்னைப் பொலிஸ் ஸ்டேசனில் கண்டவுடன் கேட்டார், "திரு.சபாலிங்கத்தின் சொந்தக்காரனா நீ?" என்று. பெருமையாக நான் சொன்னேன் "நான் யாழ். இந்துக் கல்லூரி மாணவன். அவர் எனது அதிபர்" என. அமரர் அதிபர் திரு.சபாலிங்கத்தைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம்.

நல்ல தந்தை, ஆசிரியர், அதிபர் மாணவர்களை அதிலும் திறமையுள்ளவர்களை நண்பர்களாக மதிக்கக் கூடியவர். அவரின் ஆத்மாவும், எனது உதைபந்தாட்டப் பயிற்சியாளர் அதிபர் திரு.சபாலிங்கத்தின் மகன்அமரர் உதயலிங்கத்தின் ஆத்மாவும் என்றும் எம்மனதில் நிலைத்திருக்க வேண்டி இறைவனை வேண்டி விடைபெறுகிறேன்.

**செல்லத்துரை ஜெயப்பிரகாஷ்**
யாழ். இந்துக் கல்லூரி (1969 – 1976)
- 1 st Eleven Captain – Hockey JSSA Champions. 1 st Eleven – Foot Ball – JSSA Champions



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our golden time in Jaffna Hindu College with our legend Principal Mr. Sabalingam



I would like to share my memories of our legend, Principal Mr.E Sabalingam. We are proud and fortunate to study during his leadership in JHC. I started in grade 8 (1970) and stayed until completion of grade 12 (1976) in JHC hostel. Our great principal served in JHC from 1971 to early part of 1975. He was a well-disciplined leader and loved sports. He always dressed up with white national and (dhoti) versty.

Our principal supported and provided full encouragement for all sports teams. Our first eleven-football team did not reach the JSSA final for six years since 1966. We won the runner up in 1966 prior to his term. Our principal sponsored a national football coach, Mr Nadarajah to train the senior football team during school holidays and provided continuous coaching thereafter. All players were requested to stay in the hostel with meals provided free, during school holidays for full day football training camp. Our football senior team reached the final and won JSSA runner up in 1973 and 1974. He also introduced Hockey, Basketball, Chess teams and Police Cadets in JHC. We were JSSA Hockey Champions in 1974 and JSSA Athletics Champions in 1972,1973, 1974 and 1975.



197[illegible] JSSA Runner up- JHC Football team

He was also our advanced math's teacher in grade 10. We loved his way of teaching. He provided a very good foundation of Math's for my Engineering study at later stage. I always received great advice, when I was a school prefect. We all obeyed his rules and regulations, we always dressed up clean and maintained our haircuts. He advised us to be a great example for other students. He loved sports and sportsmen, especially football players.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I had a very good relationship with him because of my participation as a football goalkeeper for the senior (first eleven) team during 1973 & 1974. Our principal was a goalkeeper for our school team during his school period in JHC. We were able to see his goalkeeping skills and styles during the friendly matches between teachers and students.



1974 JSSA Runner Up- JHC Football team



1974 JSSA Champions - JHC Hockey team


The memory also goes back to an incident that occurred in our hostel to demonstrate his bravery and leadership. One midnight few outsiders (not our school boys) started to throw stones to the hostel windows from the street, and no one was brave enough to go out to the street to address this incident. As soon as the Boarding Master phoned the principal's home, he arrived at our hostel within few minutes. We were able to hear some stones hitting the windows when he arrived. He asked the boarders and Boarding Master to stay inside the hostel and walked to the street bravely alone where the stones were thrown from and shouted to the outsiders to challenge him. We were watching from upstairs from the hostel. We saw outsiders disappearing in rush. We did not see any further incidents occurred like this, during his time at JHC.



1974/1975 JHC Prefects



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1973/1974-JHC Prefects


1972 JSSA Champions- JHC Athletic team


1975-JHC Chess team

Finally, I would like to thank and congratulate our principal & family members who organized our legend Principal's 100 years memorial ceremony at Jaffna Hindu College.

May our Principal's fame and glory remain in the history of Jaffna Hindu College.

**Vicky Sivabalaviknarajah**
JHC 1975 (A/L) –Math
Engineer –Canadian Automotive Industry



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்மனம் கவர்ந்த ஆளுமை மிக்க அதிபர் இ. சபாலிங்கம் அவர்கள்

ஜெயானந்தசிவம் சிவனடியான்



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலில் தோன்றாமைநன்று" என்னும்வள்ளுவன் பொய்யாமொழிக் கிணங்க, உலகில் தோன்றிப் புகழொடு வாழ்ந்தோர் பலர். அவ்வரிசையிலே கண்ணியம், கட்டுப்பாடு, அறிவு, ஆற்றல், ஆளுமை நிறைந்த ஒரு அதிபராகத்தான் எங்கள் அதிபர் சபாலிங்கம் அவர்களைப் பார்க்கின்றேன். தன்னார்வம், மாணவர்களை "எத்துறையிலாவது முன்னேற்றம் காணவைக்கவேண்டும்" என்னும் ஆர்வமும், துணிவும், மாணவர்கள்மீது மட்டில்லா அன்பும் ஈடுபாடும் கொண்டு உழைத்தவர் எங்கள் அதிபர் அவர்கள். தான் ஏற்றுக்கொண்ட கடமையைச் செவ்வனே செய்யவேண்டும் என்னும் எண்ணத்தோடு இறுதிவரை உழைத்த கடின உழைப்பாளியாக இருந்தமையே அவர்பால் எனக்கும் என்போன்ற மாணவர்களுக்கும் ஈடுகொள்ளவை-த்தது. அந்த வரிசையில் எங்கள் அதிபர் சபாலிங்கம் அவர்கள் பதின்மூன்றாவது அதிபராக யாழ் மத்திய கல்லூரியில் இருந்து இடமாற்றம் பெற்று 1972 தொடக்கம் 1975 வரையும் கடமையாற்றிய மிகச் சிறந்தநிருவாகியாகக் கல்வித்திணைக்களத்தினால் மதிக்கப்பட்டுள்ளார். கொக்குவில் இந்துக்கல்லூரியில் இருந்து யாழ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றலாகிச் சென்றார். அங்கு அவர் அதிபராக இருந்தவேளை நான் அப்பாடசாலையில் கற்றுக்கொண்டிருந்தேன். எனது பெற்றோர் என்னை இந்துக்கல்லூரிக்கு மாற்றிவிட்டனர். நான் சென்று மூன்று மாதங்களில் அவரும் எங்கள் பாடசாலைக்கு வந்தமை எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

எல்லா மாணவர்களைப் போலவே நானும் கண்டிப்பு மிக்க ஆசிரியர்களையோ அன்றி அதிபர்களையோ விரும்புவது குறைவு. நான் ஒரு சாதாரண மாணவன்தான். அதிபரிடம் நெருங்கிப்பழகாத அந்த ஆறாம் ஏழாம் வகுப்புப் பருவம். மாணவர்களுக்குள்ளே அவரது கண்டிப்பும் கர்ச்சிதமும் எங்களைச் சற்று அச்சுறுத்துவதாக இருந்ததாலோ என்னவோ அவரைச் "சபான்" என்றுதான் அழைப்போம். அந்தச் சொல் ங்கள் அனைவரையும் ஒரு அச்சம் கலந்த சலசலப்பற்ற நிலையை ஏற்படுத்தும். அதிபர் என்றால் மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் சற்றுப் பயந்தான். நன்றாகக் கற்கும் மாணவர்களையும் நன்றாகக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் அதிபர்கள் விரும்புவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

எனது தந்தை சாதாணர ஒரு தமிழாசிரியராக யாழ் இந்துவில் கற்ப்பித்துவந்தார். ஏனோ தெரியாது அவர்மீது எங்கள் அதிபருக்கு ஒரு மரியாதையும், நம்பிக்கையும் இருந்தது. தனது கடமைகளைச் சரியாகச் செய்யும் ஒரு ஆசிரியர் என்பதனாலோ அன்றி அவரிடம் இருந்த திறமைகளை அறிந்தமையாலோ தெரியாது , எனது அப்பாவை மிகவும் அன்பாக அணுகும் நிலைமைகளை நான் ஊணுற்றுள்ளேன். எனது அப்பா ஒரு நாள் வீதியால் நடந்து வந்துகொண்டிருக்கும்போது அதிபர் தனது காரினை மறித்து மாஸ்ரர் ஏறுங்கள் என்று சொல்லி அழைத்துள்ளார். அப்பாவோ அதிபரோடு சமத்துவமாக இருக்கவிரும்பவில்லை. அதிபருக்குரிய மரியாதையைக் கொடுத்து பின்னால் உள்ள இருக்கையில் இருப்பதற்குக் கதவைத் திறந்துள்ளார். அவர் இல்லை முன்னுக்கு இடமிருக்கின்றது வாருங்கள் என்ற அழைத்து சரியாசனம் தந்து அழைத்துவந்துள்ளார் என்பதனை வீட்டில் எங்கள் அனைவருக்கும் முன்பாக எடுத்து அவரது பெருந்தன்மையைப் புகழ்ந்து பாராட்டியதைக் கேட்ட எனது அண்ணன் "அப்பா அவர் செய்ததும் சரி, நீங்கள் செய்ததும் சரி" என்று பதிலளித்தார். அப்பாவோ "என்ன இவன் இப்படி கூறுகின்றானே?" என்று பார்வையால் கேட்பதுபோன்று பார்த்தார். "அப்பா நீங்கள் பின் ஆசனத்தில் இருக்க அவர் காரைச் செலுத்தி வந்தால் அவர் சாரதி நீங்கள் முதலாளி, ஆனால் முன் ஆசனத்தில் இருந்தால் அவர் சாரதி என்ற நிலை இல்லாமல் போய்விடுமல்லவா?" என்று பொறியியலாளராகப் படித்துக்கொண்டிருந்த எனது அண்ணன் கூறிய பதிலால் வாயடைத்து நின்றார் என் அப்பா.

பாடசாலையில், நான் பங்குபற்றிய உதைபந்தாட்ட குழுக்கள் இரண்டுமே இவரது காலத்தில் உதைபந்-தாட்டத்தில் தொடர்ந்து மூன்று வருடங்களாக மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டி எமது பாடசாலைக்குப் பெருமையை ஏற்றித்தந்தார்கள் என்றால் அப்பெருமைக்கும், புகழுக்கும் உரியவராக இருந்தவர் அதிபர் இ. சபாலிங்கம் அவர்களே.

**யாழ் இந்து இருக்கும்வரை , அதிபர் சபாலிங்கம் நாமம் வாழும்.**

யாழ் இந்து பழைய மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Late Mr. E Sabalingam - One of the best Principals at Jaffna Hindu College



It is my privilege to contribute to the souvenir to be published to celebrate late Mr. E Sabalingam Master's 100 th birthday in February 2019.

I studied from 1967 (Grade Six) to 1975 during the tenure of two of the best principals at Jaffna Hindu College, late Mr. N Sabaratnam until 1971 and late Mr. E Sabalingam from 1971 to 1975.

In 1971, I was in my GCE (O/L) when standardisation for university entrance was introduced by the Sri Lankan government and a famous cricket match between Jaffna Central College Vs Jaffna Hindu College was abandoned due to disturbance by the cricket fans at Jaffna Hindu College ground. I remember that day very well, when late Mr. E Sabalingam who was the principal at Jaffna Central College told his son late Mr. S Uthayalingam, Jaffna Hindu's best batsman, to get into his car and took from the ground in anger.

We never thought that late Mr. E Sabalingam will become the principal of Jaffna Hindu College later in the year. Due to the cricket match incident, our ill affections towards late Mr. E Sabalingam rapidly changed to admiration, because of his love towards our college, teachers, non-teaching staff and students and the discipline he brought to the college administration. He was a very strict disciplinarian but wanted to know about each and every student at the college and want to be helpful to them appropriately.

Students admitted to Hindu College display an array of talents within Tamils but could not expect all of them to enter universities or become academics. Late Mr. E Sabalingam may have recognised and wanted to give importance to all other sporting and organisational activities to give all around experience and knowledge to all the students to excel in the field where one's talents lie and nurture them.

Late Mr. E Sabalingam's time at Jaffna Hindu College from 1971 to 1975 was a golden era not only for education but also for sporting, scouting, cadetting, religious organisational affairs and other college association through which he wanted to give the best of everything to all the students. In 1972, I was part of first ever under 16 Cricket team which was coached by his son Late Mr. S Uthayalingam and supported by the Principal late Mr. E Sabalingam to make a successful team and become runner-up in the Jaffna district. As youngsters we were excited to be given a first ever new 'kookaburra' cricket ball to play matches under his instructions.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

New cricket bats, pads and other equipment were provided to all the college cricket teams. All the football teams were provided with new football boots for the first time in the history of our College. New sporting equipment and training were provided for athletes to train and attain their best and made Jaffna Hindu College Athletic team become Jaffna Schools Sports Association - JSSA champions in 1973, which continued until 1985.



He was instrumental in giving opportunities to many sporting talents to join Jaffna Hindu College in addition to Academic excellence. A.H.M Jaberrulla in 1971 produced records in 100, 200 meters for Under 14, under 15, Under 16 and under 17. Shan Karansingh in 1973 produced records in pole vault in Under 17 and Under 18. M N Asokan in 1973 produced records in 100, and 200 meters in Under 18 and Under 19. All of them were part of College athletic and football teams and proudly won the College Colours.He introduced Hockey and Basketball and both teams become Jaffna first XI Champions in 1975.

I was privileged to be a college prefect from 1973 to 1975 and GCE A/L Union President in 1974 and the support and advice given by the Principal for Inter college debates andAnnual GCE A/L Union Dinner was immense. We all wanted to carry out his vision to make the College to be proud of his achievement in every activity.

I cannot forget the day of late Mr. E Sabalingam's retirement in 1975. He was presented with many garlands at the College and was taken on a procession from the College to his home with Thavil and Nadaswaram surrounded by all the teachers, prefects, scouts and students

During my higher education in 1984, I was proud to invite late Mr. E Sabalingam as a Guest of Honour to the Saraswathy Pooja Festival organized as the President of Dravida Students' Cultural Society of London School of Accountancy (LSA), in whichMiss Kalaichelvi Sabalingam, his daughter made a stunning performance in Bharathanatyam. He was proud to witness his students' organised events and excel in their careers in the UK.

**Arunachalam Thiruketheeswaran.**
Jaffna Hindu College OBA (UK) – President 2007-2008
Tamil Schools Sports Association (UK) – President 2010, 2011-2012
Institute of Tamil Culture – Tamil Centre – Director 2014 todate
Surbiton Sports Club – Chairman 2013 to Date


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*
**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* TEL: 0208 - 810 0835
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - 840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org

உ



**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr. T. Joganathan

**Vice Chairman**
Mrs. S. Kanesarajah

**Secretary**
Mr. S. Ramachandaran

**Joint Secretary**
Mrs.S. Sundaralingam

**Treasurer**
Mr. N. Balasubramaniam

**Asst Treasurer**
Mr. S. Ahthithan

**Elected Comm. Member**
Mr P Kanapathipillai

**Members**
Mr. D. Balasubramanium
Mr. S Kanagasabai

**Legal Advisors**
Mr A Rajakariar
Mr N Krishnarajah

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. S. Abayalingam

**Secretary**
Mr. T. Thevaraajan

Mr. R. Kanesharajah
Mr. S. Premachandra
Dr. V. Paramanathan
Mr. S. Sri Rangan
Dr. A. Thevasagayam

**Our Motto for 2017-2019**
Commitment and Respect



## யாழ் மத்திய கல்லூரி உயர்ந்திட உழைத்த ஆசான்

அதிபர், ஆசான் அமரர் சபாலிங்கம் ஐயா அவர்களது 100வது ஆண்டு விழாவை எண்ணி வாழ்த்து எழுதுவதில் அகம் மகிழ்கின்றேன். 70களில் யாழ் மத்திய கல்லூரி உயர் வகுப்பில் மாணவனாக நான் இருந்த காலத்தில் அதிபராக அவரை சந்திக்கும் பெரும் பேறு பெற்றேன். மாணவனும், அதிபரும் என்பதற்கு மேலாக நட்பும் பாடசாலை வளர்ச்சியில் உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்கு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதில் கண்ணியமும் கட்டுப்பாடும் வீரம் மிக்க ஆளுமையோடு உறவு கொள்ளும் பாக்கியத்தை இன்று எண்ணிப்பார்க்கின்றேன்.

யாழ் மத்திய கல்லூரி நலிந்து வரும் அக்காலத்தில் அதிபராக ஏற்று தன் ஆளுமை திறத்தினால் பாடசாலைக் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் தலைநிமிர்ந்து நின்றமையை காலங்கள் கூறும்.

**"வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உளம் கெடும்"** என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய 1970களில் எங்கள் பாடசாலையை தூக்கி நிமிர்த்திய பெருமை ஐயா சபாலிங்கம் அவர்களையே சாரும். அவர்தம் புதல்வர்களில் ஒருவரான திரு அபயலிங்கம் அவர்கள் எங்கள் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலராக தலைவராக இருந்து ஆற்றும் பணியானது

**"தக்கார் தகவு இலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும்"** என்று உணரக்கூடியதாகவுள்ளது, இன்று எங்கள் ஆலயம் சிறந்து மிளிர்வதற்கு காரணமாக தந்தை வழி தனயன் வழியாக அமைந்தமை உற்று உணர்வதில் சிறப்படைகின்றோம்.

ஆண்டு விழாவையொட்டி அவர்தம் குடும்பத்தினர் குறிப்பாக திரு நவேந்திரன் உள்ளிட்டோர் ஆற்றும் பணியினை பாராட்டி வாழ்த்துவதுடன் அதனையொட்டி வெளிவரும் மலரும் சிறந்து பொலிந்திட அம்பிகையின் பாதம் பணிந்து இறைஞ்சுகின்றோம்.

தா.யோகநாதன்
தலைவர் – நிர்வாகசபை

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்
லண்டன்

29.01.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வழிகாட்டி



எனது ஆரம்பகாலத் தொழில் காரணமாக, பல நாடுகளுக்கும் சென்று பல தரப்பட்ட மனிதர்களுடன் பழகி, பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெற முடிந்ததிற்கு;. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மாணவனாக அதிபர் உயர் திரு இ.சபாலிங்கம் சேர் அவர்களது திறமையான தலைமைத்துவத்தின் கீழ் பெற்ற அனுபவங்கள்;.. வழிகாட்டிகளாக அமைந்தன. அவையே இன்றும் என வாழ்விற்கு வழிகாட்டுகின்றது என்பதனால்;. அவரது அறிவையும், திறமையையும் அன்று வியந்தது போல் இன்றும் வியந்து போற்றுதலே; அவரைப் பற்றி என்னை எழுதத் தூண்டின.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நான் கற்ற காலத்தில் பாட நூல்களிலிருந்து பெறும் அறிவில் இருந்த ஈடுபாட்டை விட, கல்லூரியின் விளையாட்டுத் துறையுடன் தான் எனக்கு ஆர்வமும் ஈடுபாடும் அதிகம் இருந்தது. விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடும் விருப்பும் கொண்ட அதிபர் சபாலிங்கம் சேர், அத்துறையூடாக எமக்கு ஊட்டிய அறிவும், ஆற்றுப்படுத்தலும் மிகப் பெரியது.

"விளையாட்டு உடல் உறுதியினை அளிப்பதுடன், அது சார்ந்த விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் மன உறுதியினைத் தந்து, உள ஒருமைப்பாட்டுக்கு உதவி கற்றலை மேம்படுத்தும்" என்பது அவரது உயர்வான சிந்தனை. அதனை நன்கு செயல்படுத்த தனது காலத்தில் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் தந்து என்போன்ற மாணவர்களை அடையாளம் கண்டு உயர்வித்து மகிழ்ந்தார். அதன் ஒரு கட்டமாக தனது பதவிக்காலத்தில் எமது கல்லூரியில் விளையாட்டுத் துறைக்கான வதிவிடப் பயிற்சியினை (Residential Training) ஒழுங்குசெய்து எம்மை அத்துறையில் ஆர்வம் மேற்கொள்ளவும், உயர்வடையவும் வழிகாட்டினார். இதன் காரணமாக பலகாலமாகக் கல்லூரியின், விளையாட்டுத் துறையில் காணப்பட்ட தடைகளும் பின்னடைவுகளும் உடைத்தெறியப்பட்டு நமது கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது, அதிபர் சபாலிங்கம் சேர் அவர்களின் சாதனையே. அதுமட்டுமல்லாமல் கூடைப் பந்தாட்டம் (Basket Ball), வளைந்த தடியினால் அடிக்கும் ஹொக்கி (Hockey) போன்ற விளையாட்டுக்கள் இவரது காலத்திலேயே கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்போர் எம் அன்னை தரும் அறிவு வீச்சால் பிரகாசம் பெற்று பெருமை பெறுவர். அன்னாரது காலத்தில்தான் என்போன்ற மாணவர்கள் கல்வியாலன்றி, விளையாட்டுத் துறையால் மதிப்புப் பெற்றோம். அந்தப் பெருமையை எமக்குப் பெற்றுத்தந்தவர் எமது மதிப்புக்குரிய சபாலிங்கம் சேர் அவர்களே என்பது மிகைப்படுத்திக் கூறப்படும் கூற்றன்று.

'விளையாட்டாக இருந்தாலும் அங்கு விதிகளுண்டு " எனப் பேறிஞர் டாக்டர் மு. வரதராசனார் குறிப்பிடுவார். எமது அதிபர் விளையாட்டுத் துறையிலும் சரி, கல்வித்துறையிலும் சரி ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் அளித்தார். கல்லூரிக் கட்டுப்பாடுகளிலும் விளையாட்டு விதிமுறைகளிலும் "மீறல்" என்பதை அவர் ஒருபோதும் அனுமதித்ததில்லை. கல்லூரிக்கு வேஷ்டி சால்வையுடன் வருகைதரும் அவர், சால்வையை தனது கதிரையில் போடும் வழக்கமுடையவர். அந்தச் சால்வை கதிரையில் இருந்தால் போதும் பாடசாலை அமைதியுடன் ஒழுங்காக நடைபெறுமென ஆசிரியர்கள் பலர் கூறியதை பலதடவைகள் கேட்டிருக்கின்றேன்.

அதேபோல், கல்லூரி மைதானத்தில் 'விளையாட்டுப் பயிற்சிகள் நடைபெறும் போதெல்லாம் முழுநேரமும் அங்கேயே பிரசன்னமாக இருப்பார். அப்போதுதான் என்போன்ற மாணவர்கள் விளையாட்டை விளையாட்டாக எடுக்காமல் ஒழுங்குடனும் பொறுப்புணர்வுடன் பயிற்சிகள் பெறுவோம் என்பதனை நன்கு உணர்ந்தவர் அவர். இதன்பிறகு பயிற்சிகள் எப்படி இருக்கும் என்பதை நான் கூறித் தெரிய வேண்டியதில்லை. அதிபருடன் எனக்கிருந்த ஈடுபாட்டில், என் மனத்தில் பதிந்திருக்கும் ஒரு சுவையான சம்பவத்தினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலம். ஒருநாள் நானும் எனது அயல் வீட்டு நண்பரும் பாடவேளையில் 'கட்' பண்ணிக்கொண்டு கல்லூரியின் கொன்றல் மரத்துக்கு அருகில் இருக்கும் வாயில் வழியாக வெளியே சென்றோம்.
நாம் வெளியே கால் வைக்கவும் அதிபர் சபாலிங்கம் சேர் அவர்கள், குமாரசாமி மண்டபம் வகுப்புக்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியே வரவும் சரியாக இருந்தது. எங்களிருவருக்கும் உடலெல்லாம் வியர்த்து, சேட்டெல்லாம் நனைந்து உடம்பு வெலவெலன நடுங்கத் தொடங்கியது. அதிபர் வெகு சாதாரணமாக எம்மை நோக்கிவந்து எமது தோள்களில் கையைப் போட்டு,

"எங்கே போகின்றீர்கள்?.... வீட்டுக்கோ?....நான் உங்கள் வீட்டு வழியாகத்தான் மரண வீடொன்றிற்குச் செல்கின்றேன்; வாருங்கோ; எனது காரில் போகலாம்" என்றார்.

எங்களுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. கல்லூரிக் கட்டடங்கள் தலைகீழாகத் தெரிந்தன. வீட்டுக்குப் போனால் தந்தையாரிடம் உதை வாங்க வேண்டும். ஒருவாறு தட்டுத் தடுமாறி நாக்குழறி ' இல்லை சேர்.. பாட ஆசிரியர் வரவில்லை;அதுதான்;;;;;;..என்று ஒருவாறு சொல்லி முடித்தேன். அதிபர் தோளில் போட்ட கைகளை எடுக்காமலேயே "ஆசிரியர் வராவிட்டால் என்ன?... நூலகம் சென்று படிக்கலாம் தானே!" என்று கூறி முதுகில் தட்டி பாடசாலைக்குள் அனுப்பி விட்டார்.

அன்று நூலகத்தை நோக்கி நடந்தது போல் வேகமான நடையை நான் என் வாழ்நாளில் நடந்ததே இல்லை. அத்துடன் அன்று தொடங்கிய வாசிப்புப் பழக்கம் இன்றுவரை தொடர்கிறது;அதன் பயனும் தொடர்கிறது. அன்றைய தினம் அவரது அணுகுமுறை எம்மை உறைய வைத்ததில் வியப்பில்லை.
இவ்வாறாக அதிபர் உயர்திரு இ.சபாலிங்கம் சேர் அவர்களது பன்முக ஆளுமை இன்றும் எனக்கு வழிகாட்டி உயர்விக்கின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக
ஓம் சாந்தி


**துஷ்யந்தன் லிங்கநாதபிள்ளை**
பழைய மாணவன் – யாழ் இந்துக் கல்லூரி

Football 1st XI (JSSA Runners-up)



Seated (L–R) Mr. R. Duraisingam (Ag P. O. G.), Mr. E. Sabalingam (Principal), O. Sivapalan (Kantajan), N. Sobatharan (Vice-Captain), T. Mahalingam (Captain), L. Thushyanathan, N. Somasundram (P. O. G.), Mr. V. Nadarajah (Coach).

Standing (L–R) S. S. Paramasivam, S. Jeyapragasam, R. C. Ramanathan, A. K. Manoharan, S. Karunasingh, R. E. Chitharanjan, K. Narendran, R. Rajendra, N. Ambikai, S. K. Manoharan, S. Gnanakanthan.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையும் ஆற்றலுமிக்க அதிபர் திரு. சபாலிங்கம்



அதிபர் திரு சபாலிங்கம் அவர்களின் நூற்றாண்டு விழா - இவ்வாண்டு கொண்டாடப்படுகின்றது. அதிபர் திரு சபாலிங்கம் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரி அதிபராக 1971-75 வரை பணியாற்றியிருந்தார். இக்கால கட்டத்தில் (1971-76) நான் யாழ் இந்தக் கல்லூரியில் மாணவனாகக் கல்வி பயின்று வந்தேன். என் பார்வையில், அதிபர் சபாலிங்கம் அவர்கள் பற்றி இங்கு அவரின் நூற்றாண்டு விழா மலரில் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

அதிபர் சபாலிங்கம் அவர்கள், எமது யாழ் இந்துக் கல்லூரிக்கு அதிபராக வருமுன் யாழ் மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவர். இவர் மிகவும் கண்டிப்பான அதிபர் என, அக்காலத்தில் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களால் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. இந்நிலையில் இவர் 1971ஆம் ஆண்டு, யாழ் இந்துக் கல்லூரிக்கு அதிபராக வருகையில், நானும் 8ம் வகுப்பில் யாழ் இந்துவில் சேர்ந்தேன்.முதன் முதலாக அதிபர் சபாலிங்கம் அவர்களை நான் கல்லூரியில் காண்கின்றேன். அவரின் வெள்ளைவேட்டி, National, சால்வை அணிந்த கம்பீரமான தோற்றத்தைக் கண்டு என்னையறியாமலே அவர்மேல் ஓர் மரியாதையும் பற்றும் கொண்டேன். எனது சிறுவயதிலேயே காலமாகிவிட்ட என் தந்தையை இவ்வாறான உடையில் பார்த்ததின் பின்னணியில் எழுந்த பற்றினாலும், எமது தமிழ் பண்பாட்டு உடையில் அதிபரின் கம்பீரமான தோற்றத்தைக் கண்டதால் எழுந்த ஆனந்தத்தினாலும், நான் அவர்மேல் பெரு மதிப்புக் கொண்டேன்.

கண்டிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்கும் பெயர்போன அதிபர் சபாலிங்கம் அவர்கள், தனது கண்டிப்பைஇ கட்டுப்பாட்டை, யாழ் இந்துவிலும் செயற்படுத்தி, பாடசாலையின் ஒழுங்கமைப்பைப் பாதுகாப்பதில் வெற்றி கண்டார். மாணவர்களின் ஒழுக்கம், பாடசாலைக்கு தவறாது நேரத்திற்கு வரல், ஆசிரியர்களின் கற்பித்தல், அவர்களின் நேர ஒழுங்கு போன்றவற்றில் ஓர் ஒழுங்கமைப்பை உருவாக்கினார். பாடசாலையைச் சூழவுள்ள சில சண்டியர்களின் அட்டகாசங்களையும், அவர் பதவி ஏற்ற முதல் வருடத்திலேயே ஒடுக்கி, பாடசாலையின் நடவடிக்கைகள் எவ்வித தடங்கலுமின்றி சீராக நடந்திட வழிசமைத்தார்.

விளையாட்டுக்கள், சாரணர் இயக்கம், மாணவர் குழுக்கள் (A/L Union) போன்ற பகுதிகளையும் கவனித்து, இதில் தேவையான வசதிகளை உருவாக்கி, மாணவர்களுக்குத் தனியே பாடப்புத்தக அறிவினை மட்டும் போதித்திடாமல், பல்துறை அறிவுகளையும் பெற்றிட ஊக்குவித்து வழி நடத்தினார். இவர் பதவியேற்ற 1971ஆம் ஆண்டில், யாழ் இந்து மாணவர்களின் "கவரிவீசிய காவலன்' என்னும் நாடகம், அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றது. (நானும் இந்நாடகத்தில் ஓர் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தேன்). இச்சமயம், அதிபர் சபாலிங்கம் அவர்கள், நாடகப் பொறுப்பாசிரியர் திரு. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களுக்கும், எங்களுக்கும் பலவிதத்திலும் ஒத்தாசையாக இருந்தார். மேலும் 1974-76 காலப்பகுதியில், நான் .A/L Union தலைவராகப் பொறுப்பேற்று நிகழ்வுகளை நடத்துகையில், எமது நிகழ்வுகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு எம்மை உற்சாகப்படுத்துவார்.இவர் மாணவர்களுடன் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்தாலும், மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று மதித்து நடப்பவர். தியாகி சிவகுமாரனின் வித்துடலிற்கு வீரவணக்கம் செலுத்தி மரியாதை தெரிவிக்க, A/L மாணவர்களாகிய நாம் விரும்பியபோது, அதை ஏற்று எமக்கு அனுமதியளித்தமையை, இங்கு நான் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சபாலிங்கம் அவர்கள் யாழ் இந்து அதிபராக இருந்த காலம் யாழ். இந்துவின் பொற்காலமாகும். படிப்பு, விளையாட்டு, நாடகம், இசை, பண்பாடு என அனைத்துத் துறைகளிலும். யாழ். இந்து மாணவர்கள் வெற்றிகள் பல கண்ட காலமிது. இவர் காலத்தில் யாழ். இந்துவின் மாணவர்களாக இருந்த மாணவர்கள் இவரின் கண்டிப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு, ஆதரவு போன்ற பல்வேறு குணாதிசயங்களின் ஆளுமையால் முறையாக வழிநடத்தப்பட்டு, சிறந்த மாணவச் செல்வங்களாக உருவாக்கப் பட்டு, எமது சமுதாயத்திற்குப் பயன்படும் கல்விமான்களாக, கலைஞர்களாக, விளையாட்டு வீரர்களாக, விடுதலை உணர்வுமிக்க போராளிகளாக, ஆன்மீகவாதிகளாக, சமூக சேவகர்களாக, இன்று உலகின் பல பாகங்க-ளிலும் கடமையாற்றி வருகின்றார்கள். மாணவர், ஆசிரியர், பெற்றோர் என அனைத்துப் பகுதியினரையும் தன் நிர்வாகத் திறமை, கண்டிப்பு, ஒழுக்கம் என்பவற்றால் ஈர்த்து, ஈழத்தமிழ் நாட்டின் தலைசிறந்த அதிபர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் எமது அதிபர் சபாலிங்கம் அவர்கள் ஆகும்.

இவர் ஓய்வு பெற்றுச் சென்று எட்டு வருடங்களின் பின்னர் இவரை ஓர்நாள் இவரின் வீட்டில் சந்தித்தேன். நான் கொழும்பில் வேலை பார்த்து வந்த நிலையில், 1983 கலவரத்தில் கப்பலில் யாழ் வந்து ஒரு மாதம் வரை நின்றேன். அப்போது நானும், இவ்வாறே கலவரத்தில் அகப்பட்டு யாழ் வந்து நின்ற எனது மாமாவின் மகன் விக்னேஸ்வரனும், 1983 ஆகஸ்டு மாத இறுதியில், அதிபர் சபாலிங்கம் அவர்களை, அவரின் வீட்டிற்குச் சென்று சந்தித்தோம். நாம் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக புது ஆடைகள், வாங்கிச் சேகரித்து, அவரிடம் கொடுக்கச் சென்றிருந்தோம். அவர் அச்சமயம் இவ்வாறு ஆடைகளை கொடுத்து உதவி செய்யும் ஓர்தாபனத்தில் ஓர் பொறுப்பில் இருந்தார். அன்று அவர் எம்முடன் மிகவும் நட்புடன் கதைத்து, எம்மை உபசரித்தனுப்பினார்.

அதிபர் சபாலிங்கம் அவர்கள் கண்டிப்புமிக்கவர். அதேசமயம் கருணை உள்ளம் கொண்டவர். மிகச்சிறந்த ஆளுமை மிக்க அதிபர். இவர் அதிபராக இருந்த காலத்தில், நான் யாழ் இந்துவில் கல்வி கற்றதை பெருமை-யாகக் கருதுகின்றேன். அவரின் நூற்றாண்டு விழா மலரில், அவரின் நினைவாகச் சில கருத்துக்களைக் கூற முடிந்தமையையிட்டு மகிழ்வடைகின்றேன். அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

வேந்தனார் இளஞ்சேய்
(யாழ் இந்து மாணவன் 1971 - 76)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபான் என்ற அந்த ஆளுமை ...



அதிபர் சபாலிங்கம் அவர்களுக்கும் எனக்குமான முதல் சந்திப்பு சற்று வித்தியாசமானது, சுவாரஸ்யமானது, ஒரு சினிமா பட காட்சியை ஒத்தது. அது நடந்தது நான் யாழ் இந்துவில் சேர்ந்த சிறிது காலத்தில். இரண்டு மூன்று மாதங்கள்தான் இருக்கும். அன்று எமது மைதானத்தில் யாழ் இந்துவிற்கும் மத்திய கல்லூரிக்குமிடையிலான வருடாந்த துடுப்பாட்ட போட்டியின் இரண்டாம் நாள். வழமையாகவே பரபரப்பாக நிகழும் அப்போட்டி, அன்று சற்று பதற்றத்துடன் இடம்பெற்று கொண்டு இருந்தது. இறுதியில் பார்வையாளர்கள் பலர் மைதானத்துக்குள் இறங்கி கலவரம் விளைவிற்கும் அளவிற்கு போய்விட்டது. ஏது நடக்கப்போகின்றது, என்ன செய்வது என எம்மில் பலர் வெளியில் திகிலுடன் நின்று கொண்டு இருக்குபோதுதான், அந்த வெள்ளைக் கார் மைதான வாசலில் வந்து நின்றது. வெள்ளை வேட்டி, சட்டையுடன் எடுப்பான தோற்றத்துடன் அந்த மனிதர் அதில் இருந்து இறங்க, 'அதோ சபானடா' என்று கூச்சல் போட்டுக் கொண்டு எல்லோரும் சிதறி ஓடினார்கள். அவர் வேட்டியையும் மடித்துக் கொண்டு மைதானத்திற்குள் மிடுக்குடன் நடந்து சென்ற சில நிமிடங்களுள் மைதானத்திற்குள் எவரும் இல்லை. கண் இமைக்கும் நேரத்திற்குள் எல்லோரும் ஓடி மறைந்து விட்டார்கள்.

ஆம்! இது நடக்கும் போது அவர் யாழ் இந்துவின் அதிபர் இல்லை, யாழ் மத்திய கல்லூரியின் அதிபர். எனவே அன்றைய நிகழ்வு, அவரின் ஆளுமைமிக்க அச்செயல், மாணவர்களாகிய எமது சிற்றறிவுக்கு ஒரு விருப்பிற்குரிய செயலாகப் படவில்லை. மாறாக, மாற்றான் எமது இடத்திலேயே தனது பலத்தைக் காட்டி எம்மை தோற்கடித்த ஒருவன்மேல் வரும், ஒரு குரோத உணர்வே எமக்கு ஏற்பட்டது. எனவேதான், இது நடந்து இரண்டு மாதங்களில் அவர் யாழ் இந்துவிற்கு அதிபராக வர, மாணவர்கள் ஒருவரும் அவரை விரும்பி வரவேற்கும் மனோநிலையில் இல்லை. தமது நிலைப்பாட்டை வெளிப்படையாக காட்ட முடியாவிட்டாலும், மாணவர்கள் எல்லோரையும் பொறுத்த வரை, அது ஒரு துக்க தினம் போலவே கடைப்பிடிக்கப் பட்டது. சகஜ நிலைக்கு வர இரண்டு மூன்று கிழமைகள் எடுத்து இருக்கும்.

அவர் யாழ் இந்துவை எப்படி நடத்திச் சென்றார், மாணவர்களுக்கும் அவருக்குமான உறவு எப்படி இருந்தது என்று நான் இங்கு சொல்லத் தேவையில்லை. அன்பாலும், அரவணைப்பாலும், தனது ஆளுமையாலும் எம்மை ஆட்கொண்டார் என்றால் அது மிகையாகாது. இந்துக்கல்லூரி பல அதிபர்களை சந்தித்து இருக்கிறது. கல்வியைப் பொறுத்தவரை, அவரவர் தங்கள் திறமைக்கு ஏற்ப தமது பங்களிப்பைச் செய்து,யாழ் இந்துவின் கல்வி நிலையை ஒரு உயர் தரத்தில் இருக்க உதவியிருக்கின்றார்கள். கல்வியில் சிறிது பாதிப்பும் ஏற்படாத வகையில் சகல துறைகளிலும், குறிப்பாக விளையாட்டுத்துறையில் யாழ் இந்துவை முதல் நிலைக்கு கொண்டு வந்ததன் மூலமே திரு சபாலிங்கம் அவர்கள் மற்றய அதிபர்களிடம் இருந்து வித்தியாசப்படுகின்றார்.

அவரது காலத்தில் யாழ் இந்துக்கல்லூரியின் சாதனைகளை பட்டியல் இடடால், அது நீண்டுகொண்டே போகும். இவரினால் ஆரம்பிக்கப்படட விளையாட்டுத்துறைகளை விரல்விட்டு எண்ணலாம். வளைகோல் பந்தாடடம் (Hockey), கூடைப்பந்தாட்டம் (Basket Ball) என்பன இவற்றில் சிலவாகும். எனது அறிவுக்கெட்டியவரை Police cadet இவர் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமல்லாது, கல்வியில் படிப்பு, பரீட்சை, பெறுபேறு என புத்தகபடிப்பாக மட்டுமில்லாமல், நீண்ட இடைவேளைக்கு பின்பு, மிகப் பெரிய விஞ்ஞானக் கண்காட்சியை யாழ் இந்துவில் நடாத்தியதன் மூலம், அதை ஒரு செயல் முறைக் கல்வியாக்கிய பெருமைக்குரியவருமாவார்.

தனது திறமையாலும், ஆளுமையாலும் கடும் உழைப்பினாலும் ஒரு கல்லூரியை எல்லாத்துறைக-ளிலும் உயர்வடையச் செய்வதால் ஒருவர் சிறந்த அதிபராகமுடியும். அவரே, மிகச்சிறந்த அதிபராக வேண்டுமானால், மாணவர்களின் மனதை வென்றாக வேண்டும். அந்தவகையில் திரு சபாலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த அதிபாராக இங்கே மிளிர்கிறார். ஆம், அதை நான் அவர் ஓய்வுபெற்ற நாள் அன்று கண்டேன். மேளதாளத்துடன் ஊர்வலமாக வீடு வரை அவரை வழியனுப்பி வைக்கும்போது அதில் சென்ற மாணவர்கள் அனைவரிடமும் ஒரே மனநிலை. அவர், யாழ் இந்துவை நான்கு வருடங்கள் மட்டுமே வழிநடத்திய போதிலும், நாற்பது வருடங்கள் பழகிய ஒருவரைப் பிரியும் துயரம், மனதில் ஒரு வெறுமை, கண்களில் கண்ணீர்த்துளி.

நான் யாழ் இந்துவில் படித்த காலத்தினுள் அதிபர் சபாலிங்கம் அவர்களின் பதவிக்காலம் முழுமை-மயாக அடங்கியது குறித்து எனக்கும் ஒரு பெருமை.

யாழ் இந்து இருக்கும் வரை அதிபர் சபாலிங்கம் அவர்களின் பெயர் நிலைத்திருக்கும் என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை.

**க.குருபரன், B. Sc. (Eng.)** - யாழ் இந்து பழைய மாணவன்
1971-1977
Canada


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யாழ். இந்துக் கல்லூரி இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் ஒன்றாகும். இக்கல்லூரியில் பணியாற்றிய பல தலைசிறந்த அதிபர்களில் அமரர் E. சபாலிங்கம் அவர்களும் ஒருவராவர். அன்னாரது நூறாவது அகவை நிறைவு விழாவின்போது வெளிவர இருக்கின்ற மலரிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி எய்துகின்றேன்.

நான் கல்வி கற்ற உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ் மத்திய கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் யாழ். இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமை புரிந்தமையை அறிவேன்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான கல்லூரிகளினிடையே உதை பந்தாட்டம் போட்டிகளின்போது அதிபர் அவர்கள் மத்தியஸ்தம் வகிப்பவர்களில் ஒரு தலைசிறந்த முதன்மையான கண்ணியமான மத்தியஸ்தராக ஏல்லோரினாலும் மதிக்கப்பட்டார்.

மாணவர் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றிலும் சிரத்தை கொண்டவராக விளங்கியதன் காரணமாக மாணவர்களிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும், பெற்றோர்களிடத்திலும் நன்மதிப்புப் பெற்ற அதிபராக விளங்கினார்.

ஆசிரியப் பணி ஒரு சமூகப்பணி யாதலினால் இவருடைய புதல்வர்கள் அனைவரும் சமய, சமூகப் பணிகளில் ஈடுபாடுடையவர்கள். மருத்துவர் ஜோதிலிங்கம் அவர்கள் Standing Committee of Tamil Speaking Peoples (SCOT) என்னும் அறக்கட்டளையுடன் நீண்ட காலமாகத் தொடர்புடையவர். இவர் தந்தையாருடைய ஞாபகார்த்தமாக யாழ். இந்துக் கல்லூரியில் ஒரு கலையரங்கத்தை நிறுவித் திறந்து வைக்கப்பட்டபோது நானும் அவ்விழாவில் கலந்து கொண்டேன்.

அதிபருடைய புதல்வர்களில் ஒருவரான அமரர் உதயலிங்கம் 1970களில் இந்நாட்டிற்குக் கல்வி கற்க வந்தவர்களில் ஒருவர். அவர் அக்காலத்தில் இங்கு பல மாணவர்கள் வருவதற்குப் பலவகையிலும் உதவியதை நான் அறிவேன்.

மற்றுமொரு புதல்வர் திரு. அபயலிங்கம் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய ஆரம்பகால அறங்காவலர்களில் ஒருவர். இவரும் தந்தையாரைப் போல் சைவசமய வளர்ச்சியில் பெரிதும் நாட்டம் கொண்டவர்.

அதிபர் அவர்களுடைய இரு புதல்விகள் எனது ஊரான இணுவிலில் திரு ஆனந்த பாஸ்கரன் அவர்களையும், திரு நவேந்திரன் அவர்களையும் மணம் புரிந்து இல்லறம் நடாத்தி வருகின்றனர்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் அதிபர் அவர்களும், அவரது நண்பர் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அமரர் C.K. கந்தசாமி அவர்களும் நல்லூர்க் கந்தன் மகோற்சவ காலங்களில் அங்கப் பிரதட்சணம் செய்வார்கள். அவர்களுக்கு முன்னுக்குப் பின்னாக நானும் அங்கப் பிரதட்சணம் செய்யக் கிடைத்தமை ஒரு பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்கள் பலர், உலகின் பல பாகங்களிலும் உயர்ந்த பதவிகளில் உள்ளார்கள். இவர்கள் அனைவரும் அதிபருடைய இவ்நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதை நிச்சயமாகப் பெருமிதம் அடைவார்கள் என்பதால் சந்தேகத்திற்கு இடமில்லை.

இந்நேரத்தில் இவ்விழாவினை ஒழுங்கு செய்பவர்களுக்கும், அவரது குடும்பத்தவர்களுக்கும் வாழ்த்துக் கூறுவதில் மனம் பூரிப்படைகின்றேன்.

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று — **வள்ளுவர்**

**நடராசா சச்சிதானந்தன்** - உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவன்
நிறுவுனர் – இலண்டன் சிவன் கோயில்

27.01.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"Discipline is the bridge between goals and accomplishment " Jim Rohn.**



கோண்டாவிலில் இருந்து யாழ் இந்துவிற்கு பொற்பதி வீதியில் சரியான பழைய சயிக்கில் டபிள்பெடல் போட பறக்குது. நான் சயிக்கில் பாரில் இருக்க சயிக்கிளை உழக்குவது எனது தம்பி. இருவர் புத்தகங்களையும் நான் ஹான்டிலில் அமத்தி கைகளால் பிடித்துகொண்டு காலால் டபுள் பரல் போட்டுகொண்டிருக்கின்றேன். கொக்குவில் தொழில் நுட்ப கல்லூரி ஏற்றத்தில் எதிர் காத்துக்கு சயிக்கில் ஏற பஞ்சிப்படுகின்றது. நேரம் எட்டரையை தாண்டுகின்றது. " நேற்று வந்த புது அதிபர் லேட்டாக போனால் என்ன செய்வாரோ தெரியாது இறுக்கி உழக்கு" என்று தம்பியிடம் சொல்லுகின்றேன் .

நேற்றுத்தான் யாழ் மத்திய கல்லூரியில் இருந்து மாற்றலாகி யாழ் இந்து கல்லூரிக்கு புது அதிபர் சபாலிங்கம் அவர்கள் வந்தார் .வந்தவருக்கு மாணவர்கள் சுற்றி நிற்க ஆசிரியர்கள் மாலை போட்டு வரவேற்றார்கள் .

உண்மையோ வதந்தியோ தெரியாது அப்போது ஒரு மாணவன் ஏதோ சொல்ல புது அதிபர் கன்னத்தில் அறைந்துவிட்டார் என்று செய்தி பாடசாலை முழுவதும் பரவிவிட்டது. ஏற்கனவே யாழ் இந்துவில் இருந்து பிரியாவிடை பெற்று செல்லும் அதிபர் மாணவர்களுக்கு அடித்தார் என்ற விசயமே நாங்கள் கேள்விப்பட்டதில்லை. நாங்கள் பலர் உள்ள வம்புகள் எல்லாம் அழந்து அடிக்கடி லேட்டாகத்தான் பாடசாலை செல்வோம். பாடசாலை வாசலில் நிற்கும் மாணவ முதல்வர்களும் பெரிய பெடியங்கள் லேட்டாக வந்தால் அவ்வளவு கண்டுகொள்வதில்லை.

கலட்டி பள்ளத்தில் சயிக்கிள் வேகம் எடுத்து நரிகுண்டு குளத்தடியில் குறுக்கு பாதை எடுத்து பாடசாலைகுள் சயிக்கிளை திருப்ப கேற்றில் புது அதிபர் சபாலிங்கம் கையில் பிரம்புடன் நிற்கின்றார். எங்களுக்கு முன்பு வந்த பத்து பதினைந்து பேர்கள் கேட்டுக்கு அருகிலேயே முழுசிக்கொண்டு நிற்கின்றார்கள் நாங்கள் சயிக்கிளால் இறங்க
முதல் கேள்வி "எங்கு இருந்து வருகின்றீர்கள்?" அடுத்த கேள்வி "ஏன் லேட் ?"
"கோண்டாவிலில் இருந்து வாறம் ,காலமை தோட்டத்திற்கு போட்டுவர பிந்தி போச்சு"
என்கின்றேன் .

"காலைப் பார்த்தால் தோட்டத்திற்கு போன மாதிரி தெரியவில்லை" என்றவர் "உந்த சேர்ட் யார் வாங்கி தந்தது" என்றார் "அம்மா" என்றபடியே போட்டிருந்த செர்டுகளை பார்த்தேன் .எனது சேர்ட் பிரவுண் பற்றிக் மாதிரி துணியிலும் தம்பியின் சேர்ட் பல கலரில் மின்னுது.
"பெரிய மாணவர்கள் நீங்களே பிந்தி வருவதும், இப்படியான உடைகளும் உடுத்து வந்தால் உங்களை சிறியவர்களும் பின் பற்ற தொடங்கிவிடுவார்கள்" என்றவர் "
என்ன நிறத்திலும் செர்டை போடுங்கள் ஆனால் பிளெயின் ஆக இருக்கவேண்டும். இனிமேல் பிந்தி வந்தால் பாடசாலை முடிய அரை மணித்தியாலம் நின்று விட்டுதான் செல்லவேண்டும்" என்று விட்டு எல்லோரையும் அனுப்பிவிட்டார். இதுதான் புது அதிபருடனான முதல் அனுபவம்.

யாழ் இந்துவில் அதிபர்கள் தான் A/L மாணவர்களுக்கு ஆங்கில பாடம் எடுப்பது இருக்கும் ஒரு வழமை, அதே போல எனது வகுப்பிற்கு ஆங்கில ஆசிரியராக அந்த வருடமே சபாலிங்கம் அவர்கள் வந்தார்கள். இடைக்கிடை தான் வகுப்பு எடுக்க வருவார் மிகவும் நகைச்சுவையாக அந்த வகுப்பு இருக்கும் .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் பிடிக்காத ஆசிரியர்களின் பட்டப்பெயர்களை கரும்பலகையில் அழிக்க முடியாத அளவிற்கு ஆணியால் எழுதிவிடுவார்கள். அப்படி ஒரு பிள்ளையில்லாத ஆசிரியரை ------ என்று எழுதிவிட்டார்கள் .ஒரு நாள் காலை வகுப்பு எடுக்க வந்தவர் சிரித்துகொண்டே சொன்னார்.
"இனி இதை அழித்துவிடுங்கள் " என்று, எங்களுக்கு முதலில் விளங்கவில்லை, பின்னர் தான் அறிந்தோம் அந்த ஆசிரியரின் மனைவி கர்ப்பமாகி இருக்கும் விடயம்.

அதே நேரம் மாணவர்களின் ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலும் மிகவும் கறாராக இருப்பார் அதே போலத்தான் பிரம்பால் தண்டனைகளும் இருக்கும் யாழ் இந்து அகில இலங்கையிலேயே படிப்பிலும் விளையாட்டிலும் முன்னணியில் இருந்த காலம் என்றால் சபாலிங்கம் அவர்கள் அதிபராக இருந்த காலமும் நிட்சயம் வரலாற்றில் இருக்கும்.

**பரதன் நவரத்தினம்**
யாழ் இந்து பழைய மாணவன் (1970-1976)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிபரவு மாவண்பாளர்



யாழ்ப்பாணத்துக் கல்விச் சமூகம் அல்லது ஆசிரிய சமூகம் என்பதே பொதுவாக, இலங்கையில் தமிழ் இனத்தின் தலைவிதியாய் அமைகிறதென்று சொல்லலாம். 'ஆசிரியப் பெருந்தகைகள்' என்று, இவர்கள் வழிச்சிறந்த விழுமியங்களே பெரிதும் நமதாகின்றன.

இருநூறு ஆண்டுகளைக் கடந்துவிட்ட பாரம்பரியம் இது. இதன் தோற்றுவாய் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்ததா-கிறது. ஆங்கில மொழியும் கத்தோலிக்க மதமும் சார்ந்ததாய், வெஸ்லியன், அங்கிலிக்கன், மெதடிஸ்ற் புரட்டஸ்தாந்து திருச்சபைகளால் இலங்கையில் இக் கல்விப் பணி தொடங்கப்பட்டபோது, அமெரிக்க மிஷன் நிறுவனங்கள், ஆசியாவிலேயே முதன்முதலாக தமது கல்விப் பரிசோதனையை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டன. பெண்களுக்காக, விடுதியுடனான உடுவில் மகளிர் கல்லூரி இவ்விதமாக அமைந்தது. அயர்லாந்தின் கத்தோலிக்க திருச்சபைகளும் இதில் இணைந்தன.

இத் திருச்சபைகளின் மேலாதிக்கத்திலிருந்து சைவ, தமிழ் மரபுகளைப் பேணி அமையும் சுதேச கல்வி நிறுவனங்கள் ஆறுமுக நாவலர் காலத்தில் எழுந்தன. அத்துடன், 'யாழ்ப்பாணத்தில் தடுக்கி வீழ்ந்தால் ஒரு தமிழ்ப் பண்டிதர்மீதுதான் விழநேரும்' என்று, 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்ட பண்டித மரபும் உருவானது.

இந்த வரலாற்று பின்புலம் யாழ்ப்பாணத்தில் தோற்றுவித்த கல்வி மேம்பாடு, பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அரசு பதவிகளில் ஆதிக்கம் செலுத்தியது. அது மாத்திரமன்றி, பிரிட்டிஷ் ஆட்சி நிலவிய மலேசியா, சிங்கப்பூரிலும் வியாபகம்பெற்றது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மலேசியா, சிங்கப்பூரின் கல்வி, சிவில்சேவை, புகையிரத, பெருந்தோட்ட பிரிவுகளின் நிர்வாகத்தை யாழ்ப்பாணத்து நியமனங்கள் நிறைத்தன. இதன் விளைவு, இந் நாடுகளின் முதல் துறைசார் நிபுணர்களும் இந்த வம்சத்தவராகின்றனர். உலகில் முதலாவது ஆசிய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். எஸ்.திருச்செல்வம் இத்தகையவர்.

ஆக, பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம்பெற்று, தமிழர்கள் சொல்கின்ற 'அறுபது ஆண்டுகள்' என்ற காலச் சக்கரம் ஒரு சுற்று சுற்றிவிட்டபின்னரும், சுதந்திர இலங்கையில் தமிழர்கள் தங்கள் 'தலைவிதி'பற்றிய சிந்தையராகவே வாழ்கின்றனர். இந்த சிந்தை, பிரிட்டிஷ் காலத்தில் சர்வசன வாக்குரிமைபெற்ற முதல்நாடாக, டொனமூர் அரசமைப்பின்கீழ் இலங்கையின் முதல் சட்ட சபைக்கான தேர்தல் 1931இல் நடைபெற்றபோது எழுந்தது. முழு இலங்கையிலும், முதல் மாணவர் இயக்கமாக 1924இல் தோற்றிய யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ், பின்னர் 1926இல் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசாகியது. மகாத்மா காந்-தியின் ஆகர்சிப்பில், முழு இலங்கைக்கும் சாதி, மத, இன பேதமற்ற, பூரண சுயராஜ்யத்தைக் கோரிய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், டொனமூர் அரசமைப்பு அதனை வழங்கவில்லை என்று தெரிவித்து, அத்தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரியிருந்தது. நாட்டில் தேசிய ஒற்றுமையையும் சுய உரிமையையும் அது ஆணித்தரமாக வலியுறுத்தியது. ஆனால், இலங்கைக்கு சமஷ்டி அரசியலமைப்புபற்றி, அப்போது எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசினார். காலச் சக்கரத்தில் தலைகீழாய்ப்போன வரலாறு இது. கல்வியும், அரசு உத்தியோகங்களும் இன விகிதாசாரத்திலும் குறைவாக ஆகின. மொழிப் பிரச்னை உருவானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இளைஞர் காங்கிரசின் சிற்பியாய்த் திகழ்ந்தவர் யாழ்ப்பாணத்து கல்விமரபில் ஒளிர்விடும் கல்விமான் ஹன்டி பேரின்பநாயகம். கொக்குவில் இந்து கல்லூரியில் இவர் அதிபராகவிருந்தார். இவருடைய சகா-க்களாக விளங்கியவர்கள் யாழ்ப்பாணத்து கல்லூரிகள், பாடசாலைகளில் அதிபர்களாகவும் ஆசிரியர்களா-கவும் திகழ்ந்தார்கள். ஒறேற்றர் சி. சுப்பிரமணியம், ஏ. ஈ. தம்பர், என். சபாரத்தினம் போன்றவர்கள் இவர்கள்.


மிஷனரி பாடசாலைகளுக்கு இணையான ஆங்கிலமொழி கல்விக்காக ஆரம்பிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் நிர்வகிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதிகளில், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டது கொக்குவில் இந்துக் கல்லூரி. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பிரிட்டிஷ் மெதடிஸ்ற் மிஷனரிகளால் நிர்வகிக்கப்பட்டது.

ஆக, யாழ்ப்பாணத்து கல்விப் பாரம்பரியத்தின் முன்னோடிகளாக விளங்கி, அப் பாரம்பரிய பேணலோடு சிறக்கும் கல்லூரிகள் இவை. யாழ்ப்பாணத்தின் மேன்மைமிக்க ஆசிரிய மரபின் அடிச்சுவட்டிலும் சிறப்பவை. அதிபர் இ. சபாலிங்கம், இப் பாரம்பரிய மரபில் இம் மூன்று பெருமைமிக்க கல்வி நிறுவனங்க-ளிலும் தன் அடையாளத்தைப் பதித்த பெருமைமிக்க சிறப்புக்கொண்டவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உப அதிபராகவும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் அதிபராகவும் பணியாற்றினார். இக் கல்லூரிகளின் வரலாற்றில், தன் பணியில் அவ் வரலாற்றுக்கு அணிசேர்த்து, அக்கல்லூரிகளின் அந்த வரலாற்றில் தனக்கும் அணிசேர்ப்பவர்.

தேசிய இனமாக, தங்களின் அரசியல் ரீதியான உரிமைகளுக்கான பல்வேறு முயற்சிகள் இன்னமும் பயனைக் கண்டுவிடாத நிலையில், உலகின் பல பாகங்களில் 'புலம்பெயர்ந்து வாழும் தமிழர்' என்ற ஓர் அடையாளத்தையும் பெற்று வாழ்ந்தாலும், இலங்கைத் தமிழர், தங்கள் உன்னதமான கல்வி அடையாள-த்துடனுமே எங்கெங்கும் வாழ்கின்றனர். உலகம்பரவிய அந்த பேரடையாள வெளிப்பாட்டுடன், அதிபர் சபாலிங்கத்தின் நூற்றாண்டு பரிமாணம்கொள்கிறது.

- மாலி
ஆசிரியர் - 'நாழிகை'
லண்டன்
15.01.2019

**கலைச்செல்வி சபாலிங்கம்**
**பரதநாட்டிய அரங்கேற்றம்**
**May 1975**



நாட்டிய விமர்சனம் மாலி – ஈழநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TNA Tamil National Alliance

# TAMIL NATIONAL ALLIANCE (UK)

5 Cawdor crescent, London, W7 2DB, United Kingdom

**R. D. RATNASINGHAM.** Solicitor
*President*

09.02.2019
Date:



It gives great pleasure to learn that Dr. Jothilingam has built an auditorium in their Alma Mater in memory of his father, Late Mr. Sabalingam. It manifests whatever the height you rise in your life or wherever you migrate to live, you do not forget your roots and continue to care for the wellbeing of the people in our motherland.

It has been a Golden Era for the students of Jaffna District when Mr. Sabalingam and his colleagues like late Mr. Jeyaratnam of Mahajana College, late Mr. I.P Thurairatnam of Union College, Late Mr. Orator Subramaniam of Skandavarodaya College and late Mr. Pooranampillai of my Alma Mater Hartley College etc. were the principals of their respective schools.

Those Legends knew that swallowing the knowledge and vomiting the same in the exams is not education. **EDUCATION IS CHARACTER BUILDING** which makes every student not only knowledgeable but also a wise person who can utilise the knowledge intelligently to deal with any situation or crisis and be a good citizen. They considered sportsmanship is an integral part of character building and encouraged every student to participate in sports while they pursue their studies.

My first opportunity to meet late Mr. Sabalingam was in 1960's when he came to Hartley College to referee a football match between Hartly and St Patricks. Everyone murmured that the referee is the principal of Jaffna Central College. It was really a surprise for us as it is unusual for a principal of a famous school to referee a football match. Why I narrate this is to express the fact of how much of importance he had given for sports in addition to studies.

The shining example for students at that time was Dr. Jotilingam who excelled both in studies and sports while he played extremely well in cricket and football. Students were able to balance between studies and sports and came out with colours in both fields

That tradition has passed on to the children and grandchildren of Mr. Sabalingam. Now the grand children have been very much involved in cricket, football and rugby while they pursued their studies and have become doctors, engineers and bankers.

We the professionals, entrepreneurs and politicians in the diaspora of various countries do owe a great deal to those legends for what we are today. They were the ladders for all our success in life and we should always pay our tribute to them.

R.D. Ratnasingham.
Former President of Tamil Lawyers Association, U.K
Former Chairman of Shri Kanaga Thurkai Amman Temple, Ealing, U.K.
Former Secretary of Hartley College Main P.P.A

E-mail: krishratna@btconnect.com Tel: +44(0)208 810 1646, +44(0)208 574 6303, +44(0)7872 500 744



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி



கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபரிடமிருந்தான

# வாழ்த்துச்செய்தி

அமரர் திரு.இ.சபாலிங்கம் அவர்களின் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துரைப்பதில் கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபர் என்ற வகையில் பெருமகிழ்வும், நிறைவும் அடைகின்றேன். எமது கல்லூரியின் நூற்றாண்டிற்கு மேலான கல்விப்பயணத்திலே கல்லூரியின் வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் தனது ஆளுமைப் பலத்தால் உரமூட்டிய வகையில் அமரர் அவர்களை இன்று எமது கல்லூரிச் சமூகம் நன்றியறிதலுடன் நினைவு கொள்கின்றது. ஆசானாகக் கடமையேற்றும் பேராசானாக நூற்றாண்டுகள் கடந்தும் மூன்று கல்லூரிகளில் எமது கல்லூரியில் உப அதிபர்களுள் ஒருவராகவும், விளையாட்டுத்துறையின் பொறுப்பாளராகவும் விளங்கித் தனது திறத்தினாலும், தலைமைத்துவப்பாங்கினாலும் எமது கல்லூரியின் மைந்தர்களின் ஆளுமைப்புல விருத்தியில் பல்பரிமாணத்திலே பிரகாசிக்கச் செய்தவர். குறிப்பாகத் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியாகிய விளையாட்டுத்துறையினை எமது கல்லூரியின் சிறப்பார்ந்த துறையாக உருவாக்குவதற்காகத் தனது காலப்பகுதியில் அத்தனை வளங்களையும் ஒன்றிணைத்து உரிய பயிற்சிகளினூடாக மாணவர்களது திறன்களை வெளிக்கொண்டு வந்து சாதனைகளைப்பதிவு செய்வதற்குக்களம் அமைத்துக் கொடுத்ததுடன் மட்டுமல்லாது சிறந்த ஓர் நிர்வாகியாக அனுபவப்பட்டுப், பக்குவப்பட்டதன் காரணமாகத்தான் யா/மத்திய கல்லூரி, யா/இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகளின் அதிபராகத் தனது காலத்தினைப் புகழ் பூத்த வரலாற்றுக் காலமாகப் பதிவு செய்தவர்.

தான் எமது கல்லூரியில் வகுத்துக்கொண்ட உபஅதிபர் பதவியினாலும், விளையாட்டுத்துறையின் பொறுப்பாசிரியர் என்கின்ற பதவியினாலும் மிகச் சிறப்பார்ந்த ஆளுமையினை வெளிக்காட்டிக் கல்லூரியினதும், கல்லூரி மைந்தர்களதும் பெருமைக்கும், புகழுக்கும் வித்திட்டமைக்கான வெகுமதியாகவே அவரை இன்று நூற்றாண்டுகள் கடந்து நிற்கின்ற இரண்டு புகழ் பூத்த கல்லூரிகள் தமது புகழ்பூத்த அதிபர்களின் வரிசையிலே திருவாளர்.இ.சபாலிங்கம் அதிபர் அவர்களையும் கொலுவேற்றி நன்றி செலுத்துகின்றனர். நான் நினைக்கின்றேன் அதிபர்கள் எவருக்கும் வாய்க்கப் பெறாத ஒரு பேறு எமது சபாலிங்கம் அதிபர் அவர்களுக்கு வாய்க்கப் பெற்றுள்ளது எனலாம். அதனால்தான் இன்று மூன்று கல்லூரிகள் அதுவும் பழமையும், பாரம்பரியங்களும் ஒருங்கே சேர்ந்த மூன்று நூற்றாண்டு கடந்த கல்லூரிகளின் தனது காலத்திற்கான மைய விசையினை வழங்கியதனூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரிகளின் வரலாற்றுப் பதிவுகளில் தனக்கென்று ஒரு இடத்தினைப் பெற்றிருப்பதானது வாழ் நாளில் வேறு ஒருவருக்கும் வாய்க்கப் பெற மாட்டாது. அந்த வகையில் அவரின் நினைவுகளை இன்றைய தலைமுறையினரிடம் எடுத்துச் சென்று கையளிப்பதுடன் மட்டுமல்லாது அன்றைய காலத்தினையும் படம் பிடித்து அனுபவங்களூடாக இன்றைய தலைமுறையினரிடம் கையளிக்கும் உயரிய கைங்கரியத்தினை இன்றைய அமரர் சபாலிங்கம் (மேன் நாள் அதிபர்) அவர்களது நூற்றாண்டு விழா நிகழ்வானது சிறப்பாக நிறைவேற்றியிருக்கின்றது. இது அன்றைய தலைமுறையினரிடம் இருந்து இன்றைய தலைமுறையினர் கற்றுக் கொள்ள வேண்டிய, கற்றுக்கொடுக்க வேண்டியவைகளைக் கையளிப்பதற்கான களத்தினை ஏற்படுத்தி நிற்கின்றது. அந்த வகையில் இவ்வாறான நல்ல முயற்சியினை எடுத்து இக் கைங்கரியத்தினை சிறப்பாக நிறைவேற்றி வரலாற்றுப் பதிவினை மேற்கொண்ட இந்த மூன்று கல்லூரிச் சமூகத்தினருக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் எனது நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து இன் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துரைப்பதில் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

ம.ஞானசம்பந்தன்
அதிபர், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் யாழ் இந்துக் கல்லூரி
மாணவனின் உள்ளத்திலிருக்கும்

# உயர்ந்த அதிபர்



இளம் பிராயம் முதல் யாழ் இந்துக் கல்லூரி மாணவனாகவும் வாலிப பருவத்தில் கல்வியில் மேம்பட்டவராகவும் சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்து விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகப் பல காலம் பணிபுரிந்து முதல்தரக் கல்லூரி அதிபராய் தான் கற்ற கல்லூரியின் அதிபராகிய எங்கள் அதிபர் அமரர் உயர்திரு. இ. சபாலிங்கம் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழா அவரது கல்லூரியின் அவரது மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற முதற்கண் ஸ்ரீ ஞான வைரவ பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன். இவ்விழாவின் கல்வியின் நாயகன்

'தோன்றில் புகழுடன் தோன்றுக அது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கமைய வாழ்ந்து காட்டிய பெருந்தகையாவார். இவரது நற்பணிகள் தொடர இல்லத்தரசியும் உறுதுணையாக இருந்தார்கள். இவரது பிள்ளைகள், பல மாணவச் செல்வங்கள் இன்றும் அவர்காட்டிய பாதையைப் பின்பற்றி கல்விமான்களாக, பொறியியல் வல்லுனர்களாக, மருத்துவர்களாக, கணக்காளர்களாக, விளையாட்டு வீரர்களாக சீரும் சிறப்புமாக வாழ்கின்றார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

'ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளைகள் தானே வளரும்' என்ற தாரக மந்திரத்தின் உதாரண புருஷர். கல்லூரிகளில் மாணவர்களின் தரம் அறிந்து அவர்களைத் தனிப்பட்ட முறையில் அழைத்து படிப்பு விளையாட்டு ஆன்மீகம் பொழுதுபோக்கு எது செய்யவேண்டும் என்று அறிவுரை பகர்ந்து முன்னேற்றம் அடையச் செய்தவர். குறும்புத்தனம் மிக்க மாணவர்களை அழைத்து கண்டித்து புத்திமதி கூறி கல்வியில் முன்னேற்றம் அடையவைத்தவர். இதனால் பயன் அடைந்தோர்கள் பலர்.

இவர் தமது ஆசிரியர் பணியினை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் உப அதிபராகவும் உதைபந்தாட்ட நடுவராகவும் யாழ் மத்திய கல்லூரியில் முதல் சைவப்பெருமகனாக அதிபர் பணியேற்ற பெருமையையும் கொண்டவர்.

ஓய்வு பெறும் காலத்தில் தான் கல்விகற்ற யாழ் இந்துக் கல்லூரியின் அதிபராகச் செயலாற்ற வேண்டும் என்று ஆர்வத்துடன் பதவியேற்று செவ்வனே செய்து கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்னும் வழியில் நடந்து பரிபூரண மனநிறைவு பெற்றவர். இவர் சிறு வயது முதல் நல்லூர் கந்தனிடம் அளவிலா பக்தி கொண்டு நல்லூர் அலங்காரக் கந்தனின் பேரருளால் சகலகலா வல்லவனாகத் திகழ்ந்தார் என்றால் அதுமிகையாது. அதன்பின்பும் தமது பிள்ளைகளின் நலன் கருதி ஆபிரிக்க நாட்டில் நைஜீரியாவில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். பின்பு சிலகாலம் இலண்டனில் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்.

எடுத்த கருமங்களை செவ்வனே நடாத்த இவரது இளைய சகோதரரும் விளையாட்டு வீரரும் உதை பந்தாட்ட நடுவரும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபருமாகிய அமரர் உயர்திரு. இ.கனகலிங்கம் அவர்கள் தோளோடு தோள் கொடுத்து செயலாற்றினார்கள்.

யாழ் இந்துக் கல்லூரியின் ஆரம்பகர்த்தா அதிபர்கள் பெயரில் விளையாட்டு இல்லங்களும் குமாரசாமி மண்டபமும் இருப்பது போல் இன்றைய விழாவின் நாயகன் சிரஞ்சீவி இ. சபாலிங்கம் அவர்களின் பெயரில் சபாலிங்க மண்டபம் அமைத்திருப்பது இவர் பெயர் பல்லாண்டு காலம், பல்லாண்டு காலம் மிளிரும் என்பதில் ஐயமில்லை. இந்த ஞாபகார்த்த மண்டபத்தை அமைத்த இவரின் பிள்ளைகளாகிய இந்துவின் பழைய மாணவர்கள் செயற்கரிய சேவையை தந்தையின் நினைவாகச் செய்திருப்பது

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்'


என்ற திருவள்ளுவர் வாக்கிற்கமைய நற்காரியம் செய்துள்ளனர். இத் தருணத்தில் அவரின் பிள்ளைகளுக்கு, யாழ் இந்து மாணவர்கள் அனைவரது சார்பிலும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்
இரா.ச. பாலசிங்கம்
பொறியிலாளர்
புங்குடுதீவு- 6 -- இலண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos



1970 : Table Tennis Team, JCC
Seated, left to right : Mr K Eswarapatham-MIC, Mr E Sabalingam-Principal, Mas S Balasundaram-Captain, Mr A Kulendran-PoG (Sender M S S Sivakumar, standing 3rd fm left)



1969 : Farewell at the Romaine Hall to long serving Teacher Mr K Mathiaparanam, 3rd fm left. Mrs Mathiaparanam, Teacher, JCC is 2nd fm left. Seated to the right of Mr E Sabalingam, Principal are Mr V K Rajaratnam and Mr R Rajasenan, long-standing Teachers of JCC. Flanked by the only girl prefect, seated in left extreme and standing behind in 02 rows are the boys of the Board of Prefects.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos




Jaffna Central College (1964 - 1971)



Jaffna Central College (1964 - 1971)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos



Jaffna Central College
3rd xi Cricket Team - 1970



Jaffna Central College
Athletics Team - 1970





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos



1967 : Farewell to long serving Teacher and Vice Principal Mr S Mahalingam seen with the garland flanked by wife. Principal Mr E Sabalingam is in the middle with the College flag waving Senior Prefect Mas D Puradtchithasan by the side. (Sender : Prefect M S S Sivakumar is the extreme right)






1971 : Snr Prefect M S S Sivakumar addressing the gathering during the meeting to bid farewell to Mr E Sabalingam. Seated, left extreme : Mr N S Ratnasingham, Vice Principal 3rd fm left : Mr E K Shanmuganathan who succeeded Mr E Sabalingam as Principal, JCC
Mr and Mrs Sabalingam are in the right extreme.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos




1959 with Dr.Late Radhakrishnan
1st President of India





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos



JHC Board of Prefects 1973



JHC Board of Prefects




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos



JHC AL Union Dinner




JHC AL Union 1974



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos



Jaffna Hindu College 1971- 1975




Jaffna Hindu College Farewell party



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School's Related Photos




Jaffna Hindu College Farewell to Mr. E. Sabalingam
14.05.1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Photos



1945







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Photos





1972 Family Event








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Photos





Family Event










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Photos




Family Event






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Photos

Family Event











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Family Photos





Guest of Honour at LSA
in London 1985





With Grandchildren

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Photos



Happily with his wife



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாலிங்க மலர்



02-09-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாலிங்க
# மலர்

அமரர்

**இளையதம்பி**

**சபாலிங்கம்**

நினைவு

வெளியீடு

*பெரியபிரித்தானியா*

*02-09-1988*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர்
## இளையதம்பி சபாலிங்கம்

தோற்றம்:
04 - 02 - 1919

மறைவு:
03 - 08 - 1988

### படையல்

*புகழுடல் நிற்கப் பருவுடல் விடுத்துப்*
*புகுந்தனை இறையடிப் போது*
*திகழுமுன் பெருமை தகைமைகள் யாவும்*
*தெரிந்தவர் நினைவுவிட் டகலா*
*அகழுறும் போதும் பொறுத்திடும் பூமி*
*அதனிடை நிறைவுறு வாழ்வை*
*நிகழ்த்திய பெரியோய்! சபாலிங்கச் செம்மல்!*
*நினக்கிந்த மலரன்புப் படையல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உரை

''உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்'' என்ற பேருண்மையை இன்று உணர்த்தி என்னைத் தனிக்க விட்டு என் அண்ணன் சென்று விட்டார். எல்லா வகையிலும் அவரின் வழியிலேயே நடந்து வந்த எனக்கு, அவர் இல்லாத உலகம் ஒன்றுமற்ற பாழாகவே தோன்றுகின்றது. கவலை உள்ளத்தை நெகிழ வைத்துக் கண்களிலே பிரவாகிக்கின்றது. இதனை என்னால் தடுத்தல் இயலவில்லை.

என் வாழ்க்கையை நெறிப்படுத்திச் சென்ற கலங்கரை விளக்கு எங்கே என்று தேடித் தவிக்கின்றேன். அண்ணனை முந்திச் சென்ற அண்ணி இன்று அவரை வரவேற்று மகிழ்ந்து அமைதி பெற்றிருப்பார். ஆனால் அவரின் மக்கள் அவர் பிரிவால் துடிதுடித்த வண்ணம் இருக்கின்றனர். அவர்களுக்கு ஆறுதல் கூறுவார் யார்! ஆறுதலால் அடங்கி விடக்கூடிய துன்பமா அவர்களது துன்பம்?

அவரது இறுதி நாளில் அவர் அருகில் இருக்கும் பாக்கியமும் எனக்குக் கிட்டவில்லை. அவரின் பூத உடலினைக் கடைசியாகக் காணவும் கொடுத்து வைக்கவில்லை. காலத்தால் அழியாத பெருங் கவலை இது.

எல்லா வகையிலும் ஆளுமை நிறைந்த பூரண மனிதராய் என் அண்ணன் விளங்கினர். கல்வி, விளையாட்டு, நிருவாகம், பொதுப்பணி சமயத்தொண்டு என்று பல துறைகளிலும் அகலக் கால் வைத்துத் தாம் தொட்ட துறையிலெல்லாம் துலங்கிய பேராளர் அவர். இத்தகைய ஒருவரை என் அண்ணனாகப் பெறக் கிடைத்தமை எமது குல தெய்வமான நல்லை முருகனின் பேரருளே என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

அவர்தம் நினைவினைப் பொதிந்துவைக்கும் அரும் பெறற் பேழையாக அவர் குடும்பத்தினர் அனைவரதும் சார்பில் இந்த நினைவுமலரை இன்று வெளியிடுகையில் இன்பமும் துன்பமும் கலந்ததோர் உணர்வு என் நெஞ்சிலே முட்டி மோதுகின்றது.

இந்த மலரில், என் அண்ணனோடு கலந்து உறவாடி நெருங்கிப் பிணைந்து விட்ட அன்புள்ளங்கள் பலவற்றினதும் உணர்வுகள் இதழ்களாகி அண்ணனின் புகழ் மணத்தினைக் கமழச் செய்கின்றன.

அந்த அன்பு நெஞ்சங்கள் யாவிற்கும் அண்ணனின் குடும்பச் சார்பில் இதயம் கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

98 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

இ. கனகலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் இளையதம்பி சபாலிங்கம் அவர்கள்
# வாழ்க்கைக் குறிப்பு

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.*

*திருக்குறள் 50*

**பிறப்பு:** *04-02-1919*

**பெற்றோர்:** *இளையதம்பி, இலட்சுமிப்பிள்ளை*

**கல்வி:**

1. **ஆரம்பக்கல்வி** - *நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை,*
   *(1923 — 1928) வண்ணார்பண்ணை.*

2. 1) **மேற்கல்வி** - *விக்ரோறியாக் கலாசாலை,*
   *(1929 — 1931) கோலாலம்பூர்.*

   2) **மேற்கல்வி தொடரல்** - *யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.*
   *(1932 - 1937 மே வரை)*

   *அ. யூனியர் கேம்பிரிஜ் சான்றிதழ்*
   *ஆ. இலண்டன் மற்றிக்குலேஷன்*
   *இ. இன்ரர் மீடியற் (விஞ்ஞானம்) பயிலல் (1936 — 1937)*

3. **பட்டக்கல்வி** - *இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி*
   *(1937 — 1941)*
   *விஞ்ஞானமாணி (B. Sc.) — தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகம்*

4. **பட்டப்பின்கல்வி** - *அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கல்லூரி*
   *(1948 — 1949)*
   *பட்டப்பின் ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ்*
   *(Post Graduate Trained Certificate)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 1) **ஆசிரியப்பணி**

   1. உரும்பராய் இந்துக் கல்லூரி – 1942 — மே 1943
   2. கொக்குவில் இந்துக் கல்லூரி – 1943 — 1964

2) **கற்பித்த பாடங்கள்** - தூயகணிதம், பௌதிகம் (க. பொ. த. (சா/த). தூயகணிதம் (க. பொ. த. (உ/த)

3) **விசேட முதல்தரம்** - (*Special Post Grade I*) ஆகஸ்ட் 1949

4) **துணை அதிபர்** - (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஜனவரி 1960 — ஒக்டோபர் 1964

5) **அதிபர்** - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி — ஒக்டோபர் 1964 — யூன் 1971

   **தரஉயர்வு: தரம் 1** - யூலை 1967
   **தெரிவுத்தரம்** - யூன் 1971

   — யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யூன் 1971 — யூலை 1975

6) **ஓய்வு பெறல்** - 1975 ஆகஸ்ட் (56 வயது)

7) **சிரேஷ்ட கல்வி அலுவலர்** - பவுச்சி, நைஜீரியா
   நவம்பர் 1975 — ஆகஸ்ட் 1979

8) **அதிதி விரிவுரையாளர்** - பலாலி ஆசிரிய கலாசாலை
   நவம்பர் 1980 — டிசம்பர் 1983

2. **தொழிற்சங்கவாதி:**

   1. தலைவர் — யாழ்ப்பாணப் பட்டின ஆசிரியர் சங்கம் 1952 - 1053
   2. கௌரவ செயலாளர் — வடமாகாண ஆசிரியர் சங்கம் 1953 - 1955
   3. உபதலைவர் — வடமாகாண ஆசிரியர் சங்கம் 1955 - 1957
   4. தலைவர் — வட மாகாண ஆசிரியர் ஒன்றியம் 1957 - 1958
   5. உபதலைவர் — அகில இலங்கை ஆசிரியர் ஒன்றியம் 1958 - 1960
   6. தலைவர் — தேசிய ஆசிரியர் ஒன்றியம் 1963 - 1964



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தொழிற்சங்கப் பிரதிநிதி - வெளிநாடு செல்லல்

1. அகில இலங்கை ஆசிரியர் ஒன்றியப் பிரதிநிதியாகப் பாரிசில் நிகழ்ந்த ஆசிரியர் மாநாட்டில் கலந்துகொண்டமை
ஜூலை 1959

2. ஷெ ஒன்றியப் பிரதிநிதியாக வாஷிங்ரனில் நிகழ்ந்த ஆசிரியர் மாநாட்டிற் கலந்துகொண்டமை. ஆகஸ்ட் 1959

4. கல்விச் சுற்றுலா - பிரிட்டிஷ் கவுன்சிலின் அதிதியாகப் பிரித்தானியா சென்று அரசு ஒன்றியத்தின் பாடசாலைகள், பல்கலைக் கழகங்களுக்கு விஜயம் செய்தமை. செப்டம்பர் 1959

5. கல்விசார் சங்கங்கள், கல்லூரி அதிபர் சங்கங்கள், சாரணர் இயக்கம் ஆகியவற்றில் பதவி வகித்துப் பணிபுரிதல்:

1. தலைவர் - வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் 1959 - 1966
2. தலைவர் - வடமாகாண அதிபர்கள் சங்கம் 1972 - 1973
3. உபதலைவர் - அகில இலங்கை அதிபர்கள் சங்கம் 1973 - 1975
4. தலைவர் - வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச்சங்கம் 1973 - 1975
5. அக்கிராசனர் - வடமாகாணச் சாரணர் சங்கம்

6. சமயப்பணிகள்:

1. தலைவர் - அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம்
2. தலைவர் - சைவ பரிபாலன சபை
3. ஆலோசகர், போஷகர் - நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

7. விளையாட்டு, மெய்வல்லுநர்துறைப் பங்களிப்புக்கள்:

1. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பின்வரும் விளையாட்டு, மெய்வல்லுநர் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை

அ) உதைபந்தாட்டம் 1934 - 1936
ஆ) கிறிக்கெற் 1936 - 1937
இ) மெய்வல்லுநர் 1936

தலைசிறந்த கோல்காப்பு வீரராகவும், பந்துத்தடுப்பு வீரராகவும் முறையே உதைபந்தாட்டக் குழுவிலும், கிறிக்கெற் குழுவிலும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) துணைத்தலைவர் (Vice Captain) உதைபந்தாட்டம் - 1936

ஆ. இலங்கைப் பல்கலைக்கழக உதைபந்தாட்டக் குழுவில் இடம் பெறல் (1937 - 1941). தலைவர் (Captain) 1940 - 1941

இ) அகில யாழ் மாவட்ட உதைபந்தாட்டக் குழுவில் இடம்பெறல் 1942 - 1948. தலைவர் (Captain) 1945 - 1948

ஈ) சர்வதேச உதைபந்தாட்ட நடுவர்த் தகுதியை எய்தல்

உ) இலங்கை சீ ஏ ஏ ஏ (C A A A) யில் மெய்வல்லுநர் துறை அலுவலர்,

ஊ) 1963 இல் பெங்களூரில் (இந்தியாவில்) நிகழ்ந்த ஒலிம்பிக் முன்னிலை உதைபந்தாட்டத்திற் கலந்துகொண்ட இலங்கைத் தேசிய உதை பந்தாட்டக் குழுவின் முகாமையாளராகச் செல்லல்.

எ) யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கம் 1943 இல் ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் அதன் உருவாக்கம், நிருவாகம், வளர்ச்சி ஆகியவற்றிற்காய் உழைத்தல்.

ஏ) யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம், அகில இலங்கை உதை பந்தாட்டச் சங்கங்களின் செயல் நிறைவேற்றலுவலராகப் பணியாற்றல். 1943 — 1960

ஐ) கௌரவ செயலாளர் - யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளை யாட்டுச் சங்கம் (1945, - 1948, 1949 – 1964)

2. தலைவர் - யாழ்ப்பாண உதைபந்தாட்ட விளையாட்டுச் சங்கம் 1968 -1973

3, தலைவர் – யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம் 1967 - 1969

4) தலைவர் - யாழ்ப்பாண அமைச்சூர் மெய்வல்லுநர் சங்கம் 1966 – 1968

5, தலைவர் - யாழ்ப்பாணக் கிறிக்கெற் சங்கம் 1970 – 1972

6. தலைவர் – யாழ்ப்பாணக் கூடைப்பந்தாட்டச் சங்கம் 1973 - 1975

7, தலைவர். உபதலைவர். செயலர் – யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் (1949 – 1968)

8. **மறைவு** - (இலண்டனில்) 03-08-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சபாலிங்கம் அவர்களின்

# மனைத்தக்க மாண்பு

**மனைவியார்:** மலர்சோதி

**பெற்றோர்:** இளையதம்பி
இலட்சுமிப்பிள்ளை

**உடன்பிறப்பாளர்கள்;**

அமரர் திருமதி சின்னத்தம்பி கனகாம்பிகை
திரு. இ. கனகலிங்கம் - ஓய்வுபெற்ற அதிபர்
(பலாலி ஆசிரியர் கலாசாலை)

**பிள்ளைகள்:**

1. திரு. ச. ஜோதிலிங்கம், வைத்திய ஆலோசகர்
**மனைவி:** திருமதி ஜோ. இராஜேஸ்வரி
**பிள்ளைகள்:** பிரதீபன்
சிவாஞ்சினி

2. திருமதி பு. கற்பகாம்பிகை
உயர்நிலைப் பள்ளி ஆசிரியை, கோலாலம்பூர்
**கணவன்:** திரு. சி. புவனேந்திரராஜ்
உயர்நிலைப்பள்ளி ஆசிரியர், கோலாலம்பூர்
**பிள்ளைகள்:** காந்தரூபன்
நிமலரூபன்
தனுஷியா

3. திருமதி ஆ. ஜெகதாம்பிகை
**கணவன்:** திரு. ப. ஆனந்தபாஸ்கரன்
இரசாயனப் பொறியியலாளர் ஆலோசகர்
**பிள்ளைகள்:** வாணி
வீணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திரு.ச. உதயலிங்கம், உற்பத்திப் பொறியியலாளர்
மனைவி: திருமதி உ. பிரேமரூபா, அரச ஊழியர்
பிள்ளைகள்: சாரங்கன்
சரவணன்

5. திருமதி ம. உதயகுமாரி
கணவன்: திரு. இ. மகேந்திரன்,
இயந்திரப் பொறியியலாளர்
பிள்ளைகள்: ரஜீவன்
ரஜீதா

6. திரு. ச. ஜெயலிங்கம், கட்டிடப் பொறியியலாளர்
மனைவி; திருமதி ஜெ. ஸ்ரீஸ்கந்தகுமாரி
பிள்ளைகள்: இலட்சுமி
இலட்சுமன்

7. திரு. ச. அபயலிங்கம், கணக்காளர்
மனைவி; திருமதி அ. தேவகி
பிள்ளைகள்; மாயவன்
யாதவன்

8. திருமதி ந. கலைச்செல்வி, கணக்காளர்
கணவன்; திரு. ப. நவேந்திரன், கணக்காளர்
பிள்ளை, திருமகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்காத கல்விமான்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவன் வாக்குக் கமையத் தோன்றிய கல்விமான்களுள் ஒருவராகத் திகழ்ந்து அமரத் துவம் பெற்ற நல்லாசான் அமரர் சபாலிங்கம் இன்று இல்லை. பூதவு டல் அழிந்த போதும் அவரது புகழுடம்பு நிலைத்து வாழும். அமரர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து கணிதமும், விஞ்ஞானமும் கற்பித்ததுடன் ஒழுக்கத்தை நிலை நிறுத்துபவராகவும் விளங்கினார். விளையாட்டுத் துறையில் மாணவர்களை ஊக்குவித்ததுடன் கல்லூரியின் வெளிக்கள வேலைகளிலும் முன்னின்று உழைத்தவர். இச் செயற்பாடுகளினால் மாணவ சமுதாயத்தின் அன்பையும், நன்மதிப்பை யும் பெற்ற பெருமகனாவார்.

திருவாளர் C. K கந்தசுவாமி அவர்கள் அதிபராக இருந்த காலத் தில் துணை அதிபராகக் கடமையாற்றிப் பின்பு யாழ். மத்திய கல்லூ ரியில் அதிபராகத் திறம்படச் செயலாற்றிப் பின்னர் யாழ். இந்துவில் இளைப்பாறும் வரை அதிபராகவும் கடமை புரிந்துள்ளார்.

சிறந்த உதைபந்தாட்ட வீரராகிய சபாலிங்கம் அவர்கள் யாழ் மாவட்டத்தின் விளையாட்டுத்துறை நிறுவனங்களின் தலைவராகவும் விளங்கினார். பிறநாடுகளிலே நடைபெற்ற கல்வித் துறை தொடர் பான கருத்தரங்குகளில் கலந்துகொண்டு யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்த்துத் தந்தார். ஆசிரிய சங்கங்களில் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றினார். கல்விப் பணிமூலம் சமுதாயப் பணி புரிந்த பெரியார் தமது ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறிய பின்பும் எமது கல்லூரியுடன் தொடர்பு கொண்டிருந்தார். இறுதியாக எமது கல்லூரி யின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் இருந்து அரும்பணி யாற்றினார். அமரராகிவிட்ட எமது ஆசானின் நினைவு என்றும் மனத் தில் நீங்காது நிலைத்து நிற்கும்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவ துடன் அன்னாரின் ஆன்மா சிவனடி சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெற நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அ. பஞ்சலிங்கம்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் மறக்க முடியாத மாண்பினர்

புறத்திலே வைரமும் அகத்திலே மென்மையும் வாய்ந்த மாமனிதர் அமரர் சபாலிங்கம் என்பதை அறிந்து அவருக்கு ஆட்பட்டு அகம் குழைந்த சந்தர்ப்பங்கள். அவர் மறைந்தார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் என் உள்ளத்திலே நினைவலைகளாக மோதிமோதி விழிகளினூடாக வெளிப்பட்டதைப் பகிரங்கமாக எடுத்துரைப்பதில் எனக்குத் தயக்கமோ வெட்கமோ ஏற்படவில்லை.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே 1963 ஆம் ஆண்டு தொடக்கம் 1973 ஆம் ஆண்டு வரை நான் ஆசிரியராகப் பணியாற்றினேன். இன்றுபோலவே அன்றும், பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுமளவு சிரமம் அக்கல்லூரியிலே மாணவரைச் சேர்ப்பதில் இருந்தது. எனது முதல் மகனை இந்துக் கல்லூரியிலே சேர்த்து விட்டால் அவன் பொறியியலாளராகவோ, டாக்டராகவோ உருவாக்கப்பட்டு விடுவான் என்ற ஆசைக் கனவை என் உள்ளத்திலே வளர்த்த போதிலும் அதிபரை அணுகிச் சேர்வநுமதி கேட்கும் துணிச்சல் இருக்கவில்லை. இந்நிலையில் யாழ். மத்திய கல்லூரி அதிபராய் இருந்த சபாலிங்கம் அவர்களை அணுகி அவரது கல்லூரியில் என் மகனுக்கு இடம் தருமாறு வேண்டினேன். அன்றுவரை அவர்பற்றிக்கேள்வியுற்றிருந்தேனேயன்றி அவருடன் பழகும் வாய்ப்பற்றிருந்த என்னை மதித்து, எனது வேண்டுகோளை அநுதாபத்துடன் அணுகிச் சேர்வநுமதியும் வழங்கிய அந்தப் பேருள்ளத்தை என் வாழ்விலே என்றும் மறத்தல் இயலாது. சபாலிங்கம் அவர்கள் இந்துக் கல்லூரிக்கு அதிபரானதும் அவராகவே என் மகனைப் பற்றி விசாரித்து, அவனுக்கு இந்துக் கல்லூரியிலே கற்கும் வாய்ப்பளித்ததும் உள்ளத்தை நெகிழ்விக்கும் மற்றொரு கதை.

இளமை வேகமும் முன்னேற்ற ஆர்வமும் உயர்தர வகுப்பிலே கற்பிக்க வேண்டும் என்ற நியாயமான ஆசையும் முட்டி மோதிக் கொண்டிருந்த காலத்தில் இம்மூன்றற்கும் தேவைக்கு அதிகமாகவே தீனி போட்டு வளர்த்தவர் அதிபர் சபாலிங்கம் அவர்கள். தமிழ், இந்துநாகரிகம், வரலாறு ஆகிய மூன்று பாடங்களை, அதுவும் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பிலே கற்பிக்க வாய்ப்பு அளிப்பதென்றால் அது அற்புதத்தில் அற்புதம் என்றுதான் சொல்ல வேண்டும். நல்லகாலம்! ஓரிரு மாதங்களில் இந்த அன்புச் சுமையைக் கொஞ்சம்கொஞ்சமாக இறக்கித் தமிழோடும், வரலாற்றோடும் நின்று கொண்டேன்,

1973 மார்ச் மாதத்தில் எனக்கு மூன்றாந்தர அதிபர் பதவி கிடைத்து நான் இந்துக் கல்லூரியிலிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எற்பட்ட பொழுது என்னை வெளியேற விடாது இந்துக் கல்லூரியி லேயே வைத்துக் கொள்ளச் சபாலிங்கம் அவர்கள் மேற்கொண்ட மகத்தான முயற்சியின் எதிரொலியை நான் முல்லைத்தீவு மகாவித்தி யாலயத்தில் அதிபராய் இருந்த பொழுது கேட்க முடிந்தது. அக்காலத் தில் மாற்றங்கள் நியமனங்களுக்குப் பொறுப்பாயிருந்த கல்வியமைச் சின் கல்வியதிகாரி எனது பாடசாலைக்கு வருகை தந்த பொழுது கூறியவை இவை. ''ஒகோ! நீர்தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் சபாலிங்கம் பரிந்துரைத்த சொக்கலிங்கமோ? திறமையான ஆசிரியர்களை வெளிச் சென்று சேவை புரிய விடாமல் தங்கள் கல் லூரிக்கே வேண்டும் என்று கேட்பது பெரும் சுயநலம். உங்கள் சபா லிங்கம் பெரும் சுயநலமுடையவராய் இருக்கிறார். அவர் உமக்காக எவ்வளவோ வாதாடினார். ஆனால் நான் உம்மை ஐந்து வருடங்களுக் கரவது யாழ்ப்பாணம் செல்ல விடப்போவதில்லை.'' இவருடைய இந் தக் கூற்று 'இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவினை'' ஒத்த நிலைக்கு என்னை உள்ளாக்கியதைச் சொல்லவா வேண்டும்?

ஒருவரில் நம்பிக்கையும் அன்பும் வைத்தால் அதனை எக்காலத்தும் கைவிடாத பண்பை நான் சபாலிங்கம் அவர்களிலே கண்டது போல எவரிலும் கண்டதில்லை. தேவன் அவர்களுக்குப் பிறகு ஆண்டு தோறும் யாழ். இந்துக் கல்லூரிப் பரிசளிப்பு விழா அறிக்கையை மொழி பெயர்க்கும் பொறுப்பு எனக்கு இருந்து வந்தது. 1973 இல் நான் இந்துக் கல்லூரியிலிருந்து விலகிய பின்னரும் என் குடிலைத் தேடி வந்து என் னைக் கொண்டே அடுத்த இரண்டாண்டு அறிக்கைகளையும் குறிப்புகள் தந்து எழுதுவித்தவர் என்பதிலிருந்து, அவர் என் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் பற்றையும் நான் நன்கு உணர்ந்து கொண்டேன்.

இத்தகைய மகத்தான பண்பாளரை, அன்புள்ளம் வாய்த்த சான் றோரை வாழ்வில் எப்போதும் நினைத்துக் கொண்டேயிருப்பேன் என்று கூறுவது ஏதோ வலிந்து நான் மேற்கொள்ளும் முயற்சிச் செயல் என்று கருதவே இடமளிக்கும். உண்மையைச் சொல்வதாயின்,

'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்றாற்போல, சபாலிங்கம் அவர்களின் நாமத்தை நான் மறக்கி னும் நா எப்பொழுதும் உச்சரித்த வண்ணமே இருக்கும்.

அவர் ஆன்மா சாந்தி உற அவரின் குலதெய்வமான நல்லூர்க் கந்தனை மன, மொழி, மெய்களால் வழுத்துகின்றேன்.

க. சொக்கலிங்கம் (சொக்கன்)

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் உறைந்த உத்தமர்

## சபாலிங்கம்

3-8-83 இல் காலமானார் சபாலிங்கம் என்று வெளிப்படுத்திய யாழ்நகர் செய்தித்தாள் உள்ளத்தை உருகச்செய்து விட்டது. தொடர்புடையவர்கள் துயரம், அன்புடையவர்கள் அழுகை, நண்பர்கள் வேதனை வாழ்நாளில் விட்டகலா.

மார்க்கண்டேயர் கட்டியணைத்த லிங்கம், அநாதைகளுக்கு ஆதரவு காட்டிய லிங்கம், துர்மாணவரை நல்மாணவர் ஆக்கிய லிங்கம் என்ற புகழ் உடம்பு என்றுமே மறையாது. காயமே மறைந்தது.

யாழ்நகர் இந்துக்கல்லூரியின் திலக அதிபர், பொறியியல் மருத்துவபீட மாணவர்களின் ஆசான், துன்ப நேரம் துயர்போக்க வந்த பொறியியல் அன்பு மாணவர் ஆருயிர்ப் புதல்விகளை உவகை கொண்டேற்ற அளவிலா அன்பன்.

கல்விப்பணிப்பாளர் பதவியை வெறுத்தவர், பணிப்பாளர் வேதனம் தனிச்சிறப்புடன் பெற்றவர், ஆசிரிய உலகிற்கு அரசாக இருந்தவர், வெளிநாட்டிற்கும் சேவையில் சென்றவர் கச்சேரி, மருத்துவமனை போன்ற பல ஸ்தாபன ஊழியர்கள் தனிமதிப்பும் வரவேற்பும். காரணம் அவர்களின் ஆசான். 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பதனை உலகிற்குக் காட்டிய கலைஞன்.

அன்பரீர், மனம் போல வாழ்வைத் தம் மக்களில் கண்டோம். தங்கள் வாழ்வு என்றும் விளங்கும். தங்களுக்கு அமரர் வாழ்விலும் ஆனந்த வாழ்வை எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுதல் செய்வோமாக.

**அ. சா. சண்முகம்**
முன்னாள் அதிபர்,

சி. சி. பாடசாலை
நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சரித்திரச் சாதனைகள் பல சாதித்த மா மனிதர்

நம் ஈழமணித் திருநாட்டின் குலதெய்வமாக வீற்றிருந்து அருள் பாலிக்கும் நல்லைக் கந்தனின் நல்லருள் பெற்றவர்கள் நம் நாட்டவர்கள்

அவர்களுள் ஞானிகளாகிய செல்லப்பாச்சுவாமிகள், சிவயோக சுவாமிகள், நாவலர் பெருமான் பரமாசாரிய சுவாமிகள், சடையம்மா முதலியவர்களை யடுத்து இவ்வற நிலையில் நினைவு கூறத்தக்கவர்களுள் தலையானவர் சமீபத்தில் இறைவன் திருவடி நீழல் அடைந்த முன்னாள் யாழ். இந்து, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிகளின் அதிபர் உயர்திரு இ. சாபலிங்கம் அவர்களாவர்.

அன்னார் அல்லும் பகலும் நல்லைக்கந்தனை வழிபடும் புகழ் பெற்ற குடும்பத்திலே தோன்றியவர்கள் பெற்றோர் நோன்பு நோற்று வழிபாடாற்றியதன் பெறுபேறாகத் தோன்றிய பிள்ளைகள், அதே திருமுருகனின் அழகும் ஆளுமையும் பெற்று இளமையிலேயே விளங்கினார்கள். நம்மிற் பலர் கண்ணுற் கண்டு களிபேருவகை கொள்ளும் வண்ணம் சபாலிங்கம் சகோதரர்கள் புதல்வர்கள் தம் தாயனைய எம் யாழ் இந்துக்கல்லூரிக்காக விளையாடிய விளையாட்டின் வீர நிலை இன்றும் பசுமையாகத் திகழ்கின்றது.

தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு அரிய பெரிய சரித்திரப் புகழ் வாய்ந்த சாதனைகளைத் திரு சபாலிங்கம் அவர்கள் எல்லோரும் வியக்கும் வண்ணம் சாதித்தார்கள். அவரா சாதித்தார்? இல்லை, முருகனே அவராக நின்று சாதித்தான் என்பது நம் போலியர் எண்ணம். எது எவ்வாறாயினும், சலிப்பில்லாச் சாதனைகள் புரிந்தார் சபாலிங்கம் அவர்கள். எவர்க்கும் எட்டாத கிட்டாத சாதனைகள் ஒன்றா இரண்டா? சகல துறைகளிலும் வெற்றி மாலைகள் வந்து குவிந்தன.

கல்விப் பணிப்பாளர் பதவிக்கு நிகரான அதி உயர்ந்த கல்லூரி அதிபர் பதவி பெற்ற அனைத்து இலங்கைக் கல்விமான்கள் ஒரு சிலரே. அவர்களுள் தலையானவர் இவர், நாவலர் பெருமான் கற்ற-கற்பித்த கலைக்கூடமாகிய யாழ். மத்திய கல்லூரியின் முதலாவது இந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயஞ் சார் அதிபரானார். அதனால் ஈழத்தமிழர் என்னும் மாபெரும் விருட்சத்தின் இரு பெருங்கிளைகளாகிய கிறீஸ்து சமயப் பாரம்பரியமும் வளர உதவினார். அதே போன்று தம்மை உருவாக்கிய தாயணைய யாழ் இந்துவின் அதிபராகித் தந்தையின் கட்டுப்பாடு, தாயின் அரவணைப்பு இரண்டினையும் கட்டிக்காத்து அதிபர் பதவியிலிருந்து மகிழ்வுடன் ஓய்வு பெற்றார்கள்.

சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன் 1988 இல் நாவலர் பெருமானின் இலட்சியங்களை நடைமுறைப்படுத்த அவரின் அன்பர்களால் தாபிக்கப்பட்ட நிறுவனமே யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை. அதனாலே தாபிக்கப்பெற்ற தலையான கல்விக் கூடமே யாழ் இந்து. யார் யார் இவ்விரு நிறுவனங்களும் வளரத் தொண்டாற்றினார்களோ அவர்களின் பெயர்களே யாழ் இந்து இல்லங்களின் பெயர்களாக இன்றும் உள்ளன. இவ்வாறு சைவபரிபாலன சபைக்கும் யாழ் இந்துவுக்குமுள்ள மிக நெருங்கிய சரித்திரகால அடிப்படையில் எழுந்த தொடர்பினைக் கட்டிக் காத்த மாபெரும் தவப்புதல்வராகத் திகழ்ந்தவர் திரு. சபாலிங்கம் அவர்கள். அன்னாரின் நிர்வாகத்திறமை, அன்பு, பண்பு நீதியை நிலைநாட்டும் நடுநிலைக்குணம், அஞ்சாமை துணிவு, இறைபக்தி யாவும் இவ்விரு தாபனங்களிலே துலங்கவைத்தார்,

நாவலர் கண்ணேபோற் போற்றிய சைவத்தமிழ்க் கலாசாரத்தைக் காலத்தின் கோலத்தினால் கைநெகிழ விடாமற்காப்பாற்றி, இந்துபோர்ட் இராசரத்தினம், சேர் பொன் இராமநாதன் போன்ற நாவலர் வழிக் கல்விக் காவலராக என்றும் விளங்கும் சிறப்புக்குரியவர் உயர் திரு. சபாலிங்கம் அவர்கள் என்பதை அவர்கள் கடமையாற்றிய கொக்குவில் இந்துக்கல்லூரி முதலிய கல்விக் கூடங்களும் சான்றுபகாகின்றன. அன்னாரை அளவிட வார்த்தை போதா

நல்லைநகர் நாவலர்தம் நனவைப் போற்றி
நாடுபுகழ் நற்றொண்டு பலவும் செய்தோர்
எல்லையிலாப் புகழ் நிறைந்த கல்வியாளர்
எல்லோரும் ஏத்துகின்ற எழில்சேர் வீரர்
தொல்லைவினை தீர்க்கின்ற நல்லைக் கந்தன்
தொழுதெ ழுமெம் அதிபர் இ. சபாலிங் கத்தார்
தில்லையமர் சிவனடியைச் சேர்ந்தா ரைய
தியானித்தே அவர்தம்மை வணங்கி வாழ்வாம்

சைவசித்தாந்த கலாநிதி
**க. கணபதிப்பிள்ளை**
முன்னாள் ஆசிரியர்,
இந்துக்கல்லூரி.

I am extremely grateful to the Past President of OBA Jaffna Dr. E.Devanesan and the then committee for the support rendered during the construction of the auditorium. No need to add to the array of superlatives here, except to admire the excellent support of my close friend Mr. P.Easwaradasan who has supervised the project from its inception.

I am so pleased that Mr. S.Ponnampalam, my own Chemistry teacher, a former principal of our school and a colleague of my father has kindly accepted my invitation to be the chief guest for the opening ceremony and accompanied by his charming wife.

It is also unique to note that my other teachers namely Mr. A.Karunakarar (Physics) and Mr. M.C.Francis (Zoology) who were also colleagues of my father are here to attend this function. Unfortunately my Botany teacher Mr.Subramanium is no more with us.

My appreciation is extended to Mr. P.Nimalraj who is one of my father's grandson from Malaysia and his accompaniment for having spent time to prepare and perform a Barathanatiyam on this occasion.

I would like to thank all the speakers who willingly agreed to share their experience about my late father. My sincere thanks goes to Prof K.Kugabalan who has taken the time to collate various articles for the souvenir. My gratitude goes Mr. A.F.Mariyadas and Mr.P.Vivekananthan from OBA UK for their support and encouragement.

Nothing would have been possible without the help and understanding from Mr. Shanmuganathan of Jeyasunjan who undertook to build this modern auditorium. His determined conviction and commitment needs to be recognized.

My congratulations goes to Mr.I. Thayanantharajah our current principal, Mr. S.Nimalan our Deputy Principal, Teachers, Members of the OBA Jaffna and Hindu College community for organising this opening ceremony very well.

Finally, I am indebted to my wife and children for the encouragement and the support given to finish this project. On a personal note I am so pleased that three generations of Sabalingam boys are here today to represent the family and share the joyous occasion with you all.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message From the President*



**Dr. E. Devanesan**
Past President
Jaffna Hindu College, OBA

It is indeed a proud moment to be recorded in the annals of the history of JHC. one of the illustrious sons of our alma mater repaid his debts. By contributing to the completion of a long awaited project which is an exemplary example for us and marks the beginning of a new tradition of benevolence of great magnitude in our long history after our founding fathers such as pasupathy Chettiar and Nagalingam.

The project to complete the auditorium and refurbish it was a cherished dream which is realized now and the building in which the auditorium is a part is named after Mr. E. Sabalingam, our former principal who was at the helm from 1971 to 1975 which was considered a golden era in the history of JHC. I as the president of the OBA of JHC have to thank Dr.S. Jothilingam son of late E. Sabalingam who generously contributed to this project in memory of his father and made this dream project a reality.I am really proud of this achievement which came through during my tenure.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைப்பாறிய மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



**க.சண்முகநாதன்,**
இளைப்பாறிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.
முன்னாள் தலைவர்.
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

யாழ்ப்பாணத்திற்கு பெரும் புகழைத் தேடித்தந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 12 ஆவது ஆண்டு விழாவிற்கு இக்கல்லூரிக்கு பெருமை தேடித்தந்த மறைந்த முன்னாள் அதிபர் திரு இ. சபாலிங்கம் அவர்கள் நினைவாக நவீன கேட்போர் மண்டபம் ஒன்று

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிபு"

என்ற குறள் நெறிக்கமைய திறந்து வைத்து அன்னாரை நினைவு கூருவதையிட்டு யாழ் இந்துவின் பழைய மாணவனாகிய நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நான் அரசாங்க அதிபரா இருந்த காலத்தில் தேசியப் பாடசாலையாகிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. மேல் மாகாணத் தேசிய பாடசாலைகள் கொண்டுள்ள கட்டட வசதிகளோ அல்லது ஏனைய நவீன வசதிகளையோ கொண்டிருக் வில்லை. இக்குறைபாட்டை ஓரளவாவது நிவர்த்தி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் RRA நிதியிலிருந்து கேட்போர்கூடம் ஒன்றை அமைக்கக்கூடிய உட்கட்டுமான அமைப்புடன் இரண் மாடிக்கட்டடம் ஒன்று நிறுவப்பட்டது.

ஆனால். எமது ஆதங்கத்தை எமது கல்லூரியின் புகழ்பூத்த மறைந்த முன்னாள் அதிப திரு.இ. சபாலிங்கம் அவர்களின் புத்திரனான ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் வைத்திய கலாநி ச.ஜோதிலிங்கம் அவர்கள் ரூபா 15 மில்லியன் மதிப்புடைய 400 இருக்கைகள் கொண்ட நவீன கேட்போர் மண்டபத்தை அமைத்துக் கொடுத்ததுமல்லாமல் முழுக்கட்டடத்திற்கும் பொதுவான நீ வடிகாலமைப்பையும் புனரமைத்துக் கொடுத்துள்ளார். அவரின் இந்த நல்லெண்ண சேவையு அவரின் தகப்பனார் மறைந்த முன்னாள் அதிபர் திரு.இ.சபாலிங்கம் அவர்களையும் நிச்சயமா கல்விச்சமூகம் நினைவில் வைத்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மனங்களில் என்றும் வாழும் சபாலிங்கம் ஐயா



**ஐ.தயானந்தராஜா**
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

உலகம் போற்றும் உன்னதமான கல்லூரியாம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னை நாள் புகழ்பூத்த அதிபரும் தமிழ்மக்களின் முதல் தீவிரவாதி என பத்திரிகைகளால் புகழ்ந்துரைக்கப்பட்ட பெருமகனும் நான் மாணவனாக இக்கல்லூரியிலே கற்ற காலத்தில் எமக்குக் கல்வியையும் வீரத்தையும் ஊட்டி ஊட்டி வளர்த்த எனது பேரன்பிற்குரியவரும் அதிபராக இருந்தால் அது சபாலிங்கம் ஐயா போலவே இருக்கவேண்டும் என்று எமது மனங்களிலே மேற்படி எண்ணத்தை விதைத்த அற்புதமான மனிதரும் எமது வாழ்க்கைக்கு ஒரு இலக்கினையும் முகவரியையும் தேடிக்கொள்ள காரணமானவராக சபாலிங்கம் ஐயாவை நான் காண்கின்றேன்.

இன்று அவர்களின் பெயரில் அவரது புகழை உறுதி செய்கின்ற அன்பு மகனாக டாக்டர் சோதி லிங்கம் அவர்களினால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சமூகத்திற்கு மட்டுமன்றி வடக்கு மாகாணத் தமிழ்ச் சமூகத்திற்கும் அன்பளிப்பாக வழங்கப்படுகின்ற சபாலிங்கம் கலையரங்கினைப் பெற்று அதனை அனுபவிக்கின்ற பேறு எமக்கு கிடைத்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாண மண்ணில் புகழ்பூத்த அதிபர்களில் முக்கியமானவராக விளங்கிய எங்கள் சபாலிங்கம் ஐயா அவர்கள் தமது காலத்தில் இக்கல்லூரியில் மிகவும் சிறந்த ஒரு நிர்வாகக் கட்ட மைப்பினை ஏற்படுத்தியவர். அவரது எடுப்பான தோற்றமும் உரையாடல் முறைமையும் அவரின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டின. தேசிய உடைக்குள்ளே அவரைப் பார்ப்பதே ஒரு தனி அழகு. நான் சிறுவனாக இருந்த காலத்தில் அவர்மேல் மிகுந்த பயபக்தியும் அன்பும் கொண்டவன். அவர் தனது பாடசாலை நாட்களில் செய்கின்ற நிர்வாகம் சற்று வித்தியாசமானது. அவர் தனது கண்ணாடி யினைக் கழற்றி மேசைமீதும் சால்வையைக் கழற்றிக் கதிரை சாய்மனையிலும் வைத்துவிட்டு பாடசாலையைவிட்டு வெளி அலுவல்களுக்கு சென்றுவிடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நாம் நினைப்போம் அவர் பாடசாலையிலே எங்கேயோ ஒரு இடத்தில் உலவுகின்றா றென்று. கண்ணாடியினையும் சால்வையினையும் பார்த்து பயந்து ஓடிய காலங்கள் கொஞ்சமல்ல. அதிக நாட்களின் பின்னர்தான் தெரிந்தது அவற்றை மேசையில் வைத்துவிட்டு வெளியே சென்றுவரும் விடயம். அவரது கண்ணாடிக்கும் சால்வைக்கும் ஒரு பாடசாலையை ஆளும் திறன் இருந்தது என்றால் அவர் எவ்வளவு திறன்மிகுந்த அதிபராகக் கடமையாற்றினார் என்பதனைக் கற்பனை பண்ணிப் பார்க்கமுடியும்.

செயற்றிறன் மிக்க அதிபர் சபாலிங்கம் ஐயா அவர்களின் காலத்தில் சிறுவனாக வாழ்ந்த எனது மனதில் அவர் பற்றிய பிரதிமை பசுமரத்தாணியாக பதிந்தது. அவரைப்போல ஒரு அதிபராக வரவேண்டும் என்ற எண்ணம் என்னுள்ளே எப்பொழுதும் எழுந்துள்ளது. அதன் விளைவோ என்னவோ அப்பெருமகனால் இருந்து ஆட்சிபுரிந்த இக்கல்லூரியை அவரது மாணவனாகிய எனக்கும் இங்கு பணிசெய்யும் சந்தர்ப்பம் கிடைத்தமையைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

"நேர்மை மிகுந்த பெரியோர்கள் என்றும் எல்லோர் மனங்களிலும் வாழ்வார்கள் என்பதற்குச் சாட்சியாக சபாலிங்கம் ஐயா அவர்கள் இன்றும் எம் மனங்களில் வாழ்கின்றார் என்ற செய்தியை இங்கு பெருமையுடன் பதிவு செய்கிறேன்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சபாலிங்கம் ஓர் சகாப்தம்



**சதா. நிமலன்**
பிரதி அதிபர்
யாழ் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியுடன் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை இணைப்பில் இருந்தபோது 1971ம் ஆண்டு மாசி மாதத்தில் ஒருநாள் 6ம் வகுப்பில் தமிழ்ப்பாடம் குலசேகரம் ஆசிரியரால் நடாத்தப்பட்டுக் கொண்டு இருந்தது. வழமையிலும் பார்க்க மிகத்திறம்பட அபிநயத்துடன் அடிக்கடி வகுப்பறைக்கு வெளியேயும் பார்த்துப்பார்த்து ஆசிரியர் கற்பித்துக்கொண்டிருந்தார். எல்லா வகுப்பறைகளிலும் அமைதியுடன் கற்பித்தல் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாடசாலைச்சூழல் முழுவதும் வழமைக்கு மாறாக மிக அமைதியாக காணப்பட்டது. ஏனோ எனது வகுப்பு மாணவர்கள் வகுப்பறையின் பின்புறத்தை திரும்பிப்பார்த்ததைக் கண்டு நானும் திரும்பிப்பார்த்தேன். அங்கே அகன்றதோள்களுடன் நிமிர்ந்தநடையும் ஏறுநெற்றியுடன் பரந்தமுகமும் பொற்குடத்திற்குப்பொட்டிட்டாற்போல் நெற்றிப்பொட்டும் இளமஞ்சள் நிற மேனிக்கு வேட்டி சால்வையும் பட்டுநஷனலும் அணிந்தபடி காலுக்கும் இளமஞ்சள் நிற தோற்செருப்புடன் எங்கள் பாடசாலை அதிபருடன் ஒரு உயர்ந்த மனிதர் எமது வகுப்பறையை பார்வையிட்டபடி கம்பீரமாக நடந்து சென்றார். (நீ நடந்தால் அதிரும் ராஜநடை நாத்திசையும் பரப்பும் உந்தன்புகழை என்று அவரது கண்ணீர் அஞ்சலியில் பொ.ஜங்கரநேசன் எழுதிய வசனம் முற்றும் பொருந்தும்) அவர் சென்ற பின்னரும் நீண்டநேரம் அவர் பாடசாலையை விட்டு சென்றுவிட்டாரோ எனத்தெரியாமல் பாடசாலை அமைதியாகக்கிடந்தது. யார் இவர்? யார்? என்ற கேள்வி எங்கள் எல்லோர் மனத்தையும் குடைந்தது. இவர் தான் யாழ் இந்துக் கல்லூரி அதிபர் சபாலிங்கம் என முதன்முறையாக அறிந்து கொண்டேன். அடுத்த ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விகற்க 7ம் வகுப்பிற்குச்சென்றபோது எங்களை நேரிலேயே வரவேற்ற அதிபர் சபாலிங்கம் அவர்களின் நிலை உயரும் போது பணிவு கொள்ளும் பண்பு கண்டு 2வது முறையாக வியப்போடு மலைத்து நின்றேன்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அதிபர் சபாலிங்கம் அவர்களின் காலம் விளையாட்டுத் துறையின் பொற்காலம் எனவும் அது ஒரு மைல்கல் எனவும் வர்ணிக்கப்படுகிறது. 100m, 200m ஓட்டப்போட்டிகளில் சில வீரர்கள் மட்டுமே பங்குபற்ற வாய்ப்பு கிடைக்கின்றது. எனவே அனைவரும் பங்குபற்ற வேண்டுமென ஒரு வீதி ஓட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்து வைத்தார். மேலும் சதுரங்கம், ஹொக்கி, கூடைப்பந்தாட்டம் என்பவற்றையும் ஆரம்பித்துவைத்ததுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் என்பவற்றின் வளர்ச்சிக்கும் உதவி புரிந்தார். அதிபர் சபாலிங்கம் விதைத்தவற்றையே பின்னாளில் வந்த அதிபர்கள் அறுவடை செய்தனர் என்று இன்றும் எனது நண்பர் சண்.தயாளன் (உதவிக்கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி, யாழ்.வலயம்) கூறுவார். அதிபர் சபாலிங்கம் அவர்களை விளையாட்டுத்துறையின் தந்தை என வர்ணிப்பர்.

விளையாட்டுத் துறையில் மட்டுமன்றி மாணவர்களின் கல்வியிலும் அவர் கண்ணும் கருத்துமாய் இருந்தார் என்பதற்கு சில சம்பவங்களைக் குறிப்பிடலாம். எனது கல்லூரி நண்பர் திரு. மகேசன் கஜேந்திரன் (அதிபர், நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்) அவர்களை வசதிக்கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக வகுப்பாசிரியர் அதிபர் சபாலிங்கத்திடம் அனுப்பியிருந்தார். அதிபர் முன் சென்றதும் நண்பர் அழ ஆரம்பித்து விட்டார் எதற்கென விசாரித்த அதிபர் இனி நீர் வசதிக்கட்டணமே செலுத்த வேண்டாம் என தெரிவித்து கடவுளை நினைத்துக்கொண்டு நன்றாய் படியும் என அவரை அனுப்பிவிட்டு வகுப்பாசிரியரை அழைத்து ஒரு மாணவனின் தாயார் இறந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை என்பதுகூடத்தெரியாமல் ஏன் என்னிடம் அனுப்பினீர்? இப்படியா வகுப்பாசிரியர் இருப்பது என அவரையும் கடிந்து கொண்டார்.

நான், நண்பர் பொ.ஐங்கரநேசன் (விவசாய, கூட்டுறவுஅமைச்சர்,வடமாகாணம்) அவர்களின் யூனிவேர்சல் ரியூட்டரியில் சிறிது காலம் விஞ்ஞான ஆசிரியராக இருந்தபோது அவரது கண்டிப்பும் கட்டுக்கோப்புடனுமான நிர்வாகத்தை கண்டு பாராட்டியபோது அதிபர் சபாலிங்கத்திடம் இருந்துதான் இதை கற்றுக்கொண்டேன் என பெருமையுடன் கூறினார். இதற்கு ஒரு சான்றையும் நினைவுகூருவார். தான் 8C வகுப்பில் இருந்தபோது பிரார்த்தனை மண்டபத்திற்கு முன்னால் சோயா பயிர்ச்செய்கை செய்யப்பட்டிருந்தது. அதிபர் அங்கே நின்றதை கவனிக்காமல் முதிர்ந்த சோயாக்காய்களை பிடுங்கி வாயிலிட்டு மென்றுகொண்டிருந்தவேளை பளீர் எனக் கன்னத்தில் ஒரு அறைவிழுந்தது. திடுக்குற்று நிமிர்ந்து பார்த்தபோது அதில் சபாலிங்கம் அவர்கள் நின்றுகொண்டிருந்ததாகவும், அவர் கூறிய வார்த்தை "நட்டது, நீர்பாய்ச்சியது எல்லாமே நீ என்று எனக்குத் தெரியும். இப்போது இது பாடசாலைச்சொத்து, உனக்குரியது அல்ல" என்ற வாசகம் அவரிடம் என்றும் பசுமையாக உள்ளது என்றார். இவ்வாறு மாணவர்களின் கல்வி மேம்பாட்டில், ஒழுக்கத்தில் அவருக்கு இருந்த அக்கறையைக்காட்ட நிறைய சம்பவங்களைக் கூறலாம்.

பாடசாலையின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டவர். மாணவன் ஒருவனுக்கு ஆசிரியர் அடித்ததிற்காக வகுப்பறையில் நுழைந்து குழப்பம் விளைவித்த அவனது தந்தையை சேட் கொலரில் பிடித்து தரதரவென அதிபர் சபாலிங்கம் இழுத்துச்சென்றதை நேரில் பார்த்த (நானும்) மாணவர்கள் தாங்களாகவே ஒழுங்கு கட்டுப் பாட்டுடன் நடக்க தொடங்கி இருந்தனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. கல்வி, விளையாட்டு, நிர்வாகம் என எல்லாத்துறைகளிலும் முத்திரை பதித்தவர். எல்லோராலும் "எங்கள் சபான்" என செல்லமாக அழைக்கப்படும் அதிபர் ஒரு முருகபக்தர் ஆவார். 25நாட்களும் நல்லூர் உற்சவத்தில் சேட் அணியாமல் நடந்து செல்வதை நான் கண்டுள்ளேன். இவரது சேவைக்காலம் நிறைவடைந்து ஓய்வு பெற்றுச்செல்கையில் நாம் அவரை வீட்டில் விட்டுத் திரும்பிவருவதற்கு சென்றபோது எங்கள் எல்லோருக்கும் நெல்லிரசம் தந்து உபசரித்தபின் நாங்கள் சென்று வருகிறோம் என தெரிவித்தபோது நேற்று வரை நாங்கள் கும்பிட்டு வணக்கம் தெரிவித்த அதிபர் எம்மைப்பார்த்து இருகரம் கூப்பி வணக்கத்துடன் விடைதந்த வேளையில் அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அப்போதுதான் இந்த இரும்பு மனிதருக்குள்ளும் இளகிய தங்கமனசு இருப்பதை அனைவரும் தெரிந்து கொண்டனர். தக்கார் தகவிலார் என்பது அவரது பிள்ளைகளால் (எச்சங்களால்) அறியப்படுமென்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப சபாலிங்கத்தின் புகழ் அவரது பிள்ளைகளாலும் மேலோங்கியது. இந்துக்கல்லூரி வரலாற்றில் சபாலிங்கத்தின் புகழை இந்த சபாலிங்கம் அரங்கம் என்றென்றும் பறைசாற்றிக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. மேலும் வைத்திய கலாநிதி ஜோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு ஆற்றி வரும் சேவைக்கும் என்றென்றும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Born to Lead Athipar Sabalingam*



**M C Francis ( Marcil Francis)**

Mr. E.Sabalingam was a multi talented educationist who placed his footprints in many fields. During my carrier as teacher from1949 to 1980 I had the privilege of working with well known principals. There were many others who were my colleagues. They were all good administrators. Some were good orators and some were excellent preachers. But among them I consider Mr. Sabalingam as a multi talented principal. He was a sportsman during his schooldays. His brother Kanagalingam and his children followed his footsteps and shone in sports. Hindu College was fortunate in having had ES as principal during the difficult period 71 to 75. He managed the school well to the satisfaction of all . The school was raised to greater heights to the satisfaction of staff, students and parents.

I came to know Mr.Sabalingam during my schooldays, as a soccer referee. He was considered the best and always refereed important matches. As a teacher, I met him at the various associations. He impressed me with his clean white national dress with pressed shawl over the shoulder. He was looked upon as a leader by everybody. In any argument, he stated his views clearly and his suggestions were accepted without dissension.

Mr. Sabalingam was president of Northern Province Teachers Association (NPTA) and represented ACUT and held important positions, While he was president of NPTA he suggested the need for a science association. On his initiative NPSTA was inaugurated. NPTA held Science Exhibitions and conducted annual common examination in Science and mathematics for the senior classes. This promoted the standard of science education


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in the Northern Province. Mr. Sabalingam played an important part in the affairs of the Jaffna Schools Sports association. He was an outstanding soccer referee.

Mr.Sabalingam was a good science teacher. He was the chief in maths correction panel for the department of examination. Above all he was an active trade unionist. He excelled in everything he participated or undertook and was appreciated by his colleagues.

I am glad that his son and my student Dr. Jothilingam has lived up to the expectations of his famous father in presenting this nice auditorium to his Alma Mater as a lasting memory of his appa. In the words of Thiruvalluvar kural 70, he has paid his homage by this gift to his dear appa.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என் நோற்றான் எனும் சொல்

I hope that the Sabalingam Auditorium gifted by Dr.Jothilingam will remind the students of JHC the greatness of Sabalingam and other leaders, JHC has produced. The students should emulate them and strife to make this world better for the next generation

I wish to place a request to the School Board that this auditorium should be allowed for the use of the community at a nominal charge to further Fine Arts of Tamils during the holidays. Holding 'Yaalpanathil Thiruvaiyaaru' during the December holidays to promote Iyal, Isai and Nadagam may be considered.

" Vaazhka Inthuk Kalloori"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Great Disciplinarian



**By Captain S.Santhiapillai**
Toronto, Canada.
Teacher 1967-1986

It gives me great pleasure and honour to record my sincere appreciation, dedication and evergreen memories on the occasion of the opening of a memorial block engraved with the name of one of the great Principals of the Island's leading educational institution-Mr. E.Sabalingam of Jaffna Hindu College.

When laying the foundation stone for a Hindu Learning Institute, the elders and the learned in Jaffna had a noble vision to design and raise a tangible landmark that could be possible only through dedication, hard work, and loyalty based on fostering high moral. It is not, the would be chunk and bricks-dollar and rupees alone that would make up an institute to impart a solid and wholesome education, but the inherent potentials put together by all visionaries concerned are a must to accomplish the mission.

Principal Mr. E.Sabalingam was one of the categories of principals, strictly adhered to the values and objectives of the previous leaders who contributed their fair-share for a tangible, vibrant, productive and long lasting Hindu educational Institution.And he firmly believed immoral discipline, the basic foundation for a noble and inspirational education, and wherever he took up position on an administrative capacity he maintained the same view and judgement.

Some are of the opinion that Saba was a tuff guy; of course he was, not for everybody but only for sluggish, reluctant and shrewd characters, who focussed on their individual gain and glory and disregarded the progress of the school community. He sustained this stand with all tutorial staff, non-teaching staff, and the students alike.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He somewhat loved naughty students so as he loved some teachers too, like our late Mr.N.Nalliah, Mr.V.Suntharadas, and me too in a small way. He is the one who brought-meinto the hostel as a discipline master, but I reluctantly took over and finally ended up as an in-house Hostel Warden for nearly fifteen years. He is a person who understands and appraises every individual and never failed to give due recognition to those who are truthful, dedicated, and stand side by side in taking the torch forward. He confronted many a challenges in the school,playing field, and outdoor, but he resolved to fight back, not left alone, but the students, teachers, well-wishers and the neighbourhood stood guard by him at all times.

He was the one who I know of in 1973 introduced "Best Sportsman of the Year" award, selection was strictly on performance and merits in the field of sports, and with due consideration to education and extracurricular activities.Saba was the one who hosted the first marathon race on the eve of the Annual Athletics and Sports Meet and received overwhelming commendation from the students, sports fans, education officers, sister schools, neighbourhood and community. Ever since, this race has become a colourful and eagerly awaited event,and I'm happy to learn that the same enthusiasm and festivity still prevails on the eve of every Annual Sports and Athletic Meet. Given his outstanding support and contribution for the sports perhaps it would have been most fitting had this amount of UK pounds been invested in a much more commemorative project for a modern Stadium in the name of Sabalingam Stadium.

He is a real leader who is firm, fair and friendly. A progressive conservative by nature, knowledgeable, intelligent, honest, energetic, and above all he possessesa charismaticper-sonality, essential for a leader. He was a role model to all students, educators, and school executives for his knowledge, self-confident, determination, perseverance, honesty, and integrity.

For a person of this magnitude who faithfully and unwaveringly served for the splen-dour of JHC,absolutely deserves admiration and recognition in a memorable manner. In this regard, on behalf of the old boys of Hindu College living around the globe, I sincerely congratulate Dr.Jothilingam for his commitment and devotion he demonstrated to his "Alma Mater" by pledging to meet the total cost of fashioning the auditorium in the three storey building which will be as "SABALINGAM BLOCK".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்போர்கூடம் திறப்புவிழா வாழ்த்துச் செய்தி



**கப்டன் என். சோமசுந்தரம்**
முன்னாள் பிரதி அதிபர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவன் கடேற் குழு பயிற்றுநர், ஆசிரியர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர், விடுதி அதிபர், பிரதி அதிபர், பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் உட்படப் பல பதவிகள்... இப்படி கல்லூரி அன்னைக்கும் எனக்கும் இடையிலான தொடர்பு பரந்தது. சுமார் ஏழு தசாப்த காலத்தையும் தாண்டிய நீட்சி கொண்டது.

கல்லூரியில் எனது ஊடாட்டம் கற்றல் - கற்பித்தல் என்ற செயன்முறைகளையும் தாண்டி கல்லூரி புறநடவடிக்கைகளிலும் அபரிமிதமாக ஈடுபடவைத்தது என்பேன். குறிப்பாக கடேற் குழு, விளையாட்டுத்துறை, விடுதி என்பவற்றின் செயற்பாடுகளில் மாணவனாகவும், ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும், பின்னர் பழைய மாணவனாகவும் நான் அதிக ஈடுபாடு காட்டி வந்திருக்கிறேன்.

இந்த ஏழு தசாப்த காலத்தில் எனது அவதானிப்பிலும் அனுமானிப்பிலும் ஒரு விடயத்தை ஈண்டு குறிப்பிடுவது இங்கு பொருத்தமானது என நினைக்கிறேன்.

இந்த விரிந்த காலப்பரப்பில் கல்லூரியின் விளையாட்டுத்துறையும் ஒழுக்கமும் 70களுக்கும் 80களுக்கும் இடைப்பட்ட தசாப்த காலத்தில் மிக உச்சமாக இருந்தன என்று நான் குறிப்பிடுவேன். இதை எமது கல்லூரி அன்னையின் தவப் புதல்வர்களாகிய நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தக் காலகட்டத்தில்தான் நமது பெருமதிப்பிற்குரிய ஆசான் இ.சபாலிங்கம் அவர்கள் இந்துக் கல்லூரியின் மீகாமனாக விளங்கினார். அப்போதுதான் கல்லூரியின் விளையாட்டுத்துறை கிரிக்கெட், உதைபந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், ஹொக்கி, மெய்வன்மை, பட்மின்ரன் என சகலவற்றிலும் மாவட்ட மட்டத்தையும் தாண்டி தேசிய மட்டத்திலும் உச்சப் புள்ளியைத் தொட்டு நின்றது என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் இ. சபாலிங்கத்தின் விசேட கவனிப்பிலும் வழிகாட்டலிலும் மெருகூட்டப்பட்டு, புத்துயிர் அளிக்கப்பட்ட யாழ். இந்துவின் விளையாட்டுத்துறை தொடர்ந்துவந்த அதிபர் பி.எஸ்.குமாரசுவாமி காலத்திலும் சுடர்விட்டுப் பிரகாசித்தது என்ற அனுபவ உண்மையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பதிவு செய்யவிரும்புகிறேன்.

அதிபர் சபாலிங்கம் நினைவாக அமைக்கப்பட்ட இந்தக் கேட்போர்கூட அரங்கத்தின் திறப்பு விழாவையொட்டிய மலருக்கு இச்செய்தியை விடுப்பதில் நான் இரட்டிப்பு மகிழ்வடைகிறேன். அதற்கு ஒரு காரணம் உண்டு.

இந்த அரங்கு அமைந்துள்ள இந்த மூன்று மாடிக் கட்டடத்தொகுதி மிலேனியம் ஆண்டு பிறந்த காலகட்டத்தை ஒட்டி எழுந்தது. கீழ்தளத்தில் விடுதிச்சாலை, சிற்றுாண்டிச்சாலை, அடுத்த தளத்திலே கேட்போர் அரங்கு, மூன்றாவது தளத்திலே விளையாட்டு அரங்கின் பார்வையாளர் மண்டபம் (பெவிலியன்), கணினி தொழில்நுட்ப பயிற்சிக்கூடம் ஆகியன கொண்டதாக இக்கட்டடம் வடிவமைக்கப்பட்டது.

கல்லூரியின் மீது நீங்காப்பற்றுக்கொண்ட முன்னாள் அரசாங்க அதிபர் திரு.கே. சண்முக நாதனைத் தலைவராகவும், செயற்றிறன்மிக்க என்.வித்தியாதரனைச் செயலாளராகவும் கொண்ட எமது அப்போதைய பழையமாணவர் சங்கச் செயற்குழு தனித்து இந்தக் கட்டட நிர்மாண நடவடிக் கைகளை சிறப்பாக ஒப்பேற்றி சாதனை நிலைநிறுத்தியது. அந்தச் செயற்குழுவின் உபதலைவராக இருந்த நானே இந்த மூன்று மாடிக்கட்டடத்தை அமைப்பதற்கான கட்டடக்குழுவின் தலைவராகவும் இருந்து அதனை வழிப்படுத்தினேன் என்ற மனநிறைவு எனக்கு உண்டு.

வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட அக்கட்டடப் பணியின் கேட்போர்கூடம் இன்று மெருகூட்டப்பட்டு முழுமையாக வடிவமைக்கப்பட்டு பெரும் பணச்செலவில் ஒழுங்கமைக்கப்பட்டு திறந்து வைக்கப் படுகையில் அதுவும் எமது மதிப்பிற்குரிய ஆசான் இ.சபாலிங்கத்தின் பெயரால் அவரைப் போலவே கல்லூரி மீது நீங்காப்பற்றுக்கொண்ட அவரது சிரேஷ்ட புதல்வனும் எங்கள் எல்லோருடைய அன்புக் குரியவருமான டாக்டர். ஜோதிலிங்கம் அவர்களினால் பெரும் பொருட் செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகையில் அது குறித்து அதிகம் புளகாங்கிதம் அடைந்து நாங்கள் மகிழ்வது இயல்பானதே.

நமது கல்லூரி அன்னையின் பெயர் சிறக்க, புகழ் பரப்ப, நாம் அனைவரும் ஐக்கியத்துடன் இணைந்து பணியாற்றுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தலைநிமிர் கழகத்தின் தன்னிகரற்ற சரித்திர நாயகன் அதிபர் சபாலிங்கம்



சி.சு.புண்ணியலிங்கம்
முன்னாள் யாழ் இந்து ஆசிரியர்

கடந்த அரைநூற்றாண்டு காலப்பகுதியில் அதிசிறந்த நிர்வாகியாக, பண்பாளராக, மனித நேயம் மிக்கவராகக் காணப்பெற்ற விரல்விட்டு எண்ணக்கூடிய அதிபர்களில் முதன்மைவாய்ந்த வராக விளங்கிய ஆசிரியரும் அதிபருமான என்றும் சிரஞ்சீவியாக எங்கள் உள்ளத்தே நிரந்தரமாகக் குடியிருக்கும் யாழ். இந்து அதிபர்களில் ஒருவரான அமரர் திருவாளர் இ. சபாலிங்கம் அவர்கள் கண்ணியம் மிக்க ஒரு கனவான் ஆவார்.

அன்னாரின் அழியாத ஞாபகமாகத் திறக்கப்படும் யாழ். இந்து அதி உன்னத பார்வையாளர் மண்டபம் (Auditorium) தொடர்பாக வெளிவரும் மலரில் எனது இக்கட்டுரையும் இடம்பெறுவது நினைந்து மகிழ்ச்சியடைகிறேன்.

பிதா மாதாவைத் தெய்வமாகப் போற்றும் தன்மையுடைய திருவாளர் இ. சபாலிங்கம் அவர்கள் ஒரு பூரணமான சமயி ஆசிரியராக இருந்து பல வருடங்களின் பின் உபஅதிபராகி பின் தேசியக் கல்லூரியான யாழ். இந்துவின் அதிபரானார். 1949ஆம் ஆண்டிலிருந்து யான் அறியக்கூடியதாக ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராகச் செயற்பட்ட காலங்களில் நிகழ்ந்தவைகளில் இன்றும் பசுமையான நினைவுகளாக என் மனதில் நிற்பவற்றை யாவரும் அறிய வெளிப்படுத்துவது எனது கடமையாகிறது.

எங்கள் அதிபரின் மூத்த மகனான டாக்டர் திரு.ச.ஜோதிலிங்கம் அவர்கள் அண்மையில் அன்னாரின் ஞாபகார்த்தமாக எமது கல்லூரிக்குப் பொருத்தமான அதிநவீன பார்வையாளர் மண்டபத்தைப் பெருந்தொகைச் செலவில் அமைத்துத் தந்துள்ளார். யாழ். இந்து உள்ள அளவும் தன் தந்தையின் ஞாபகம் எல்லோர் மனத்திலும் நிலைத்திருக்கும்படியான யாவரும் போற்றுதற்குரிய செயற்பாடாக இது அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனாகவும், ஆசிரியராகவும் மட்டுமன்றி அதிபராகிய நிலையிலும் விளையாட்டு மைதானத்தில், உதைபந்தாட்டத்தில், துடுப்பாட்டத்தில் மிகுந்த அக்கறையுடன் இவர் செயற்பட்டார். ஆசிரியர் பங்குபற்றும் போட்டிகளில் இவர் முன்நின்று பங்குபற்றுவதைக் காணலாம். மாணவர்களுக்கும் பயிற்சி நடைபெறும்போது தானும் விளையாடி மாணவர்களை நெறிப்படுத்துவார்.

அன்பு, இரக்கம், கருணை என்பது தெய்வத்தின் இயல்புகள் என்பதை நம்மைப் பார்த்தே நாம் உணரக்கூடியவாறு எங்கு காண நேரினும் மாணவர்களிடம் மிகப்பரிவுடன் அவர் நடந்து கொள்வார். ஒவ்வொரு மாணவனின் ஆரோக்கியம் தொடக்கமாக அவர்களின் இன்பியல், துன்பியல் வைபவங்களில் அக்கறைகாட்டி ஆசீர்வதித்து வாழ்த்தியும் ஆறுதல் கூறித் தேற்றியும் உதவுவார்.

தரமான திறமையுள்ள சகலதுறை வல்லவர்களையும் ஆசிரியர்களாக யாழ். இந்துவில் சேர்ப்பதில் மிகக் கவனமாகச் செயற்பட்டவர்களில் சிறந்து விளங்கியவர் எங்கள் முன்னைய அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள்.

சபாலிங்கம் ஐயாவின் திருநாமம் உலகம் உள்ளவரை தமிழர்களால் நினைவு கூரப்படும் வண்ணம் அன்னாரின் புதல்வர் டாக்டர் திரு. ஜோதிலிங்கம் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியின் மைதானத்தில் ஒரு நினைவுச்சின்னமான பார்வையாளர் மண்டபத்தைக் கோடிக்கணக்கில் செலவிட்டு நிறுவியுள்ளமை நெஞ்சை நெகிழச்செய்கிறது.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்ற வள்ளுவன் சொல்லுக்கு இங்கு தந்தையும், தனயனும் இலக்கியமாகி உள்ளமை உவகை தருவதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**ச.பொன்னம்பலம்**
சிட்னி, அவுஸ்ரேலியா

எமது கல்வித் தாய் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் திருவாளர் இ. சபாலிங்கம் கருத்தாடல் மண்டபத்தை (Auditorium) ஆரம்பித்துவைக்கும் விழாவையொட்டி வெளிவரும் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தான் கடந்துவந்த 125 ஆண்டுகளில் ஆற்றல்மிகு அதிபர்கள் பலரைப் பெற்றுள்ளது. அவர்களில் திரு. இ. சபாலிங்கம் அவர்களும் குறிப்பிடக்கூடியவர். திரு. இளையதம்பி சபாலிங்கம் B.Sc (Lond) PGT, 1971ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே அதிபராகப் பொறுப்பேற்றார். எமது கல்லூரியில் சேவையாற்றிய அதிபர்களுள் மிகஉயர் அதிபர் தரத்தை (Selection Principal) பெற்றவர் இவர் என்பது பெருமை கொள்ளும் விடயமாகும்.

இவர் தலைசிறந்த கல்விமான். சிறந்த விளையாட்டு வீரர். மாணவரிடை ஒழுக்கத்தினைப் பேணியவர். கண்ணியமிக்க கடமையாளன். இரக்கசுபாவம் கொண்டவர். தன்னலமற்ற சமூகத் தொண்டர். இந்துசமய நிறுவனங்களில்மிக்க அக்கறை கொண்டவரும் அவற்றின் மேம்பாட்டில் தனது பங்கினைச் செலுத்தியவருமாவார். பல வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி பலராலும் இன்றும் போற்றப்பட்டு வருகின்றது.

எமது கல்லூரியில் அவர் பணியாற்றிய காலத்தில் கல்லூரி கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. இவ்வாறு பல்பரிமாண நிலை நின்று யாவரும் போற்றும் திறன்மிகு அதிபராகக் கடமையாற்றிய அமரர் இ. சபாலிங்கம் அவர்களின் நினைவாக அவர் கற்ற, அதிபராகக் கடமைபுரிந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நவீன வசதிகள் கொண்ட கருத்தாடல் மண்டபம் ஒன்றினை அவரது மகனும் கல்லூரியின் பழைய மாணவருமான வைத்திய கலாநிதி ச. ஜோதிலிங்கம் அவர்கள் முயற்சி செய்து அமைத்துக் கொண்டது சாலச்சிறந்த செயற்பாடாகும்.

அதிலும் எமது கல்லூரி அன்னை தனது 125ஆவது அகவையில் கால்பதிக்கும் 2015ஆம் ஆண்டில் இது நிகழப்பெறுவது கல்லூரியில் கோவில் கொண்டெழுந்தருளும் எல்லாம்வல்ல சிவஞான வைரவப்பெருமானின் அருட்கடாட்சமே. அவர் தாள் பணிந்து இக்கருத்தாடல் மண்டபத்தை எம் சமூகம் நன்கு பயன்கொண்டு உயர்த்திட பிரார்த்தித்து அமைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆசான்



**அ. பஞ்சலிங்கம்**
முன்னாள் அதிபர்

எழுபதுகளின் காலப்பகுதியில் யாழ். மண்ணில் கல்வி புலத்திலும், விளையாட்டு மைதானங்களிலும் ஒளிமயமான நட்சத்திரமாக திகழ்ந்தவர் திரு. சபாலிங்கம் அவர்கள். அவர் ஆசிரியராகவும், பிற்பாடு 1960ஆம் ஆண்டிலிருந்து பிரதி அதிபராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடமையாற்றியவர். அவரிடம் நான் ஒரு மாணவனாக க.பொ.த.சாதாரணதரத்தில் இரசாயன பாடத்தினை கற்றதை ஒரு பேறாக கருதி இவ்வேளையில் நினைவுகூர விரும்புகின்றேன். அவர் ஒரு சிறந்த ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.

திரு. சபாலிங்கம் அவர்களின் ஆரம்பக் கல்வி மலேசியாவில் சிறந்த ஆங்கில ஆசான்களிடம் இருந்து பெற்றதாகும். இளமைப் பருவக்கல்வி செயற்பாடுகள் பிற்காலத்தில் ஒருவரின் ஆளுமையில் பெரும் செல்வாக்கை செலுத்தும் என அறிவியலாளர் கூறுவர். இதனால் அன்றோ திரு. சபாலிங்கம் அவர்கள் பிற்காலத்தில் செழிப்புமிக்க ஆளுமை மற்றும் தலைமைத்துவ பண்பு நிறைந்தவராக காணப்பட்டார். அவர் சர்வதேச அரங்குகளில் எமது பிரதேச ஆசிரியர்களை பிரதிநிதித்துவப்படுத்தி எமது செயற்பாடுகளை எடுத்துரைத்தவராகும். இவ்வகைப் பண்புகளைக் கொண்ட திரு. சபாலிங்கம் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியிலும் அதிபராக செயற்பட்டு இக்கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் என்பதனை இங்கே குறிப்பிடவேண்டும்.

இவ்வகையான ஒரு பெரியாரின் ஞாபகார்த்தமாக யாழ். இந்துக் கல்லூரியில் ஒரு கேட்போர் கூடம் அமைப்பது சாலச்சிறந்ததாகும். இதனை அமைப்பதற்கு உதவியாக இருந்த யாழ். இந்துக் கல்லூரிக்கும் அதனை நிர்மாணித்த அவரது புதல்வன் கலாநிதி ஜோதிலிங்கம் அவர்களுக்கும் எனது பாராட்டுகளும் நன்றியும் உரித்தாகுக. இந்த கேட்போர்கூடம் என்றென்றும் திரு. சபாலிங்கம் அவர்களின் சேவையையும் செயற்பாடுகளையும் ஞாபகம் ஊட்டிய வண்ணம் இருக்கும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்போர்கூடம் திறப்புவிழா
# "சபாலிங்கம் மண்டபம்"



**அ. சிறிக்குமாரன்**
ஓய்வுநிலை அதிபர்,
யாழ். இந்துக் கல்லூரி.

பழைமையும் பெருமையும் வாய்ந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 125 வருட சைவத்தமிழ் பாரம்பரியமிக்க கல்லூரியாகும். இதுவரை காலமும் இக்கல்லூரிக்குக் கேட்போர்கூடம் இருக்க வில்லை. இக்குறையை வைத்திய கலாநிதி ச. ஜோதிலிங்கம் குடும்பத்தினர் மனமுவந்து தங்கள் தந்தையாரின் நினைவாக "சபாலிங்கம் மண்டபம்" எனும் பெயரில் அழகுற அமைத்துள்ளனர்.

மாணவர்களின் பாவனைக்கு என அமைக்கப்பட்டுள்ள இக்கேட்போர்கூடம் இயல், இசை, நாடகம், விவாதம், கவியரங்கு, பட்டிமன்றம், சொற்பொழிவு போன்ற இன்னோரன்ன தேவை களை நிறைவேற்றுவதோடு தமிழ்மொழித் தினப்போட்டிகள், ஆங்கில தினப்போட்டிகள் என்பன வற்றிற்கு நல்லதொரு அரங்கும் ஆகும். மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்தின வைபவம் நடைபெறவும் உகந்ததாகும். பாடசாலைச் சமூகமும் இக்கேட்போர்கூடம் நகரின் அண்மையில் அமைந்துள்ளமையால் பயனடையும் என்பது திண்ணம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம், பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் என்பன நடைபெற வசதியாக அமையும். ஒலி, ஒளி வசதிகள், இருக்கை வசதிகள், இரம்மியமான இயற்கைக் காட்சி போன்றன இக்கேட்போர்கூடத்தினை மேலும் மெருகூட்டுகின்றன. விஞ்ஞான, தொழில்நுட்ப, இலத்திரனியல் சாதனங்களின் வளர்ச்சி பாவனை என்பன எதிர்கால மாணவ பரம்பரையினரை மேலும் ஒருபடி முன்னோக்கி நகர்த்தும். மேடைக்கூச்சம் அகலும், பயம் நீங்கும், ஆளுமை வளர்ச்சிபெறும்.

தானங்களுட் சிறந்தது வித்தியாதானம். கேட்போர்கூடம் அதற்கு உறுதுணை புரியும் என்ற நல்ல உள்ளம் கொண்ட குடும்பத்தினர் இக்கைங்கரியத்தை தாமே முன்வந்து நிறை வேற்றியுள்ளமை பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியதாகும். திறப்புவிழா சிறப்புற்று இனிதே நடை பெற கல்லூரியில் எழுந்தருளி அருளாட்சி புரிகின்ற சிவஞான வைரவப்பெருமானை இறைஞ்சி வேண்டுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை பயில் கழகத்தின் புகழ்பூத்த நல்லறிஞன் டாக்டர் ஜோதிலிங்கம்



**வீரவாகு கணேசராஜா**
ஓய்வுநிலை அதிபர்.
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

இன்று உலகெல்லாம் புகழ் பரப்பி நிகரில்லாப் பெரும் சாதனைகளுடன் தமிழரின் தலைநிமிர் கழகமாக 125 ஆண்டுகள் இந்து அன்னை கல்வி ஆட்சி புரிகின்றாள். இதற்குச் சான்றாக அன்னையின் வெற்றிக்கொடி அறிவின் தூய்மையையும் கல்விப்பரப்பின் அளவையும் உணர்த்துவதாக வெள்ளை நீல வர்ணங்களால் நிறைந்த கொடியை பரந்த தேசமெங்கும் பரப்பி, எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி பெற்று வீறுநடை போடுகின்றாள். இத்தகைய கல்லூரி அன்னையின் தோற்றத்திற்கு அடிகோலி வழிப்படுத்திய எமது முன்னோர்களான அருளாளர்கள் சிந்தனை வாதிகள், தூரநோக்கு கொண்ட சமூக தீர்க்கதரிசிகள், நல்லாசான்கள் அனைவரும் ஒன்றிணைந்து இடப்பட்ட அத்திவாரமே அடித்தளமாக அமைந்து தொடருறு வளர்ச்சிப் பாதையில் சாதனைகள் புரிய உதவுகின்றது என உணர்ந்து எல்லாப் புகழும் அவர்களுக்கே என்று கூறிப் பிரார்த்திக்கின்றேன். அவர்களது நல் உள்ளப்படிமாங்களே கல்லூரி அன்னையை மகிமைப்படுத்துகின்றன என்பதை என் அனுபவத்தால் வியந்து கூறுகின்றேன்.

எங்கள் கல்லூரி முன்னாள் அதிபர் திரு.க. சபாலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது மகன் வைத்தியக் கலாநிதியும் பழைய மாணவரும் கல்லூரியின் விளையாட்டுக்களில் தலை சிறந்து விளங்கியவருமாகிய Dr. சபாலிங்கம் ஜோதிலிங்கம் அவர்கள் கல்லூரி அன்னைக்கு பல பெருமைகளைத் தேடித்தந்ததுடன் கல்லூரி அலுவலக முகப்பில் பூர்த்தி செய்யப்படாத 2 மாடிக் கட்டடத்தில் முதலாம் மாடித் தளத்தை 1 5 மில்லியன் செலவில் கேட்போர் கூடமாக அமைத்துள்ளார். இது "சபாலிங்கம் அரங்கம்" என்று பெயர் சூட்டப்பட்டு 400 இருக்கைகளைக் கொண்ட நவீனத்துவம் மிக்க அலங்கார மண்டபமாக 1 1/2 கோடி ரூபா செலவில் இந்துவின் மகுடமாக வானளாவ ஓங்கி நிற்கின்றது. அதிபர் திரு.இ. சபாலிங்கம் அவர்கள் பதவி வகித்த காலத்தில் நானும் மாணவனாகச் சேர்ந்தேன். கண்டிப்பும் கருணையும் கரிசனையும் மிக்க அதிபர் கல்லூரிக்குள் எவ்வேளையில் வருவார் போவார் என்று தெரியாது. கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்றிறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க அதிபராக விளங்கினார். அதிபர் சபாலிங்கம் அவர்களின் கதிரையில் கிடக்கும் சால்வையே கல்லூரி நிர்வாகத்தை வழி நடத்தியது என்று கூறுமளவிற்கு கல்வி, ஒழுக்கம், விளையாட்டு ஆகிய மூன்றையும் நேர்கோட்டில் வழிப்படுத்தியவர்தான் அதிபர் சபாலிங்கம். அவரது செயற்பாடுகள் உறைந்து படிவுகளாக அமைந்ததே சபாலிங்கம் அரங்கம். இது இந்துவின் மணிமுடியாக மிளிரும் என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய கல்லூரியில் கல்வி பயின்றதால் பலர் புகழுடையவராயினர். சிலர் கல்வி கற்றதால் கல்லூரி அன்னை புகழ் பெற்றாள். அந்தவகையில் வைத்தியக் கலாநிதி ஜோதிலிங்கம் கல்வி கற்றதால் கல்லூரி அன்னைக்கு ஏற்றமும் தோற்றமும் கொடுத்து உந்து சக்தியாக விளங்குகின்றார்.

இரண்டாவது தளப்பணிகளை நிறைவேற்றுவதற்குப் பழைய மாணவர் சங்கத்தினரும் புதிய ஆலோசனைகளையும் கருத்தாடல்களையும் வழங்கினர். அதன்படி வைத்தியக் கலாநிதி ச. ஜோதிலிங்கம் அவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் தனது சொந்தப் பணத்தில் அமைப்பதற்கு தனது சம்மதத்தினைத் தெரிவித்தார். இதனைப் பழைய மாணவர் சங்கமும் ஏக மனதாக ஏற்றுக்கொண்டது.

வைத்தியக் கலாநிதி ஜோதிலிங்கம் அவர்களது குடும்பத்தினர் செய்நன்றி மறவாப் பண்புடன் அறப்பணியை பெருந்தொகைப்பணத்தில் ஆற்றியுள்ளனர் என்பதை நினைந்து மகிழ்வும் பெரு மிதமும் அடைகின்றேன்.

வைத்தியக் கலாநிதி ச.ஜோதிலிங்கம் அவர்களைப் போல இந்து அன்னைக்கு ஆரோக்கியமான நல்லதிட்டங்கள் முன்னெடுத்துச் செல்ல பழைய மாணவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். எல்லாம் வல்ல ஞானவைரவரின் அருளாட்சி, அறப்பணியாற்றிய குடும்பத்தினருக்கு கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *An Appreciation*

The above article was written by
**Late Mr. C.K Kanthaswami Emeritus**
Principal Kokuvil Hindu College and
Published in Tamil Times in August 1988

It is an irony of fate that Saba, much younger in age should have predeceased me. Many years of our close association entitles me to write an appreciation of a person whose record achievements mainly in the sphere of education in our homeland are widely acknow ledged and cannot be easily surpassed. He had the unique distinction of having held the stewardships of two leading educational institution in the Island.

Jaffna Central one of the oldest centres of English education in the country, had the good fortune of securing his services at the time of great need and benefitted considerably from his efficient and determined to fulfill the expectations of the department of education and the school community at large. His memory should remain fresh in the minds of all connected to Jaffna central. Perhaps the pinnacle of his long and successful career was his appointment as Principal of the premier Hindu institution- Jaffna Hindu College. That he made a success of this assignment in an undisputed fact, which deserves it, rightful place in the annals of the great institution.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I had to know him for over half a century and our great association began at school with Sab having been a junior contemporary of mine at Jaffna Hindu. He distinguished himself not merely as a good student but also in many extra-curricular activities. He came into the limelight as a goalkeeper par excellence, among the school soccer teams in the north. This special skill continued to flourish in other members of his family his younger brother, eldest son and the second son.

We came closer at Kokuvil Hindu where Saba had the bulk of his teaching career. He did not take time to gain recognition as a reputed teacher of Mathematics and Science through the Advanced Level classes. He came to beloved and admired by his students and was held in high esteem by his colleagues and the school community at large.

He made a distinct contribution in the development of at all times connected with the growth and growing pains of Kokuvil Hindu. He was rewarded with a grade 1 special post early in his life there. Subsequently he was elevated to the post of Deputy Principal. The rich experience he gathered at Kokuvil Hindu over two decades stood him in great stead in the advancement of his subsequent successful career. Even when he was at the helm of affairs in the educational sphere holding in succession the stewardship of the two leading institutions in Jaffna, he felt proud to make emphatic mention of his gratitude to Kokuvil Hindu, and described his experience in educational planning there as the secret of his success. Kokuvil Hindu in turn never failed to feel proud of the achievements of its distinguished product.

A special mention must be made to the fact that he was one of the only two Tamil Heads of Schools to be awarded by the department of education the highest rank of Selection Grade principal, equivalent to that of the Regional Director.

He was in the main stream of public life in Jaffna and held positions of responsibility and honor, not only in the sphere of education but also in a multitude of other social organisations.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saba was very closely attached to me and the mutual affection between us was so deep rooted that it endured the trials and tests of times and remained as fresh and harmonious as at the beginning.

My family is too deeply grieved over his passing away but we feel consoled that he was among and in the midst of his children during his last days. His children led by his eldest illustrious son, Jothi would no doubt bring greater glory to the memory of their distinguished father. May Sab rest in peace at the feet of God.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைந்த திரு. இளையதம்பி சபாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் அதிபருமாவார். இவர் 1919.02.04ம் திகதி பிறந்து 1988.08.03ம் திகதி வரை இவ்வுலகில் வாழ்ந்து இருந்தார். மறைந்த திரு. இ. சபாலிங்கம் (விஞ்ஞானமாணி - இலண்டன். பட்டப்பின்படிப்பு பயிற்றப்பட்டவர் - இலங்கை) தனது ஆரம்பக்கல்வியை 1923ம் ஆண்டு தொடக்கம் 1928ம் ஆண்டு வரையும் யா/நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் 1929ம் ஆண்டு தொடக்கம் 1931ம் ஆண்டு வரையும் மலேசியா. கோலாலம்பூர் விக்ரோறியா கல்வி நிறுவனத்திலும் கற்றார். 1932ம் ஆண்டு தொடக்கம் 1937ம் ஆண்டு வரை யாழ் இந்துக் கல்லூரியில் இடைநிலைக்கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்று அரசாங்க சேவையில் தொழிலநுட்ப உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். சிறிது காலத்தின் பின்னர் அவர் ஆசிரிய சேவையைத் தேர்ந்தெடுத்து யாழ்ப்பாணச் சமூகத்திற்கு கல்வித்துறையில் அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றினார். இவர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் உதவி அதிபராக இருந்தபோது 1964 இல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தெரிவுத்தர அதிபராக 1971ல் பதவியேற்றார்.

தனது சேவைக்காலத்தில் கல்லூரியின் தரத்தை உச்சநிலைக்குக் கொண்டு சென்று கல்லூரிக்குப் பெயரையும் புகழையும் தேடிக்கொடுத்தார். அவர் மாணவர்களாலும். பெற்றோர்களாலும். சகநண்பர்களாலும் மதிக்கப்பட்ட ஒரு பெருந்தகை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவரும் ஐக்கிய இராச்சியம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவருமாகிய அவரது மகன் வைத்திய கலாநிதி ச. ஜோதிலிங்கம் அவர்கள் தனது தந்தையை நினைவுகூரும் முகமாக கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி "சபாலிங்கம் அரங்கு" என்ற கேட்போர் கூடத்தை நிர்மாணித்துத் தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Evergreen Printers, #693, K.K.S Road, Jaffna. 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org